**சர்வதேச பொதுப்**
**பணிகள் அமைப்பு**

பொதுப் பணிகளில் உள்ள தொழிலாளர்களின் உலகளாவிய தொழிற்சங்க கூட்டமைப்பு

தமிழ்




# நமது பொதுப் பணிகளை மீண்டும் அரசவைக்கு எடுத்து செல்வோம்

மீள்அரசுமயமாக்கல் பற்றிய ஒரு வழிகாட்டுதல் கையேடு

தொழிலாளர்கள் மற்றும் தொழிற்சங்கங்களுக்கானது

# ஒப்புதல்கள்

இந்த வழிகாட்டுதல் கையேட்டினை உருவாக்குவதற்கான யோசனை டாரியா சிப்ராரியோ மற்றும் டாக்டர் இம்மானுவேல் லோபினா ஆகியோரிடமிருந்து வந்தது. மேலும், இம்மானுவேல் லோபினா அவர்களின் ஆராய்ச்சியின் அடிப்படையிலும், அவர்கள் இருவருடனான நீண்ட உரையாடல்களின் அடிப்படையிலும் இந்த கையேட்டின் உள்ளடக்கம் எழுதப்பட்டுள்ளது. டாக்டர் ஜேன் லெத்பிரிட்ஜ், பேராசிரியர் டேவிட் ஹால், பேராசிரியர் சியன் மோர் மற்றும் இந்த கையேட்டின் முந்தைய பதிப்புகளை படித்த பெயர் வெளியிட விரும்பாத மறுஆய்வாளர்கள் இருவர், மற்றும் தங்களது கருத்துக்களையும் ஆலோசனைகளையும் அளித்து உதவிய அனைவருக்கும் நன்றி. பி.எஸ்.ஐ-யின் நிகழ்ச்சிகளில் பங்கேற்று தங்கள் மதிப்புமிக்க படிப்பினைகளை முன்வைத்து, எங்களுடன் நேர்காணலில் ஒத்துழைத்து, அறிக்கையில் தேவையான இடங்களில் தங்களது கருத்துக்களைப் பதிவு செய்த தொழிலாளர்கள் மற்றும் தொழிற்சங்கத்தினர் அனைவரின் பங்களிப்பு இல்லாமல் இந்த கையேட்டினை உருவாக்கியிருக்க இயலாது என்பதை பதிவு செய்து, அவர்களுக்கும் நன்றி தெரிவிக்கிறோம்.

நமது பொதுப் பணிகளை மீண்டும் அரசமைப்புக்குள் எடுத்து செல்வோம்
மீள்அரசுமயமாக்கல் பற்றிய ஒரு வழிகாட்டுதல் கையேடு

மார்ச் 2020-ல் கிரீன்விச் பல்கலைக்கழகத்தினை சேர்ந்த டாக்டர் வேரா வீஹ்மான் அவர்களுக்கு பி.எஸ்.ஐ-யால் இந்த அறிக்கை நியமிக்கப்பட்டது.(v.weghmann@greenwich.ac.uk)

© பப்ளிக் சர்வீசஸ் இண்டர்நேஷனல் ஜூன் 2020
© அட்டை வடிவமைப்பு CC 2.0 ஜியன் மென்ஜூ லட்.. 10 அக்டோபர் 2017 அன்று பாரிஸில் நடந்த குடிமைப் பணியாளர்கள் போராட்டம் - அணிவகுப்பு




©José Camó

# முன்னுரை

தனியார்மயமாக்கல் என்பது அனைத்து விதத்திலும் மோசமாக தோல்வியடைந்த ஒரு ஐம்பது ஆண்டுகால சோதனையாகும். அதன் ஒட்டுமொத்த முடிவு என்ன கூறுகிறதென்றால், தனியார் வழங்கும் சேவைகள் மலிவானவை இல்லை, சிறப்பானவையாக இல்லை, புதுமைகள் அதிகமாக இல்லை, வெளிப்படைத்தன்மை இல்லை, பொறுப்புணர்வு இல்லை, அல்லது பொதுத்துறை வழங்கும் சேவைகளோடு ஒப்பிடுகையில் பயனுள்ளதாக இல்லை. கோவிட்-19 பிரச்சனையின் மூலம் தனியார்மயமாக்கலினால் மனித மற்றும் சமூகத்திற்கு ஏற்பட்ட இழப்புகள் முழுவதுமாக வெளிவந்தன. ஏனெனில் சுகாதாரம் மற்றும் பொது நல சேவைகள் தனியார்மயமாக்கப்பட்டதால் நோயாளிகள் மற்றும் மருத்துவ பணியாளர்கள் உயிரிழக்க வழிவகுத்தது.

தனியார்மயமாக்கப்பட்ட சேவைகள் மீள்அரசுமயமாக்கப்பட்டு அதன் கட்டுப்பாட்டுக்குள் வருகின்றன என்று வளர்ந்து வரும் ஆராய்ச்சி மற்றும் ஆவணப்படுத்துதல் ஆணையம் ஒன்று சந்தேகத்திற்கு இடமின்றி தெரிவிக்கிறது. நகரங்கள், பிராந்தியங்கள், சமூக அமைப்புகள் மற்றும் சில நாடுகளும் பொதுப் பணிகளை தனியாரிடமிருந்து மாற்றி அரசு உடைமையாக்கி வருகின்றன. ஏனெனில் சிக்கனமாக செயல்படாமை, தரமற்ற சேவைகளை வழங்குதல் மற்றும் பயன்பாட்டாளர்களால் அணுகமுடியாமல் இருத்தல் போன்றவற்றில் தனியார்மயமாக்கல் தோல்வியடைந்தது. டிரான்ஸ்நேஷனல் இன்ஸ்ட்டிடியூட் மேற்கொண்ட புதிய ஆய்வின்படி 58 நாடுகளில் உள்ள 2400 நகரங்களில் தனியாருக்கு சொந்தமான மற்றும்/அல்லது நிர்வாகத்தின் கீழ் இருந்த 1400 சேவைகள் வெற்றிகரமாக அரசுமயமாக்கப்பட்டது.

மீள்அரசுமயமாக்கலை பி.எஸ்.ஐ ஊக்குவிக்கிறது. மேலும், பல ஆண்டுகளாக 'தரமான பொதுப் பணிகள்" என்ற தீர்மானத்தின் கீழ் பல்வேறு கூட்டணிகளுடன் இணைந்து பணியாற்றி இந்த செயல்பாட்டிற்கு ஆதரவளித்து வருகிறது. இருப்பினும், இம்மாற்றத்தினால் பணி விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் ஏற்படும் தாக்கம் குறித்து தொழிலாளர்கள் மற்றும் தொழிற்சங்கங்கள் குறிப்பிட்ட சில கவலைகளை தெரிவித்துள்ளன. மீள்அரசுமயமாக்கப்படும் ஒவ்வொரு சேவையும் தனித்துவமானதாகும். ஏனெனில் அவை குறிப்பிட்ட பிராந்திய மற்றும் தேசிய சட்டதிட்டங்களுக்கும், அரசியல் அமைப்பிற்கும், சமூக இயக்கங்களுக்கும் உட்பட்டு வேறுபடுகிறது.

மீள்அரசுமயமாக்கல் அதிகரித்துவருவதால், இணை செயல்பாட்டாளர்களின் மூலம் கற்றுகொள்ளுதல் மற்றும் சவால்களை வெற்றிகரமாக ஒருங்கிணைந்து எதிர்கொள்ளும் அனுபவமும், இந்த மாற்றத்தில் மதிப்புமிக்க ஒரு அறிவார்ந்த அமைப்பின் பிரதிநிதியாக செயல்படும் வாய்ப்பும் தொழிற்சங்கங்களுக்கு கிடைக்கிறது. கோவிட்-19 தாக்கத்திற்கு பிந்தைய ஒரு வாழ்விற்கு உலகம் தயாராகி வரும் இந்த சூழலில், அனைவருக்குமான தரமான பொதுச் சேவைகளை மறுவுருவாக்கம் செய்வதற்கும், கணிசமான முதலீட்டினை பெறுவதில் முக்கிய பங்கு வகிக்கும் உரிமையை மீட்டெடுப்பதற்கும்- இது ஒரு தனித்துவமான வாய்ப்பாகும். மேலும், வளர்ச்சியை விரும்பும் அரசாங்கங்களுக்கு மீள்அரசுமயமாக்கல் என்பது சரியான ஒரு தேர்வாக உள்ளது. விரிவான பகுப்பாய்வுகள் மற்றும் நிஜ நிகழ்வுகளையும் முன்வைத்து; பொதுப் பணிகளின் உரிமையை பி.எஸ்.ஐ-யின் ஆதரவு அமைப்புகள் மீட்டெடுப்பதற்கும், பொதுநலனுக்காக அதன் கட்டுப்பாட்டை தம் வசம் கொண்டு வருவதற்கும் - இந்த தொழிற்சங்க வழிகாட்டல் கையேடானது உதவுகிறது.

**ரோசா பவனெல்லி**
**பொதுச்செயலாளர்**

# உள்ளடக்கம்

1. அறிமுகம் 6

1.1. இந்த வழிகாட்டல் கையேட்டின் நோக்கம் 6
1.2. அணுகுமுறை 8
1.3. இந்த கையேடு எப்படி ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது? 9

2. மீள்அரசுமயமாக்கல்: பின்னணி மற்றும் விளக்கங்கள் 10

2.1. விளக்கங்கள் 10
2.2. மீள்அரசுமயமாக்கல்: உலகளாவிய ஒரு போக்கு 11
2.3. தனியார்மயமாக்கலின் போக்கு 12

3. மீள்அரசுமயமாக்கலை ஊக்குவிப்பவை 15

3.1. பொதுப் பணிகளை மீண்டும் அரசு கட்டுப்பாட்டிற்கு கொண்டு வருவதற்கான காரணங்கள். 15
3.2. எப்போது மீள்அரசுமயமாக்க வேண்டும்? 16
3.2.1. ஒப்பந்த முடிவிற்குப் பிறகு 16
3.2.2. முன்னதாக முடிக்கப்படும் ஒப்பந்தத்தைத் தொடர்ந்து 17
3.2.3. தனியார் நிறுவனம் திரும்பப்பெறப்படுதல் அல்லது திவால் ஆவதைத் தொடர்ந்து 18
3.3. மீள்அரசுமயமாக்கல் துறை சார்ந்த பரிமாணங்கள் 18
3.3.1. தண்ணீர் 18
3.3.2. ஆற்றல் 19
3.3.3. போக்குவரத்து மற்றும் உட்கட்டமைப்பு 20
3.3.4. கழிவு 21
3.3.5. சுகாதாரம் மற்றும் சமூக சேவைகள் 22
3.3.6. இதர சேவைகள் 23

4. சமூகங்கள், தொழிலாளர்கள் மற்றும் சுற்றுசூழல் ஆகியவற்றிற்கான பொதுப் பணிகளை மேம்படுத்த மீள்அரசுமயமாக்கலை பயன்படுத்துதல் 26

4.1. பொதுப் பணிகளை மீள்அரசுமயமாக்குவதின் நன்மைகள் 26
4.2. குடிமக்கள், சேவை பயன்பாட்டாளர்கள் மற்றும் சமூகத்தினருக்கு கிடைக்கும் நன்மைகள் 27
4.3. தொழிலாளர்களுக்கு கிடைக்கும் நன்மைகள் 28
4.4. உள்ளூர் அரசமைப்புகளுக்கு கிடைக்கும் நன்மைகள் 29
4.5. சுற்றுசூழலுக்கு கிடைக்கும் நன்மைகள் 30

5. மீண்டும் அரசுமையமாக்கல்: இது தொழிலாளர் மற்றும் தொழிற்சங்கம் தொடர்பான ஒரு விஷயம் 32

5.1. மீள்அரசுமயமாக்கல் என்பது ஏன் ஒரு தொழிற்சங்க பிரச்சினையாக கருதப்படுகிறது. 32
5.2. தனியார்மயமாக்க லால் ஏற்படும் பாதிப்புகளை வெளிப்படுத்தி ஆவணப்படுத்துதல் 33
5.3. தனியார்மயமாக்கலை திரும்பப்பெற சமூக பிரச்சாரங்களை மேற்கொள்ளுதல் 34
5.4. மீள்அரசுமயமாக்கலுக்காக பொது ஆளுமைக்கு ஆதரவளித்து ஊக்குவித்தல் 35
5.5. தொழிற்சங்க ஒற்றுமையை பேணுதல் 36
5.6. சட்ட ரீதியான மற்றும் கூட்டு பேர கட்டமைப்புகளை சரிபார்த்தல் 36
5.7. தொழிலாளர்களுக்கு நியாயமான கோரிக்கைகளை பெற்றுத் தருதல் 37
5.8. மாற்றத்தக்க அளவு, திறமைகள் மற்றும் தமக்குள்ளே உள்வழங்கல் செய்யப்பட்ட சேவைகளை எப்படி சிறப்பாக நடத்துவது என்பதை அறிதல் 38
5.9. மீள்அரசுமயமாக்கலை உறுதி செய்தல் 39

6. தனியார் நிறுவனத்தின் எதிர்ப்பை எதிர்கொள்ளுதல் 42

6.1. தனியார் நிறுவன யுக்திகள் 42
6.2. இழப்பீட்டு அச்சுறுத்தல்கள் 42
6.3. சட்ட அச்சுறுத்தல்கள் 44
6.4. தொழிலாளர்கள் மற்றும் தொழிற்சங்கங்களின் மீதான நிறுவனத் தாக்கம் 44
6.5. ஊடகங்களின் பங்கு 45

7. பொதுச் சேவைகளை வழங்குவது மற்றும் நிதி வழங்குவதில் உள்ள புதுமையான வழிகள் 47

7.1 மக்களுக்காக செயல்படும் பொதுப் பணிகள் 47
7.2 பிரதான நிறுவனங்கள்" – கூடுதல் வசதி கொண்ட பொது நிறுவனங்கள் 47
7.3 பொது நிறுவனங்களுக்கும் மக்களுக்கும் இடையிலான கூட்டமைப்பு 48
7.4 பங்கேற்புடன் கூடிய வரவு செலவு திட்டம் (பட்ஜெட்) 50
7.5 கூட்டுறவு அமைப்புகளின் பங்கேற்பு 50

8. முடிவுகள்: படிப்பினைகளின் சுருக்கம் 52

9. தொழிலார்கள் மற்றும் தொழிற்சங்கங்களுக்கான மீள்அரசுமயமாக்கல் தொடர்பான சுயசோதனைப் பட்டியல். 55




நைஜீரியாவின் லாகோஸில் ஆர்ப்பாட்டம்



# 1. அறிமுகம்

## 1.1. இந்த வழிகாட்டல் கையேட்டின் நோக்கம்

பொதுப் பணிகளின் உரிமையையும், அவற்றின் கட்டுப்பாட்டையும் மீண்டும் பொதுமயமாக்க விரும்பும் தொழிலாளர்கள், தொழிற்சங்கங்கள் மற்றும் அதனோடு இணைந்த குடிமை சமூக குழுக்கள் ஆகியவற்றிற்கு வழிகாட்டும் நோக்கில் பப்ளிக் சர்வீஸஸ் இண்டர்நேஷனல் (பி.எஸ்.ஐ) என்னும் சர்வதேச பொதுச் சேவைகள் அமைப்பு இந்த அறிக்கையை நிறுவியுள்ளது. குறிப்பாக, இந்த கையேடு மீள்அரசுமயமாக்கலில் உள்ள உரிய நிலைகள் குறித்த ஒரு முழுக் கருத்தை தெரிவிக்கவும் – உள்ளூர் மற்றும் பிராந்திய அளவில் தனியார்மயமாக்கப்பட்ட பொதுப் பணிகளை மீண்டும் பொது உரிமையாக மாற்றுவது – மற்றும் மீள்அரசுமயமாக்கலினால் (அரசுமயமாக்கல்) கற்றுக்கொண்ட விஷயங்களை தொழிற்சங்கத்தின் பார்வையிலிருந்து சுட்டிக்காட்டுகிறது.

உலகம் முழுவதும் பொதுப் பணிகளை தனியார்மயமாக்கியது சரியாக செயல்படவில்லை என்பதற்கு ஆதாரங்கள் அதிகரித்து வருகின்றன. பொது வளங்களை சிறப்பாக பயன்படுத்திக்கொள்ள முடியவில்லை, தரமான பொதுச் சேவைகளை பயன்பாட்டாளர்களுக்கு வழங்க முடியவில்லை மற்றும், சமூகம் மற்றும் சுற்றுப்புறச்சூழலுக்கும் மேலாக லாபத்தினை கவனத்தில் கொள்வது என தனியார்மயமாக்கல் தோல்வியடைந்துள்ளது. மேலும், தனியார்மயமாக்கல் பொதுத்துறை சேவைகளில் உள்ள வேலைவாய்ப்பினை அதிகமாக சிதறடித்தும், ஆபத்தான சூழலையும் ஏற்படுத்தியுள்ளது. இதனால் பணி இழப்புகள் ஏற்பட்டு சேவைகள் பாதிப்படைந்து, தொழிற்சங்க உறுப்பினர் எண்ணிக்கையும், கூட்டு பேரம் பேசுவதும் குறைந்துள்ளது. மீள்அரசுமயமாக்கல் மூலம் வேலை வாய்ப்புகள் அதிகரித்து இது போன்ற போக்கு நல்ல விதமாக மாறும்.

உலகம் முழுவதும் நிகழ்ந்த ஐம்பதுக்கும் மேலான மீள்அரசுமயமாக்கல் நிகழ்வுகளின் ஒரு ஒருங்கிணைந்த தொகுப்பாக இந்த கையேடு உள்ளது. தொழிற்சங்கங்கள், அவற்றின் உறுப்பினர்கள் மற்றும் அவர்களுடன் இணைந்து செயல்படும் குடிமை சமூக அமைப்புகள் மீள்அரசுமயமாக்கல் தொடர்பாக பிரச்சாரங்களை தங்கள் உள்ளூர் சமூகத்தினரிடம் (பின் இணைப்பில் உள்ள அட்டவணை 1-ஐ காண்க)[1] மேற்கொண்டன. அவற்றின் மூலம் அவர்கள் பெற்ற படிப்பினைகள் இந்த கையேட்டில் உள்ளன. இந்த பயிற்சி கட்டுரையில் தொழிற்சங்கத்தின் கண்ணோட்டதிற்கு பிரத்தியேக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. எட்டு மீள்அரசுமயமாக்கல் நிகழ்வுகளை (கீழே கொடுக்கப்பட்டுள்ள பட்டியலில் கோடிட்டு காட்டப்பட்டுள்ளது) விவரமாக ஆராய்ந்து அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. அதன் மூலம் எதிர்காலத்தில் பொதுச் சேவைகளை தமக்குள்ளாக பகிர்ந்துகொள்ள கோரி மேற்கொள்ளப்படும் பிரச்சாரங்களில் தொழிற்சங்கத்தினருக்குத் தேவையான யுக்திகளை வழங்க இது உதவியாக இருக்கும்.

## அட்டவணை 1: இந்த வழிமுறை கையேட்டில் உள்ள மீள்அரசுமயமாக்கல் நிகழ்வுகளின் பட்டியல்

| | தொழிற்துறை | நாடு | நகரம்/பிராந்தியம் | தற்போதைய நிலை | சேவைகளை உட்பகிர்வதின் அளவு |
|---|---|---|---|---|---|
| 1 | ஆற்றல் | ஜெர்மனி | பெர்லின் | வெற்றியடைந்தது | மீள்அரசுமயமாக்கல் |
| 2 | ஆற்றல் | ஜெர்மனி | ஹேம்பர்க் | வெற்றியடைந்தது | மீள்அரசுமயமாக்கல் |
| 3 | ஆற்றல் | ஜெர்மனி | ஸ்டுட்கார்ட் | வெற்றியடைந்தது | மீள்அரசுமயமாக்கல் |
| 4 | ஆற்றல் | ஜெர்மனி | வுல்ஃப்ஹேகன் | வெற்றியடைந்தது | மீள்அரசுமயமாக்கல் |
| 5 | ஆற்றல் | லித்துவேனியா | லித்துவேனியா, வில்னியஸ் | வெற்றியடைந்தது | மீள்அரசுமயமாக்கல் |
| 6 | ஆற்றல் | பிரிட்டன் | நாட்டிங்ஹும் | வெற்றியடைந்தது | அரசுமயமாக்கல் |
| 7 | ஆற்றல் | தான்சானியா | தான்சானியா, டார் எஸ் ச லாம் | தோல்வியடைந்தது | |
| 8 | சுகாதாரம் | ஆஸ்திரேலியா | விக்டோரியா | நடப்பில் உள்ளது | மீள்அரசுமயமாக்கல் |
| 9 | சுகாதாரம் | லுவோயாங் | சீனா | நடப்பில் உள்ளது | மீள்அரசுமயமாக்கல் |
| 10 | சுகாதாரம் | டென்மார்க் | தெற்கு டென்மார்க் | வெற்றியடைந்தது | மீள்அரசுமயமாக்கல் |
| 11 | சுகாதாரம் | இந்தியா | டில்லி | வெற்றியடைந்தது | அரசுமயமாக்கல் |
| 12 | சுகாதாரம் | பிரிட்டன் | ஹின்ச்சிங்புரூக் | வெற்றியடைந்தது | மீள்அரசுமயமாக்கல் |
| 13 | சுகாதாரம் | பிரிட்டன் | சோமர்செட் | வெற்றியடைந்தது | மீள்அரசுமயமாக்கல் |
| 14 | உட்கட்டமைப்பு | கனடா | மாண்ட்ரியால் | வெற்றியடைந்தது | மீள்அரசுமயமாக்கல் |
| 15 | உட்கட்டமைப்பு | பிரிட்டன் | கம்ப்ரியா | வெற்றியடைந்தது | மீள்அரசுமயமாக்கல் |
| 16 | சமூக நலன் | டென்மார்க் | ஸிட்ஜூர்ஸ் | வெற்றியடைந்தது | மீள்அரசுமயமாக்கல் |
| 17 | சமூக நலன் | நார்வே | பெர்கென் | வெற்றியடைந்தது | மீள்அரசுமயமாக்கல் |
| 18 | சமூக நலன் | நார்வே | ஆஸ்லோ | வெற்றியடைந்தது | மீள்அரசுமயமாக்கல் |
| 19 | போக்குவரத்து | கனடா | ஃபோர்ட் மெக்முரே | வெற்றியடைந்தது | மீள்அரசுமயமாக்கல் |
| 20 | போக்குவரத்து | பிரிட்டன் | மீண்டன் | வெற்றியடைந்தது | மீள்அரசுமயமாக்கல் |
| 21 | போக்குவரத்து | பிரிட்டன் | ஈஸ்ட் கோஸ்ட் | வெற்றியடைந்தது | தேசியமயமாக்கல் |
| 22 | போக்குவரத்து | சியோல் | தென் கொரியா | பாதி வெற்றியடைந்தது | |
| 23 | கழிவு | கனடா | கான்செப்ஷன் பே சவுத் | வெற்றியடைந்தது | மீள்அரசுமயமாக்கல் |
| 24 | கழிவு | கனடா | போர்ட் மூடி | வெற்றியடைந்தது | மீள்அரசுமயமாக்கல் |
| 25 | கழிவு | கனடா | வின்னிபெக் | வெற்றியடைந்தது | மீள்அரசுமயமாக்கல் |
| 26 | கழிவு | கொலம்பியா | பகோட்டா | திரும்பப்பெறப்பட்டது | மீள்அரசுமயமாக்கல் |
| 27 | கழிவு | எகிப்து | கெய்ரோ | வெற்றியடைந்தது | மீள்அரசுமயமாக்கல் |
| 28 | கழிவு | ஜெர்மனி | பெர்க்காமென் | வெற்றியடைந்தது | மீள்அரசுமயமாக்கல் |
| 29 | கழிவு | நார்வே | ஆஸ்லோ | வெற்றியடைந்தது | மீள்அரசுமயமாக்கல் |
| 30 | கழிவு | ஸ்பெயின் | லியான் | வெற்றியடைந்தது | மீள்அரசுமயமாக்கல் |
| 31 | கழிவு | பிரிட்டன் | ஸ்ஷேஃபீல்டு | தோல்வியடைந்தது | / |
| 32 | நீர் | அர்ஜென்டினா | பியுனோஸ் எரிஸ் | வெற்றியடைந்தது | தேசியமயமாக்கல் |
| 33 | நீர் | பொலிவியா | கோச்சாபம்பா | வெற்றியடைந்தது | மீள்அரசுமயமாக்கல் |
| 34 | நீர் | கேமரூன் | யாவுன்டே | வெற்றியடைந்தது | தேசியமயமாக்கல் |
| 35 | நீர் | பிரான்ஸ் | கிரனோபில் | வெற்றியடைந்தது | மீள்அரசுமயமாக்கல் |
| 36 | நீர் | பிரான்ஸ் | பாரிஸ் | வெற்றியடைந்தது | மீள்அரசுமயமாக்கல் |
| 37 | நீர் | ஜெர்மனி | பெர்லின் | வெற்றியடைந்தது | மீள்அரசுமயமாக்கல் |
| 38 | நீர் | ஜெர்மனி | ரோஸ்டாக் | வெற்றியடைந்தது | மீள்அரசுமயமாக்கல் |
| 39 | நீர் | இந்தோனீசியா | ஜக்கார்ட்டா | நடப்பில் உள்ளது | / |

| | தொழிற்துறை | நாடு | நகரம்/பிராந்தியம் | தற்போதைய நிலை | சேவைகளை உட்பகிர்வதின் அளவு |
|---|---|---|---|---|---|
| 40 | நீர் | இத்தாலி | ட்யூரின் | வெற்றியடைந்தது | மீள்அரசுமயமாக்கல் |
| 41 | நீர் | அமெரிக்கா | நியூயார்க் | வெற்றியடைந்தது | மீள்அரசுமயமாக்கல் |
| 42 | நீர் | தான்சானியா | தார் எஸ் ச லாம் | வெற்றியடைந்தது | தேசியமயமாக்கல் |
| 43 | நீர் | துருக்கி | அன்ட்டால்யா | வெற்றியடைந்தது | மீள்அரசுமயமாக்கல் |
| 44 | சமையல், சுத்திகரிப்பு | பிரிட்டன் | லெய்செஸ்டர் | வெற்றியடைந்தது | மீள்அரசுமயமாக்கல் |
| 45 | சுத்திகரிப்பு | பிரிட்டன் | நாட்டிங்ஹம் | வெற்றியடைந்தது | மீள்அரசுமயமாக்கல் |
| 46 | கல்வி | இந்தியா | கேரளா | வெற்றியடைந்தது | அரசுமயமாக்கல் |
| 47 | இறுதிச்சடங்கு சேவைகள் | ஸ்பெயின் | பார்சிலோனா | நடப்பில் உள்ளது | அரசுமயமாக்கல் |
| 48 | நூ லக சேவைகள் | பிரிட்டன் | குரோய்டன் | வெற்றியடைந்தது | மீள்அரசுமயமாக்கல் |
| 49 | வாகன நிறுத்த சேவைகள் | ஆர்மேனியா | யெரவன் | வெற்றியடைந்தது | மீள்அரசுமயமாக்கல் |
| 50 | சிறைகள் | நியூசி லாந்து | மவுண்ட் ஈடன் | வெற்றியடைந்தது | தேசியமயமாக்கல் |

## 1.2. அணுகுமுறை

பப்ளிக் சர்வீஸஸ் இன்டர்நேஷனல் (பி.எஸ்.ஐ) என்னும் சர்வதேச பொதுப் பணிகள் அமைப்புடன் சேர்ந்து பப்ளிக் சர்விஸஸ் இண்டர்நேஷனல் ரிசர்ச் யூனிட் (PSIRU) இந்த ஆய்வினை மேற்கொண்டு, முதற்கட்ட மற்றும் இரண்டாம் கட்ட தகவல்களைத் தருகிறது. மீள்அரசுமயமாக்கல் குறித்து தெரிந்து கொள்வதை ஊக்குவிக்கும் பொருட்டு மெய் நிகழ்வுகளின் அடிப்படையிலான அணுகுமுறை பயன்படுத்தப்பட்டுள்ளது. தொழிற்சங்கத்தினர் மற்றும் சமூக செயல்பாட்டாளர்களுக்கு மீள்அரசுமயமாக்கல் குறித்து விரிவான ஒரு கண்ணோட்டத் தினை வழங்கும் நோக்கில் பல்வேறு பிராந்தியங்களில், பல்வேறு துறைகளில் நிகழ்ந்த ஐம்பதுக்கும் மேற்பட்ட மெய்நிகழ்வுகள் தேர்ந்தெடுக்கப்பட்டு பகிரப்பட்டுள்ளன. இந்த கையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள 50 நிகழ்வுகளில் 42 நிகழ்வுகள் ஏற்கனவே நிறைவேறிவிட்டன; நான்கு செயல்பாட்டில் உள்ளது, இரண்டு தோல்வியடைந்து விட்டன மற்றும் ஒன்று பாதி வெற்றியைப் பெற்றுள்ளது. மேலும் ஒரு நிகழ்வில் மீள்அரசுமயமாக்கல் மேற்கொள்ளப்பட்டு பின்னர் திரும்பப்பெறப்பட்டது (அட்டவணை 1)

நடைமுறையில் உள்ள நி'வரம் பற்றி மேலும் அறிந்துகொள்ளும் நோக்கில் தொழிற்சங்க கண்ணோட்டத்தில் மேற்படியான முதற்கட்ட ஆராய்ச்சிக்கு, இந்த ஐம்பது நிகழ்வுகளிலிருந்து எட்டு நிகழ்வுகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் ஆறில் ஐந்து மீள்அரசுமயமாக்கல் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளது. அதில் எஞ்சிய ஒன்றில் மீள்அரசுமயமாக்கல் முழுவதுமாக நிறைவேற்றப்படவில்லை. தனியார்மயமாக்கல் மீதான ஆஸ்திரேலிய மக்களின் விசாரணை-யின் முடிவுகள் தனியார்மயமாக்கல் தேசிய அளவில் பல துறைகளில் தோல்வியடைந்ததை எடுத்துக்காட்டியது - இது குறித்து மேலும் தெரிந்துகொள்ள முதற்கட்ட ஆய்வு கூடுத லாக நடத்தப்பட்டது. பி.எஸ்.ஐ-யுடன் இணைந்து செயல்படும் அமைப்புகளின் பிரதிநிதிகளிடம் பெறப்பட்ட வினாத்தாள் விடைகள் மற்றும் நேர்காணல் மூலமாக இதில் உள்ள அசல் தகவல்கள் மற்றும் ஆவணங்களை பி.எஸ்.ஐ சேகரித்துள்ளது. அப்படி சேகரிக்கப்பட்ட அமைப்புகள் பற்றிய விவரங்கள் பின்வருமாறு: கழிவு, கனடா, வின்னிபெக் (CUPE); நீர், பிரான்ஸ், பாரிஸ் (CGT யோடு பாரிஸ் மற்றும் CFDT இன்டர்கோ); கழிவு, ஆஸ்லோ, நார்வே (ஃபேக்ஃபார்பன்டெட்); மற்றும் ஆஸ்திரேலிய மக்களின் தனியார்மயமாக்கல் குறித்த விசாரணை (பி.எஸ்.ஐ ஆசியா-பசிபிக்). கூடுத லாக, பி.எஸ்.ஐ-யுடன் இணைந்து செயல்படும் பிரதிநிதிகளிடம் PSIRU கீழ்வரும் நிகழ்வுகளில் நேர்காணலை நடத்தியது: ஆற்றல், ஹேம்பர்க், ஜெர்மனி (Ver.di); போக்குவரத்து, தென்கொரியா, சியோல் (KPTU); நீர், ராஸ்டாக், ஜெர்மனி, (Ver.di); நீர், பெர்லின், (Ver.di); நீர், ஜகார்த்தா, இந்தோனிசியா (பல்வேறு பங்குதாரர்கள்)

முதற்கட்ட கண்டுபிடிப்புகள் இரண்டு சர்வதேச நிபுணர் பயி லரங்கில் தொகுத்து வழங்கப்பட்டன, ஒன்று லண்டனில் ஜூன் 2018[2] –லும், மற்றொன்று ஜெனீவாவில் டிசம்பர் 2018[3]-லும் நடைபெற்றது. அதில் தொழிற்சங்கத்தினர், கல்வியாளர்கள் மற்றும் குடிமை சமூகக் குழுக்களின் பிரதிநிதிகள் பங்கேற்றனர். இரண்டு பயி லரங்கத்திலும், பொதுப் பணிகளை மீள்அரசுமயமாக்குவதில் நேரடி அனுபவமுள்ள பி.எஸ்.ஐ தொழிற்சங்க பிரதிநிதிகள் மற்றும் பொதுச் சேவை வழங்குவதில் கள அனுபவமுள்ள நிபுணர்கள் ஆகியோர் ஆய்வின் முதற்கட்ட கண்டுபிடுப்புகள் பற்றிய தங்களது கருத்துக்களை வழங்கினர். பின்னர் உருவாக்கப்பட்ட இந்த வழிகாட்டல் கையேட்டில் அவர்களின் கருத்துக்கள் சேர்க்கப்பட்டன.

டிரான்ஸ்நேஷனல் இன்ஸ்டிடியூட்டின்5 [4] “எதிர்காலம் பொது வானது (தி ஃப்யூச்சர் ஈஸ் பப்ளிக்) என்ற தொடரின் ஒரு பகுதியான - டாரியா சிப்ராரியோ அவர்கள் பிரசுரித்த மீள்அரசுமயமாக்கலின் தொழிலாளர் பரிமாணம்: மாற்றத்தின் நடுவில் உள்ள பொதுப் பணி தொழிலாளர்கள் மற்றும் தொழிற்சங்கங்கள் என்ற ஆவணத்தின் தகவல்கள் இந்த கையேட்டின் ஐந்தாவது அத்தியாயத்தில் உள்ளன. மேலும், யூரோப்பியன் பப்ளிக் சர்வீஸ் யூனியன் (EPSU)[5] நியமிப்பின்படி ஆற்றல் சுதந்திரப்படுத்துதலின் தோல்வி குறித்து வேரா வீஹ்மான் அவர்கள் எழுதிய ஆய்வறிக்கையின் கண்டுபிடிப்புகளும் இந்த கையேட்டில் உள்ளது. இண்டர்நேஷனல் டிரான்ஸ்போர்ட் வொர்க்கர்ஸ் ஃபெடரேஷன் (ITF)[6] நியமிப்பில் வெளியான பொதுப் போக்குவரத்திற்கான நிதியளித்தல் தொடர்பான ஆவணம்; பி.எஸ்.ஐ-யின் நியமிப்பில் ஆப்பிரிக்கா மற்றும் அரேபிய நாடுகளில் கழிவு மேலாண்மை குறித்து சான்ட்ரா வான் நீக்கெர்க் அவர்களுடன் இணைந்து எழுதிய அறிக்கையும் இதில் உள்ளது.[7]

## 1.3. இந்த கையேடு எப்படி ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது

அத்தியாயம் 2: மீள்அரசுமயமாக்கல் குறித்த மேற்பார்வையை வழங்குகிறது. மீள்அரசுமயமாக்கலின் விளக்கம் உள்ளிட்ட அடிப்படை கேள்விகள் பற்றி இது விவரிக்கிறது; தேசியமயமாக்கல் மற்றும் சேவைகளை தமக்குள்ளே பகிரும் உள்வழங்கல் போன்ற இதர முறைகளிலிருந்து மீள்அரசுமயமாக்கல் எப்படி வேறுபடுகிறது; மக்களுக்கு கிடைக்கும் பொதுச் சேவைகளை தனியார்மயமாக்கக் கோரி பெருமளவில் அழுத்தம் தனது வரும் இந்த சூழலில் மீள்அரசுமயமாக்கல் எந்த அளவிற்கு ஒரு உலகளாவிய போக்காக உள்ளது. அத்தியாயம் 3: சேவைகளை உள்வழங்கல் செய்த உள்ளூர் அதிகாரிகளின் நோக்கம் பற்றியும், ஒப்பந்த முடிவின் நேரம் உள்ளிட்ட மீள்அரசுமயமாக்கலின் செயல்பாடு கள் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தியாயம் 4: சேவை பயன்பாட்டாளர்கள், தொழிலாளர்கள், உள்ளூர் அதிகாரிகள் மற்றும் சுற்றுச்சூழல் ஆகியவற்றிற்கு மீள்அரசுமயமாக்கல் பெற்றுத்தரும் வாய்ப்புகள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தியாயம் 5: தனியார் நிறுவனங்களிடமிருந்து வரும் எதிர்ப்பினை எப்படி சமாளிப்பது போன்ற வழிகாட்டல் உட்பட, மீள்அரசுமயமாக்கல் தொடர்பான பிரச்சாரத்தை எப்படி திட்டமிடுவது, அதில் மற்றவரை பங்கேற்க வைப்பது உள்ளிட் டவைகளுக்கு தொழிற்சங்கங்களுக்கு வழிகாட்டலை வழங்குகிறது. அத்தியாயம் 6: பொதுப் பணிகளைப் தமக்குள்ளே பகிரும் உள்வழங்குவதை தவிர்ப்பதற்காக தனியார் துறையினர் பயன்படுத்தும் யுக்திகளை வெளிப்படுத்துகிறது. அத்தியாயம் 7: பொதுச் சேவைகளை தனியார்மயமாக்குவதை தவிர்பதற்கான மாற்று வழிகள், பொதுவுடைமை ஆக்குவதால் உள்ளூர் நிதி திட்டங்களுக்கு கிடைக்கும் வாய்ப்புகள், ஜனநாயக கட்டுப்பாடு ஏற்படுவதற்கான சாத்தியம் மற்றும் சமுதாயம் - தொழிலாளர்களின் பங்கேற்பும் இருப்பதற்கான வாய்ப்புகளை காட்டுகிறது. அத்தியாயம் 8: இந்த கையேட்டில் கொடுக்கப்பட் டுள்ள 50 மெய்நிகழ்வுகளின் தொகுப்பின் மூலம் நாம் முக்கியமாக தெரிந்துகொள்ள வேண்டியது என்னவென்பது இந்த அத்தியாயத்தில் உள்ளது. அத்தியாயம் 9: ஒரு குறிப்பிட்ட சேவையை மீள்அரசுமயமாக்க மேற்கொள்ளும் பிரச்சாரத்திற்கு தேவையானவற்றின் பட்டியலை தொழிற்சங்கங்கள் மற்றும் குடிமை சமூக குழுக்களுக்கு இந்த அத்தியாயம் வழங்குகிறது. ஒவ்வொரு நிகழ்வு பற்றிய கூடுதல் விவரமான தகவல்கள் இந்த கையேட்டுடன் வரும் பின் இணைப்பில் தொகுத்து பட்டியலிடப்பட்டுள்ளது. அட்டவணை 1-ல் குறிப்பிட்டுள்ளபடி இதில் எடுத்துக்கொள்ளப்பட்ட மெய்நிகழ்வுகள் துறை வாரியாக, நாடு வாரியாக, பீன் நகர வாரியாக ஆங்கி ல எழுத்து வரிசையில் வரிசைபடுத்தப்பட்டுள்ளது. இதில் எடுத்துக்கொள்ளப்பட்ட பெருவாரியான மெய்நிகழ்வுகள் குறித்த ஆய்வு களத்திற்கு செல்லாமல் அலுவ லகத்திலிருந்தே மேற்கொள்ளப்பட் டமையால், ஒவ்வொரு நிகழ்வுகளிலும் தகவல்களில் வேறுபாடு கள் இருக்க லாம். எனவே அந்நிகழ்வுகள் குறித்த கட்டுரையின் நீளமும் இந்த தொகுப்பில் மாறுபட்டு இருக்க லாம். கூடுத லாக இந்தத் தொகுப்பில், தனியார்மயமாக்கலின் தோல்வியிலிருந்து கற்றுக்கொள்ளவேண்டிய பாடங்கள் குறித்தும் இரண்டு சுருக்கமான கட்டுரைகளை மேற்காட்டுகிறது. முதல் கட்டுரையில் இங்கிலாந்தில் (அட்டவணை 1) உள்ள மிகப்பெரிய தனியார் ஒப்பந்ததாரர் நிறுவனமான கேரில்லியன் சந்தித்த தோல்வி குறித்து விவரிக்கிறது. இரண்டாவது கட்டுரையில் ஆஸ்திரேலியாவின் தனியார்மயமாக்கல் குறித்த மக்களின் விசாரணை-யிலிருந்து நாம் கற்க வேண்டியவை பற்றி விளக்கப்பட்டுள்ளது. (அட்டவணை 2)

1. பி.எஸ்.ஐ அமைப்பு உள்ளூர் மற்றும் பிராந்திய அரசாங்கங்கள் (எல்.ஆர்.ஜி) / முனிசிபல் (அரசு) சேவைகளை தேவையான சேவைகள் என்று கூறுகிறது. அவை, அரசாங்கத்தின் பல்வேறு உட்பிரிவுகளாகவும் இருக்க லாம், அதாவது நகரங்கள், பெருநகர பகுதிகள் மற்றும் பிராந்தியங்கள் உட்பட.. எல்.ஆர்.ஜி சேவைகள் என்பது நாட்டுக்கு நாடு அதன் அரசமைப்பிற்கு ஏற்ப வேறுபட லாம். பொது நிர்வாகம்; பொது தேவைகள் (தண்ணீர், தூய்மை பணிகள், மின்சாரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை); பொது போக்குவரத்து; பொதுவிட பராமரிப்பு; சமூக, க லாச்சார மற்றும் கல்வி சேவைகள் (நூ லகம், அருங்காட்சியகம், மழலையர் பள்ளி, பள்ளிகள் மற்றும் பல்கலைக்கழகங்கள்) மற்றும் சுகாதாரம் - சமூக சேவைகளும் இதில் உள்ளடங்கும். தீயணைப்பு வீரர்கள், பேரிடர் மீட்புப்பணியினர், மருத்துவ அவசர பணியாளர்கள் மற்றும் உள்ளூர் காவல் துறையினர் ஆகியோரின் சேவைகளும் எல்.ஆர்.ஜி சேவைகளுக்குள் வரும். மேலும் விவரங்களுக்கு: https://publicservices. international/resources/page/local-and-region-al-governmentmunicipal?id=9511&lang=en.
2. SI&PSIRU ரீமுனிசிபலைஷேஷன் ஸ்டியரிங் கமிட்டி, 28 ஜூன் 2018, கிரீன்விச் பல்கலைக்கழகம், கிரீன்விச், இங்கிலாந்து.
3. பி.எஸ்.ஐ. குளோபல் லேபர் ரீமுனிசிபலைஷேஷன்கான்பிரன்ஸ், 4-5 டிசம்பர் 2018, ஐ.எல்.ஓ, ஜெனிவா, சுவிசர்லாந்து
4. சிப்ராரியோ, டி. (2019) மீள்அரசுமயமாக்கலின் மயமாக்கலின் தொழிலாளர் பரிமாணம்: பொது சேவை தொழிலாளர்கள் மற்றும் தொழிற்சங்கங்கள் மாற்றத்தில், வொர்க்கிங் பேப்பர் (கூமீஐ)
5. வீஹ்மான், வி. (2019) பொதுத்துறைக்கு மாறுவது: ஐரோப்பாவிற்கான ஒரு கார்பனற்ற, மலிவான மற்றும் ஜனநாயக ஆற்றல் அமைப்பு. ஆற்றல் தாராளமயமாக்கலின் தோல்வி. ஐரோப்பிய பொது சேவைகள் ஒன்றியம் (உகருக்).
6. வீஹ்மான், வி. (2019) மக்கள் பொது போக்குவரத்துக் கொள்கை. பொது நிதி. சர்வதேச போக்குவரத்து தொழிலாளர் கூட்டமைப்பு.
7. வான் நீகெர்க், எஸ். மற்றும் வீஹ்மான், வி. (2019) ஆப்பிரிக்கா மற்றும் அரபு நாடுகளில் நகராட்சி திடக்கழிவு மேலாண்மை சேவைகள். பப்ளிக் சர்வீஸஸ் இண்டர்நேஷனல்

# 2.

# மீள்அரசுமயமாக்கல்: பின்னணி மற்றும் விளக்கங்கள்

## 2.1. விளக்கங்கள்

**தனியார்மயமாக்கல்**: பொதுத்துறையிடமிருந்து நிறுவனத்தின் சொத்துக்களின் உரிமை தனியார் வசம் செல்வது, பொதுப் பணிகளை வெளி நிறுவன பொறுப்பில் விடுவது, பொது எனப்படுவது – பொது (அரசுசார்) - தனியார் கூட்டணி (PPPs) அமைப்புகள் என்று புரிந்துகொள்ளப்படுகிறது. சலுகைகள், குத்தகை ஒப்பந்தங்கள், கட்டுவித்து-இயக்கி பின் ஒப்படைக்கும் (BOT) ஒப்பந்தங்கள் மற்றும் இதர ககக ஒப்பந்தங்கள் யாவும் தனியார்மயமாக்கலின் ஒரு வகையே ஆகும். அதாவது நிர்வாகக் கட்டுப்பாடு முழுவதுமாகவோ அல்லது பகுதியாகவோ தனியார் வசம் செல்லுமாயின் – சி லநேரங்களில் பொதுச் சேவைகளின் உரிமை தனியார் வசம் சென்றாலோ அது தனியார்மயமாக்கல் எனப்படும்.[1]

**ரீமுனிசிபலைஷேஷன்**" எனப்படும் மீள்அரசுமயமாக்கல் எனப்படுவது தனியார் வசமுள்ள அல்லது/ மற்றும் தனியாரின் உரிமையின் கீழ் உள்ள எந்தவொரு பொதுப் பணி நிறுவனத்தின் உரிமை, நிர்வாகம் மற்றும் ஜனநாயக கட்டுப்பாட்டை மீண்டும் முழுவதுமாக அரசு (பொது) உடமையாக்குவதாகும். பொது / அரசு அமைப்புகளால் நிதியளிக்கப்பட்டு, மானியம் வழங்கப்பட்டு, நிறுவப்பட்ட பொதுப் பணி அமைப்புகள் தனியாருக்கு சொந்தமாகவோ அல்லது/மற்றும் அவர்கள் நிர்வாகத்தின் கீழோ இருந்தால் அவற்றை உள்ளூர் அரசமைப்புகள் மற்றும் பிராந்திய அரசுகள் தங்களுக்கு கீழ் மீண்டும் கொண்டுவருவதே மீள்அரசுமயமாக்கல் எனப்படும். பிராந்தியங்கள் மற்றும் சமூகங்களில் உள்ள பொதுப் பணி சேவைகளை மீண்டும் பொதுவுடைமை ஆக்கும் காரணத்தினால் தான் இது 'தேசிய அமைப்பின் கீழ்" உள்ள ஒரு பரிமாணமாக பார்க்கப்படுகிறது. சில நேரங்களில் இது மக்கள் மற்றும் சமூகக் குழு இணைந்து முன்னெடுக்கும் பொது கூட்டமைப்பாகவும் அறியப்படுகிறது (உதாரணமாக மெய்நிகழ்வு 4, ஆற்றல், ஜெர்மனி. வுல்ஃப்ஹேகன்) இருப்பினும், பொதுவுடைமையாக மாற்றுவது எத்தகைய வடிவத்தில் நிகழ்ந்தாலும் – மீள்அரசுமயமாக்கப்பட்ட ஒரு சேவை அனைத்து தரப்பினருக்கும் கிட்டும் வகையில் இருக்க வேண்டும்; அதாவது அனைத்து குடிமக்களுக்கும் அந்த சேவையின் பயன் கிடைக்கும் வகையில் இருக்க வேண்டும். அந்த சேவைகளை அமல்படுத்தும் பொறுப்பில் உள்ளவர்கள், அந்த சேவையினால் அப்பகுதியில் உள்ள அனைவரும் பலனடையவதை உறுதிசெய்தல் வேண்டும். மாறாக அந்த கூட்டமைப்பில் உள்ள உறுப்பினர்களுக்கு மட்டும் அதன் பலன் கிடைக்கும் வகையில் இருத்தல் கூடாது. (**பிரிவு 7.5-ஐ காணவும்**)

இந்த கையேட்டில் **அரசுமயமாக்கல்** குறித்த உதாரணங்களும் உள்ளன. ஒரு குறிப்பிட்ட பொதுப் பணியை சிறப்பாகவோ அல்லது விலை மலிவாகவோ கொண்டுவருவதற்காக; உள்ளூர் அல்லது பிராந்திய அரசுகள் புதிய முனிசிபல் (அரசு) நிறுவனங்களை சுதந்திரமான பொதுச் சந்திவெளிக்குள் துவங்கியிருக்கின்றன. இது ஆற்றல் துறையில் பொதுவான ஒரு நிகழ்வாகும் (**காண்க மெய்நிகழ்வு எண் 2, ஆற்றல், ஜெர்மனி, ஹேம்பர்க்; மெய்நிகழ்வு 6, ஆற்றல், இங்கிலாந்து, நாட்டிங்ஹம்**) ஆனால் இது இதர துறைகளிலும் நிகழ்கிறது (உதாரணமாக மெய்நிகழ்வு எண் 11, சுகாதாரம், இந்தியா, டில்லி; மெய்நிகழ்வு எண் 47 இறுதிச்சடங்கு சேவைகள், ஸ்பெயின், பார்சிலோனா).


**பொதுத்துறை உள்வழங்கல்**" எனப்படுவது நகராட்சி அளவு முதல் தேசிய அளவு வரையில் பொதுச் சேவைகளை தனியார் வசமிருந்து பொதுவுடைமையாக்குவதாகும். அதாவது உரிமை, நிர்வாகம் மற்றும் அனைத்து நிர்வாக படிநிலைகளின்

கட்டுப்பாடும் அரசின் பொதுக்கட்டுப்பாட்டின் கீழ் வரும். எனவே இந்த கையேட்டில் நாம் மீள்அரசுமயமாக்கல் மற்றும் பொதுத்துறை உள்வழங்கல் ஆகிய இரண்டையும் தனியார்மயமாக்கப்பட்ட பொதுச் சேவைகளை மீண்டும் பொது உரிமையின் கீழும், பொது கட்டுப்பாட்டின் கீழும் கொண்டுவருவதை குறிப்பிடும் வார்த்தைகளாக பயன்படுத் தியுள்ளோம். அதேவேளையில், மீள்அரசுமயமாக்கல் என்ற வார்த்தையை உள்ளூர் மற்றும் பிராந்திய சேவைகளை மட்டுமே குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது. அந்த மீட்கும் நடவடிக்கை நகராட்சி அளவிலோ அல்லது தேசிய அளவிலோ, எந்த நிலையில் நடந்தாலும் அதற்கு பொதுத்துறை உள்வழங்கல் என்பதை பயன்படுத்தியுள்ளோம். இந்த கையேடு குறிப்பாக உள்ளூர் அளவில் ஒரு வழிகாட்டியாக இருக்கவேண்டும் என்று முக்கியத்துவம் அளித்தாலும், இதில் தேசியமயமாக்கல் குறித்த உதாரணங்களும் உள்ளன. இந்த கையேடு பொதுத்து றைக்குள்ளாக பணிகளை மீண்டும் பகிர வேண்டும் என்பதில் அக்கறை செலுத்துவதால் – பொதுத்துறை உள்வழங்கல் என்ற வார்த்தை உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. இருப்பினும் வெளிவழங்கல் எனப்படுவது பல்வேறு நிலைகளில் நிகழ லாம்; ஒரு தனியார் நிறுவனம் தங்களது பணிகளை வேறு தனியார் நிறுவனத்திடம் வழங்க லாம். அதுபோ லவே, உள்வழங்கல் எனப்படுவதை ஒரு நிறுவனம் அதன் சேவைகள் அனைத்தையும் தன் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரும் செயல்முறையாகவும் விளக்கலாம்.

## 2.2. மீள்அரசுமயமாக்கல்: உலகளாவிய ஒரு போக்கு

58 நாடுகளில் உள்ள 2400-க்கும் மேலான நகரங்களில் 2000-வது ஆண்டு முதல் 1,400-க்கும் மேற்பட்ட (மீள்)அரசுமயமாக்கும் நிகழ்வுகள் நடந்ததாக அறியப்படுகிறது. (படம் 1-ஐ காண்க)[2]. இந்த எண்ணிக்கையானது குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளதாகவே கருதப்படுகிறது. ஏனெனில் மீள்அரசுமயமாக்கப்பட்ட நிகழ்வுகள் பொதுவெளியில் பதிவு செய்யப்படவில்லை; எனவே பெரும்பான்மையான நிகழ்வுகள் வெளிவரவில்லை. உள்ளூர் அரசு அமைப்புகள் பொதுச் சேவைப் பணிகளின் கட்டுப்பாட்டை தங்களின் கீழ் கொண்டு வரும் நோக்கில் அவற்றை உள்வழங்கல் செய்து வருவது தொடர்ந்து அதிகரிப்பதையும் இந்த எண்ணிக்கை காட்டுகிறது. இங்கிலாந்தில் 2016- 2018 – உட்பட்ட காலத்தில் குறைந்தபட்சம் 222 உள்ளூர் அரசு ஒப்பந்தங்கள் மீள்அரசுமயமாக்கப்பட்டுள்ளன.[3] அதிக வருமானம் ஈட்டும் நாடுகளிலேயே மீள்அரசுமயமாக்கல் அதிக அளவில் நிகழும் அதே வேளையில் - குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் ஈட்டும் நாடுகளில் பொதுச் சேவைகளை மீண்டும் பொது வுடைமையாக்கும் நிகழ்வுகள் அதிகரித்து வருகின்றன.

### படம் 1 : மீள்அரசுமயமாக்கல் மெய்நிகழ்வுகள் 2019




ஆதாரம்: கிஷிமொட்டோ எஸ். மற்றும் பெடிட்ஜீன். (eds) 2019. தி ஃப்யூச்சர் இஸ் பப்ளிக். டிரான்ஸ்நேஷனல் இன்ஸ்டிடியூட்

அதிக வருமானம் உள்ள நாடுகளில் ஏன் மீள்அரசுமயமாக்கல் அதிகம் நிகழ்கிறது என்பதற்கு பல்வேறு காரணங்கள் உள்ளன. உ லகின் வட பகுதியில் உள்ள பல நாடுகளில் உள்ளூரிலேயே சேவைகளை பெறும் வசதி இருந்ததை நம் வர லாறு சொல்கிறது. அதே நேரத்தில் வளரும் நாடுகளில் பொதுச் சேவைகள் மத்தியில் ஓரிடத்திலிருந்து கிடைத்தது. லத்தீன் அமெரிக்காவில், உதாரணமாக பெரிய அளவில் பொதுச் சேவைகள் மீண்டும் தேசியமயமாக்கப்பட்டு வருகிறது. அதாவது மின்சாரம், தொலைத்தொடர்பு, நகராட்சி கழிவு மேலாண்மை மற்றும் தபால் சேவைகள் போன்றவை. இதற்கு முக்கிய காரணமாக இருப்பவர்கள் அந்த சேவையை பயன்படுத்துபவர்கள் மற்றும் உள்ளூர் அரசாங்கமாகும். அவர்கள் தனியார் அச்சேவைகளை தரமற்ற முறையில் வழங்கியதால் அதிருப்தி அடைந்தனர். பொதுச் சேவைகளின் செலவை கட்டுப்படுத்துவதிலும்,அதன் தரத்தின் மீதான கட்டுபாட்டினை மீண்டும் பெறுவதற்கும் அவர்கள் விரும்பினர்[4]. சிக்கனமாகவும், நிதி நெருக்கடி இருக்கும் சூழலில் பொதுச் சேவைகளை பாதுகாக்கும் பொருட்டு ஐரோப்பாவில் மீள்அரசுமயமாக்கல் குறித்த பிரச்சாரங்களை பரந்த நோக்கத்துடன் காணவேண்டும்.[5]


## 2.3. தனியார்மயமாக்கலின் போக்கு

2018-ல், வறுமை மற்றும் மனித உரிமைகள் குறித்த அறிக்கை ஒன்றில் ஐக்கிய நாடுகள் சபை கூறுவதாவது : "தனியார்மயமாக்கல் பெரும்பாலும் மனித உரிமைகளை பாதுகாப்பதை அமைப்பு ரீதியாக தவிர்ப்பதில் ஈடுபடுகிறது. மேலும், குறைந்த வருமானம் ஈட்டுபவர்கள் மற்றும் வறுமையில் வாழ்பவர்களை மேலும் ஒடுக்குவதற்கு வழிவகுக்கிறது.[6]"

இருப்பினும் பொதுச் சேவைகளை தனியார்மயமாக்குவதை உலகம் முழுவதும் அரசாங்கங்களும், சர்வதேச நிறுவனங்களும் ஊக்குவிக்கின்றன. குறிப்பாக பொதுத்துறை-தனியார்-கூட்டணி (PPP) என்ற வடிவில் அது அதிகம் நிகழ்கிறது. PPP எனப்படுவது ஒரு அரசாங்கம் மற்றும் ஒரு தனியார் நிறுவனத்திற்கு இடையிலான ஒரு ஒப்பந்தமாகும். அதன்படி ஒரு தனியார் நிறுவனம் ஒரு பொதுச் சேவைக்கான நிதியை வழங்கி, கட்டமைத்து பின் செயல்பாட்டையும் கவனிக்கும். மேலும் அதற்காக எதிர்வரும் பல ஆண்டுகளுக்கு அது கட்டணம் பெறும். அதனை சேவை பயன்பாட்டாளர்கள் வழங்குவார்கள் (மானியம் என்று அழைக்கப்படும்) அல்லது பொது (அரசு) துறை அதற்கான கட்டணத்தை வழங்கும், அல்லது இரண்டும் நடைபெறும்[7]


படம் 2-ல் காணப்படுவது போ ல, உலகம் முழுவதும், தனியார்மயமாக்கல் அதிகரித்து வருகிறது. தனியார்மயமாக்கல் மூலம் பெறப்பட்ட 2015 மற்றும் 2016 ஆண்டுகளுக்கான உலகளாவிய வருமானம் – இது சமீபத்திய கணக்காகும் – இது முன்பு எப்போதும் இருந்ததை விட அதிகமாக உள்ளது. சீனாவில் தான் தனியார்மயமாக்கல் அதிகம் நிகழ்கிறது. அந்நாடு 2015-ம் ஆண்டில் $173.2 பில்லியன் (€158.4 பில்லியன்) டா லர்களையும், 2016-ம் ஆண்டில் $148.0 பில்லியன் (€134.0 பில்லியன்) டா லர்களையும் ஈட்டியுள்ளது[8]. உட்கட்டமைப்பு திட்டங்களைப் பொருத்தவரையில் PPP திட்டங்களுக்கான ஆதரவு எப்போதும் இல்லாத அளவு வலுபெற்றுள்ளது (படம் 3-ஐ காண்க)[9]. PPP திட்டங்களில் முதலீடுகள் 1991 முதல் அபரிவித வளர்ச்சி கண்டுவருகிறது. PPP திட்டங்களின் இவ்வளர்ச்சி உலகளாவிய பொருளாதார மந்தநிலையிலும் பாதிப்படையாமல் இருந்தது. ஏனெனில் பலநாடுகள் ககக உட்கட்டமைப்பு திட்டங்களை பயன்படுத்தி முதலீட்டை பெருக்கிக்கொண்டனர். அதே நேரத்தில் சரிவும் ஏற்பட்டது.

**படம் 2: தனியார்மயமாக்கல் மூலமாக கிடைத்த உலகளாவிய வருமானம் 1988-2016**




Source: *Privatization Barometer (*preliminary results)*

## படம் 3: உட்கட்டமைப்பு கககக திட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் 1991-2015




ஆதாரம்: PPI தரவுகள், உலகவங்கி, நவம்பர் 2015 வரை

2013-ல் கககக முதலீடுகள் உலகம் முழுவதும் அதிகரித்தது, அதன் முக்கிய காரணம் இந்தியா மற்றும் பிரேசிலில் கககக மந்தமடைந்தது.[10]

உலக வங்கி, இன்டர்நேஷனல் மானிட்டரி ஃபன்ட் (IMF), யூரோப்பியன் கமிஷன், ஆர்கனைஷேஷன் ஃபார் எக்கனாமிக் கோஆப்ரேஷன் அன்ட் டெவ லப்மென்ட் (OECD) போன்ற பெறும் வளம் மற்றும் அதிகாரம் மிக்க நிறுவனங்கள் மற்றும் அமைப்புகள் தொடர்ந்து தனியார்மயமாக்கலை முன்வைத்து வந்தன. அது மட்டுமில்லாமல் பன்னாட்டு பெருநிறுவனங்கள், தனியார் ஈக்விட்டி நிறுவனங்கள், சிந்தனையாளர்கள் மற்றும் தனியார் முதலீட்டு குழுக்கள் ஆகியவற்றிலும் தனிப்பட்ட கவனம் செலுத்தப்பட்டது. சரியாக செயல்படவில்லை என்ற குற்றச்சாட்டுகளின் காரணமாக - அவர்கள் சுதந்திரமான பொருளாதார வளர்ச்சி வேண்டும், பொதுச் சேவைகளை வழங்குவதை சந்தையை முன்வைத்த அணுகுமுறையை பின்பற்ற வேண்டும், அரசாங்கத்தின் தலையீடு குறைவாக இருக்கவேண்டும் என்ற நோக்கம் மற்றும் பொதுத்துறைகளை மறுசீரமைக்க வேண்டும் என்றும் விரும்பினர்.
உலக வங்கியின் அறிக்கையின்படி

“PPP முறையின் மூலம்– ஆற்றல், போக்குவரத்து, தொலைத்தொடர்பு, நீர், சுகாதாரம் மற்றும் கல்வி ஆகிய பொதுப் பணிகளை அதிக செயல்திறன் மற்றும் நிலைத்தன்மையுடன் மேற்கொள்ள முடியும். மேலும், கககக முறையின் மூலம் தனியார் மற்றும் பொது நிறுவனங்களுக்கு இடையே எதிர்பாராத ஆபத்து களை சிறப்பாக பகிர்ந்து அளிக்க முடியும்.[11]

அதற்கு நேரெதிராக, பொதுச் சேவைகளை மீள்அரசுமயமாக்கம் செய்வதை வழக்கம் போ ல குடிமை சமூக அமைப்புகள், சமூக குழுக்கள் மற்றும் அடிப்படைவாத அமைப்புகள், சமூக மற்றும் குடிமை இயக்கங்கள், தொழிற்சங்கங்கள் மற்றும் அதன் கூட்டமைப்புகள் ஆதரித்தன. இந்த சமூக சக்திகள் பொதுப் பணிகளை ஒரு பொதுவான சந்தைப்பொருளாக கருதி, வளர்ச்சியை நோக்கிய வரிவிதிப்பின் மூலம் நிதியைப் பெறும் தன்மை உடையதாகக் கருதினர். மேலும், எல்லோருடைய பயன்பாட்டிற்கும் இருக்க வேண்டும், தரம், பொது வங்கிகளால் நிலையான நிதியை பெறவேண்டும், லாபத்தை மீண்டும் முதலீடு செய்யவேண்டும், ஓரளவு வேலைவாய்ப்பினை ஏற்படுத்த வேண்டும், பங்களிப்புடன் கூடிய / ஜனநாயக ரீதியான கட்டுப்பாடு வேண்டுமென சில கொள்கைகளை கொண்டிருந்தனர். சில மேயர்கள், நகராட்சிகள், உள்ளூர் அதிகாரிகள் – தங்களுக்குள் அரசியல் வேறுபாடுகள் இருந்தாலும், அதனை மீறி – ஒருமனதாக பொதுச் சேவைகளை மீள்அரசுமயமாக்க வேண்டும் என்று முன்வைத்தனர். (**பகுதி 5.4-ஐ காண்க**)

1. ஹால், டி (2015) பொதுத்துறை-தனியார்-கூட் டமைப்புகள் ஏன் சரிவர இயங்குவதில்லை? பொதுத்து றையின் மாற்று வழிகளின் பலன்கள். பப்ளிக் சர்வீஸஸ் இண்டர்நேஷனல். மேலும் விவரங்களுக்கு: http://www.world-psi.org/sites/default/files/ rapport_eng_56pages_a4_lr.pdf

2. கிஷிமொட்டோ. கு (2019) எதிர்காலம் பொதுத் துறைக்கானது. டிரான்ஸ்நேஷனல் இன்ஸ்டிடியூட். மேலும் விவரங்களுக்கு: டஞ்ஞணீண்://futureispublic.org/wp-content/uploads/2019/11/ TNI_the-future-is-public_online.pdf

3. https://www.apse.org.uk/apse/assets/File/ Insourcing%20(web).pdf

4. கோல்பர்ட், எம் (2017) ஏன் மீள்அரசுமயமாக்க வேண்டும்? லத்தீன் அமெரிக்காவில் தற்கால உந்துதல்கள் விவரங்கள்: கிஷிமொட்டோ. எஸ். மற்றும் பெடிட்ஜீன் ஓ (eds) பொது சேவைகளை மீண்டும் அரசுடைமையாக்குதல். டிரான்ஸ்நேஷனல் இன்ஸ்டிடியூட் (TNI). மேலும் விவரங்களுக்கு: https://www.tni.org/files/publication-downloads/reclaiming_-public_services.pdf

5. கிஷிமொட்டோ. எஸ் மற்றும் பெடிட்ஜீன். ஓ (2017) முடிவுரை: கிஷிமொட்டோ. எஸ் மற்றும் பெடிட்ஜீன். ஓ (ஞுஞீண்) பொது சேவைகளை மீண்டும் அரசுடைமையாக்குதல். டிரான்ஸ்நேஷனல் இன்ஸ்டிடியூட் (TNI). மேலும் விவரங்களுக்கு: https://www.tni.org/files/publication-downloads/reclaiming_-public_services.pdf

6. ஐக்கிய தேசிய பொது சபை (2018) தீவிர வறுமை மற்றும் மனித உரிமைகள் குறித்த சிறப்பு அறிக்கையாளரின் அறிக்கை. மேலும் விவரங்களுக்கு: http://undocs. org/A/73/396

7. ஹால் டி. (2015) பொதுத்துறை-தனியார்-கூட் டமைப்புகள் ஏன் சரிவர இயங்குவதில்லை? பொதுத்து றையின் மாற்று வழிகளின் பலன்கள். P.7. மேலும் விவரங்களுக்கு: http://www.world-psi.org/sites/default/files/ rapport_eng_56pages_a4_lr.pdf

8. பிரைவேட்டைஷேஷன் பாரோ”ட்டர் (2015/2016) இரண்டு ஆண்டுகள் தொடர்ச்சியான தனியார்மயமாக்கல் குறித்த பதிவு.

9. பேலிஸ் கே மற்றும் வான் வேயேன்பெர்க் ஈ. (2017) பொதுத்துறை- தனியார் கூட்டு மறும லர்ச்சியைத் திறத்தல்.. தி ஜர்னல் ஆஃப் டெவ லப்மெண்ட் ஸ்டடீஸ். Vol,54 ஐண்ண். 4, pp. 577-593.

10. உலக வங்கி மற்றும் PPIF (2016) PPP-களின் நிலை. வளர்ந்து வரும் சந்தைகள் மற்றும் வளரும் பொருளாதாரங்களில் உள்கட்டமைப்பு பொதுத்து றை-தனியார் கூட்டமைப்பு 1991-2015 மேலும் விவரங்களுக்கு: https://ppiaf.org/ documents/3551/download

11. உலக வங்கி (அக்டோபர் 2019) பொதுத்துறை-தனியார் கூட்டமைப்புகள் மேலும் விவரங்களுக்கு :https://www.worldbank.org/en/topic/publicprivatepartnerships/overview

# 3.

# மீள்அரசுமயமாக்கலை ஊக்குவிப்பவை

## 3.1. பொதுப் பணிகளை மீண்டும் அரசு கட்டுப்பாட்டிற்கு கொண்டு வருவதற்கான காரணங்கள்.

மீள்அரசுமயமாக்கலை பல காரணிகள் ஊக்குவிக்கின்றன. வளர்ந்த, நடுத்தர மற்றும் குறைவான வருமானம் ஈட்டும் நாடுகளில் சேவைகளை உள்வழங்கல் செய்வது பெரும்பாலும் தனியார்மயமாக்கலின் தோல்வியின் காரணமாகவே நிகழ்கிறது.[1] பொதுச் சேவைக்கான பொறுப்புணர்வை இழத்தல், நிதி பரிவர்த்தனையில் வெளிப்படைத்தன்மை இல்லாமல் இருத்தல், ஊழலுக்கு வழிவகுக்கும் வகையில் ஒப்பந்தங்களை சரிவர கண்காணிக்காமல் இருத்தல் ஆகியன தனியார்மயமாக்கலின் விளைவாக அடிக்கடி நிகழ்கிறது. நீண்ட கால மானியங்கள், குறிப்பாக தண்ணீர் மற்றும் மின்சாரத் துறைகளில் கிடைப்பதால், அது ஊழல் நடப்பதற்கு வாய்ப்பாக அமைகிறது. ஏனெனில் இதனை பயன்படுத்திக்கொண்டு நிறுவனங்கள் பல ஆண்டுகளுக்கு உறுதியாக லாபம் பார்க்கின்றன.[2] சேவைகளை உள்வழங்கல் செய்வது பல்வேறு பொதுத்துறைகளில் நிகழ்கிறது. ஆனால் தண்ணீர், மின்சாரம், கழிவு மேலாண்மை மற்றும் சுகாதாரம் ஆகிய துறைகளில் இது பொதுவான ஒன்றாகும். ஏனெனில் தனியார்மயமாக்கல் அத்துறைகளில் தோல்வியடைந்து, சேவைகளை பயன்படுத்தும் நபர்கள், சமூகம் மற்றும் பகுதிகளை மோசமாக பாதித்துள்ளது.

கூடுத லாக, செலவுகளை குறைக்கும் நோக்கில் குறைக்கப்படும் பட்ஜெட் காரணமாக, உள்ளூர் அதிகாரிகள் அவர்களது சேவையின் தரத்தை மறுஆய்வு செய்யும் சூழல் ஏற்படுகிறது. அதனால், அனைத்து நிலைகளிலும் அரசாங்கங்கள், குடிமை சமூக அமைப்புகள், தொழிற்சங்கங்கள் மற்றும் சமூக குழுக்கள் ஆகியன பொதுமக்களின் பணத்தையும், மூலாதாரங்களையும் மேலும் சிறப்பாகவும், சிக்கினமாகவும் பயன்படுத்துவதற்கான தீர்வினை தேடுகின்றனர். அவர்களுக்கு பதி லாக கிடைப்பது மீள்அரசுமயமாக்கலே ஆகும்.[3]

இந்த தொகுப்பில் பட்டியலிடப்பட்டுள்ள மெய்நிகழ்வுகள் (பின் இணைப்பை பார்க்கவும்) மீள்அரசுமையமாக்கலுக்கான பொதுவான காரணங்களை வெளிப்படுத்துகின்றன. அவை:

**திறனற்ற நிறுவன செயல்பாடுகள்**

- நிறுவனத்தின் செயல்திறன் மற்றும் சேவை மோசமான தரத்துடன் இருத்தல்;
- தனியார் நிறுவனங்கள் தங்களது ஒப்பந்தங்களைக் கைவிடுகின்றன அல்லது ஒப்பந்தமிட்ட பணிகளை மேற்கொள்ள தவறுகின்றன;
- ஒப்பந்ததாரர்கள் திவால் ஆகுதல்;

**பொதுப் பணிகளில் கட்டுப்பாடு இழப்பு**

- பொதுப் பணிகளை வழங்குவதில் கட்டுப்பாட்டினை இழந்தது மற்றும் சேவைகள் தனியார்மயமாக்கப்பட்டவுடன் குறைகளை சீர் செய்ய இயலாமை;
- கடுமையான ஒப்பந்த விதிமுறைகளைக் கடந்து சமூகத்திற்கு சேவைகளை வழங்குவதற்கு தனியார் ஒப்பந்ததாரர்கள் / சேவை வழங்குனர்கள் விரும்பியதில்லை.

**தொழிலாளர்கள் மற்றும் சேவை பயன்பாட்டாளர்கள்**

- சேவைக்கான மூலாதாரங்கள், ஊழியர்கள் மற்றும் உட்கட்டுமானங்கள் ஆகியவற்றில் போதிய முதலீட்டினை செய்யாதத;
- பயன்பாட்டாளர்கள் தலையில் கட்டணத்தை உயர்த்திக் கட்டுவது;
- சேவை வழங்குவதில் பாகுபாடு காட்டுதல் (லாப நோக்குடன் குறிப்பிட்ட பயன்பாட்டாளர்கள் மற்றும் பகுதிகளுக்கு சேவை செய்தல், லாபம் தர இயலாத பயனாளர்கள் மற்றும் பகுதிகளை புறக்கணித்தல்);




Demonstration in Berlin, Germany



- சமூக மற்றும் / அல்லது சுற்றுப்புற நிலைத்தன்மை குறித்து அக்கறையின்மை (மோசமான பணிச்சூழல், பணி நீக்கம் மற்றும் மாசுபடுத்துதல்)

**வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வு இல்லாதது**

- சேவைக்கான கட்டணத்தில் வெளிப்படைத்தன்மை இல்லாதது;
- ஏமாற்றுவேலை மற்றும் கருத்துவேறுபாடுகள்;
- தனியார் சேவை வழங்குனர் மற்றும் ஒப்பந்த நிறுவனங்களுக்கு இடையேயான செயல்பாட்டுக் கட்டணம் மற்றும் விலையேற்றம் குறித்த சச்சரவுகள்.

இருந்தபோதும், மீள்அரசுமயமாக்கல் என்பது ஒரு ஒப்பந்தத்தின் தோல்வியினாலோ, நிதியின் அடிப்படையிலோ முன்வைக்கப்படுவதல்ல. தொழிற்சங்கங்கள் மற்றும் சுற்றுப்புறச்சூழல், சமூக இயக்கங்கள் ஆகியவற்றின் அழுத்தம் இல்லாமல் மீள்அரசுமயமாக்கல் சாத்தியமாகி இருந்திருக்காது என்பது இந்த தொகுப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பல்வேறு மெய்நிகழ்வுகளின்படி நிருபணமாகிறது. **(எடுத்துகாட்டு: மெய்நிகழ்வு 1. ஆற்றல், ஜெர்மனி, பெர்லின், மெய்நிகழ்வு 2. ஆற்றல், ஜெர்மனி, ஹேம்பர்க்; மெய்நிகழ்வு 17 சமூக அக்கறை, நார்வே, பெர்ஜென்; மெய்நிகழ்வு 24. கழிவு, கனடா, போர்ட் மூடி; மெய்நிகழ்வு 26, கழிவு, கொலம்பியா, பகோட்டா; மெய்நிகழ்வு 27, கழிவு, எகிப்து, கெய்ரோ; மெய்நிகழ்வு 29. கழிவு, நார்வே, ஆஸ்லோ; மெய்நிகழ்வு 33, நீர், பொலிவியா, கோச்சாபம்பா; மெய்நிகழ்வு 37, நீர், ஜெர்மனி, பெர்லின்; மெய்நிகழ்வு 40, நீர், இத்தாலி, ட்யூரின்; மெய்நிகழ்வு46, கல்வி, இந்தியா, கேரளா)**. குறிப்பிட்ட சூழ்நிலைகளில் சர்வதேச அமைப்புகள் மற்றும் தேசிய அரசாங்கங்கள் தனியார்மயமாக்கலை மேலும் ஊக்குவிக்கின்றன.

மீள்அரசுமயமாக்கல் எனப்படுவது சமூக போராட்டங்களின் விளைவாகவே ஏற்படுகிறதே அல்லாமல், ஒரு செலவு-பயன்களின் ஆய்வின் அடிப்படையில் ஏற்படுவதில்லை (பகுதி 2.3-ஐ காண்க)

## 3.2. எப்போது மீள்அரசுமயமாக்கப்பட வேண்டும்

### 3.2.1. ஒப்பந்த முடிவிற்குப் பிறகு

தனியார்மயமாக்கப்பட்ட சேவைக்கான ஒப்பந்தம் முடிவடைந்தவுடன் மீள்அரசுமயமாக்கம் செய்யப்படுகிறது. தொழிற்சங்கங்கள் இதனைக் கருத்தில்கொண்டு, தனியார் ஒப்பந்ததாரர்களை கவனித்து, அவர்களது ஒப்பந்தம் நிறைவடையும் தேதிகளை கவனத்தில் வைத்து மீள்அரசுமயமாக்களுக்கான வாய்ப்புகளை அறிந்துகொள்ள லாம். ஒப்பந்தம் நிறைவுறும் தேதிகளை நினைவு வைத்திருப்பதன் மூலம், தொழிற்சங்கங்கள் தங்களது மீள்அரசுமயமாக்கல் குறித்த பிரச்சாரங்களுக்குத் திட்டமிட லாம், மேயர்கள் மற்றும் உள்ளூர் அதிகாரிகளை சந்தித்து – தனியார்மயமாக்களுக்கான மாற்று வழியாக அரசுமயமாக்கல் எப்படி இருக்கிறது, அதன் ஆதாயம் என்னென்ன என்பது குறித்தும் பேச லாம்.

சேவைக்கான ஒப்பந்தம் நிறைவடையும் காலம் குறித்த தகவல் வெளிப்படையாக கிடைக்காத சூழலில், தொழிற்சங்கங்கள் தங்களது தகவல் அறியும் சுதந்திரத்தை[4] எப்படி உபயோகிக்க வேண்டும் அல்லது சரியான சர்வதேச மற்றும் தேசிய சட்டங்களைப் பயன்படுத்தி எப்படி அந்தத் தகவலைப் பெற லாம் என்ற கோணத்தில் செல்லவேண்டும். சில நேரங்களில் ஒப்பந்த விவரங்கள் ரகசியமாக வைக்கப்பட்டு, பொதுவெளியில் தெரியாத வகையில் வைத்திருக்கப்படும் (காண்க மெய்நிகழ்வு 37, நீர், ஜெர்மனி, பெர்லின்). அது போன்ற சூழலில்,

இதனை ஆவணங்கள் அல்லது டெண்டர்கள் தொடர்பான ஊடகத் தகவல்கள் அல்லது நிறுவனங்களின் ஆண்டு அறிக்கைகளின் மூலமாக அறியலாம். கூட்டு பேரம் பேசுதல் நடைபெறும்போது, சேவைத் தரம் மற்றும் சேவை வழங்குவதில் உள்ள பிரச்சனைகளை நிவர்த்தி செய்வதையும் தொழிற்சங்கங்கள் தங்களது கூட்டு பேர கோரிக்கைகளுடன் சேர்த்துக்கொள்ளலாம். அதன் மூலம் முதலாளிகள் குறித்த தகவல்களை பெற இயலும்.

கீழ்வரும் உதாரணங்கள் ஒப்பந்த முடிவினை சுட்டிக்காட்டுவதை குறிக்கின்றன, அவை மீள்அரசுமயமாக்கலுக்கு ஒரு வாய்ப்பினை ஏற்படுத்துகிறது: மெய்நிகழ்வு 2 **ஆற்றல், ஜெர்மனி, ஹேம்பர்க்; மெய்நிகழ்வு 5. ஆற்றல், லித்துவேனியா, வில்னியஸ்; மெய்நிகழ்வு 15. உட்கட்டமைப்பு, இங்கிலாந்து, கம்ப்ரியா; மெய்நிகழ்வு 16. சமூக நலன், டென்மார்க், சிட்ஜர்ஸ்; மெய்நிகழ்வு 23. கழிவு, கனடா, கான்சப்ஷன் பே சவுத்; மெய்நிகழ்வு 24. கழிவு, கனடா, போர்ட் மூடி; மெய்நிகழ்வு 38. நீர், ஜெர்மனி, ரோஸ்டாக்.**

## 3.2.2. முன்னதாக முடிக்கப்படும் ஒப்பந்தத்தைத் தொடர்ந்து

சில நகராட்சிகள் மற்றும் உள்ளூர் அதிகாரிகள் ஒப்பந்த தேதி முடிவடைவதற்குள் அதனை முடித்து விடுவார்கள். காரணம், தனியார் ஒப்பந்ததாரர் தேவையான தரத்தில் சேவையை வழங்காமல் இருக்க லாம், நிதி நெருக்கடியில் இருக்க லாம் அல்லது அவர்கள் அதிக கட்டணம் பெற லாம், குறிப்பாக பட்ஜெட் நெருக்கடியில் அப்படி இருக்க லாம்.

பொதுவாக தனியார் நிறுவனங்களின் ஒப்பந்த விதிமுறைகளில் முன்னதாகவே ஒப்பந்தத்தை முடித்தால் அதிக நஷ்டஈடு தரவேண்டும் என்ற நிபந்தனைகள் இருக்கக்கூடும். மேலும் சில நேரங்களில், லாப இழப்பு ஏற்படுகிறது என்று கூறி சட்டப்படியான நிவாரணம் கோரப்பட லாம்; அதாவது அந்நிறுவனங்கள் உள்நாட்டு நீதிமன்றங்களை நாடியோ அல்லது முதலீட்டாளர் – இன்வெஸ்டர் ஸ்டேட் செட்டில்மெண்ட் டிஸ்ப்யூட் (ISDS) எனப்படும் கணக்குத்தீர்த்தல் முறைப்படி, சர்வதேச உதவியினைக் கோர லாம். (பகுதி 6.2-ஐ காண்க) அதேநேரத்தில், ஒப்பந்த முடிவு என்பது பொதுச் சேவைகளைப் பொருத்தவரை மீள் அரசுமயமாக்குவதற்கு சுலபமான வாய்ப்புகளை வழங்குகிறது. உதாரணமாக, **ஷி ஃபீல்டு,** இங்கிலாந்தில், வியோலியா என்ற நிறுவனத்துடன் அந்நகர கழிவுகளை மேலாண்மை செய்ய, 2001 முதல் 2036 வரையிலான 35 ஆண்டுகால ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது. அதனை முன்னதாகவே முடிக்கக்கோரி கவுன்சில், 2017, ஜனவரியில் வாக்கெடுப்பு நிகழ்த்தியது. கவுன்சிலை பொருத்தவரை அந்நகரத்தின் தேவைக்கு அந்த ஒப்பந்தம் போதவில்லை என்று கருதியது.[5] இருப்பினும், வியோலியா நிறுவனம் கேட்ட நஷ்டஈடு மிக அதிகமாக இருந்ததன் காரணமாக மீள்அரசுமயமாக்கல் கைவிடப்பட்டது[6]. (காண்க மெய்நிகழ்வு 31. கழிவு, இங்கிலாந்து, ஷி ஃபீல்டு)

உள்ளூர் அரசு நிர்வாகமே ஒப்பந்த முடிவுக்காக காத்திருந்தாலும், மீள்அரசுமயமாக்கல் எனப்படுவது சு லபமான, சச்சரவு இல்லாத செயல்முறையாக இருக்கும் என்பதற்கு எந்த உத்திரவாதமும் இல்லை. ஒப்பந்தம் நிறைவடைந்த பின்பு அந்த குறிப்பிட்ட சேவை மீள்அரசுமயமாக்கப்பட்டால், அப்போதும் அந்த தனியார் நிறுவனம் நஷ்டஈடு கோர லாம். வில்னியாஸ் எனர்ஜிஹா நிறுவனத்தின் மூலம் பெற்ற வில்னியஸ் அனுபவம் இதற்கு ஒரு உதாரணமாகும்.

- அது வியோலியா எனப்படும் பிரெஞ்சு பன்னாட்டு நிறுவனத்தின் சார்பு நிறுவனமாகும். மார்ச் 2017-ன் பிற்பகுதியில் அதன் 15 ஆண்டுகால குத்தகை முடிவடைந்தவுடன், வில்னியஸ் நிறுவனம் அந்த மாவட்ட ஹீட்டிங் கிரிட்-ஐ நகராட்சியின் ஹீட்டிங் சேவை வழங்குனரான வில்னியாஸ் சிலுமோஸ் டிங்க் லாய்[7] நிறுவனத்திடம் மாற்றிவிட்டது. 2016-ம் ஆண்டின் துவக்கத்தில் மீள்அரசுமயமாக்கல் செயல்முறை சண்டை சச்சரவினால் பாதிக்கப்பட்டது; வியோலியா நிறுவனம் லித்துவேனியா அரசாங்கத்தை வாஷிங்டன் நகரில் உள்ள இண்டர்நேஷனல் சென்டர் ஃபார் செட்டில்மெண்ட் ஆஃப் இன்வெஸ்ட்மென்ட் டிஸ்ப்யூட்ஸ் (ICSID) என்ற சர்வதேச அமைப்பிடம் எடுத்துச் சென்று – 100 மில்லியன் யூரோ நஷ்டஈடாக கேட்டது. லித்துவேனியாவில் தனது முதலீட்டினை நியாமற்ற முறையில் பயன்படுத்தியதாகவும், அரசாங்கம் அநியாயமாக நடந்துகொண்டதாகவும் அது குற்றம் சாட்டியது.[8] மீள்அரசுமயமாக்கிய பின்பு தொடுக்கப்பட்ட பதில் வழக்கு ஒன்றில், வில்னியஸ் நகர அரசானது ஸ்டாக்ஹோம் நடுவர் நீதிமன்றத்தை நாடியது. ஒப்பந்த காலத்தின் போது தங்கள் அரசு சொத்துக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்திய காரணத்திற்காக வியோலியா மற்றும் வில்னியாஸ் எனர்ஜிஹா நிறுவனங்களிடமிருந்து 200 மில்லியன் யூரோவினை நஷ்டஈடாக கோரியது.[9] அந்த இரு வழக்குகளும் இன்றுவரை நடந்து வருகிறது. (**காண்க மெய்நிகழ்வு 5. ஆற்றல், லித்துவேனியா, வில்னியஸ்**).

கேமரூனில், **கேமரூனைஸ்** தெஸ் ஓஎக்ஸ் (CDE) என்னும் பெருநிறுவனத்துடன் அந்நாட்டு அரசு மேற்கொண்ட தண்ணீர் உற்பத்தி மற்றும் விநியோக ஒப்பந்தத்தை புதுப்பிக்க வேண்டாமென முடிவு செய்தது. மே 2018-ல் ஒப்பந்தம் முடிவுடையும் வரை காத்திருந்த போதும், இஈ ÷19 மில்லியன் அமெரிக்க டா லர்களை நஷ்டஈடாக கேட்டது.[10] கேமரூனில் பத்து ஆண்டுகளாக தண்ணீர் உற்பத்தி மற்றும் விநியோக பொறுப்பை இஈ ஏற்றிருந்தது. மேலும், அந்நிறுவனத்தின் சேவைத் தரம் மற்றும் அதிக கட்டணம் வசூலித்ததன் காரணமாக பல ஆண்டுகள் கழித்து அச்சேவையினை மீண்டும் தேசியமயமாக்க முடிவு செய்தது.[11] பொதுத்துறை தனியார் துறையை மிஞ்சும் வகையில் செயல்பட்டது குறிப்பிடத்தக்கது. குடிநீர் சேவை பொதுத்துறை வசம் இருந்தபோது குடிநீரை அனைவருக்கும் கிடைக்க செய்வது வெற்றிகரமாகவும், கட்டுபாட்டுடனும் நடந்தது. தனியார் வசம் இருந்ததை விட சிறப்பாகவே இருந்தது.[12] (காண்க மெய்நிகழ்வு 34. நீர், கேமரூன், யாவுன்டே).

என்னதான் நிறுவனங்கள் ஒப்பந்தம் முன்னதாகவே முடிக்கப்பட்டால் நஷ்டஈடு கேட்கும் என்ற ஆபத்து இருந்தாலும், சில நேரங்களில் அத்தகைய ஆபத்தினை எதிர்கொள்ள வேண்டிய அவசியம் இருக்கிறது. ஏனெனில், நஷ்டஈட்டு தொகையானது, அந்த தனியார் நிறுவனத்தை தொடர்ந்து பணியை மேற்கொள்ள அனுமதித்தால் ஏற்படும் செலவுகளைக் காட்டிலும் குறைவாகவே இருக்கும். உதாரணமாக, **கொலம்பியாவின், பகோட்டாவில்,** 1994-ம் ஆண்டு, சூயஸ் டெக்ரிமான்ட் நிறுவனத்தின் சார்பு நிறுவனமான பகோட்டானா தி ஆகவாஸ் ஈ சானியமியன்டோ 30 ஆண்டுகளுக்கான சாலிட்டர் கழிவுநீர் ஆ&ஊ ஒப்பந்தத்தை பெற்றது – அதில் மூன்று ஆண்டுகள் கட்டுமானத்திற்கும், 27 ஆண்டுகள் அந்த தொழிற்சாலையை இயக்குவதற்கும், இரண்டு மில்லியன் பகோட்டா மக்களுக்கு அச்சேவை சென்றடைய வேண்டும் என்பதே திட்டம். டிசம்பர், 2004-ல், நகர கவுன்சில் அந்த ஒப்பந்தத்தை முடிவுக்கு கொண்டுவந்தது. காரணம் அத்திட்டம் பத்து மடங்கு கூடுதல் கட்டணம் வசூல் செய்தது. எனவே, 80மில்லியன் அமெரிக்க டா லர்களை செலுத்தி

ஒப்பந்தத்தை திரும்பப்பெறுவது சரியானதாக இருந்தது.[13] அதேபோ ல, **ஜெர்மனியின், பெர்லினில்** தண்ணீர் சேவைகள் 2013-ம் ஆண்டு மீள்அரசுமயமாக்கப்பட்டது. செலவைக் காட்டிலும் நீண்டகால லாபத்தினை கருத்தில் கொண்டு அந்த ஒப்பந்தம் முடிவதற்கு 15 ஆண்டுகள் முன்னதாகவே ரத்து செய்யப்பட்டது. இருப்பினும், தண்ணீர் சேவையை மீள்அரசுமயமாக்கம் செய்தது பேரும் செலவிற்கு பிறகே நடந்தது. கீஙிஉ மற்றும் வியோலியா நிறுவனங்களுக்கு 2018-ம் ஆண்டு வரையில் கிடைக்க வேண்டிய லாபத்தினை – அதாவது 1.2 பில்லியன் பவுண்டுக்கு மேலான தொகையை பெர்லின் அரசு செலுத்தியது. (காண்க மெய்நிகழ்வு 33. நீர், ஜெர்மனி, பெர்லின்). இரண்டு நிகழ்வுகளிலும் தோராயமான குறுகியகால செலவை ஒரே தவணையாக செலுத்துவது உசிதமானதா என்பதை கருத்தில் கொண்டு, அதனை மீள்அரசுமயமாக்கலின் செலவாக கருத்தில் கொள்ளப்பட்டது – அதில் நஷ்டஈடும் உள்ளடங்கும் - ஒரு தரப்பு மட்டும் ஒப்பந்த முடிவினை விரும்பும் பட்சத்தில், நீண்ட கால செலவில் சேமிக்கும் நோக்கில் செயல்பட்டு, தனியார் துறையின் அதிக கட்டண கொள்ளைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தல் வேண்டும்.

நிறுவனங்கள் ஐகூகு முறைகளின்படி நஷ்டஈடு கோரினால் அவை அனைத்தும் வெற்றிகரமாக வழங்கப்பட்டுவிடும் என்ற உத்திரவாதமில்லை. பெரும்பாலும், பணிகள் உள்வழங்கல் செய்யப்பட்டு கைமாறுவதை தவிர்க்கவே ஒரு அச்சுறுத்த லாக நஷ்டஈடு கோரப்படுகிறது. (பகுதி 6.2-ஐ காண்க) **கோச்சாபம்பா, பொலிவிய** மற்றும் **டார் எஸ் ச லாம், தான்சானியா** நிகழ்வு அதற்கு ஒரு உதாரணமாகும். பொதுப் பணிகளை உள்வழங்கப்படும் போது ஏற்படும் லாப இழப்பை ஈடுகட்டும் வகையில், பன்னாட்டு நிறுவனங்கள் ஐகூகு வழிமுறைகளைப் பயன்படுத்தி நஷ்டஈடு கோரும் வாய்ப்பை அளிக்கின்றன. நடைமுறையில் நஷ்டஈடு கோருவதற்கான தேவை இருந்தாலும் கூட, பேச்சுவார்த்தை நடத்தி, அந்தந்த நாடுகள் மற்றும்/அல்லது பிராந்திய அரசுகளின் சக்தியை மட்டுப்படுத்துவதுமே முக்கிய நோக்கமாக உள்ளது. பேச்சுவார்த்தைத்தைகள் வழக்கமான ஒன்றாக இருப்பதில்லை, மாறாக உலகமயமாக்கலுக்கு கீழான ஒற்றுமை மீதான காலனி ஆதிக்கத்திற்கு பின்னான முரண்க லாலும் பாதிப்புக்குள்ளாகின்றன. மேலும், மீண்டுவரும் பொது வுடைமையின் மீதான அரசியல் போட்டி உணர்வும் தொடர்ந்து தாக்கத்தினை ஏற்படுத்துகிறது. (**காண்க மெய்நிகழ்வு 33. நீர். பொலிவியா, கோச்சாபம்பா; மெய்நிகழ்வு 42, நீர், தான்சானியா, டார் எஸ் சலாம்**).

உள்ளூர் அரசமைப்புகள் ஒப்பந்தத்தை முன்னதாகவே முடிக்க எண்ணினால், அதன் காரணமாக வரும் சட்ட நடவடிக்கை களையும் கருத்தில் கொள்ளவேண்டும். அவை பெரும் செலவீனமாகவும், காலவிரயம் ஏற்படுத்துவதுமாகவும் இருக்க லாம். அதுபோன்ற சூழலில், பொதுப் பணிகளை மீண்டும் அரசு வசப்படுத்த இ லவச பொது வழக்கறிஞர்கள் மூலம் மேல் முறையிட லாம். (**காண்க மெய்நிகழ்வு 25. நீர், இந்தோனீசியா, ஜகார்த்தா; மெய்நிகழ்வு 37, நீர், ஜெர்மனி, பெர்லின்**)

### 3.2.3. தனியார் நிறுவனம் திரும்பப்பெறப்படுதல் அல்லது திவால் ஆவதைத் தொடர்ந்து

நிறுவனங்கள் தங்களது லாப அளவை தவறாக கணக்கிட்டிருந்தாலோ அல்லது திவாலானாலோ ஒப்பந்தத்தை திரும்பப் பெற்றதாகும். அதுபோ லவும் மீள் அரசுமயமாக்கம் செய்வதற்கான வாய்ப்புகள் கிடைத்திருக்கின்றன.

உதாரணமாக, **லண்டனில்** முனிசிபல்லகங்களை மேலாண்மை செய்யும் பொறுப்பிலிருந்த துணை ஒப்பந்ததார் நிறுவனமான கேரில்லியனை சேவைகளை விட்டு நீக்க பொரோ ஆஃப் குரோய்டன் பல ஆண்டுகளாக முயன்று வருகிறது. திருப்திகரமான சேவையை அளிக்க தவறிய போதிலும், குரோய்டனால் ஒப்பந்தத்தை முன்னதாகவே முடிக்க ஒரு சரியான வழியைக் கண்டறிய முடியவில்லை. அந்த ஒப்பந்தம் நிறைவடைய வேண்டிய ஆண்டு 2020. கேரில்லியன் நிறுவனம் ஜனவர் 15, 2018 அன்று அதிகப்படியான கடன் காரணமாக முடக்கப்படும் கட்டாயத்திற்கு வந்தது. (அட்டவணை 2 கேரில்லியன்-ஐ காண்க) குரோய்டன் இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொண்டு தனது 13 நூ லகங்களை மீள்அரசுமயமாக்கியது. (காண்க மெய்நிகழ்வு 48, நூ லக சேவைகள், இங்கிலாந்து, குரோய்டன்).[14]

இதே போன்ற சூழ்நிலைகளின் காரணமாக, 2017-ம் ஆண்டு **நார்வே** நாட்டின் ஆஸ்லோவில் உள்ள பல நகராட்சிகள் கழிவு அள்ளும் சேவைகளை மீண்டும் அரசுமயமாக்கியது. முதலில், தனியார் சேவை வழங்குனரான வியரினோ திவா லானதாக ஜனவரி 2017-ல் அறிவித்தது, அதனைத் தொடர்ந்து மற்றுமொரு தனியார் நிறுவனமான ரினோநார்டென் அதே ஆண்டின் பிற்பகுதியில் திவா லானதாக அறிவித்தது.[15] 2016-ம் ஆண்டு, 50,000 குடியிருப்புகளில் சுமார் 20 சதவிகிதத்தினர் வியரினோவின் கழிவு எடுத்து செல்லும் சேவைகள் தரமானதாக இல்லை என்று புகார் எழுப்பினர் (**காண்க மெய்நிகழ்வு 29, கழிவு, நார்வே, ஆஸ்லோ**).[16]

## 3.3. மீள்அரசுமயமாக்கல் துறை சார்ந்த பரிமாணங்கள்

### 3.3.1. தண்ணீர்

கடந்த காலங்களில் தண்ணீர் தேவை என்பது பெரும்பாலும் பொதுத் துறை சேவையாகவும், ஒரு பொதுவுடைமையாகவுமே கருதப்பட்டது. 1990-களிலிருந்து அது ஒரு சந்தைப்பொருளாக மாறத் துவங்கியது. அனைவருக்குமான அடிப்படை சேவைகளை சரியாக வழங்கும் நோக்கத்துடன் செயல்படும் நிறுவனங்களை ஓரங்கட்டிவிட்டு உலகளாவிய தனியார் முதலீடு களின் தண்ணீர் நிறுவனங்களுக்கு நிதி ஆதாரமாக மாறின. அனைவருக்குமான அடிப்படை சேவைகளை சரியாக வழங்குவதற்கு தேவையான உட்கட்டமைப்பில் முதலீடு செய்வதைக் காட்டிலும், பங்குதாரர்களுக்கு லாபத்தினை வழங்குவதே முக்கிய நோக்காக மாறியது. அதன் விளைவாக, தண்ணீர் சேவைத்துறையில் உள்ள தொழிலாளர்களின் ஊதியம் சுருக்கப்பட்டது. கல்வி ரீதியாக சொல்லவேண்டுமென்றால் தண்ணீர் துறை லாப நோக்கில் செயல்படும் நிதித் துறை போ ல ஆனது.[17] அத்துறையில் லாபம் ஈட்டுவது அதிகரிக்க அதிகரிக்க, உண்மையான பொருளாதார நிலைமையை விட்டு அது வி லகியது. ஏனென்றால் தண்ணீர் நிறுவனங்களுக்கு வரும் முதலீடுகள் பொதுவாக கடன் மூலமாக வந்தன – பெரும்பாலும் வேறு சில சந்தேகத்திற்குரிய நோக்கதிற்காக வந்தன.[18]

தண்ணீரை தனியார்மயமாக்குவது உலக அளவில் அரங்கேறிய போது, அதன் தோல்வியும் வெளிப்படத் துவங்கியது. தண்ணீரிலிருந்து லாபம் ஈட்டுவது சுற்றுச்சூழல் மற்றும் மக்களுக்கு பாதிப்பினை ஏற்படுத்தியது. தண்ணீருக்காக மோசமான சமுதாய பிரச்சனைகள் எழுந்தன. அதில் அதிகம் பேசப்பட்ட ஒன்று தான் 2000-வது ஆண்டு நடந்த பொலிவிய தண்ணீர் யுத்தம்.

(காண்க மெய்நிகழ்வு 33. பொலிவியா, கோச்சாபம்பா) இந்நிகழ்வு தண்ணீரை தனியார்மயமாக்கியதில் உள்ள அநீதியை குறித்து உலகம் முழுவதும் எதிர்பாளர்களை ஒன்று திரள வைத்தது. தண்ணீர் ஒரு மனித உரிமையாகக் கருதப்பட வேண்டுமெனவும், அதனைப் பொது சொத்தாகவும், பொதுக்கட்டுப்பாட்டிலும் வைக்க வேண்டுமெனவும் பொலிவியாவில் உள்ள குடிமக்கள் மற்றும் தொழிற்சங்கங்கள் வாதிட்டனர்.[19] உதாரணமாக **கிரீஸ்** மற்றும் **போர்ச்சுகல்** நாட்டில், பொதுவான தண்ணீருக்காக சில போராட்டங்கள் நடந்தன. செயல்பாட்டாளர்கள் தண்ணீரை பொதுவான ஒன்றாக கூறி, அதன் உரிமையும், நிர்வாகமும் பொதுத்துறையிடம் தான் இருக்க வேண்டும் என போராடினர். அவர்களின் அக்கருத்து, சுதந்திரமான முத லாளித்துவத்திற்கும், தண்ணீரை சந்தைப் பொருளாக மாற்றும் போக்கிற்கும் நேர் எதிரான ஒரு சித்தாந்த சவா லாக அமைந்தது.[20]

கடந்த இருபது ஆண்டுகளில் தண்ணீர் சார்ந்த துறைகளில் மீள்அரசுமயமாக்கல் உலக அளவில் வேகமாக வளர்ந்து, வலுப்பெற்று வருகிறது. 2000-ல் இரண்டு நாடுகளில் இரண்டு நிகழ்வுகள் மட்டுமே நடந்தது, ஆனால் 2019 வரை 36 நாடுகளில் 311 நிகழ்வுகள் நடந்துள்ளன[21] உலகம் முழுவதும் தண்ணீரை மீள்அரசுமயமாக்குவதை வெற்றிகரமாக நிறைவேற்றிவருவதும், தற்போது நடப்பில் உள்ள மீள்அரசுமயமாக்கல் நிகழ்வுகளும் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.[22] தண்ணீர் மீள்அரசுமயமாக்கல் தொடர்பான பெரும்பான்மையான நிகழ்வுகள் அதிக வருமானம் ஈட்டும் நாடுகளிலேயே அறியப்படுகிறது. தண்ணீரை தனியார்மயமாக்குவதில் நீண்ட வர லாற்றுப் பின்னணியைக் கொண்ட **பிரான்ஸ்** நாட்டில், சூயஸ் மற்றும் வியோலியா என்ற இரண்டு பெரிய பன்னாட்டு தண்ணீர் நிறுவனங்கள் உள்ளன. அந்நாட்டில் தான் அதிக அளவில் தண்ணீர் சேவைகள் மீள்அரசுமயமாக்கல் நிகழ்வுகள் நடந்து ள்ளது. இருப்பினும், தண்ணீர் சேவையை மீள்அரசுமயமாக்கல் நடுத்தர மற்றும் குறைந்த வருமானம் ஈட்டும் நாடுகளிலும் நடந்து வருகின்றன.[23] இந்த கையேட்டில் வரும் தொகுப்பில் 12 நீர் சேவை தொடர்பான மீள்அரசுமயமாக்கல் மெய்நிகழ்வுகள் குறிப்பிடப்பட்டுள்ளன. அதில் ஆறு, அதிக வருமானம் ஈட்டும் நாடுகளில் நடந்துள்ளன (காண்க மெய்நிகழ்வு 35. நீர், பிரான்ஸ், கிரனோபில்; மெய்நிகழ்வு 36. நீர், பிரான்ஸ், பாரிஸ்; மெய்நிகழ்வு 37. நீர், ஜெர்மனி, பெர்லின்; மெய்நிகழ்வு 38 நீர், ஜெர்மனி, ரோஸ்டாக்; மெய்நிகழ்வு 40, நீர், இத்தாலி, ட்யூரின்; மெய்நிகழ்வு 41 நீர், அமெரிக்கா, நியூயார்க்) மற்றும் ஆறு குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் ஈட்டும் நாடுகளில் நடந்து ள்ளன. (காண்க மெய்நிகழ்வு 32, நீர், அர்ஜெண்டினா, ப்யூனோஸ் ஏரைஸ்; மெய்நிகழ்வு 33 நீர், பொலிவியா, கோச்சாபம்பா; மெய்நிகழ்வு 34, நீர், கேமரூன், யாவுன்டே; மெய்நிகழ்வு 39, நீர், இந்தோனீசியா, ஜகார்த்தா; மெய்நிகழ்வு 42, நீர், தான்சானியா, டார் எஸ் ச லாம்; மெய்நிகழ்வு 43, நீர், துருக்கி, அன்ட்டால்யா).

## 3.3.2. ஆற்றல்

ச லபத்திய ககுஐகீக் அறிக்கையின்படி, ஐரோப்பாவில் கவனமாக மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆற்றல் சுதந்திரமயமாக்கல் முயற்சிகள் இ லக்குகளை எட்டுவதில் தோல்வியடைந்ததை காட்டுக்கிறது.[24] ஆற்றல் சேவைகளின் சந்தையை நிலையில் வைத்தால், தேசிய உற்பத்தித்திறனில் அது குறிப்பிடத்தக்க தாக்கத்தினை ஏற்படுத்தும், அதனால் விலையும் குறையும் என்று யூரோப்பியன் கமிஷன் ஊகித்திருந்தது.

ஆற்றல் சுதந்திரமயமாக்கப்பட்டதாலும், தனியார்மயமாக்கப்பட் டதாலும், மின்சாரம் மற்றும் எரிவாயு விலை குறையும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் நடந்தது அதற்கு நேர் எதிரானது: நுகர்வோருக்கான விலை அதிகரித்தது. பத்து ஆண்டுகாலத்தில் ஐரோப்பா முழுவதும் ஆற்றல் சார்ந்த வறுமை இரண்டு மடங்கானது.

பருவநிலை மாற்றத்தினை சிறப்பாக எதிர்கொள்ள வேண்டுமென்றால் புதுப்பிக்கத்தக்க ஆற்றலின் பயன்பாடு அதிகரிக்க வேண்டியது அவசியமாகிறது. இருப்பினும், புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வளர்வதற்கான காரணம் சந்தையை சுதந்திரப்படுத்தியதே ஆகும் என்றவொரு கருத்தும் நி்வி வருகிறது. ஆனால் உண்மை அதற்கு நேர் எதிரானது. அதனை சந்தைகளிலிருந்து பாதுகாக்காமல் விட்டால், புதுப்பிக்கத்தக்க ஆற்றலை போட்டிகள் மிக்க மின்சார சந்தையில் உருவாக்கி இருக்க முடியாது. வேறு விதமாக சொல்லவேண்டுமென்றால், புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வளர்ந்ததற்கு காரணம், அதனை சந்தை சுதந்திரமாக்கல் செயல்பாடுகளிலிருந்து தனிமைப்படுத்தியதே அன்றி சந்தை சுதந்திரமயமாக்க லால் அல்ல. அதனைத் தொடர்ந்து, ககுஐகீக் அறிக்கை என்ன வாதிடுகிறது என்றால், பொதுத்துறை நிறுவனங்கள் தொழிலாளர்களைப் பாதுகாப்பதோடு, பருவநிலை மாற்றத்தின் அவரசத் தன்மைக்கு சரியாக தீர்வளிக்கும் நிலையிலும் உள்ளன.

மேலும், மின்சாரத்துறையில் பொதுவுடைமை ஆக்கப்படுவது அதிகரித்து வருகிறது. குறிப்பாக ஆற்றல் துறையில் தான் அதிக எண்ணிக்கையிலான மீள்அரசுமயமாக்கல் திட்டங்கள் நிறைவேறியுள்ளன – 374 மெய்நிகழ்வுகள் 2019-ல் மட்டும் நிகழ்ந்துள்ளன. இருப்பினும், அவற்றில் 80% **ஜெர்மனியில்** நிகழ்ந்தவை.25 ஸ்டாட்வெர்க் (ஜெர்மன் மொழியில் நகராட்சி பயன்பாடுகள்) ஜெர்மனியில் உள்ள குடியிருப்புகளில் பாதி பங்கிற்கு மின்சார விநியோகம் செய்கிறது. அதில் 80 சதவிகித விநியோக தொடர் பிராந்திய மற்றும் மாநகராட்சி பொதுத்துறை அதிகாரத்திற்கு சொந்தமானது; அதனை நிர்வகித்தும் வருகிறது.[26]

புதுப்பிக்கத்தக்க ஆற்றலை அதிகம் கோரிய சமுகத்தின் தேவையே, ஜெர்மனியில் மின்சாரத்துறையில் நிறைய மீள்அரசுமயமாக்கல் நிகழ காரணமாக இருந்தது. மேலும், அதேவேளையில் தனியார் நிறுவனங்களின் செயல்பாடு மோசமாக இருந்ததும் ஒரு காரணமாகும். ஜெர்மனியில் ஆதிக்கம் செலுத்தி வந்த நான்கு பெருநிறுவனங்கள் வழக்கமான நிக்கரி மற்றும் அணுமின்சக்தி மூலமாக ஆற்றல் உற்பத்தியில் ஈடுபட்டு வந்தன. ஆற்றல் துறையில் நிகழ்ந்த மீள்அரசுமயமாக்கல் ஜெர்மன் எனர்ஜிவென்டே அல்லது ஆற்றல் மாற்றம் என்று அழைக்கப்பட்ட தொடர் நிகழ்வின் ஒரு பகுதியாக பார்க்கப்பட்டது – அதன்படி குறைந்த கார்பன் மற்றும் அணுசக்தி இல்லாத பொருளாதரத்திற்கு மாறவேண்டும் என்று அந்நாடு திட்டமிட்டிருந்தது. இதன் மூலமாக ஆற்றலை மீண்டும் அரசுமயமாக்குவது என்பது வெறும் துறை மீதான உரிமை மாற்றத்தை தாண்டிய ஒன்றானது என்று தெரிகிறது. குடிமை சமூக குழுக்கள் புதுப்பிக்க மற்றும் நிலையான ஒரு மின்னாற்றல் அதிகம் தேவையென கோரிக்கை விடுத்து வருவதும், ஜெர்மனியில் மீள்அரசுமயமாக்கல் அதிகம் நிகழ்வதற்கு ஒரு முக்கிய காரணமாகும். (காண்க மெய்நிகழ்வு 1, ஆற்றல், ஜெர்மனி, பெர்லின்; மெய்நிகழ்வு 2, ஆற்றல், ஜெர்மனி, ஹேம்பர்க்; மெய்நிகழ்வு 3. ஆற்றல், ஜெர்மனி, ஸ்டுட்கார்ட்; மெய்நிகழ்வு 4, ஆற்றல், ஜெர்மனி, வுல்ஃப்ஹேகன்)

மற்ற இடங்களிலும் உள்ளூர் அரசமைப்புகள் மின்னாற்றல் அமைப்புகளின் கட்டுப்பாட்டை தங்கள் வசம் திரும்பக் கொண்டுவர தீர்மானித்திருந்தன. உதாரணமாக, லித்துவேனியாவில் உள்ள வில்னியஸ்-ல் மாவட்ட ஹீட்டிங் கிரிட் 15 ஆண்டுகாலம் தனியார் வசமிருந்து பின் அரசுதப்பில் உள்வழங்கல் செய்யப்பட்டது. (**காண்க மெய்நிகழ்வு 5, ஆற்றல், லித்துவேனியா, வில்னியஸ்**)

இங்கிலாந்தில், பல உள்ளூர் அரசமைப்புகள் நகராட்சிக்கு சொந்தமான மின்னாற்றல் விநியோகம் செய்யும் நிறுவனங்களை நடத்தி வந்தன. அவை பயனாளிகளுக்கு மின்சாரம் விநியோகம் செய்வதில் தனியாருக்கு போட்டியாக இருந்தன. ஒரு பொதுத்து றை நிறுவனமாக அவை செயல்பட்ட காரணத்தினால், பங்குதாரர்களுக்கு லாபத்தினை பங்களித்து வழங்க வேண்டிய அவசியம் இல்லாமல் போனது. இதனால் செலவீனங்கள் குறைந்து, தனியாருக்கு எதிரான ஆதாயத்தைப் பெற்றது. இங்கிலாந்தின், **நாட்டிங்ஹம்-ல்** உள்ள ராபின் ஹூட் எனர்ஜி நிகழ்வினைப் போ ல, இந்த மாநகராட்சி மற்றும் பிராந்திய விநியோக பொது நிறுவனங்களால் பயனாளிகளுக்கு மலிவான விலையில் மின்சாரம் வழங்க முடிந்தது. இங்கிலாந்தின் மின்சாரத் துறையில் உள்ள மிகப்பெரிய விநியோக நிறுவனங்களை தேசியமயமாக்குவதே – அந்நாட்டின் மின்சார ஏழ்மையை சீர்மைப்பதற்கான சரியான வழியாக இருந்தது.[27] மின்சார வறுமைக்கு எதிரான போராட்டத்தில் அத்துறையை மீண்டும் அரசுமயமாக்குவதே ஒரு சரியான பாதையாக உள்ளது. அதுவே உயர் வருமானம் ஈட்டும் நாடுகளில் அதிகரித்து வரும் கவலையாகவும் உள்ளது. மின் விநியோகத்தை பொதுத்துறைக்கு மாற்றிய ராபின் ஹூட் எனர்ஜி நிகழ்வு காட்டுவது என்னவென்றால், தொழிலாளர்களுக்கு சிறந்த வாய்ப்புகள் கிடைக்கிறது. (**காண்க மெய்நிகழ்வு 6, ஆற்றல், இங்கிலாந்து, நாட்டிங்ஹம்**)

### 3.3.3. போக்குவரத்து மற்றும் உட்கட்டமைப்பு

தனியார்மயமாக்கப்பட்ட போக்குவரத்து அமைப்புகள் அதிக செலவீனமானது என்றும், பொதுத்துறைக்கு சொந்தமான பொது நிர்வாகத்தின் கீழ் உள்ள போக்குவரத்தினைக் காட்டிலும் அதன் சேவை குறைந்த தரத்துடன் இருப்பது தெரிய வந்துள்ளது. உலகம் முழுவதும் தனியார்மயமாக்கப்பட்ட இரயில்வே PPP நிகழ்வுகள் நிதி ரீதியாக கட்டுப்படியாகததும், பொது பட்ஜெட்டிற்கு பெரிய செலவீனமாக அமைந்ததும் ஒரு ஆய்வின் மூலம் தெரிய வந்தது.[2]

உதாரணமாக, இங்கிலாந்தில் **இரயில்வே** தனியார்மயமாக்கப்பட்டதன் காரணமாக இரயிவே துறை பிளவுபட்ட, திறனற்ற அமைப்பாக மாறியது.இங்கிலாந்தில் உள்ள ஈஸ்ட் கோஸ்ட் இரயில் இணைப்பு இதனை தெளிவாக காட்டுகிறது. இரண்டு முறை உரிமை தனியாருக்கு வழங்கப்பட்டு தோல்வியடைந்த பிறகு மீண்டும் அரசுமயமாக்கப்பட்டது. ஈஸ்ட் கோஸ்ட் லைன் பொதுத்துறையின் கீழ் செயல்பாட்டில் இருந்த சமயத்தில் அது லாபத்தில் இயங்கியது. அப்போது அதன் சேவைத் தரம், குறிப்பாக நேரம் தவறாமை, பயனாளர் திருப்தி ஆகியவற்றில் முன்னேற்றம் ஏற்பட்டது. (காண்க மெய்நிகழ்வு 21, இங்கிலாந்து, ஈஸ்ட் கோஸ்ட்)

பொதுத்துறையின் கீழ் இரயில்வே இயங்கினால் என்னவெல்லாம் சாத்தியம் என்று **சுவிட்சர்லாந்து** வெளிக்காட்டியது. சேவையின் தரத்திற்கு முக்கியத்துவமளித்து, சுவிட்சர்லாந்து தனது பொது இரயில்வே துறையை தொடர்ந்து பராமத்து, விரிவாக்கம் செய்து வந்தது. அது மிகப்பெரிய அளவில் இருந்தது மட்டுமல்லாமல், மலைப் பகுதிகளில் உள்ள சிறுநகரங்கள் மற்றும் கிராமங்களையும் இரயில் மூலம் சென்றடையும் வகையில் இருந்தன. குறிப்பாக ரயில்கள் தாமதமின்றி சரியான நேரத்திற்கு இயங்கின. சுவிட்சர்லாந்து நாட்டின் நேரடி மக்களாட்சி முறையினை பொதுப் போக்குவரத் தில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் ஆதரித்தன. அடிப்படை சேவைகளுக்கு நிதி அளிப்பது வெற்றிகரமான பயனளிப்பதாக உள்ளது. நன்மை இருக்குமெனில் மக்கள் அதனை ஆதரிப்பார்கள் என இதனை பங்களிப்பு பட்ஜெட் குறித்த ஆய்வு ஒன்றும் உறுதிசெய்துள்ளது.[29]

பேருந்து போக்குவரத்தை பொருத்தவரை, அனைத்து கண்டங்களிலும் 73 க்கும் நகரங்களில் பேருந்து சேவைகள் மற்றும் பலவகையான பேருந்து இயக்கும் நிறுவனங்கள் மதிப்பாய்வு செய்யப்பட்டன. அதன் முடிவில் செயல்திறனின் பொது மற்றும் தனியார் பேருந்து இயக்கும் நிறுவனங்களுக்கிடையே எந்தவொரு வித்தியாசமும் இல்லையென தெரியவந்தது.[30] இருப்பினும், லாபம் மற்றும் செலவீனங்களை குறைப்பது தான் தனியார் பேருந்து சேவையின் முதன்மை நோக்கமாக இருந்தது. இது பொதுப் பேருந்து சேவையின் நோக்கமான நெரிசலை தவிர்த்தல், சுற்றுச்சூழலை பேணுதல் மற்றும் அனைவருக்குமான சேவையாக இருத்தல் போன்றவற்றிற்கு எதிராக இருக்கிறது.[31] பொது பேருந்து சேவைகள் சேவைத்தரம், பாதுகாப்பு மற்றும் ஓட்டுனர்களுக்கான பணிநிலை மற்றும் ஊதியம் ஆகிய அம்சங்களில் தனியாரைவிட சிறப்பாக உள்ளன.[32]

**கனடாவில்**, ஏற்பட்ட விரைவு பேருந்து போக்குவரத்து பிரிவினை தனியார்மயமாக்கிய **ஃபோர்ட் மேக்முரே** நிகழ்வின் அனுபவத்தினால், குறைந்த பணியாளர்களை வேலைக்கு அமர்த் தியது, தாமதமான சேவை, பேருந்து ரத்தாகுதல் போன்ற பிரச்சினைகள் வெளிப்பட்டன. அதே சேவை மீண்டும் அரசுமயமாக்கப்பட்ட பின்பு, பேருந்து போக்குவரத்தின் சேவைத் தரம் உயர்ந்தது. மேலும் ஊழியர்களுக்கு பணியிட சூழல் மேம்பட்டது. (**காண்க மெய்நிகழ்வு 19 போக்குவரத்து, கனடா, ஃபோர்ட் மெக்முரே**)

தனியார் பேருந்து போக்குவரத்து நிறுவனங்கள் பெரும்பாலும் உள்ளடங்கி இருக்கும் குக்கிராமங்கள் மற்றும் ஏழ்மையான பகுதிகளை தவிர்த்துவிட்டு லாபம் கிடைக்கும் பகுதிகளை மட்டுமே தேர்ந்தெடுக்கின்றனர். உதாரணமாக, **இந்தியாவில்** மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் தனியார் பேருந்து நிறுவனங்கள் சிறப்பாக செயல்படுவது போன்ற தோற்றம் இருப்பதாகவும், அதற்கு காரணம் அவர்கள் தேர்ந்தெடுக்கும் லாபகரமான வழித்தடங்கள் மற்றும் பணியாளர்களின் ஊதிய பிடித்தங்கள் மற்றும் நிபந்தனைகளுமே ஆகும் என்றும் அறியப்பட்டுள்ளது.[33] அதுபோ ல, **இங்கிலாந்தில்** மேற்கொள்ளப்பட்ட ஒரு ச லபத்திய ஆய்வில், லண்டனுக்கு வெளியே தனியார்மயமாக்க லால் போக்குவரத்து கட்டணங்கள் உயர்ந்து சேவைகளின் தரம் குறைந்ததாகவும் தெரியவந்துள்ளது. அதனைத் தொடர்ந்து பேருந்து பயன்பாடும் குறைந்தது: 1985-ம் ஆண்டில் 2 பில்லியனாக இருந்த லண்டனுக்கு வெளியேயான மெட்ரோ பேருந்து ஓட்டங்கள், 2016-ம் ஆண்டில் பாதியாகி 1பில்லியனாக உள்ளது. அதாவது, தனியார்மயமாக்கியதால் போக்குவரத்து அனைத்து இடங்களுக்குமான சேவையைதடை

செய்கிறது, பயனாளிகளுக்கு கட்டுப்படியாகாமலும், பயணிகளின் கட்டண உயர்வின் மூலம் லாபம் ஈட்டியும், அதன் தொழிலாளர்களை நசுக்கும் வகையிலும் செயல்படுகிறது என்றும் சொல்ல லாம்.

பயனாளிகள், சுற்றுச்சூழல் மற்றும் தொழிலாளர்களின் தேவைகளை பிரதிபலிக்கும் பொது போக்குவரத்து சேவைகளை வழங்குவதில் பொதுத்துறை, தனியார் துறையை விட ஒப்பீட்டளவில் நன்மையைக் கொண்டுள்ளது என்பதை பொது போக்குவரத்துக்கு நிதியளிப்பது தொடர்பான சமீபத்திய பி.எஸ்.ஐ.ஆர்.யு அறிக்கை நிரூபித்துள்ளது.[34]

### 3.3.4. கழிவு


கழிவு மேலாண்மை என்பது பெரும்பாலும் அரசு துறைகளுக்குள் வழங்கப்படும் பொதுப் பணிகளில் ஒன்றாகும், ஏனென்றால் ஒப்பந்த காலம் பொதுவாக தண்ணீரை தொடர்பான ஒப்பந்த காலத்தினை விட மிகக் குறைவாக இருக்கும், எனவே மீள்அரசுமயமாக்கலுக்கான வாய்ப்பு விரைவில் கிடைக்கும். தனியார்மயமாக்கலுடனான எதிர்மறையான அனுபவங்கள் (எடுத்துக்காட்டாக மெய்நிகழ்வு 27-ஐ காண்க. கழிவு, எகிப்து, கெய்ரோ) மற்றும் / அல்லது நிறுவனத்தின் தோல்வி மற்றும் திவால்நிலை (எடுத்துக்காட்டாக மெய்நிகழ்வு 29-ஐ காண்க. கழிவு, நார்வே, ஆஸ்லோ மற்றும் அட்டவணை 2)

எடுத்துக்காட்டாக, இங்கிலாந்தின் **லிவர்பூலில்**, அரசு மூன்று ஆண்டுகளில் செலவில் ப2 மில்லியன் சேமித்தது, ஏனெனில் பொதுத்துறை நடத்தும் சேவைகளில் செலவு குறைவாக இருந்தது. 35 பின்வரும் நிகழ்வுகளிலும் செலவில் சேமிப்பு இருந்தது: மெய்நிகழ்வு 23. கழிவு, கனடா, கான்செப்ஷன் பே சவுத்; மெய்நிகழ்வு 26. கழிவு, கொலம்பியா, பகோட்டா; மெய்நிகழ்வு 28. கழிவு, ஜெர்மனி, பெர்கமென்; மெய்நிகழ்வு 30. கழிவு, ஸ்பெயின், லியோன்.

ஜெர்மனியில் கழிவு சேவைகளை உள்வழங்கல் செய்வது அதிகரித்து வருகிறது. அந்நாட்டில், கழிவு மேலாண்மைத் துறையில் தனியார்மயமாக்கலிலிருந்து திரும்பி மீள்அரசுமயமாக்கும் தொடர் நிகழ்வுகள் 2000களின் தொடக்கத்தில் நடந்தன. 2003ம் ஆண்டில் வெறும் [35] சதவிகித ஜெர்மன் நகராட்சிகள் மட்டுமே சொந்தமாக குப்பை சேகரிக்கும் சேவையை நடத்தியது; ஆனால் 2015ம் ஆண்டில் அது 46 சதவிகிதமாக அதிகரித்தது, அதேவேளையில் கககள் குறைந்தன. (படம் 4ஐ காணவும்).[36] 100,000க்கும் அதிகமான மக்கள் வசித்த நகரங்களில் கழிவு மேலாண்மைத் துறையை மீள்அரசுமயமாக்குவது பொதுவான நிகழ்வாக இருந்தது – அவற்றில் குப்பை சேகரிப்பதில் தற்போது 92 சதவிகிதம் உள்ளூர் நிர்வாகத்தால் நிர்வகிக்கப்படுகின்றன.[37] இருப்பினும், கிராமப்புற பகுதிகளும் பொதுத்துறை கழிவு மேலாண்மை சேவைகளையே விரும்புகின்றன. குப்பை சேகரிப்பதுடன் கூடுதலாக, 2016ம் ஆண்டில் ஜெர்மனியில், 31 சதவிகித கழிவு சுத்திகரிக்கும் செயல்பாடுகள் மற்றும் நான்கு சதவிகித குப்பை சேகரிக்கும் பணிகள் அரசு நிர்வாகத்தால் வழங்கப்படுவதாக ஐரோப்பிய கமிஷன் வெளியிட்டுள்ள ஒரு அறிக்கை கூடுகிறது.[38]



**படம் 4: ஜெர்மனியில் அரசு மற்றும் ககக பிரிவினரின் கழிவு அள்ளும் சதவிகிதம்**




ஆதாரம்: உஇஅ ரெட்மான்டிஸ் தரவு அடிப்படையிலான பொருளாதாரம்

இங்கிலாந்தில், கழிவு சேகரிப்பு சமீபத்திய ஆண்டுகளில் அதிகமாக மீள்அரசுமாயக்கப்பட்ட பொதுச் சேவைகளில் இரண்டாவது இடத்தில் உள்ளது. உள்ளூர் அரசமைப்புகள் சிக்கன வழிமுறைகள் மற்றும் கடுமையான பட்ஜெட் குறைப்புகளை மேற்கொண்டனர்; அதனைத் தொடர்ந்து உள்வழங்கல் அதிகரிக்கும் போக்கு ஏற்பட்டது. இதனால் சேவை திறன் மற்றும் செலவுகளில் சேமிப்பினை காண மீள்அரசுமயமாக்கல் ஒரு தீர்வாக அமைந்தது.[39]

## 3.3.5. சுகாதாரம் மற்றும் சமூக சேவைகள்

தனியார் நிறுவனங்கள் உ லகெங்கிலும் உள்ள பொது சுகாதார அமைப்புகளில் வளர்ந்து வருகின்றன. ஐரோப்பாவில், அரசாங்க செலவினங்கள் குறைக்கப்படுவதுடன் - பரவ லான வணிகமயமாக்கல், சுகாதாரம் மற்றும் சமூக நலனை சந்தைப்படுத்துவதும் அதிகரித்துள்ளது. இது அதிக சுகாதாரத்து றையில் சமநிலை இழப்பிற்கு வழிவகுத்தது; ஏனெனில் லாப நோக்கிற்காக சேவை வழங்குனர்கள் செல்வந்தர்கள் மற்றும் குறைந்த ஆபத்தினை எதிர்நோக்கும் நோயாளிகளை மட்டும் தேர்ந்தெடுக்க முயற்சி செய்கின்றனர். அதே நேரத்தில், அதிக ஆபத்தினை எதிர்நோக்கும், ஏழை நோயாளிகள் தொடர்ச்சியான பட்ஜெட் குறைப்பிற்கு உள்ளாகும், குறைவான வசதிகளுள்ள பொது சுகாதார சேவை வசதிகளையே நம்பியுள்ளனர்.[40]

தனியார்மயமாக்கப்பட்ட சுகாதாரத்துறையில் பணிச்சூழல் மற்றும் ஊதியம் தொடர்ந்து மோசமடைந்து வருதல், குறைந்து வரும் ஊழியர் நிலைகள், அதிகரித்து வரும் பணிச்சுமைகள் மற்றும் ஊழியர்களின் மீதான அழுத்தம் அதிகரிப்பது போன்ற போக்கு நிலவுகிறது. இவை அனைத்தும், சுகாதாரத்துறையின் பாதுகாப்பு மற்றும் தரம் ஆகியவற்றினை எதிர்மறையாக பாதிக்கின்றன. பல்வேறு உள்ளூர் மற்றும் பிராந்திய அரசமைப்புகள் சுகாதாரம் மற்றும் சமூக சேவைகளை உள்வழங்கல் செய்ய முடிவு செய்துள்ளன.

**தெற்கு டென்மார்க்கில்** பிராந்திய அரசமைப்புகள் ஆம்பு லன்ஸ் சேவைகளை தனியார் பொறுப்பில் விட்டது, ஆனால் சேவைக்கு பதி லளிக்கும் வேகம் குறைந்து நோயாளிகளை ஆபத்தில் ஆழ்த்தியதால், சேவையை பொதுத்துறைக்குத் திருப்பி கொண்டு வர செய்தது (காண்க மெய்நிகழ்வு 10-ஐ காண்க. சுகாதார பராமரிப்பு, டென்மார்க், தெற்கு டென்மார்க்).

**இங்கிலாந்தில்** மருத்துவமனைகளின் தனியார்மயமாக்கல் ஆரம்பத்தில் இருந்தே குறைபாடுடன் இருந்தது. 2012-ஆம் ஆண்டில், பன்னாட்டு நிறுவனமான சர்க்கில் கேம்பிரிட்ஜ்ஷையரில் உள்ள மாவட்ட பொது மருத்து வமனையான நேஷனல் ஹெல்த் சர்வீஸ் (மீஏகு) ஹின்சிங்ப்ரூக் மருத்துவமனையை நிர்வகிப்பதற்கான பத்து ஆண்டு ஒப்பந்தத்தை வென்றது. அம்மருத்துவமனையில் சுமார் 250 படுக்கைகள் மற்றும் கிட்டத்தட்ட 1,500 ஊழியர்கள் இருந்தனர். 1948-ம் ஆண்டில் மீஏகு நிறுவப்பட்ட பின்னர் இங்கிலாந்தில் ஒரு தனியார் மேலாண்மை நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்ட முதல் மீஏகு மருத்துவமனை இதுவேயாகும்.[41]

இங்கிலாந்தில் சுகாதாரம் மற்றும் பெரியவர்களுக்கான சமூகப் பாதுகாப்பானது சுயாதீன கட்டுப்பாட்டாளரால் பரிசோதிக்கப்பட் டது. அதன் பின்னர் – கேர் குவாலிட்டி கமிஷன் (இகிஇ) - அச்சேவையை போதியதாக இல்லை எனவும் நோயாளிகளை ஆபத்தில் ஆழ்த்துவதற்கு காரணமாக இருக்கிறது என்றும் கண்டறிந்தது. இதன் விளைவாக, சர்க்கில் 2015-ம் ஆண்டில் மருத்துவமனையை, ஒப்பந்த காலாவதிக்கு ஏழு ஆண்டுகளுக்கு முன்பாகவே பொது நிர்வாகத்திற்கு திருப்பி அனுப்பியது (காண்க மெய்நிகழ்வு 12. சுகாதாரம், இங்கிலாந்து, ஹின்சிங்ப்ரூக்). இந்த மெய்நிகழ்வு ஒரு விதிவி லக்கல்ல. இங்கிலாந்தில் மிகக் குறுகிய தனியார்மயமாக்கல் மஸ்கிரேவ் பார்க் மருத்துவமனையில் நிகழ்ந்த ஒரு கண் அறுவை சிகிச்சையாக இருந்திருக்க லாம்; அங்கு தனியார்மயமாக்கலின் பேரழிவு உடனடியாக வெளிப்பட்டது. தனியார் வழங்குநரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளுக்குப் பிறகு டஜன் கணக்கான மக்கள் பார்வை, வலி மற்றும் அசௌகரியம் ஆகியவற்றைக் குறைத்தனர்.

**ஆஸ்திரேலியாவில்**, உள்ளூர் சமூகம் அதன் சேவை உள்வழங்கலுக்கான பிரச்சாரத்தை வெற்றிகரமாக ஏற்பாடு செய்த பின்னர், 2019-ம் ஆண்டு விக்டோரியா அரசாங்கம் தன்வசமிருந்த ஒரே ஒரு தனியார் மருத்துவமனையை அரசுடைமையாக்கும் முடிவுக்கு வந்தது; ஏனெனில் தனியார்மயமாக்கல் நோயாளிகளின் சிகிச்சை தரத்தில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது; மேலும், உள்ளூர் சமூகமும் அதற்கான ஒரு பிரச்சாரத்தை வெற்றிகரமாக ஏற்பாடு செய்திருந்தது. (காண்க மெய்நிகழ்வு 8, சுகாதாரம், ஆஸ்திரேலியா, விக்டோரியா)[42]

**சீனாவில்** ஜியாங்சுவில் உள்ள சுகியன் மற்றும் **ஹெனானில் உள்ள லுயோங் மாகாணங்கள்** சமீபத்தில் தனியார்மயமாக்கப்பட்ட சுகாதாரத்துறை முன்னோட்ட திட்டங்களில் திருப்தியில்லாத காரணத்தால், மருத்துவமனையை தனியார்மயமாக்கும் செயல்முறையை மாற்றியமைக்க நடவடி க்கை எடுத்தன. சுகியனில் மருத்துவமனைகள் 2000-ம் ஆண்டு முதல் தனியார்மயமாக்கப்பட்டன; நகரத்தின் அனைத்து 125 பொது சுகாதார மையங்களும் தனியார்மயமாக்க லால் எதிர்மறையாக பாதிக்கப்பட்டன. பெரும்பா லான சுகாதார நிலையங்கள் தனிநபர் நிர்வாகிகளால் வாங்கப்பட்டன. லாபத்தை அதிகரிக்கும் நோக்கத்திற்கு முன்னுரிமை அளிக்கப்பட் டதால், மாகாணத்திற்கென ஒரு நிலையான, ஒருங்கிணைந்த சுகாதார அமைப்பு நிறுவப்படவில்லை. 2017-ம் ஆண்டில் லுயோங்கில் நடத்தப்பட்ட ஒரு ஆய்வில், நகரத்தின் சுகாதார திட்டமிடல் ஆணையம் - மறுசீரமைக்கப்பட்ட மருத்து வமனைகளை மேற்பார்வையிடுவதில் தனது கடமைகளை புறக்கணித்திருப்பது கண்டறியப்பட்டது. மேலும், தனியார்மயமாக்கல் செயல்பாட்டில் `ஞ்சம் வாங்கியதற்கான சான்றுகள் இருப்பதாகத் தெரியவந்தது. அதைத் தொடர்ந்து, லுயோங் அரசாங்கம் தனியார்மயமாக்கப்பட்ட பொது மருத்து வமனைகளை திரும்பப் பெறத் தொடங்கியது. இருப்பினும், சீனாவில் தனியார்மயமாக்கப்பட்ட சுகாதாரப் பணிகள் தோல்வியுற்ற போதிலும், அங்கு ஒரு புதிய சுகாதார சீர்திருத்தத் தின் மூலம் - தற்போது அரசுக்கு சொந்தமான நிறுவனங்களால்

நடத்தப்படும் மருத்துவமனைகளில் மட்டுமல்லாமல், பிற சிறப்பு சுகாதார சேவைகள் மற்றும் முதியோர் பராமரிப்பு சேவைகளிலும் தனியாரின் மூலதனம் ஒரு வளர்ச்சிக்கான பங்கினை வகிப்பதாக பரிந்துரைத்தது.[43]

**இந்தியாவின் டெல்லியில்**, உள்ளூர் அரசாங்கம் சேவைகளை மிகவும் மலிவு மற்றும் அனைவருக்கும் கிடைக்கக்கூடிய வகையில் பொது சுகாதார சேவையை அறிமுகப்படுத்தியது. 'ட்சக்கணக்கான மக்களுக்கு அடிப்படை சுகாதார சேவைகளை வழங்க மொஹல்லா என்று அழைக்கப்படும் உள்ளூர் சமூக மருத்துவ நிலையங்கள் அமைக்கப்பட்டன (காண்க மெய்நிகழ்வு 11. சுகாதார பராமரிப்பு, இந்தியா, டெல்லி).

**அமெரிக்காவில்**, தனியார்மயமாக்கப்பட்ட சுகாதாரப் பாதுகாப்பு அமைப்பில் அதிருப்தி ஏற்பட்டு, அதன் கீழ் 2018-ம் ஆண்டில் 30.4 மில்லியன் அமெரிக்கர்கள் பாதுகாப்பு இல்லாமல் போனதாக, ஜனநாயகக் கட்சியினர் 'அனைவருக்கும் மருத்துவம்" என்ற ஒரு தேசிய திட்டத்திற்கு அழைப்பு விடுத்தனர். [44] சுகாதாரம் என்பது ஒரு மனித உரிமையென்றும், அது அனைவருக்கும் கிடைப்பதை உறுதி செய்வதற்கான வழியாக அதை மீண்டும் பொதுவுடைமையாக்கி, பொது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதாகவும் கூறியது. அனைவருக்குமான மருத்துவம் அமெரிக்காவில் உயர்மட்ட மக்கள் ஆதரவைப் பெற்றது, சமீபத்திய கருத்துக் கணிப்பில் 70 சதவீத குடிமக்கள் அதை ஆதரிப்பதைக் காட்டியது. [45]

### 3.3.6. இதர சேவைகள்

முந்தைய பிரிவுகளில் குறிப்பிடப்பட்ட துறைகளைத் தாண்டி, அரசமைப்புகள் அனைத்து வகையான பொதுச் சேவைகளையும் உள்வழங்கல் செய்வதற்கு ஊக்குவித்துள்ளன: சுத்தம் செய்வதிலிருந்து வாகன நிறுத்தம் வரை, நூ லகங்கள் முதல் இறுதிச் சடங்குகள் வரை, சிறைச்சாலைகள் முதல் கடற்கரை பாதுகாப்பு வரை. செலவீனங்களை சரியாக வைப்பது என்பது உள்வழங்கலுக்கும் அப்பாற்பட்ட ஒரு முக்கிய விஷயமாக இருந்தாலும், இது பணத்தை மிச்சப்படுத்துவதை விட முக்கியமான ஒன்றாகும். சேவையை மீண்டும் அரசுமயமாக்குவதன் மூலம், சேவையின் தரம் மற்றும் விநியோகத்தின் மீதான கட்டுப்பாட்டை உள்ளூர் அரசமைப்ப மீண்டும் பெறுகிறது. பல சந்தர்ப்பங்களில், தனியார்மயமாக்கல் தோல்வியடைவதே மீள்அரசுமயமாக்கலின் முக்கிய காரணமாகும். (எடுத்துக்காட்டாக மெய்நிகழ்வு 44. சமையல் மற்றும் துப்புரவு, லீசெஸ்டர்; மெய்நிகழ்வு 45. துப்புரவு, இங்கிலாந்து, நாட்டிங்ஹாம்; மெய்நிகழ்வு 50. சிறைச்சாலைகள், நியூசி லாந்து, மவுண்ட் ஈடன்).

வளங்களை மறுவிநியோகம் செய்வதற்கும், சமூக மற்றும் சுற்றுச்சூழல் குறிக்கோள்களை எட்டுவதற்கு நிதி அதிகம் தேவைப்படும் இடங்களில் நேரடியாக அதனை வழங்குவதற்கும், தங்கள் பிராந்தியங்களுக்குள் ஒரு முழுமையான அணுகுமுறையைக் கொண்டு நிலைபெற உள்ளூர் அரசமைப்புகளுக்கு உள்வழங்கல் ஒரு வாய்ப்பை வழங்குகிறது.

எடுத்துக்காட்டாக, **ஸ்பெயினின் பார்சிலோனாவில்**, உள்ளூர் அரசமைப்பு மலிவு விலை சேவைக்கு உத்தரவாதம் அளிக்கும் விதமாக ஒரு பொது இறுதி சடங்கு நிறுவனத்தை உருவாக்க முடிவுசெய்தது; தனியார் நிறுவனங்கள் வழங்கிய சேவைகள் நகரின் பல குடிமக்களுக்கு எட்டாக்கனியாக இருந்ததால், இறந்தவர்களுக்கு ஒரு கண்ணியமான விடையளிப்பினை வழங்க விரும்பியது. (காண்க மெய்நிகழ்வு 47-ஐ காண்க. இறுதிச் சேவைகள், ஸ்பெயின், பார்சிலோனா.)

இங்கிலாந்தின் **பிரஸ்டன் மற்றும் ஓஹியோவின் கிளீவ்லேண்ட் போன்ற சில நகரங்கள்** - உள்ளூர் பொருளாதாரத்தை உயர்த்து வதற்காக குறிப்பிட்ட கொள்கைகளை முன்வைக்கின்றன (பிரிவு 7.2-ஐ காணவும்). இருப்பினும், பிரிவு 7.5-ல் இன்னும் விரிவாக விளக்கப்பட்டுள்ளது; அதன்படி பொருளாதாரத்தை உள்ளூர்மயமாக்குவதை மீள்அரசுமயமாக்குவதற்கு மாற்றாக பார்க்கக்கூடாது என்று கூறுகிறது. உள்ளூர் லாப நோக்க நிறுவனங்களுக்கு பொதுச் சேவைகளை வழங்கும் உரிமையைத் தருவது தனியார்மயமாக்கலின் மற்றொரு வடிவமாகும்.

1. ஹால், டி (2015) பொதுத்துறை-தனியார்-கூட்டமைப்புகள் ஏன் சரிவர இயங்குவதில்லை? பொதுத்துறையின் மாற்று வழிகளின் பலன்கள். பப்ளிக் சர்வீஸஸ் இண்டர்நேஷனல். மேலும் விவரங்களுக்கு:

2. கிஷிமோட்டோ, எஸ்., லோபினா, இ., பெட்டிட்ஜீன், ஓ. (ஞுஞீண்.) (2015) எங்கள் பொது நீரின் எதிர்காலம்: மீள்அரசுமயமக்களுடனான உலகளாவிய அனுபவம். டிரான்ஸ்நேஷனல் இன்ஸ்டிடியூட் (**TNI**). மேலும் விவரங்களுக்கு: டஞ்ஞ்ஞணீண்:[//www.tni.org/ files/download/ourpublicwaterfuture-1.pdf](//www.tni.org/files/download/ourpublicwaterfuture-1.pdf)

3. உ லகெங்கிலும் உள்ள பல நாடுகளில் தகவல் சுதந்திரச் சட்டங்கள் உள்ளன, அவை குடிமக்களுக்கு பொது அமைப்புகளின் தகவல்களைக் காண சட்டரீதியான உரிமையை வழங்குகின்றன.

4. ஹோம்ஸ், ஈ. (11 ஜனவரி 2017) ஷெஃபீல்ட் –ஆல் வியோலியா ஒப்பந்தத்தை 19 வருடங்கள் முன்னதாகவே அகற்ற முடியும். மேலும் விவரங்களுக்கு: http://resource.co/article/sheffield-couldscrap-veolia-contract-19-years-early-11603

5. கோல், ஆர். (3 ஆகஸ்ட் 2017) ஷெஃபீல்ட் கழிவு ஒப்பந்தத்தினை ரத்து செய்வதைத் தவிர்ப்பதில் வியோலியாவின் நம்பிக்கையுடன் உள்ளது. மேலும் விவரங்களுக்கு: டஞ்ஞ்ஞணீ://resource.co/article/ veolia-confident-avoiding-sheffield-waste-contract-cancellation-12011

6. பால்டிக் செய்தி சேவை (20 பிப்ரவரி 2018) ஸ்டாக்ஹோம் நடுவர் நீதிமன்றத்தில் பிரான்சின் வியோலியாவிடமிருந்து, வில்னியஸ் நிறுவனம் 350 மில்லியன் யூரோவுக்கும் அதிகமான தொகையை கோருகிறது.

7. ரியூட்டெரஸ் (27 ஜனவரி 2016) மானியக் குறைப்புகளுக்கு லியோவேனியாவிடம் இழப்பீடு கோருகிறது வியோலியா. மேலும் விவரங்களுக்கு: https://www.reuters.com/article/us-veolia-environ-lithuania/veolia-seekscompensation-from-lithuania-for-subsidy-cutsidUSKCN0V52CY

8. பால்டிக் செய்தி சேவை (30 மார்ச் 2017) வில்னியஸ் 200 மில்லியன் யூரோவுக்கும் அதிகமான தொகையை வியோலியாவிடம் கோரியுள்ளது. மேலும் விவரங்களுக்கு: வில்னியஸ் 200 மில்லியன் யூரோவினை வியோலியாவிடம் கோரியதை காணவும்.

9. லே 360 (09 நவம்பர் 2017) கேமரூன். சி.டி.இ: கன்சைலேஷன் போர் லெ ரெட்ரைட் டு கன்சோர்டியம் மரோசியான். மேலும் விவரங்களுக்கு: டஞ்ஞ்ஞணீ://m.le360.ma/afrique/maroc-autres-pays/economie/2017/11/09/16374-cameroun-cde-conciliation-pour-le-retrait-du-consortium-marocain-16374

10. ஙஙூஅ செய்தி (24 பிப்ரவரி 2014) கேமரூன் மூலதனம் நீர் பற்றாக்குறையை சந்திக்கிறது. மேலும் விவரங்களுக்கு: https://www. voanews.com/a/cameroon-capital-suffers-water-shortage/1858215.html

11. வீஹ்மான், வி. மற்றும் லோபினா, இ. (2018) கேமரூனில் நீர் புதுப்பித்தல். கதுஐகீக். மேலும் விவரங்களுக்கு: டஞ்ஞ்ஞணீண்://gala.gre.ac.uk/id/eprint/19921/

12. ஹால், டி. மற்றும் லோபினா, இ. (2006) பைப் ட்ரீம்ஸ். வளரும் நாடுகளில் நீர் சேவைகளில் தனியார் துறை முதலீடு செய்யத் தவறியது. கதுஐ., வேர்ல்டு டெவ லப்மென்ட் மூவ்மென்ட். மேலும் விவரங்களுக்கு: http://gala.gre.ac.uk/3601/1/PSIRU_9618_-_2006-03-Winvestment.pdf

13. சியன், சி. (17 ஜனவரி 2017) லண்டன் நூ லகங்கள் காரில்லியன் சரிவின் தாக்கத்தை மதிப்பிடுகின்றன. தி கார்டியன். மேலும் விவரங்களுக்கு: டஞ்ஞ்ஞணீண்://www.theguardian.com/books/2018/jan/17/ london-libraries-assess-impact-of-carillion-collapse

14. ரெனோநார்டன் திவால்நிலை பற்றிய உககுக் மற்றும் கதுஐ க்கான ஃபேக்ஃபார்பன்டட்-ல் வெளிவந்த சுருக்கமான கட்டுரை ஙஃபேக்ஃபார்பன்டட் உடனான மின்னஞ்சல் கடிதத்தின் மூலம் பெறப்பட்டதுசி

15. எஸ்மெர்க் ஆஃபன்போஸ்டன் (29 மே 2017) நார்வே: ஆஸ்லோ நகராட்சி கழிவினை பெறுவதில் போராடுகிறது.

16. உண்மையான" பொருளாதாரத்திலிருந்து 'நிதி" பொருளாதாரத்திற்கு மாறுவதன் மூலம் கவனத்தையும், அதிகாரத்தையும் மாற்றவேண்டும் என்ற அடிப்படையில் நிதிமயமாக்கல் வரையறுக்கப்பட்டுள்ளது. அல்லது இதேபோல் ஒரு செயல்முறையின்படி நிதிச் சந்தைகள், நிதி நிறுவனங்கள் மற்றும் உயர்நிலை நிதி அதிகார மையங்கள் - பொருளாதாரக் கொள்கை மற்றும் பொருளாதார விளைவுகளில் அதிக செல்வாக்கைப் பெறும்.

17. பேலிஸ், கே. (2014) நீரின் நிதிமயமாக்கல். தீவிர அரசியல் பொருளாதாரத்தின் விமர்சனம், திணிடு. 46, எண். 3, பக். 292-307

18. லோபினா, இ. (2015) அறிமுகம்: முற்போக்கான நீர் கொள்கைகளுக்கு அழைப்பு. கிஷிமோட்டோவில் வெளியான, எஸ். லோபினா, இ. மற்றும் பெட்டிட்ஜீன், ஓ. (ஞுஞீண்), எங்கள் பொது தண்ணீரின் எதிர்காலம்: மீள்அரசுமயமக்களுடனான உலகளாவிய அனுபவம். டிரான்ஸ்நேஷனல் இன்ஸ்டிடியூட் (**TNI**). மேலும்விவரங்களுக்கு: லோபினா, இ. 2017. நீர் மறுசீரமைப்பு: பிட்வீன் பெண்டு லம் ஸ்விங்ஸ் அண்ட் பாரடிம் அட்வொகேசி. பெல்லில், எஸ். (ஞுஞீண்), அர்பன் வாட்டர் டிரஜெக்டரீஸ். லண்டன்.

19. பீ லர், ஏ. மற்றும் ஜோர்டான், ஜே. (2018) கமாடிஃபிகேஷன் மற்றும் தி காமன்ஸ்: யூரோப்பகுதி நெருக்கடியின் போது கிரீஸ் மற்றும் போர்ச்சுகலில் பொது நீரை தனியார்மயமாக்கும் அரசியல். யூரோப்பியன் ஜர்னல் ஆஃப் இன்டர்நேஷனல் ரிலேஷன்ஸ். திணிடு. 24, எண் 4, பக். 934-957.

20. கிஷிமோட்டோ, எஸ். (2019) தி ஃப்யூச்சர் ஈஸ் பப்ளிக். டிரான்ஸ்நேஷனல் இன்ஸ்டிடியூட். மேலும் விவரங்களுக்கு: டஞ்ஞ்ஞணீண்://futureispublic.org/wp-content/uploads/2019/11/ TNI_the-future-is-public_online.pdf

21. http://www.remunicipalisation.org/

22. வாட்டர் ரீமுனிசிபலைஷேஷன் ட்ராக்கர். மேலும் விவரங்களுக்கு: டஞ்ஞ்ஞணீ://remunicipalisation.org/-front/page/home

23. வீஹ்மான் வீ. (2019) கோயிங் பப்ளிக்: ஐரோப்பாவிற்கான ஒரு கார்பன் அற்ற, மலிவு மற்றும் ஜனநாயக ஆற்றல் அமைப்பு. யூரோப்பியன் பப்ளிக் சர்வீஸஸ் யூனியன்.

24. கிஷிமொட்டோ. எஸ் (2019) தி ஃப்யூச்சர் ஈஸ் பப்ளிக். டிரான்ஸ்நேஷனல் இன்ஸ்டிடியூட். மேலும் விவரங்களுக்கு: டஞ்ஞ்ஞணீண்://futureispublic.org/wp-content/uploads/2019/11/TNI_the-future-is-public_online.p

25. ஹால், டி. (2016). உள்ளூர் மற்றும் பிராந்திய அரசு / நகராட்சி துறை. மேலும் விவரங்களுக்கு: டணுணணீண்://w-ww.psiru. org/sites/default/files/2016-04-E-UK-public.pdf (Accessed 8 July 2019).

26. ப்ரெண்டிஸ், டி. (ஜூன் 2019) வலைப்பதிவு: தொழிலாளர் எரிசக்தி வழங்குனர்களை ஏன் தேசியமயமாக்க வேண்டும். யுனிசன். மேலும் விவரங்களுக்கு: https://www.uni-son.org.uk/news/2019/06/ blog-labour-nationalise-energy-suppli-ers/

27. டெஹோர்னாய், ரயில்வே துறையில் கககண்: 27 திட்டங்களின் விமர்சனம், மியூனிக் பெர்சனல் ரெபெக் அர்கைவ், 2012: டணுணணீண்://m-pra.ub.uni-muenchen.de/38415/1/ Dehornoy_Re-view_of_rail_PPPs_2012_.pdf

28. வீஹ்மான் வி. (2019) பப்ளிக் பைனான்ஸிங். சர்வதேச போக்குவரத்து தொழிலாளர் கூட்டமைப்பு (ஐ.டி.எஃப்). ஙஇந்த அறிக்கை ஐ.டி.எஃப் மக்கள் பொது போக்குவரத்துக் கொள்கையின் ஒரு பகுதியாகும்சி.

29. பினா, வி. (2001) உள்ளூர் அரசாங்க சேவைகள் விநியோகத்தின் செயல்திறன் பற்றிய பகுப்பாய்வு: நகர்ப்புற பொது போக்குவரத்திற்கு ஒரு பயன்பாடு. போக்குவரத்து ஆராய்ச்சி பகுதி அ: கொள்கை மற்றும் பயிற்சி. ஙணிடூ. 35, எண் 10

30. கியூரி, ஜி. (201) உள்ளூர் பொது போக்குவரத்தில் கட்டுப்பாடு நீக்கம், உரிமம் வழங்குதல், வெளிவழங்கல் மற்றும் கார்ப்பரேட்டைஷேஷன். ஐகூஉ இஈ. மேலும் விவரங்களுக்கு: டணுணணீண்://www.itf-oecd. org/sites/de-fault/files/docs/public-transport-deregula-tion-franchising-outsourcing-corporatisation.pdf

31. ஸ்டான்லி, ஜே. (2017) பொது போக்குவரத்துக்கு போட்டி டெண்டரிங் வழங்கப்படவில்லை, எனவே மோசமான செயல்திறனுக்கு ஏன் வெகுமதி வழங்கவேண்டும்?, தி காண்வர்ஷேஷன். மேலும் விவரங்களுக்கு: https://thecon-versation.com/competitive-tendering-hasnt-deliv-ered-for-public-transport-so-why-reward-poor-performance-85378

32. புச்சர், ஜே. (2004) இந்தியாவில் பொது போக்குவரத்தின் நெருக்கடி: அதிகப்படியான தேவைகளுக்கு வரையறுக்கப்பட்ட வளங்களே உள்ளன. ஜர்னல் ஆஃப் பப்ளிக் டிரான்ஸ்போர்ட்டேஷன். திணிடூ. 7, எண். 4. மேலும் விவரங்களுக்கு: டணுணணீண்:// scholarcom-mons.usf.edu/jpt/vol7/iss4/1/

33. வீஹ்மான் வி. (2019) பப்ளிக் பைனான்ஸிங். சர்வதேச போக்குவரத்து தொழிலாளர் கூட்டமைப்பு (ஐ.டி.எஃப்). ஙஇந்த அறிக்கை ஐ.டி.எஃப் மக்கள் பொது போக்குவரத்துக் கொள்கையின் ஒரு பகுதியாகும்சி.

34. APSE (2019) திறனை மீண்டும் உருவாக்குதல். பொது ஒப்பந்தங்களை உள்வழங்கல் வழக்கு. மேலும் விவரங்களுக்கு: டணுணணீண்:// www.apse.org.uk/apse/as-sets/File/Insourcing%20 (web).pdf

35. ஃபிரைடெரிசிக், எச். மற்றும் ரெய்ன்ஹோல்ட், எஸ் (2016) Rekommunalisierung und Wettbewerb in der Entsorgung-swirtschaft: Trends, Erklärungen und wettbewerbspolitische Implikationen. ESMT வெள்ளை அறிக்கை எண். ஙிக–16–01. மேலும் விவரங்களுக்கு: plusminus/sendung/hr/rekommunalis-ierung-muellentsorger-100.pdf

36. போக்கர்ஸ், வி. மற்றும் ஹார்டார்ப், எல். (2016) Wettbe-werb in der Restmüllerfassung: Eine empirische Analyse der Anbieterstruktur. Ordnungspolitische Perspektiven No. 85. P. 1. மேலும் விவரங்களுக்கு: டணுணணீ://www.dice.hhu.de/filead-min/redaktion/Fakultaeten/Wirts-chaftswissenschaftliche_Fakultaet/DICE/

37. ஐரோப்பிய ஆணையம் (2016) கழிவுத் துறையில் பொது கொள்முதல் விதிகளைப் பயன்படுத்துவதற்கான சட்ட உதவி. மேலும் விவரங்களுக்கு: https://www.bde.de/assets/-public/Dokumente/Europa/MP/Legal-As-sistance-on-the-application-of-publicprocurement-rules-in-the-wa ste-sector.pdf?

38. அகுஉ (2019) திறனை மீண்டும் உருவாக்குதல். பொது ஒப்பந்தங்களை உள்வழங்கல் செய்வதற்கான வழக்கு. மேலும் விவரங்களுக்கு: டணுணணீண்:// www.apse.org.uk/apse/assets/File/Insourcing%20 (web).pdf

39. டான்சி, ஆர். (2017) சுகாதாரத்துறையில் ஊடுருவும் தனியார்மயமாக்கல். சிக்கலான ஐரோப்பிய ஒன்றிய கொள்கைகள் மற்றும் கார்ப்பரேட் லாபி அழுத்தம். கார்ப்பரேட் யூரோப் அப்சர்வேட்டரி.. மேலும் விவரங்களுக்கு: டணுணணீண்://corporateeu-rope.org/en/power-lobbies/2017/06/ creeping-privatisation-healthcare

40. பிளிமர், ஜி. (29 ஜனவரி 2012) மீஏகு பொது மருத்து வமனையை முதன்முறையாக நடத்தும் தனியார் நிறுவனம். பைனான்சியல் டைம்ஸ். மேலும் விவரங்களுக்கு: டணுணணீண்://www.ft.com/con-tent/10721664-4aa3-11e1-8110-00144feabdc0

41. டெஸ்டா, சி. (22 ஆகஸ்ட் 2019) மில்டுரா பேஸ் மருத்து வமனை நிர்வாகம் பொதுத்துறைக்குத் திரும்ப உள்ளது. ஏபிசி செய்நியூஸ். மேலும் விவரங்களுக்கு: டணுணணீண்://www.abc.net.au/ news/2019-08-22/mildu-ra-base-hospital-management-set-to-re-turn-to-public-hands/11439488

42. யான், எல். மற்றும் ஜுவான், டி. (15 ஆகஸ்ட் 2019) ஆழமான கண்ணோட்டம்: சீன நகரங்கள் பொது மருத்து வமனை உரிமை சீர்திருத்தத்தால் போராடுகின்றன. கெய்சின். மேலும் விவரங்களுக்கு: டணுணணீண்://www.caix-inglobal.com/2019-04-15/in-depth-chinese-cit-ies-struggle-with-public-hospital-ownership-reform-101404145.ht ml

43. டோஸி, ஜே. மற்றும் பர்னாஸ், டி. (29 மார்ச் 2019) அமெரிக்க. சுகாதார பராமரிப்புக்கான அனைவருக்கும் மருத்துவம் என்றால் என்ன: குவிக்டேக். ப்ளூம்பெர்க். மேலும் விவரங்களுக்கு: டணுணணீண்://www. bloomberg.com/news/articles/2019-03-29/howmedi-care-for-all-could-mean-change-for-everyone-quicktake

44. மான்செஸ்டர், ஜே. (தேதி இல்லை) 70 சதவீத அமெரிக்கர்கள் அனைவருக்கும் மருத்துவம் திட்டத்தை ஆதரிக்கின்றனர். தி ஹில். மேலும் விவரங்களுக்கு: டணுணணீண்://thehill.com/hilltv/what-americas-think-ing/412545-70-percent-of-americanssupport-medicare-for-all-hea lth-care

# 4.

# சமூகங்கள், தொழிலாளர்கள் மற்றும் சுற்றுசூழல் ஆகியவற்றிற்கான பொதுப் பணிகளை மேம்படுத்த மீள்அரசுமயமாக்கலை பயன்படுத்துதல்

## 4.1. பொதுப் பணிகளை மீள்அரசுமயமாக்குவதின் நன்மைகள்

பொதுத்துறைக்கு சொந்தமான மற்றும் அதனால் கட்டுப்படுத்தப்பட்ட பொதுச் சேவைகள் மாற்றத்திற்கான தனித்து வமான வாய்ப்புகளை வழங்குகிறது. பொதுவுடைமை என்பது இறுதி இ லக்கு அல்ல; ஆனால் அது ஒரு சமூக சமத்துவத்தையும், சுற்றுச்சூழல் நீதியையும் ஊக்குவிக்கும் ஒரு சமூகத்தை மீண்டும் உருவாக்குவதற்கான அணுகுமுறையாகும்.

பங்குதாரர்களை மேலும் வளப்படுத்துவதற்குப் பதி லாக, பொதுச் சேவைகள் பொதுத்துறையாக இயக்கப்படும் போது -

- ⌘ சேவை உள்கட்டமைப்பை விரிவுபடுத்துவதற்காக கூடுதல் லாபத்தினை மறு முதலீடு செய்யலாம்;
- ⌘ சேவையின் தரத்தை மேம்படுத்தவும்,
- ⌘ கட்டணங்களை குறைக்கவும் இது பயன்படுகிறது; மற்றும் / அல்லது பருவநிலை மாற்றத்தை
- ⌘ எதிர்கொள்வதற்கும் மறுமுதலீடு செய்யப்படுகிறது.

பொதுச் சேவைகள் பொதுத்துறைக்கு சொந்தமாகவும், அதன் கட்டுப்படுப்பாட்டில் இது முழுமையான மற்றும் அறிவார்ந்த திட்டமிடலை செயல்படுத்துகிறது. பொதுச் சேவைகளின் குறுக்கு மானியத்தினை குறிப்பிட வேண்டும். அதாவது, ஒரு பொதுச் சேவையின் கூடுதல் லாபம் மற்றொரு சேவைக்கு மானியமாக வழங்கப் பயன்படுத்தப்படுகிறது. அதேவேளை பயனாளிகளின் கட்டணங்கள் மூலம் அதன் செலவுகளை இது ஈடுசெய்யாது. எடுத்துக்காட்டாக பூங்காக்கள், லிடோஸ் அல்லது பொது போக்குவரத்து ஆகியவற்றைக் கூற லாம்.

**ஜெர்மனியின் மியூனிக்** நகரில், பொதுப் போக்குவரத்து அமைப்பானது பொதுத்துறைக்கு சொந்தமான மற்றும் அதன் கட்டுப்பாட்டில் உள்ள ஆற்றல் அமைப்பினால் ஓரளவு நிதியைப் பெறுகிறது. மேலும், பொது போக்குவரத்து மற்றும் பொது ஆற்றலுக்கும் இடையிலான ஒத்துழைப்பு அத்துடன் நிற்பதில்லை. பொது உரிமையின் மூலம் மியூனிக் ஒரு ஆற்றல் அமைப்பை உருவாக்கியது, அது பொது போக்குவரத்து துறை முழுவதையும் புதுப்பிக்கத்தக்க மின்னாற்றலில் இயக்க உதவுயது.[1]

பொதுச் சேவைகள் பொதுத்துறையின் வசம் இருக்கும்போது வளங்களை மறுபகிர்வு செய்யலாம். இதன் விளைவாக, ஆற்றல் பற்றாக்குறை மற்றும் கிராமப்புற மக்களுக்கு பொது போக்குவரத்து கிடைப்பது உள்ளிட்ட ஏற்றத்தாழ்வுகளை சிறப்பாக நிவர்த்தி செய்ய முடியும். இந்த வழியில், பொதுச் சேவைகள் அனைவருக்கும் பயனளிக்கிறது. ஒரு தொழிற்சங்க கண்ணோட்டத்தில் பார்த்தால், தொழிலாளர்களை கருத்தில் கொண்ட, ஒரு டீகார்பனைஸ்டு (கார்பன் அற்ற) பொருளாதாரத் தினை நோக்கிய ஒரு நியாயமான மாற்றத்தினை செயல்படுத்து வதற்கான வாய்ப்பையும் பொதுவுடைமையாக்கல் வழங்குகிறது. எடுத்துக்காட்டாக, காற்றாலைகள் பொதுத்து றைக்கு சொந்தமாக இருக்கும்போது, காற்று வீசும் இடத்தில் மட்டுமல்லாமல், நகரங்கள் மற்றும் பிராந்தியங்களிலும் அவற்றை நிறுவ லாம்; அல்லது நிக்கரி அல்லது அணு ஆற்றல் எடுப்பதை நிறுத்தியதால் தொழிற்சாலைகள் மூடப்படும் பாதிப்பினை எதிர்கொள்ளும் பகுதிகளில் அவற்றை நிறுவுவதற்கான அறிவார்ந்த முடிவுகள் எடுக்கப்பட லாம். மேலும், மீள்அரசுமயமாக்க லால் - ஒரு குறைந்த வேலை நாட்களை கொண்ட பணி வாரத்தினை ஏற்படுத்துதல் போன்ற



ஆஸ்திரேலியாவின் மக்கள் விசாரணை: பொது காப்பகங்கள் மற்றும் கூட்டு இல்லங்கள் ஆகியவற்றில் உள்ள முதியோர், ஊனமுற்றோர் மற்றும் ஹோம்கேர் (அஈஏஇ) சேவைகளை தனியார்மயமாக்குவதனால் உண்டாகும் தாக்கம் குறித்து இந்த விசாரணைக்குழுவிற்கு ஒரு பெற்றோர் ஆதாரப்பூர்வமாக நித்தனர். © ஆஸ்திரேலிய மக்கள் விசாரணை

முற்போக்கான மற்றும் புதுமையான பணி தொடர்பான கொள்கைகளை வகுப்பதற்கான அடித்தளத்தை வழங்கவும்; சமமான வாய்ப்புகளை வழங்கவும், திறன் மேம்பாடு மற்றும் பயிற்சி வழங்குவதிலும் முதலீடு செய்ய முடியும்.

## 4.2. குடிமக்கள், சேவை பயன்பாட்டாளர்கள் மற்றும் சமூகத்தினருக்கு கிடைக்கும் நன்மைகள்

வளர்ச்சியை நோக்கிய மாற்றத்திலும், பொதுப் பணிகளிலும் கண்டுபிடிப்புகளை உருவாக்க மீள்அரசுமையமாக்கல் வாய்ப்புகளை வழங்குகின்றது. அதாவது பொது நன்மைக்கான சேவைகளை வழங்குவதாகும்; இது பொது வாழ்க்கையில் சமூக குழுக்களை மீண்டும் உருவாக்குவது, அனைவருக்கும் கிடைக்கும் வகையில் சேவையை தரத்துடன் ஏற்படுத்துவது ஆகிய இ லக்குகளை அது எட்ட வேண்டும். அதைவிடுத்து லாபம் மற்றும் பங்குதாரர்களுக்காக லாப பங்கினை தருவது ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளித்தல் கூடாது. அதனை சேவையின் தரமாகவும் கருதக் கூடாது. பொதுத்துறைக்கு சொந்தமான, அதனால் நடத்தப்படும் சேவைகள் எதற்கு முக்கியத்துவம் தரவேண்டுமென்றால் அதன் சேவைத் தரம் மற்றும் அனைவருக்கும் கிடைக்கும் வண்ணம் இருப்பதேயாகும். மேலும் சமூக மற்றும் சுற்றிசூழலின் நிலை சேவைத்தரத்தின் குறியீடுகளாக செயல்படும்.

மீள்அரசுமயமாக்கல் சமூகத்தில் நல்ல தாக்கத்தினை ஏற்படுத் தியதற்கு உதாரணமாக **இந்தியாவின்** தென்மேற்கு மாநிலமான **கேரளாவில்** நடந்த நிகழ்வை கூற"ாம். 36 மில்லியன் மக்கள் வசிக்கும் இந்த மாநிலத்தில், ஆரம்பக்கல்வியை மீண்டும் அரசுமயமாக்கியது, அதன் மூலம் ஒரு முழு தலைமுறையின் எதிர்காலம் நல்லவிதமாக மாறியுள்ளது. 2016-ல் சுமார் 1000 தனியார் பள்ளிகள் இருந்தன, ஆனால் அவை அரசு மானியம் பெறும் பள்ளிகளாக மாற்றப்பட – சில பள்ளிகள் லாபம் பெறுவதற்கான உத்திரவாதத்தை தர இயலாததால், மூடும் நிலைக்கு சென்றன. அரசு பள்ளிகளுக்காக போராட்டங்கள் நடந்ததைத் தொடர்ந்து, இடதுசாரிகளின் கூட்டணிகள் மே 2016-ல் நடந்த தேர்தலில் வென்று கேரளாவில் ஆட்சி மாற்றத் தினை ஏற்படுத்தியது. அதன் பின், கேரளாவின் கல்விக் கொள்கையில் மாற்றம் கொண்டுவந்து, நஷ்டத்தில் இயங்கும் தனியார் பள்ளிகளை மீண்டும் அரசுமயமாக்க முடிவு செய்தது. அதனைத் தொடர்ந்து ஆகஸ்ட் 2017-ல் முந்தைய பத்து ஆண்டுகளில் இல்லாத அளவு மாணவர் சேர்க்கை எண்ணிக்கை கூடுத லாக 12,198 என முத லாம் வகுப்பிலும், 16,710 என இரண்டு முதல் ஒன்பதாம் வகுப்பு வரையிலும் முந்தைய ஆண்டைக்காட்டிலும் உயர்வாக இருந்தது. முந்தைய ஆண்டுகளில் மாணவர் சேர்க்கை எண்ணிக்கை தொடர்ந்து சரிந்து வந்தது குறிப்பிடத்தக்கது (காண்க மெய்நிகழ்வு 46, கல்வி, இந்தியா, கேரளா)[2]

தனியார்மயமாக்கப்பட்ட பொதுச் சேவைகள் பெரும்பாலும் ஏழை சமூகங்களை ஒதுக்கிவைக்கின்றன அல்லது முரண்பாடாக, ஏழைகள் சேவைகளைப் பெற அதிக கட்டணம் விதிக்கின்றன. உதாரணமாக, **இங்கிலாந்தில்**, குறைந்த வருமானம் உள்ளவர்கள், முன்-கட்டண மின் மீட்டர்கள் மூலம் வாங்கிய மின்சாரத்தை நம்பியிருக்க வேண்டிய நிலை உள்ளது; இதன் விலை, இணைய சேவை மூலம் நேரடிக் கட்டணம் செலுத்தி பெறப்படும் மின்சாரத்தை விட கணிசமான அளவு அதிகமாகும். இந்த சமத்து வமின்மையை நிவர்த்தி செய்வதற்காகவும், **நாட்டிங்ஹமில்** மக்களை மின்ஆற்றல் வறுமையிலிருந்து மீட்பதவதற்காகவும் நகர சபை 2015-ல் ராபின் ஹூட் எனர்ஜி-ஐ அறிமுகப்படுத்

தியது – அதுவே உள்ளூர் அரசமைப்பால் நடத்தப்படும் முதல் லாப நோக்கற்ற எரிசக்தி நிறுவனமாகும்.[3] நாட்டிங்ஹமில் ராபின் ஹூட் எனர்ஜி வருவதற்கு முன்பு, மின்ஆற்றல் வறுமை 15 சதவீத மக்களை பாதித்திருந்தது - இது இங்கிலாந்தில் மிக அதிகமான விகிதங்களில் ஒன்றாகும்.[4] ராபின் ஹூட் எனர்ஜி, மின்சார வறுமையிலிருந்து மக்களை மீட்பதற்காக மின்சாரத்தை மலிவானதாக மாற்றுவதை நோக்கமாகக் கொண்டிருந்தது. சராசரியாக, நாட்டிங்ஹம் மக்கள் ஒரு வருடத்திற்கு £315-ஐ ராபின் ஹூட் எனர்ஜியின் மூலமாக சேமிக்கிறார்கள் (காண்க மெய்நிகழ்வு 6: ஆற்றல், நாட்டிங்ஹம்).

## 4.3. தொழிலாளர்களுக்கு கிடைக்கும் நன்மைகள்

தனியார்மயமாக்கல் குறித்த ஆராய்ச்சி பொதுப் பணி வேலைவாய்ப்பில் எதிர்மறையான விளைவைக் கொண்டிருப்பதைக் காட்டுகிறது.[5] எடுத்துக்காட்டாக, 1999 மற்றும் 2005-க்குகு இடையில் அட் லாண்டாவில், **அமெரிக்க** நீர் மற்றும் கழிவு நீர் துறையில் பத்து நிறுவனங்கள் தனியார்மயமாக்கப்பட்டது; அது சராசரியாக 34 சதவீத வேலை இழப்புகளுக்கு வழிவகுத்தது.[6] **இங்கிலாந்தில்** பிரிட்டிஷ் மின்சாரத் துறையில் கிட்டத்தட்ட அனைத்து வேலைகளும் தனியார்மயமாக்கலுக்குப் பிறகு காணாமல் போயின.[7] பணிகளை வெளிவழங்கல் செய்வது மற்றும் பணியிடத்தினை பல பகுதிகளாக பிரிப்பது ஆகியவற்றை பழைய நிலைக்கு, அதாவது அரசுமயமக்குவதன் மூலம் - கூட்டு பேரம் பேசுவதற்கு மிகவும் உகந்த ஒரு கட்டமைப்பை கிடைக்கிறது, போதுமான எண்ணிக்கையில் ஊழியர்களின் பணி நிலைகளைப் பெறுவதற்கான சிறந்த வாய்ப்புகளை உருவாக்குகிறது, நல்ல ஊதியம் மற்றும் பணிச்சூழல், சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு ஆகியவை கிடைக்கின்றன, பணி மேம்பாட்டுக்கான வாய்ப்பும், வலுவான தொழிலாளர் உரிமைகளும் கிடைக்கின்றன.

**கனடா நாட்டின், கான்செப்ஷன் பே சவுத்** பகுதியில் நிகழ்ந்த நிகழ்வு ஊதியத்தையும் பணிச்சூழலையும் மேம்படுத்துவதற்கு மீள்அரசுமயமாக்கல் உதவியதற்கான ஒரு எடுத்துக்காட்டாகும். கனடா பொது ஊழியர்கள் தொழிற்சங்கம் (CUPE), கழிவு சேகரிப்பு சேவைகளை அரசுமயமாக்குவதற்காக அயராது வாதிட்டது.[8] 2011-ம் ஆண்டில் தொழிற்சங்கத்தின் நீண்டகால பிரச்சாரம் பலனளித்தது: முப்பது ஆண்டுகால தனியார்மயமாக்கலுக்குப் பிறகு இந்த சேவை மீண்டும் அரசுமயமாக்கப்பட்டது. தொழிலாளர்களுக்கு கிடைத்த வேறுபாடுகள் அற்புதமானவை: கான்செப்ஷன் பே சவுத் பகுதியில் உள்ள கழிவுத்துறை தொழிலாளர்கள் இப்போது நோய்வாய்ப்பட்டால் அதற்கான ஊதியத்தைப் பெறுகின்றனர்; அந்நகராட்சி மேலும் சிறந்த உபகரணங்களை வழங்குவதால் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு நடைமுறைகள் மேம்பட்டுள்ளன. மீள்அரசுமயமாக்கப்பட்ட பிறகு கழிவுத் தொழிலாளர்கள் இப்போது 40 சதவிகிதம் குறைவாக குப்பைகளை அள்ளுகின்றனர், அதற்கு சேவை மீண்டும் உள்வழங்கல் செய்யப்பட்டதே காரணமாகும்.[9] சிறந்த பணிச்சூழல் உள்ளூர் மக்களின் திருப்தியை அதிகரிக்க வழிவகுத்தன. மீள்அரசுமயமாக்களுக்கு முன்னர் புகார்களின் விகிதம் மிக அதிகமாக இருந்தது. அந்நகராட்சியால் நடத்தப்பட்ட ச பத்திய ஆய்வில், 80 சதவீதத்திற்கும் அதிகமான மக்கள் கழிவு சேகரிப்பு சேவையை தங்கள் நகரத்தைப் பற்றி அவர்கள் விரும்பிய முக்கிய விஷயங்களில் ஒன்றாக மதிப்பிட்டனர்.[10] (காணவும் மெய்நிகழ்வு 23, கழிவு, கனடா, கான்செப்ஷன் பே சவுத்)

இதேபோன்ற வளர்ச்சி **நார்வேயின் ஒஸ்லோவிலும்** காணப்பட்டது. நகராட்சி கழிவு சேவைகளுக்காக ஒப்பந்தம் செய்யப்பட்ட தனியார் நிறுவனம் திவாலானதால் தலைநகரின் வடகிழக்கில் உள்ள நான்கு நகராட்சிகளில் சேவையை மீள்அரசமாயக்க வழிவகுத்தது. அந்நான்கு நகராட்சிகளும் தங்களுக்குப் பொது வான ஒரு பகிர்வு நிறுவனமான சிர்கு லா என்ற நிறுவனத்தின் மூலம், அந்த பிராந்தியத்தில் உள்ள 41,000 வீடுகளில் இருந்து கழிவுகளை சேகரிக்கும் பொறுப்பை கொண்டுள்ளது. தனியார்மயமாக்கலின் போது தொழிலாளர்கள் மிகவும் ஆபத்தான பணி நிலைமைகள், குறைந்த ஊதியம் மற்றும் சில சந்தர்ப்பங்களில் ஊதிய கொள்ளை மற்றும் நீண்ட வேலை நேரங்களுக்கு உட்படுத்தப்பட்டனர்.

மீள்அரசுமயமாக்க லால் அதிக ஊதியம், சிறந்த பணிச்சூழல், தொழிலாளர்களுக்கு நிரந்தர ஒப்பந்தங்கள் மூலம் அதிக வேலை பாதுகாப்பும் கிடைத்தது. மேலும், மீள்அரசுமயமாக்கப்பட்ட ஆஸ்லோ கழிவு சேவையில் தொழிற்சங்க உறுப்பினர்களை அதிகரித்தது. பெரும்பாலும் பு லம்பெயர்ந்த தொழிலாளர்கள் தங்கள் தொழிற்சங்கமான ஃபாக்ஃபோர்பன்டெட் மூலம் நார்வே மொழி வகுப்புகளின் மூலம் பயனடைந்தனர். (காண்க மெய்நிகழ்வு 29, கழிவு, நார்வே, ஆஸ்லோ)

இதேபோல், **இங்கிலாந்தின்** கிரேட்டர் லண்டனில் உள்ள உள்ளூர் அரசமைப்பான **குரோய்டனில்**, பிரிட்டிஷ் பன்னாட்டு நிறுவனமும், அந்நாட்டில் பொதுப் பணிகளில் முக்கிய ஒப்பந்த நிறுவனமுமான காரில்லியன் - 2018-ம் ஆண்டின் தொடக்கத்தில் திவா லான பின்னர் நூ லக சேவைகள் மறுசீரமைக்கப்பட்டன. இதன் விளைவாக முன்னர் வறுமை ஊதியத்தில் இருந்த பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு ஏற்பட்டது. தொழிலாளர்கள் இப்போது லண்டன் வாழ்க்கைக்கு நிகரான ஊதியத்தைப் பெறுகின்றனர், இது லண்டனில் ஆகும் வாழ்க்கை செலவிற்கு இணையானதாக இருக்கிறது என்பதை லோபரோ பல்கலைக்கழகம் சுயாதீனமாக கணக்கிட்டது. (காண்க மெய்நிகழ்வு 48, நூ லக சேவைகள், இங்கிலாந்து, குரோய்டன்) இங்கிலாந்தின் **லிவர்பூலில்**, கழிவு சேகரிப்பு, நெடுஞ்சாலைகள் பராமரிப்பு, வீதிகளை சுத்தம் செய்தல் மற்றும் பூங்கா சேவைகளில் அதிகரித்து வரும் ஒப்பந்த செலவுகள் மற்றும் மோசமான சேவைகள் மீள்அரசுமயமாக்கலுக்கு வழிவகுத்தன.அதனால் அரசுக்கு சொந்தமான ஒரு நிறுவனம் துவங்கப்பட்டது, அதனை தொழிற்சங்கங்களும் ஆதரித்தன. இது சிறந்த ஊதியம், ஓய்வூதியம் மற்றும் ஊழியர்களின் மேம்பாட் டுத் திட்டத்திற்கும், உள்ளூர் சமூகத்திற்கு கூடுதல் வேலைவாய்ப்பிற்கும் வழிவகுத்தது.

**ஜெர்மனியில்**, ஜூலை 2018-ல் **ரோஸ்டாக்** தண்ணீர் சேவைகளை மீள்அரசுமயமாக்கம் செய்ததால் தொழிலாளர்களுக்கு சிறந்த பணிச்சூழல் மற்றும் ஊதியம் கிடைப்பதற்கு வழிவகுத்தது. இடைக்கால கூட்டு பேரம் பேசும் ஒரு ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக, தொழிலாளர்கள் முதல் இரண்டு ஆண்டுகளில் போனஸைப் பெறுகிறார்கள்; மேலும் பணிநீக்கங்களுக்கு எதிராக ஆறு ஆண்டு கால பாதுகாப்பினை பெறுவதன் மூலம் பயனடைவார்கள். தொழிற்சங்கத்தின் ஆலோசனை மற்றும் ஒப்புதல் இல்லாமல் தனியாருக்கு வெளிவழங்கல் செய்வதற்கு எதிரான - தொழிலாளர்களைப் பாதுகாக்கும் ஒரு பாதுகாப்பு விதிமுறையும் இந்த ஒப்பந்தத்தில் இருந்தது. ஊதியம் சராசரியாக மாதத்திற்கு 300€ அதிகரித்துள்ளது. (மெய்நிகழ்வு38, நீர், ஜெர்மனி, ரோஸ்டாக்)

மீள்அரசுமயமாக்கலின் நன்மைகள் தற்போதுள்ள தொழிற்சங்க உறுப்பினர்களின் வெற்றிகளுக்கு அப்பாற்பட்டதாகும்.. தொழிற்சங்கங்கள் அனைத்து தொழிலாளர்களுக்கும் நல்ல பணியிட சூழலை ஊக்குவிக்கின்றன - அவர்களின் உறுப்பினர்களுக்கு மட்டுமல்லாமல் - உள்ளூர் சமூகத்திற்கும் புதிய, தரமான வேலைவாய்ப்புகளை உருவாக்கின்றன. இதற்காகவும் தொழிற்சங்க இயக்கம் பலப்படுத்தப்பட லாம். உதாரணமாக, **பிரான்சின் கிரெனோபில்-லில்**, 2001 தண்ணீர் சேவைகளை மீள்அரசுமயமாக்கிதால், தொழிலாளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வழிவகுத்தது. மீள்அரசுமயமாக்கப்பட்ட நேரத்தில் பாதி-தனியார்மயமாக்கப்பட்ட நிறுவனத்தில் இருந்து புதிய பொதுத்துறையால் இயக்கப்படும் கீஉஎ-க்கு மாற்றப்பட்ட 82 தொழிலாளர்களின் எண்ணிக்கையுடன் கூடுத லாக இருந்தது. (காண்க மெய்நிகழ்வு 35, நீர், பிரான்ஸ், கிரெனோபில்)[11] **நியூசி லாந்தில்** மவுண்ட் ஈடன் சிறையை தேசியமயமாக்கியதால் 50 ஊழியர்கள் கூடுத லாக பணியாற்றினர் (காண்க மெய்நிகழ்வு 50, சிறைச்சாலைகள், நியூசி லாந்து, மவுண்ட் ஈடன்).

**கொலம்பியாவின்** தலைநகர் **பகோட்டா**வில், 2012-ம் ஆண்டில் கழிவு சேகரிப்பு சேவையை மீள்அரசுமயமாக்குவதை முறைசாரா கழிவுத் தொழிலாளர்களின் அமைப்பு (ரெசிக்ளாடோர்ஸ்) முறையாக அங்கீகரித்தது - அவ்வமைப்பு கழிவுகளிலிருந்து சேகரிக்கப்பட்ட மறுசுழற்சி பொருளை விற்று வாழ்வாதாரத் தினை பெறுகிறார்கள். 1996-ம் ஆண்டில் பகோட்டா நகரம் தனது கழிவு சேவைகளை தனியார்மயமாக்கியபோது, தனியார் நிறுவனங்கள் ரெசிக்ளாடோர்ஸ்- அமைப்பினரை செயல்பாட்டிலிருந்து வி லக்கின. ஏனெனில் நிப்பரப்பில் கொட்டப்படும் ஒரு டன் கழிவுப்பொருட்களுக்கு ஒப்பந்தக்காரர்களுக்கு பணம் வழங்கப்பட்டது - இது தொழிலாளர்களுக்கு மட்டுமல்லாமல், சுற்றுச்சூழலுக்கும் மோசமானதாக இருந்தது. இது மறுசுழற்சி செய்வதை மட்டுப்படுத்தியது.[12] மீள்அரசுமயமாக்கப்பட்ட இரண்டு ஆண்டு களுக்குள், ரெசிக்ளாடோர்ஸின் 20 சதவீதம் அதாவது - 8112 தொழிலாளர்கள் - பதிவு செய்யப்பட்டு, அவர்களின் வருமானம் ஒரு மாதத்திற்கு சுமார் 200 அமெரிக்க டா லர்களாக உயர்த்தப்பட் டுள்ளது.[13] எனவே, பகோட்டாவில் மீள்அரசுமயமாக்கலுக்கு முன்னர் வி லக்கப்பட்ட தொழிலாளர் அமைப்பின் அனைத்து உறுப்பினர்களுக்கும் சுற்றுச்சூழல் ஆதாயங்கள் கூட மறுக்கப்பட் டன. அதன் பின் அவர்களுக்கு, நல்ல ஊதியம், மரியாதை மற்றும் மதிப்பு ஆகியவையும் கிடைத்தது. துரதிர்ஷ்டவசமாக, அடுத்த மேயரான என்ரிக் பெனியலோசா, பிப்ரவரி 2018-ல் சேவையை மீண்டும் தனியார்மயமாக்கியதால், மீள்அரசுமயமாக்கல் குறுகிய காலத்திற்கு மட்டுமே அமலில் இருந்தது. (மெய்நிகழ்வு, 26, கழிவு, கொலம்பியா, பகோட்டா)[14]

## 4.4. உள்ளூர் அரசமைப்புகளுக்கு கிடைக்கும் நன்மைகள்

ஒரு பொதுச் சேவையை மீண்டும் அரசுமயமாக்க மற்றொரு காரணம் என்னவென்றால், பங்குதாரர்களுக்கு ஈவுத்தொகை எனப்படும் டிவிடென்ட்களை அளிப்பதன் மூலம் பொதுப் பணம் இழக்கப்படுவதில்லை; மேலும், பொதுவாக அவை பெறும் கடன் பொது வங்கியிடமிருந்து குறைந்த செலவில் பெறப்படுவதால், தனியார் மூலதன கடன் வழங்கும் நிதி அமைப்புகளிடம் பெறப்படும் கடனைக் காட்டிலும் செலவு குறைவானதாக இருக்கும். மேலும், சேவையைப் பராமரிக்க மற்றும் தரத்தினை உயர்த்த சேவையின் மூலம் பெறப்படும் சேமிப்பு மற்றும் லாபம் ஆகியவை மீண்டும் முதலீடு செய்யப்பட லாம். இதுபோன்ற மீள்அரசுமயமாக்கல் என்பது உள்ளூர் அரசமைப்புகளுக்கு பொதுச் சேவைகளை குறைந்த செலவில் வழங்குவதற்கான வாய்ப்பாக அமையும். எனவே சிக்கன நடவடிக்கை மற்றும் பட்ஜெட் குறைப்பு காலங்களில் மீள்அரசுமயமாக்கல் குறிப்பாக தொடர்புடைய உள்ளூர் அரசமைப்புகளுக்கு பொருத்தமானதாக உள்ளது.

பல மீள்அரசுமயமாக்கல் நிகழ்வுகளின் பின்னணியில் செலவு ஆதாயங்கள் முக்கிய உந்துத லாக இருந்தன. எடுத்துக்காட்டாக, **ஜெர்மனியின் பெர்காமேனில்**, கழிவு சேவையில் உள்ள தனியார் வழங்குநரான ரெமோண்டிஸ் உடனான ஒப்பந்தம் முடிவுக்கு வந்தபோது, மீள்அரசுமயமாக்கலுக்கான செலவுகளைக் கணக்கிட மேயர் ஒரு உள்ளூர் அதிகாரப் பணிக்குழுவை நியமித்தது. அந்தப் பணிக்குழுவின் முடிவின்படி, மீள்அரசுமயமாக்கல் நகராட்சியின் செலவுகளை 30 சதவிகிதமாக குறைத்துள்ளது. மீள்அரசுமயமாக்கப்பட்ட நான்கு ஆண்டுகளில் 2010-ல் எட்டப்பட்டது. சேவையின் தரமும் சீராக பராமரிக்கப்பட்டது. ரெமோன்டிஸ் ஈட்டிய லாபத்தினை மீட்டதன் மூலம் இது எளிமையாக சாத்தியமானது. (காண்க மெய்நிகழ்வு 28, கழிவு, ஜெர்மனி, பெர்காமென்)[15]

2001 ஆம் ஆண்டில் **கம்ப்ரியா** கவுண்ட்டி கவுன்சில், **இங்கிலாந்**தில் நெடுஞ்சாலைகள் மற்றும் சாலை பராமரிப்புக்கான முதல் பெரிய ககக ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டது. 2011-ம் ஆண்டில் ஒப்பந்தம் நிறுத்தப்பட்டபோது, நெடுஞ்சாலை மற்றும் சாலை பராமரிப்புக்கான சேவைகளை மீண்டும் அரசுமயமாக்க கம்ப்ரியா முடிவு செய்தது. அதன் பின்னர் கம்ப்ரியா ஆண்டுக்கு 1.8 மில்லியன் பவுண்டுகளை மிச்சப்படுத்தியதாக மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும், இங்கிலாந்தின் லேக் மாவட்டத்தில் வழக்கத்திற்கு மாறான வெள்ளம் போன்ற இயற்கை பேரழிவுகளை உள்ளூர் அரசமைப்புகளால் சமாளிக்க இயலும். (காண்க மெய்நிகழ்வு 15. உள்கட்டமைப்பு, இங்கிலாந்து, கம்ப்ரியா).[16] செலவுகளை மிச்சப்படுத்தியதன் மூலம் ஆதாயம் கண்ட உள்ளூர் அரசமைப்புகள் பற்றிய இதர மெய்நிகழ்வுகள் பின்வருமாறு மெய்நிகழ்வு 29, கழிவு, நார்வே, ஆஸ்லோ; மெய்நிகழ்வு 36. நீர், பிரான்ஸ், பாரிஸ்.

உள்ளூர் கவுன்சில்கள் தேவையான சேவைகளுக்கு வளங்களை வழிநடத்துவதற்கான முறைகளை உள்வழங்கல் மூலம் வழங்குகிறது.[17] தனியார் நிர்வாகம் வழியாக இல்லாமல் பொது உரிமையாளர் மற்றும் நேரடி மேலாண்மை மூலம் தரமான பொதுச் சேவைகளை வழங்கி, அதன் மூலம் உள்ளூர் அரசமைப்புகள், குடிமக்கள் மற்றும் சேவை பயன்பாட்டாளர்கள் தங்கள் நற்பெயரையும் கண்ணோட்டத்தையும் மேம்படுத்த முடியும். **இங்கிலாந்தில்** உள்ள அசோசியேஷன் ஃபார் பப்ளிக் சர்வீஸ் எக்ஸ லன்ஸ் (APSE) வெளியிட்ட சமீபத்திய அறிக்கையின்படி, செலவீனங்கள் மற்றும் உள்வழங்கலுக்கு ஒரு உந்துசக்தியாக இருந்தது வழங்கப்படும் சேவைகளின் தரமேயாகும் என்று கோடிட்டுக் காட்டியது.[18] பொதுச் சேவைகளை உள்வழங்கல் செய்வது உள்ளூர் அரசமைப்புகளுக்கும், தேசிய அரசாங்கங்களுக்கும் சேவையின் 'து கட்டுப்பாட்டைக் கொடுக்கிறது, இதனால் சேவையின் தரத்திற்கு முன்னுரிமை அளிக்க முடியும்.

எடுத்துக்காட்டாக, **நியூசி லாந்தில், ஆக் லாந்தில்** உள்ள மவுண்ட் ஈடன் சிறைச்சாலையில் வாராவாரம் சண்டைக்களுக்கு ஏற்பாடு செய்தல், போதைப்பொருள் நுகர்வு போன்ற தொடர்ச்சியான மோசடிகளுக்கு குறைவான ஊழியர்கள் இருந்ததே காரணம் என்பதை அறிந்த அரசு, ஜூலை 2015 அச்சிறைச்சாலையை மீண்டும் தேசியமயமாக்கியது.[19] 2011-ம் ஆண்டில் அரசாங்கம் நிர்வாகத்தை இங்கிலாந்தை சேர்ந்த நிறுவனமான செர்கோவிடம் வெளிவழங்கல் செய்து ஒப்படைத்தது. பின்னர் சிறைச்சேவை மோசமடைந்தது. 2015-ம் ஆண்டில் அரசின் டிபார்ட்மெண்ட் ஆஃப் கரெக்ஷன்ஸ் சிறைச்சாலையின் நிர்வாகத்தை ஏற்றுக்கொண்டபோது, அது உடனடி மேம்பாடுகளைச் செய்து, ஊழியர்களின் எண்ணிக்கையை அதிகரித்தது. இதன் விளைவாக, கைதிகள் மத்தியில் கடுமையான தாக்குதல்களின் விகிதம் 55 சதவீதம் வீழ்ச்சி அடைந்தது; மேலும் மீள்அரசுமயமக்களுக்குப் பிறகு சிறைவாசிகள் மிகவும் பாதுகாப்பானதாக உணர்ந்ததாகக் கூறினர் (**காண்க மெய்நிகழ்வு 50. சிறைச்சாலைகள், நியூசி லாந்து, மவுண்ட் ஈடன்**).[20]

## 4.5. சுற்றுசூழலுக்கு கிடைக்கும் நன்மைகள்

பருவநிலை மாற்றத்தினை எதிர்கொள்வதில் பொதுவுடைமை முக்கியமானதாகும். சேவைகளை உள்வழங்கல் செய்வதன் மூலம் உள்ளூர் அரசமைப்புகளுக்கு வளங்களை நிலையான முறையில் பயன்படுத்த அதிக வாய்ப்புகள் கிடைக்கின்றன; இதனால் எதிர்கால தலைமுறையினர் சுத்தமான நீர், ஆற்றல் மற்றும் வாழக்கூடிய சூழலைப் பெற்று பயனடைய முடியும்.
இயற்கை வளங்களை உலக சந்தையில் விற்க தனியார் நிறுவனங்கள் அதனை பிரித்தெடுகின்றன. அதிலிருந்து வி லகுவதற்கான வாய்ப்புகளையும் மீள்அரசுமயமாக்கல் வழங்குகிறது. பொது உரிமையின் மூலம் நிலையான வள மேலாண்மையைப் பெற்று, அதன் மூலம் லாபத்தினை ஈட்டும் முன் சூழலுக்கு வழிவகுக்கிறது.

பொதுச் சேவைகளை சந்தைப்படுத்துவது பெரும்பாலும் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு முரணாக உள்ளது என்பதற்கு உலகம் முழுவதும் சான்றுகள் உள்ளன. எடுத்துக்காட்டாக, **கொலம்பியாவின் பகோட்டாவில்**, 1996-ல் உள்ளூர் அரசாங்கம் கழிவு மேலாண்மை சேவையை தனியார்மயமாக்கியபோது - ஒப்பந்தக்காரர்களுக்கு ஒரு டன் கழிவுப்பொருட்களை நி்த்தில் நிரப்புவதற்கு கட்டணம் வழங்கப்பட்டது. அதாவது, அதிகமான கழிவுகள் நி்ப்பரப்பில் கொட்டப்பட்டால், தனியார் நிறுவனங்களுக்கு அதிக லாபம் கிடைக்கும். இத்தகைய திட்டம் மறுசுழற்சி செய்வதை மட்டுப்படுத்துவதோடு மட்டுமல்லாமல், மறுசுழற்சி செய்யக்கூடிய கழிவுகளை நி்ப்பரப்பில் கொட்டப்படுவதற்கு முன்பு, அதனைத் தேடும் முறைசாரா கழிவுத் தொழிலாளர்களுக்கும் (ரீசைக் லடோர்ஸ்) தீங்கு விளைவிக்கும். ஏனென்றால் தனியார் நிறுவனங்கள் அவர்களை குப்பை கிடங்குகளைவிட்டு தள்ளி வைத்திருந்தது.[21]

**ஐரோப்பாவில்**, மின்னாற்றல் துறையில் தனியாரின் பங்களிப்பை ஊக்குவித்த ஆற்றல் தாராளமயமாக்கல் கொள்கைகள் - ஆற்றலை டிகார்பனைஸ் (கார்பனை குறைப்பது) செய்வதற்கான உத்திகளுக்கு பொருந்தாமல் இருந்தன. போதிய பாதுகாப்பமைப்பு இல்லாமல், புதுப்பிக்கத்தக்க மின்னாற்ற லால் போட்டி நிறைந்த மின்சார சந்தைகளில் நீடித்து இருக்க முடியாது என்பது தெளிவானது. ஐரோப்பாவில் புதுப்பிக்கத்தக்க ஆற்றலின் எழுச்சி சாத்தியமானதற்கு காரணம் - அதற்கு சந்தை தாராளமயமாக்கலில் இருந்து பாதுகாப்பு அளிக்கப்பட்டது. மின் துறை மீதான பொதுத்துறைக் கட்டுப்பாட்டை மீட்டெடுப்பதன் மூலம் – டிகார்பனைசேஷனுக்கு முன்னுரிமை அளிக்க லாம்; மேலும், புதுப்பிக்கத்தக்க ஆற்றலை ஒருங்கிணைக்கும் நோக்கில் – டிரான்ஸ்மிஷன் கிரிட் கட்டமைப்பை பொருத்தமாக்குவதற்கு தேவையான முதலீடுகள் செய்யலாம்.[22]

இதேபோல், நீர் துறையில் தனியார்மயமாக்கல் சுற்றுச்சூழல் நிபந்தனைகளுடன் முரண்படுகிறது. எடுத்துக்காட்டாக, **இந்தோனீசியாவின் ஜகார்த்தாவில்**, தண்ணீரை தனியார்மயமாக்கியதால் கட்டணங்கள் 300 சதவீதத்திற்கும் மேலாக உயர வழிவகுத்தது; 23 அந்நகரத்தில் சுமார் 40 சதவீதம் பேருக்கு இன்னும் குழாய் நீரைப் சென்றடையவில்லை; அப்படி கிடைப்பவர்களுக்கும் தரமான தண்ணீர் கிடைப்பதில்லை. தண்ணீர் வழங்குவதில் குறைப்புகள் அடிக்கடி நிகழ்கின்றன, தண்ணீர் பெரும்பாலும் நாற்றம் மற்றும் தோல் எரிச்சலை ஏற்படுத்துயது. சில நேரங்களில் சேறும் சகதியுமாக இருந்தது. இதன் விளைவாக, ஹோட்டல்களும், செல்வந்தர்களும் தூய நி்த்தடி நீரைப் பெறுவதற்காக தங்களுக்கென ஆழமான கிணறுகளைத் தோண்டத் தொடங்கினர். இது ஜகார்த்தாவை மூழ்கடிக்கச் செய்துள்ளது - உலகத்தில் வேறு எந்த பெரிய நகரத்தையும் விட வேகமாக - நகரத்தின் 40 சதவீதம் ஏற்கனவே கடல் மட்டத்திற்கு கீழே சென்றுவிட்டது. இப்போதிலிருந்து பத்தே ஆண்டுகளில், மில்லியன் கணக்கான நகரவாசிகள் வசிக்கும் வடக்கு ஜகார்த்தா தண்ணீருக்கு அடியில் சென்றுவிட லாம். (காண்க மெய்நிகழ்வு 39, நீர், இந்தோனீசியா, ஜகார்த்தா)

மீள்அரசுமயமாக்கல் உள்ளூர் நிர்வாகங்களுக்கு சேவையை இயற்கைக்கு உகந்ததாக்குவதற்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதற்கு தேவையான சுதந்திரத்தையும், சுயாட்சியையும் அளிக்கிறது. சேவையை மீண்டும் அரசுமயமாக்கும் போது பயனுள்ள சுற்றுச்சூழல் பாதுகாப்பு நடைமுறைகளை வகுக்க தொழிற்சங்கங்கள் உள்ளூர் அதிகாரிகளுடன் இணைந்து செயல்பட லாம். எடுத்துக்காட்டாக, **கனடாவின் போர்ட் மூடி**-யில், 2008-ம் ஆண்டில் ஐந்தாண்டு குப்பை சேகரிப்பு ஒப்பந்தம் காலாவதியான போது- கனேடிய பொது ஊழியர்களின் ஒன்றியம் (**CUPE**)என்ற தொழிற்சங்கம், நகராட்சி நிர்வாக குழுவுடன் இணைந்து ஒரு கூட்டு பணிக்குழுவை உருவாக்கியது. அதன் மூலம் சேவையை மீள்அரசுமயமாக்குவதால் ஏற்படும் செலவுகள் மற்றும் நன்மைகள் குறித்து ஆராய்ந்தது. பணிக்குழுவின் ஆராய்ச்சியின் அடிப்படையில் சபை அப்பணியை உள்வழங்கல் செய்ய வாக்களித்தது. புதிய குப்பை சேகரிப்பு முறைக்கு மாறுவதற்கான நடவடிக்கைக்காக, அந்நகராட்சி, இக்கஉ மற்றும் குப்பை சேகரிக்கும் தொழிலாளர்கள் இணைந்து மறுசுழற்சி செய்வது குறித்து நகரவாசிகளுக்குக் கற்பித்தனர். இதன் விளைவாக, நகரத்தின் தகவல்தொடர்பு உத்தியானது, வட அமெரிக்காவின் திடக்கழிவு சங்கமான (**SWANA**) ஸ்வானா-விடமிருந்து ஒரு விருதைப் பெற்றது மட்டுமல்லாமல்; சேவை தனியார்மயமாக்கப்பட்ட போது 50 சதவீதத்திற்கும் குறைவாக இருந்த மறுசுழற்சி விகிதங்கள் 75 சதவீதமாக உயர்ந்தது. போர்ட் மூடியின் மறுசுழற்சி விகிதங்கள் இப்போது கனடாவில் மிக அதிகமானதாக உள்ளது. அதன் அண்டை சமூகங்களை விட குறைந்த கட்டணத்தை வசூலிக்கும்போதே இந்த சேவை கணிசமாக மேம்பட்டது (காண்க மெய்நிகழ்வு 24. கழிவு, கனடா, போர்ட் மூடி).

1. வீஹ்மான், வி. (2019) பொது நிதி. சர்வதேச போக்குவரத்து தொழிலாளர் கூட்டமைப்பு (ஐ.டி.எஃப்). இந்த அறிக்கை ஐ.டி.எஃப் மக்கள் பொது போக்குவரத்துக் கொள்கையின் ஒரு பகுதியாகும்சி.

2. ஷாஜு, பி. (14 ஆகஸ்ட் 2017) அதிகமான மாணவர்கள், வகுப்பில் தொழில்நுட்பம்: கேரள அரசு தனது பள்ளிகளை எவ்வாறு மீட்டது. இந்தியன் எக்ஸ்பிரஸ். மேலும் விவரங்களுக்கு: ட�்ஞ்ஞ்ணீ://indianexpress.com/article/education/more-students-to-tech-in-class-how-kerala-govt-turned-its-schoolsaround-4795390/

3. ஹெலியர், டி. (7 செப்டம்பர் 2015) ராபின் ஹூட் எனர்ஜி: நாட்டிங்ஹாம் லாப நோக்கற்ற சக்தி நிறுவனத்தை அறிமுகப்படுத்துகிறது. பாதுகாவலர். மேலும் விவரங்களுக்கு: டஞ்ஞ்ணீண்://www.theguardian.com/environment/2015/sep/07/rob-in-hood-energy-nottingham-council-launches-not-for-profit-energy-company

4. ஆற்றல் மற்றும் பருவநிலை மாற்றத்துறை (2017) ஆண்டு எரிபொருள் வறுமை புள்ளிவிவர அறிக்கை. இங்கிலாந்து அரசு. மேலும் விவரங்களுக்கு: www.gov.uk/government/statistics/sub-regional-fuel-poverty-data-2017

5. ஹெர்மன், சி. மற்றும் ஃப்ளெக்ஜர், ஜே. (2012) பொது சேவைகளின் தனியார்மயமாக்கல். ஐரோப்பாவில் வேலைவாய்ப்பு, பணி நிலைமைகள் மற்றும் சேவை தரத்திற்கான தாக்கங்கள். ரூட்லெட்ஜ்: நியூயார்க்.

6. உணவு மற்றும் நீர் கண்காணிப்பு (2009) நீர் தனியார்மயமாக்கல் தொழிலாளர்கள், நுகர்வோர் மற்றும் உள்ளூர் பொருளாதாரங்களை அச்சுறுத்துகிறது. உணவு மற்றும் நீர் கண்காணிப்பு. மேலும் விவரங்களுக்கு: https://www.foodandwaterwatch.org/sites/default/ files/privatization_threatens_workers_report_may_2009.pdf

7. ஷுல்டன், டி. (2008) பொது சேவைகளின் தாராளமயமாக்கல் மற்றும் தனியார்மயமாக்கல் மற்றும் ஐரோப்பிய தொழிற்சங்கங்களுக்கான அறிவார்ந்த தேர்வுகள். மாற்றம். ணுணிடூ.14, எண் 2, பக். 295-311.

8. **CUPE** (2016) மீண்டும் அரசுமயமாக்கல்: உள்ளூர் அரசாங்கங்கள் ஏன் சேவைகளை மீண்டும் அரசுமயமாக்குகின்றன. **CUPE.** மேலும் விவரங்களுக்கு: https://716.cupe.ca/files/2016/07/Back-In-House.pdf

9. பி.எஸ்.ஐ (28 பிப்ரவரி 2017) கனடாவில் குப்பை சேகரிப்பு: தனியார் பொதுத்துறை ஆகும் பொழுது-சமூகம் வெற்றி பெறுகிறது. மேலும் விவரங்களுக்கு: http://www.world-psi.org/en/waste-collection-canada-when-private-goes-public-community-wins

10. பி.எஸ்.ஐ (28 பிப்ரவரி 2017) கனடாவில் குப்பை சேகரிப்பு: தனியார் பொதுத்துறை ஆகும் பொழுது-சமூகம் வெற்றி பெறுகிறது. மேலும் விவரங்களுக்கு: http://www.world-psi.org/en/ waste-collection-canada-when-private-goes-public-community-wins

11. லோபினா, ஈ., ஹால், டி. (2007) பயன்பாட்டுக் கொள்கையில், பிரான்சின் கிரெனோபிலில் தனியார் துறை பங்கேற்பு மற்றும் பொது நீர் நடவடிக்கைகளை வலுப்படுத்துவதற்கான படிப்பினைகள். **Vol**. 15, பக். 93-109.

12. சாம்சன், எம். (2016) பழைய குப்பை, புதிய யோசனைகள்: பொது கழிவு மேலாண்மை மற்றும் முறைசாரா மீட்பு துப்புறவு பணியாளர்கள். காண்க: மெக்டொனால்ட், டி. ஒரு தனியார்மயமாக்கப்பட்ட உலகில் பொதுத்துறையை உருவாக்குதல். அத்தியாவசிய சேவைகளுக்கான போராட்டம். ஜெட் புக்ஸ்.

13. பிசினஸ் நியூஸ் அமரிகாஸ் (4 ஜனவரி 2018) **US** ÷ 1.6 பில்லியன் டா லர் கழிவு மேலாண்மை ஒப்பந்தங்களை பகோட்டா வழங்குகிறது.

14. கிராமர், ஜி. மற்றும் வீங்கார்டன், ஜே. (2017) ஆணூச்ணஞ்டனுண அணச்டூதூண்னு அஞுனூச்டூடூ

15. தீடிணூஞண்ஞ்டச்னூஞ. ஏச்ணண் ஆணிஞ்டுடூனுணூ குஞடினூஞதணஞ். எண் 354. பக். 165-72. மேலும் விவரங்களுக்கு: https://www.boeckler.de/pdf/p_study_hbs_354.pdf

16. பிரஸ்ஸர், எல். (2 மார்ச் 2016) முக்கிய சேவைகளை வெளிவழங்கல் செய்வதை கவுன்சில்கள் ஏன் விரும்புவதில்லை? தி கார்டியன். மேலும் விவரங்களுக்கு: https://www.theguardian. com/society/2016/mar/02/councils-outsourcing-cumbria-public-private-partnership-in-house

17. அகுஉ (2019) திறனை மீண்டும் உருவாக்குதல். பொது ஒப்பந்தங்களை ஊக்குவிப்பதற்கான மெய்நிகழ்வு. மேலும் விவரங்களுக்கு: https:// www.apse.org.uk/apse/assets/-File/Insourcing%20

18. அகுஉ (2019) திறனை மீண்டும் உருவாக்குதல். பொது ஒப்பந்தங்களை ஊக்குவிப்பதற்கான மெய்நிகழ்வு. மேலும் விவரங்களுக்கு: https://www.apse.org.uk/apse/assets/-File/Insourcing%20(web).pdf

19. ஃபர்லி, டி. (31 மார்ச் 2017) மவுண்ட் ஈடன் சிறைச்சாலை ஒப்பந்தம் முடிவடைந்தவுடன் செர்கோவுக்கு செல்கிறது **RNZ.** மேலும் விவரங்களுக்கு:

20. ஃபர்லி, டி. (31 மார்ச் 2017) மவுண்ட் ஈடன் சிறைச்சாலை ஒப்பந்தம் முடிவடைந்தவுடன் செர்கோவுக்கு செல்கிறது கீமீநூ. மேலும் விவரங்களுக்கு: https://www.radionz.co.nz/news/national/327855/it's-haere-ra-to-serco-as-mt-eden-prison-contractends

21. சாம்சன், எம். (2016) பழைய குப்பை, புதிய யோசனைகள்: பொது கழிவு மேலாண்மை மற்றும் முறைசாரா மீட்பு துப்புறவு பணியாளர்கள். காண்க: மெக்டொனால்ட், டி. ஒரு தனியார்மயமாக்கப்பட்ட உலகில் பொதுத்துறையை உருவாக்குதல். அத்தியாவசிய சேவைகளுக்கான போராட்டம்.

22. வீஹ்மான், வி. (2019) பொதுத்துறை ஆக்குதல்: ஐரோப்பாவிற்கான ஒரு கார்பனற்ற, மலிவான மற்றும் ஜனநாயக ஆற்றல் அமைப்பு. ஆற்றல் தாராளமயமாக்கலின் தோல்வி. ஐரோப்பிய பொது சேவை ஒன்றியம் (உககுக்).

23. பி.எஸ்.ஐ (ஜனவரி 2015) ஜகார்த்தாவில் நீர் தனியார்மயமாக்கலின் தாக்கம். மேலும் விவரங்களுக்கு: http://www.world-psi.org/sites/default/files/documents/research/fact_sheets_2_the_impact_final.pdf

# 5.

# மீண்டும் அரசுமையமாக்கல்: இது தொழிலாளர் மற்றும் தொழிற்சங்கம் தொடர்பான ஒரு விஷயம்

## 5.1. மீள்அரசுமயமாக்கல் என்பது ஏன் ஒரு தொழிற்சங்க பிரச்சினையாக கருதப்படுகிறது.

மீள்அரசுமயமாக்கல் என்பது ஒரு தொழிற்சங்க பிரச்சினையாகும். பொதுச் சேவைகளை மீண்டும் அரசு கட்டுபாட்டுக்குள்ளும், பொது மேலாண்மையின் கீழும் கொண்டுவர தொழிற்சங்கங்கள் பிரச்சாரங்களை மேற்கொள்ள லாம். இதன் மூலம் பொதுத் துறையால் தரமான பொதுச் சேவைகளை வழங்கும் திறமை மற்றும் அதன் மதிப்பு குறித்து மீண்டும் விவாதிக்கும் வாய்ப்பு கிடைக்கிறது. பொதுச் சேவைகள் வழங்கப்படும் வழிமுறைகள் குறித்தும், அரசுக்கு சொந்தமான மற்றும் அரசால் மேலாண்மை செய்யப்படும் சேவைகளுக்கும் இடையேயான தொடர்பினை ஆராயவும், பொதுத் துறையில் பணியாற்றும் தொழிலாளர்களின் வாழ்க்கை நிலை மற்றும் பணியிட சூழல் ஆகியவை குறித்தும் மறுமுறை சிந்திக்க இந்த மீள்அரசுமயமாக்கல் ஒரு வாய்ப்பாக அமைகிறது.

மீள்அரசுமயமாக்கலின் மூலம் பொதுச் சேவைகளில் உள்ள தொழிலாளர்களிடையே நி'வும் இரட்டை அடுக்கு/நிலை பிரச்சினையை சரிசெய்ய ஒரு வாய்ப்பும் உருவாகிறது. குறிப்பாக அதிக வருமானம் உள்ள நாடுகளில், முக்கியமான பொதுப் பணிகளை வெளிநபருக்கு அளித்துபோக்கு நி'வுகிறது. இதனால் தொழிலாளர்களிடையே பிளவு ஏற்படுகிறது. அப்படி தனியார் மயமாக்கப்பட்ட நிறுவனத்தின் கீழ் பணிபுரியும் சக தொழிலாளர்களோடு ஒப்பிடுகையில் - நேரடியாக பொதுத் துறையின் கீழ் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு அதிக பணிப்பாதுகாப்பு, சிறந்த பணி விதிமுறைகள் - நிபந்தனைகள் மற்றும் ஒப்பீட்டளவில் நிலையான பேரம் பேசும் வாய்ப்புகள் கிடைக்கின்றன. நேரடியாக பொதுத்துறையில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு தொழிற்சங்க உதவியும் பெரும்பாலும் கிடைத்துவிடுகிறது.[1] சேவைகள் தனியார்மயமாக்கப்படும் போது, பொதுத்துறை தொழிற்சங்கங்கள் தங்களது பேரம் பேசும் நிலையை பெரும்பாலும் இழந்துவிடுகின்றன. அதனைத் தொடர்ந்து, தொழிற்சங்க உறுப்பினர் சேர்க்கையை குறைப்பதிலும், தொழிற்சங்கத்தினரின் எண்ணிக்கையை குறைப்பதிலும் தனியார்மயமாக்கல் முக்கிய காரணியாகத் திகழ்கிறது. வேறுவிதமாக சொல்ல வேண்டுமென்றால், அது தொழிற்சங்கத்தின் ஆற்றலை மட்டுப்படுத்துகிறது. [2] ஊதியம் மற்றும் பணிச்சூழலில் தனியார்மயமாக்கல் எதிர்மறையான தாக்கத்தினை ஏற்படுத்துகிறது – குறிப்பாக பொதுத்துறையின் கூட்டு ஒப்பந்தம் தனியார்மயமாக்கப்பட்ட ஒப்பந்தங்கள் செல்லுபடியாகாத இடங்களில் அதன் தாக்கம் மேலும் மோசமானதாக உள்ளது.[3]

தனியார்மயமாக்க லால் தொழிற்சங்கங்கள் தங்கள் உறுப்பினர் எண்ணிக்கையை இழக்க காரணமாக இருந்தன, மீள்அரசுமயமாக்கல் இதனை மாற்றி எண்ணிக்கையை அதிகரிக்கும் வாய்ப்பினை வழங்குகின்றன. (காணவும் பகுதி 6.4 மற்றும் மெய்நிகழ்வு 29 குப்பை, நார்வே, ஆஸ்லோ; மெய்நிகழ்வு 38.



எதிர்வரும் தவிர்க்க முடியாத ஆஸ்லோ மீள்அரசுமயமாக்களுக்கு முன்பாக, ஃபேக்ஃபார்பன்டெட் உள்ளூர் கடை ஊழியர்கள், வெரினோ பணியாளர்களை அணுகி, அவர்களை தொழிற்சங்கத்திற்குள் சேர அழைக்கின்றனர். புகைப்படத்திற்கு நன்றி: ஃபேக்ஃபார்பன்டெட்

நீர், ஜெர்மனி, ரோஸ்டாக்) இருப்பினும், மீள்அரசுமயமாக்கல் என்பது தொழிற்சங்கமயமாக்கலை அதிகரிப்பது மற்றும் சிறந்த பணிச்சூழலுக்கு வழிவகுக்கும் என்று கூறமுடியாது. பொதுப் பணி ஊழியர்களுக்கு மீள்அரசுமயமாக்கலின் பலன்களை உறுதிப்படுத்த, தொழிற்சங்கங்கள் தங்கள் யுக்தியையும், பிரச்சாரங்களையும் கவனமாக திட்டமிட வேண்டும். தொழிலாளர்கள் விவரம்அறிந்திருப்பது மட்டுமல்லாமல், முடிந்தவரை ஆரம்ப கட்டத்திலிருந்தே மீள்அரசுமயமாக்க பணியில் ஈடுபட்டால் சிறந்த பலன்கள் கிடைக்கும். தொழிற்சங்கங்கள் மீள்அரசுமயமாக்கலில் ஈடுபட்டுள்ள அனைத்து தொழிலாளர்களுக்கும் ஒரு நியாயமான மாற்றம் கிடைக்க பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் - அவர்கள் உறுப்பினர்களாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் அப்படி செய்ய வேண்டும் - பொதுத்துறை உள்வழங்கல் என்பதை தொழிற்சங்கத்திற்கு முக்கியத்துவம் அளிப்பதற்கு ஒரு கருவியாகப் பயன்படுத்த லாம்.[4]

சேவை பயன்பாட்டாளர்கள் மற்றும் மீள்அரசுமயமாக்கல் பிரச்சாரங்களில் ஈடுபட்டுள்ள சமூக குழுக்களுடன் தொழிற்சங்கங்கள் நெருக்கமாக பணியாற்றுவதும் அவசியமாகிறது. பணிகளை உள்வழங்கல் செய்வதால் மட்டும் சேவைகளின் தரம் தானாக மேம்படாது - குறிப்பாக பொது நிதி தடைசெய்யப்பட்ட இடத்தில். எனவே, தொழிலாளர்கள் மற்றும் சேவை பயன்பாட்டாளர்கள் இருதரப்பினருக்கும் சிறப்பாக பலனளிக்க - சேவையை பயன்படுத்தும் சமூகங்கள், பயன்பாட்டாளர்கள், மற்றும் தொழிலாளர்கள் வாய்ப்பினைப் பயன்படுத்திக்கொண்டு சேவைகளை முறையாக சீரமைக்க வேண்டும்.

## 5.2. தனியார்மயமாக்கலினால் ஏற்பதும் பாதிப்புகளை ஆவணப்படுத்துதல் மற்றும் பகிரங்கப்படுத்துதல்

தாராளமயமாக்கப்பட்ட சந்தைகளில் நம்பிக்கை வலுவாக உள்ளது. உலக வங்கி, IMF மட்டுமல்லாமல் ஐரோப்பிய ஆணையம் போன்ற பல பொருளாதார வல்லுநர்களும், சர்வதேச நிறுவனங்களும் புதிய தாராளமயக் கொள்கைகளைத் தக்கவைத்துக்கொள்கின்றன; அக்கொள்கைகள் சந்தையின் செல்வாக்கை விரிவுபடுத்துவதற்கும், பல நாடுகளில் மூலதன பரிமாற்றங்களை மேம்படுத்துவதற்கும், கொள்கைகளை வளைந்து கொடுக்கக்கூடியதாக இருக்க செய்யவும், கட்டுப்பாடுகளை நீக்கவும் மற்றும் தனியார்மயமாக்கலை ஊக்குவிக்கவும் செய்கின்றன.[5] இந்தப் பின்னணியில், தனியார்மயமாக்கலைச் சுற்றியுள்ள கதைகளை மாற்றுவது மற்றும் தொழிலாளர்கள், சேவை பயனாளிகள் மற்றும் சமூகங்கள் மீதான அதன் எதிர்மறையான தாக்கத்தை அம்பலப்படுத்துவதும் தான் முதல் நிலையாக உள்ளது. (காண்க மெய்நிகழ்வு 25: கழிவு கனடா வின்னிபெக்;

29 கழிவு நார்வே, ஆஸ்லோ, மெய்நிகழ்வு 8 சுகாதார பராமரிப்பு, ஆஸ்திரேலியா, விக்டோரியா; மெய்நிகழ்வு 33. நீர், பொலிவியா, கோச்சாபம்பா; மெய்நிகழ்வு 37. நீர், ஜெர்மனி, பெர்லின்; மெய்நிகழ்வு 40. இத்தாலி டுரின் மற்றும் பாக்ஸ் 3: தனியார்மயமாக்கல் குறித்த ஆஸ்திரேலியாவின் மக்கள் விசாரணை 2016)

திரும்பப் பெறும் ஒப்பந்தங்களின் நன்கொடையாளரது நிபந்தனையின் அடிப்படையில் தனியார்மயமாக்க நாடுகள் அழுத்தத்தை எதிர்கொள்ளும்போது, பொதுவுடைமையை முன்வைப்பது மிகவும் கடினம். **கேமரூன்** நாடு அதன் கழிவு மேலாண்மை சேவைகளின் சில பகுதிகளை தனியார்மயமாக்கிய முதல் ஆப்பிரிக்க நாடுகளில் ஒன்றாகும். அதனிடமிருந்து கற்றுக்கொள்ளக்கூடிய பாடம் இது.[6] 1969-ம் ஆண்டில், **டுவா லா** ஏற்கனவே அதன் நகராட்சி கழிவு மேலாண்மை சேவையின் நிர்வாகத்தை வெளிவழங்கல் செய்திருந்தது. மேலும் பத்து ஆண்டுகளுக்குப் பிறகு **யாவுண்டே** அதே முறையைத் தொடர்ந்து வந்தது. ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்டமான (UNEP) இந்த தனியார்மயமாக்கலை “தோல்வியுற்ற PPP” என்று வகைப்படுத் தியது.[7] தனியார் கழிவு மேலாண்மை நிறுவனங்களின் செயல்திறன் மோசமாக இருந்தது; இறுதியில் உலக வங்கி 1994-ல் இரு நகரங்களையும் சுத்தம் செய்வதற்கும்; குறிப்பாக திறந்தவெளி குப்பை கிடங்குகளை நிர்வகிப்பதற்கும் ஒரு அவசர திட்டத்துடன் பிரச்சனையில் தலையிட்டது. அதில் சிக்கல்கள் இருந்தபோதிலும், அசல் நிறுவனமான HYSACAM-உடன் மீண்டும் ஒப்பந்தம் செய்யப்பட்டது மற்றும் ககக ஒப்பந்தங்கள் நாடு முழுவதும் 17 நகரங்களுக்கு விரிவாக்கப்பட்டன.[8] இருப்பினும், HYSACAM's செயல்திறன் போதுமானதாக இல்லை. ஒப்பந்தத்தில் ஐந்து வருடங்கள் கடந்த நிலையில், நிறுவனம் இன்னும் 60 சதவீத சுற்றுப்புறங்களை அணுக முடியாமல் இருந்தது. ஏனெனில் அவற்றின் உபகரணங்களை எடுத்து செல்லும் பாதைகள் மிகவும் குறுக லாக இருந்தன. மேலும், முறைசாரா தொழிலாளர்களால் அப்பகுதிகள் தொடர்ந்து சேவை செய்யப்பட்டன.9 ஏறக்குறைய 50 ஆண்டுகால தனியார்மயமாக்கப்பட்ட கழிவு மேலாண்மை சேவைக் காலத்திற்குப் பிறகும், கேமரூனில் திறமையான மற்றும் பயனுள்ள கழிவு மேலாண்மை அமைப்பு இன்னும் அறிமுகப்படுத்தப்படவில்லை. இந்த வியத்தகு தோல்வி இருந்தபோதிலும், கேமரூன் அரசு இன்னும் தனியார் கழிவு மேலாண்மை நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்து வருகிறது, தற்போது மீண்டும் டெண்டர் வழங்கும் பணியில் ஈடுபட் டுள்ளது.[10]

தனியார்மயமாக்கலின் தோல்விகள், வெளிப்படையாக வெளிப்படையாக இருந்தாலும் கூட, சேவையினை உள்வழங்கல் செய்வதை ஊக்குவிக்க போதுமான காரணமாக அவை இல்லை என்பதை இதுபோன்ற எடுத்துக்காட்டுகள் காட்டுகின்றன. ஆகவே, மீள்அரசுமயமாக்கல் பிரச்சாரங்களில் ஈடுபடுபவர்கள் - தனியார்மயமாக்கலின் தோல்வியை எடுத்துக்காட்டுகின்ற ஒரு விவரிப்பதைத் தாண்டி செல்வது மிக முக்கியமானதாகும். இதனை ஒரு சாதகமான நேர்மறை எதிர் பார்வையை உருவாக்குவதன் மூலம்- பொதுவுடைமை மற்றும் ஜனநாயகக் கட்டுப்பாட்டில் உள்ள மாற்று வழிகள் மூலம் எதை அடையலாம் என்பதை விளக்கவேண்டும்.

## 5.3. சமூக பிரச்சாரங்களை மேற்கொண்டு அதன் மூலம் தனியார்மயமாக்கலை திரும்பப்பெறுதல்

பணி நிலைமைகள் மோசமடைவதால் தொழிலாளர்கள் 'து மட்டுமல்லாமல், சேவையின் தரத்திலும் அது பாதிப்பை ஏற்படுத்துகிறது, எனவே சேவை பயன்பாட்டாளர்கள் எதிர்மறையான விளைவுகளை சந்திக்கின்றனர். தனியார்மயமாக்கல் காரணமாக பணிச்சூழல் மோசமடைவதற்கும் –அதனால் சேவையின் தரம் குறைவதற்கும் இடையே ஒரு தொடர்பு இருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.[11] ஆகவே, தொழிற்சங்கங்களும் சமூக பிரச்சாரங்களும் பொதுச் சேவைகளை மீட்க ஒருங்கிணைவது அவசியமாகிறது.

மீள்அரசுமயமாக்கலை ஆதரிப்பது முற்போக்கான குடிமை சமூக இயக்கங்களை வலுப்படுத்தும் திறனுடன் இருப்பதையும்; பரவ லான கூட்டணிகளை உருவாக்குவதற்கும், தொழிற்சங்க வாதத்தின் சக்தியை நிரூபிப்பதற்கும் அவை தொழிற்சங்கங்களுக்கு உதவும். குறிப்பாக தொழிலாளர் இயக்கத் தில் ஈடுபடாதவர்களுக்கு உதவியாக இருக்கும். இவ்வழியில், விரிவான அளவில் மீள்அரசுமயமாக்கல் பிரச்சாரங்களை மேற்கொண்டு சமூகங்களுக்களுக்குள் தொழிற்சங்கங்களைப் பற்றிய நல்ல கருத்தினை உருவாக்க அவை பங்களிக்கின்றன; அவற்றின் பங்கு வாழ்வாதார பிரச்சினைகளுக்கு அப்பாற்பட்டது என்பதையும்; பொதுப் பணிகளின் தரத்தை மேம்படுத்துவது போன்ற மனித உரிமைகள் மற்றும் சமூக உரிமைகளை அமல்படுத்துவதிலும் - அவை பங்கு வகிக்கின்றன என்பதை காட்டுகின்றன. பயனாளிகளுக்கு கிடைக்கும் வகையில் மற்றும் வெகுஜனங்களின் பாதுகாப்பிற்கும் வழிவகுக்கிறது.

தண்ணீரை மீள்அரசுமயமாக்கும் பிரச்சாரங்களிலிருந்து தொழிலாளர்கள் மற்றும் சேவை பயன்பாட்டாளர்களுடன் பகிரப்பட்ட குறிக்கோள்கள் மற்றும் விவரிப்புகளை ஒன்றிணைத்து நிறைய கற்றுக்கொள்ள லாம். 2006-ம் ஆண்டில் இத்தாலியில், நீரை தனியார்மயமாக்குவதற்கு எதிராக வாக்கெ டுப்பு நடத்துவதற்காக 2011 ஜூன் மாதம் **இத்தாலியன் ஃபோரம்** ஆஃப் வாட்டர் மூவ்மென்ட்ஸ் என்ற நீர் இயக்கங்களின் மன்றம் நிறுவப்பட்டது. அதன் நிறுவனர்கள் அட்டாக் இத்தாலி, கோமிட் டாட்டி டி பேஸ் (கோபாஸ்) என்னும் தொழிற்சங்கம் மற்றும் சிஜசிஎம்ஏ (உலக நீர் ஒப்பந்தத்திற்கான இத்தாலிய குழு)[12]. பொதுத்துறை ஊழியர்களை ஒழுங்கமைக்கும் இத்தாலியின் மிகப்பெரிய தொழிற்சங்க கூட்டமைப்பான ஃபன்ஜியோன் பப்ளிகா ஆகியன (FPCGIL) இந்த பிரச்சாரத்தில் இணைந்தன. இயற்கைக்கான உலக வனவி லங்கு நிதியம் (WWF) இத்தாலியா, உள்ளிட்ட பல்வேறு சுற்றுச்சூழல் குழுக்கள், சமூக மையங்களின் கத்தோலிக்க நெட்வொர்க் அஇஃஐ (**அசோசியசியோனி கிறிஸ்டியன் டீ 'ஃவோரேடோரி இத்தாலியன்**) போன்ற மதக் குழுக்களும், நுகர்வோர் சங்கமான ஃபெடர்கன்சுமடோரி[13] ஆகியன கூட்டணி உறுப்பினர்களாகின. இத்தகைய பெரிய அளவி லான குடிமை சமூகம், சமூக குழுக்கள் மற்றும் தொழிற்சங்கக் குழுக்களிடையே ஒரு கூட்டணியை உருவாக்குவது என்பது ஒரு பொதுவான அனைவருக்குமான கொள்கையில் கவனம் செலுத்துவதன் மூலம் சாத்தியமானது - நீர் ஒரு மனித உரிமை. இயக்கத்தின் பொதுவான நிலைப்பாடு என்னவென்றால், தண்ணீரை தனியார் நிறுவனங்கள் லாபம் ஈட்டக்கூடிய ஒரு பொருளாக கருதக்கூடாது என்பதாகும், தண்ணீர் பொதுத்துறையில் இருக்க வேண்டிய ஒரு பொது சொத்தாகும்.[14] ஜூன் 2011-ல் தண்ணீரை தனியார்மயமாக்கலுக்கு எதிரான ஒரு தேசிய வாக்கெடுப்பைத் தொடங்கி, இத்தாலிய தண்ணீர் இயக்கங்களின் குழுமம் மிகப்பெரிய வெற்றியைப் பெற்றது.[15]

**ஐரோப்பிய** ஒன்றியத்தின் பல உறுப்பு நாடுகளில் தண்ணீரை மீண்டும் அரசுமயமாக்க பிரச்சாரங்கள் ஐரோப்பா முழுவதும் நடைபெற்று, பொதுவான தண்ணீருக்கான இயக்கத்தைத் தூண்டின. 2013-ம் ஆண்டில், 28 ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடுகளில் கிட்டத்தட்ட 1.9 மில்லியன் ஐரோப்பிய குடிமக்கள் – ஐரோப்பிய குடிமக்களின் முன்னெடுப்பான (உஇஐ) 'தண்ணீர்

ஐரோப்பிய குடிமக்களின் முன்னெடுப்பின் முதல் வெற்றியாகும்; தாராளமயமாக்கல் மற்றும் வணிகமயமாக்கலை நிறுத்துவது, தண்ணீருக்கான மனித உரிமையை வலுப்படுத்தும் வழிமுறையாகும். ECI's EPSU, ETUC மற்றும் PSI ஆகியவை ஊக்குவித்தன. மேலும் சர்வதேச சங்கங்கள் மற்றும் பொதுத் துறை தண்ணீர் அமைப்புகள், சுற்றுச்சூழல் அமைப்புகள், பெண்கள் மற்றும் சுகாதார அமைப்புகளின் கூட்டமைப்புகளும் அதனை ஆதரித்தன.[16] பிரச்சாரம் செய்பவர்களின் கோரிக்கைகளுக்கு அதிகாரப்பூர்வமாக பதி லளிக்க ஐரோப்பிய ஆணையத்தை உஇஜ கட்டாயப்படுத்தியது, மேலும் இது ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் ஆதரவு பெற்ற தீர்மானத்தின் மையப்பொருளாகவும் இருந்தது.[17]

**இந்தோனீசியாவின் ஜகார்த்தாவில்**, தண்ணீரை மீள்அரசுமயமாக்கக் கோரும் ஒரு பெரிய கூட்டணி 2011-ல் நிறுவப்பட்டது, இது தொழிற்சங்கங்கள் மற்றும் குடிமை சமூக அமைப்புகளைக் ஒருங்கே கொண்டிருந்தது. போதிய தண்ணீர் சேவைகள் இல்லாதது குறிப்பாக பெண்களை பாதித்ததால் - பெண்கள் குழுக்கள் கூட்டணியில் ஒரு முக்கிய பங்கு வகித்தன; ஏனெனில் வீட்டு தேவைகளுக்காக அவர்களுக்கே தண்ணீர் முதலில் தேவைப்படுகிறது. தரமான தண்ணீர் குழாய் இல்லாததால் குடியிருப்பாளர்கள் தங்கள் சொந்த கிணறுகளை தோண்ட வேண்டியயிருக்கிறது, எனவே சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படுகிறது. இதில் சுற்றுச்சூழல் குழுக்களும் ஈடுபட்டுள்ளன. (பகுதி 4.5 மற்றும் மெய்நிகழ்வு 39, தண்ணீர், இந்தோனீசியா, ஜகார்த்தா-வை காண்க)

**ஆஸ்திரேலியாவில்**, தொழிற்சங்கவாதிகள் மற்றும் குடிமை சமூக அமைப்புகள் ஒன்றிணைந்து தனியார்மயமாக்கல் குறித்த மேலாதிக்க நடைமுறைகளையும் சொற்பொழிவையும் எதிர்த்தன. அவர்கள் "தனியார்மயமாக்கலுக்கான மக்கள் விசாரணை"-க்கு ஏற்பாடு செய்தனர், இது தொழிலாளர்கள், சேவை பயனாளிகள், குடும்பங்கள் மற்றும் சமூகங்களுக்கு தனியார்மயமாக்கல் எவ்வாறு தீங்கு விளைவித்தது என்பது பற்றிய ஒருங்கிணைந்த மற்றும் உண்மை விளக்கத்தை முன்வைத்தது. அவ்விசாரணை, ஆஸ்திரேலிய அரசாங்கத்தின் நடைமுறையை மாதிரியாகக் கொண்டிருந்தது. இதன் மூலம் மக்கள் செனட் சபை முன் பேச அழைக்கப்பட்டனர் மற்றும் விசாரணைக் குழுவின் கேள்வி பதில் அமர்வில் பங்கேற்றார்கள். தனியார்மயமாக்கலுக்கான மக்கள் விசாரணையின் மூலம் தொழிற்சங்கத்தினர் தனியார்மயமாக்கலின் தாக்கம் குறித்த அறிவைப் பெற்றனர். மேலும், அதன் தோல்வி குறித்து சமூகங்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு கற்பித்தனர். இறுதியில், தனியார்மயமாக்கலுக்கு ஆதரவான சூழல் இருந்தபோதிலும் - பொதுச் சேவைகளை தனியார்மயமாக்குவதை ஏன் நிராகரிக்க வேண்டும்; பொதுக் கொள்கையில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதற்கான ஒருமித்த குரலை தனியார்மயமாக்கலுக்கு எதிராக பதிவு செய்து, மக்கள் விசாரணை அதனை உறுதிப்படுத்தியது. (தனியார் மயமாக்கல் குறித்த ஆஸ்திரேலிய மக்கள் விசாரணை 2016).

## 5.4. மீள்அரசுமயமாக்கலுக்காக பொது ஆளுமைக்கு ஆதரவளித்து ஊக்குவித்தல்ஞ

மீள்அரசுமயமாக்கலுக்கு ஆதரவு திரட்டும் போது உள்ளூர் மேயர்களும் அரசியல்வாதிகளும் தொழிற்சங்கங்களுக்கு சக்திவாய்ந்த கூட்டாளிகளாக இருக்க"ாம்.[18] எடுத்துக்காட்டாக, **நார்வேயின் பெர்கனில்** உள்ள தொழிற்சங்கமான ஃபேக்ஃபார்பன்டெட் - மீள்அரசுமயமாக்கலுக்கான வாய்ப்புகளை உருவாக்க உள்ளூர் அரசியல்வாதிகளுடன் முக்கியமான தொடர்புகளை உருவாக்கியது. எதிர்வந்த 2015 நகராட்சித் தேர்தல்களுக்குத் தயாராவதற்கும், அரசியல் செயற்பட்டியலில் மீள்அரசுமயமாக்கலுக்காகவும் - 2014 முதல் ஃபாக்பார்பன்டெட் நார்வே தொழிலாளர் கட்சியுடன் தவறாமல் சந்திக்கத் தொடங்கினர். உள்ளூர் கூட்டணி அரசின் ஒரு பகுதியாக தொழிற்கட்சி ஆட்சிக்கு வந்தபோது அவர்களின் மறைமுக பணிகள் பலனளித்தன.[19] மே 2016-ல், அப்பகுதியில் இருந்த சுமார் 40 முதியோர் இல்லங்களில் தனியாரால் நிர்வகிக்கப்பட்ட இரண்டு முதியோர் பராமரிப்பு இல்லங்கள், மீண்டும் அரசுமயமாக்கப்பட்டன (காண்க மெய்நிகழ்வு 18. சமூக பராமரிப்பு, நார்வே, பெர்கன்).[20] வீய்ரெனோ மற்றும் ரெனோநோர்டன் ஆகிய இரண்டு கழிவு மேலாண்மை நிறுவனங்கள் திவா லான பின்னர், **நார்வேயின் ஆஸ்லோவில்** உள்ள உள்ளூர் அரசியல் வாக்குறுதியில் -ஃபேக்ஃபார்பன்டெட் 2017-ம் ஆண்டில் மீள்அரசுமயமாக்கலை முன்வைத்தது. அச்தொழிற்சங்கம் வெற்றிகரமாக அரசியல்வாதிகளை வற்புறுத்தியதுடன், தனியார்மயமாக்கலின் தோல்வியை முன்னிலைப்படுத்தியும், பொதுவுடைமைக்கு ஆதரவாகவும் பத்திரிகை பிரச்சாரத்தில் ஈடுபட்டது. (காண்க மெய்நிகழ்வு 29, கழிவு, நார்வே, ஆஸ்லோ)[21]

**கனடாவில்**, வின்னிபெக்கின் தனியார்மயமாக்கப்பட்ட கழிவு மேலாண்மை நிர்வாகத்தில் நிகழ்ந்த தொழிலாளர் மற்றும் மனித உரிமை 'றல்களை அம்பலப்படுத்த, இக்கஉ தொழிற்சங்கம் அது நியமித்த ஒரு அறிக்கையின் தகவல்களைப் பயன்படுத்தியது.[22] நகராட்சியின் பொது மரியாதைக்கு பங்கம் வந்ததை பயன்படுத்தி, இக்கஉ தொழிற்சங்கம் –தண்ணீர் மற்றும் கழிவு மேலாண்மை குழுவின் தலைவர் மற்றும் மேயருக்கு அதனை நிரூபித்தது; கனடாவில் உள்ள பிற அரசமைப்புகள், பொதுத்துறை கழிவு மேலாண்மை அமைப்புகள் மூலம் சிறந்த சேவையை வழங்கியுள்ளதை சுட்டிக்காட்டினர். கழிவு மேலாண்மை சேவையினை பகுதியளவு மீண்டும் அரசுமயமாக்க அது வழி வகுத்தது. (காண்க மெய்நிகழ்வு 25: கழிவு, கனடா, வின்னிபெக்).

**பகோட்டாவில்** 2012-ல், **கொலம்பியா** குஸ்டாவோ பெட்ரோ - மேயர் தேர்தலில் வெற்றி பெற்றார். பெட்ரோ தனது தேர்தல் பிரச்சாரத்தில் உள்ளூர் கழிவு மேலாண்மை அமைப்பில், தங்களுக்கு அங்கீகாரம் கோரியமுறைசாரா கழிவுத் தொழிலாளர் இயக்கத்தின் ஆதரவைப் பெற்றார். [23]. அதிகாரத்திற்கு வந்ததும் அவர் செயல்படுத்திய முதல் திட்டங்களில் ஒன்று பூஜ்ஜிய கழிவு பிரச்சாரமாகும்., இதில் முறைசாரா கழிவுத் தொழிலாளர்களும் நகரின் முறையான கழிவு மேலாண்மை அமைப்பில் இருந்தனர். நகராட்சி கழிவு சேவையை அரசுமயமாக்க பெட்ரோ முயன்றார். இருப்பினும், முன்னர் அச்சேவையை நடத்திய தனியார் நிறுவனங்கள் மீள்அரசுமயமாக்கலை கடுமையாக எதிர்த்தன. பாகோட்டாவில் கழிவு சேகரிப்பை பாதியளவு மீள்அரசுமயமாக்கியதன் மூலம் ஒரு நீண்ட போராட்டம் முடிவுக்கு வந்தது. இருப்பினும், இது பெட்ரோவைத் தொடர்ந்து பதவிக்கு வந்த அரசியல்வாதியால் மாற்றப்பட்டது. (காண்க மெய்நிகழ்வு 26, கழிவு, கொலம்பியா, பகோட்டா)

இருப்பினும், மேயர்கள் மற்றும் உள்ளூர் அரசியல்வாதிகள் மீள்அரசுமயமாக்கலை எதிர்க்க லாம். எடுத்துக்காட்டாக, **ஜெர்மனியின்** ஹேம்பர்க்கில், வாக்கெடுப்பு மூலம் மின்னாற்றல் மையத்தை மீண்டும் அரசுமயமாக்கும் பிரச்சாரத்திற்கு பதி லளிக்கும் வகையில், அரசுமயமாக்குவதை எதிர்க்கும் பிரச்சாரத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அரசுமயமாக்கலை எதிர்க்கும் பிரச்சாரத்தை பெரிய, தனியார் நிறுவனங்கள் மற்றும் பெரிய அரசியல் கட்சிகள் ஆதரித்தன, அவர்கள் பொது மின்னாற்றல் மையத்திற்கு எதிராக வாக்களிக்க குடிமக்களை ஊக்குவித்தனர். (காண்க மெய்நிகழ்வு 2 ஹேம்பர்க்)

த்தீன் அமெரிக்காவில் தண்ணீர் மேலாண்மையை தனியார்மயமாக்குவதற்கு எதிரான சமூக எதிர்ப்பைப் பற்றிய 2012 ஆய்வில், அரசியல் கட்சிகளும் அரசியல்வாதிகளும் சில சமயங்களில் குடிமைப் பிரச்சாரங்களில் நம்பமுடியாத வகையில் கூட்டாளிகளாக இருக்கக்கூடும் என்று கண்டறியப்பட்டது. உதாரணமாக, உருகுவேயில், வாக்கெடுப்பு பிரச்சாரத்தை ஆதரித்த ஒரு எதிர்க்கட்சி, அரசாங்கத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் வாக்கெடுப்பு முடிவை செயல்படுத்துவதை எதிர்த்தது. **கொலம்பியாவின் கார்டகெனாவில்**, மேயர் பதவிக்கான வேட்பாளராக நகரமயமாக்கலை ஆதரித்த ஒரு அரசியல்வாதி, தேர்ந்தெடு க்கப்பட்ட பின்னர் அதை எதிர்த்தார். இது உலக வங்கியின் கடன் நிபந்தனைகளின் காரணமாக நிகழ்ந்தது,தண்ணீர் தனியார்மயமாக்கலை கடனை வழங்குவதற்கான நிபந்தனையாக உலக வங்கி மாற்றியது.[24]

## 5.5. தொழிற்சங்க ஒற்றுமையை பேணுதல்

பொதுச் சேவைகளில் உள்ள தொழிற்சங்க உறுப்பினர் சேர்க்கை பல்வேறு பகுதிகளாக பிளவடைந்து சில நேரங்களில் போட்டி தொழிற்சங்கங்களிடம் சென்றடைந்தன. தனியார்மயமாக்கல் மற்றும் சேவைகளை வெளிவழங்கல் செய்வது ஆகியவை சேவையின் சில பகுதிகளுக்கு மட்டுமே பொருந்தும் என்னும் போது, தொழிற்சங்க உறுப்பினர் சேர்க்கை ஒரு தனியார்-பொது பிரிவினை மட்டும் குறிக்க லாம். இதன் விளைவாக, தொழிலாளர்கள் வெவ்வேறு கூட்டு பேரம் பேசும் ஒப்பந்தங்களால் ஈடுபட்டிருக்க லாம், இதனால் வெவ்வேறு தொழிற்சங்கங்களால் பிரதிநிதித்துவம் செய்யப்பட லாம் அல்லது கூட்டு பேரம் பேசும் உரிமையிலிருந்து வி லக்கப்பட லாம். எனவே தொழிற்சங்கங்கள் மீள்அரசுமயமாக்குவதற்கு ஒரு முழுமையான வழியில் செயல்பட ஏற்பாடு செய்ய வேண்டும். இதன் மூலம் ஒருவருக்கொருவர் போட்டியிடுவதைத் தவிர்க்க முடிகிறது.[25]

ஜெர்மனியின் ரோஸ்டாக்கில், தனியார் துறை தொழிலாளர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற்சங்கம்-தண்ணீரை மீள்அரசுமயமாக்குவதற்கு எதிராக அணிதிரண்டது. பொதுத்துறை தொழிற்சங்கத்தின் அதிகார வரம்பிற்குள் மாற்றப்படுவார்கள் என்றது. அந்த தனியார்துறையின் தொழிற்சங்கம் உறுப்பினர் இழப்பை சந்திக்க நேரிடும். (காண்க மெய்நிகழ்வு 38, தண்ணீர், ஜெர்மனி, ராஸ்டாக்). இருப்பினும், சேவைகளை உள்வழங்கல் செய்வதற்கு எதிராக பிரச்சாரம் செய்வதன் மூலம் – சேவை மாற்றத்தை ஊழியர்களின் விருப்பத்திற்கு எதிராக செய்தால் - தொழிற்சங்கங்கள் அவர்களின் நற்பெயருக்கு சேதம் விளைவிக்கும், இது உறுப்பினர் இழப்புக்கு அப்பாற்பட்ட நீண்டகால எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தக்கூடும். இந்த காரணத்திற்காக, ஒரு மீள்அரசுமயமாக்கல் செயல்முறையால் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பாதிக்கப்பட்ட தொழிற்சங்கங்கள், உரையாடல் மற்றும் ஒத்துழைப்புக்கான வாய்ப்புகளைத் தேட வேண்டும்.

வெளிப்படையான க லந்துரையாடல்களின் மூலம், பல்வேறு தொழிற்சங்கங்கள் ஒருமித்த தீர்வுகளைக் காண லாம், அவை பொது நலனைக் கருத்தில் கொண்டதாக இருக்க லாம். தொழிற்சங்கங்கள் பிளவுபடுவதை தணிக்க மீள்அரசுமயமாக்கல் நடைபெறுவதற்கு முன்பாக, தொழிற்சங்கங்கள், தொழிலாளர்களுக்கு தகவல் அளித்தல், ஆலோசனை மற்றும் ஆதரவளிப்பது முக்கியம். **பிரான்சின் பாரிஸில்**, நீர் மீள்அரசுமயமாக்கப்படுவதற்கு முன்னர் சம்பந்தப்பட்ட தொழிற்சங்கங்கள் துண்டுப்பிரசுரங்களையும் பிற தகவல் பொருட்களையும் உற்பத்தி செய்தன. (காண்க மெய்நிகழ்வு 36 நீர், பிரான்ஸ், பாரிஸ்)[26]

## 5.6. சட்ட ரீதியான மற்றும் கூட்டு பேர கட்டமைப்புகளை சரிபார்த்தல்

மீள்அரசுமயமாக்கல் என்பது ஒரு பொதுச் சேவையை ஒரு தனியார் நிறுவனத்திலிருந்து பொதுத்துறைக்கு மாற்றுவதைக் குறிக்கிறது. 2007 லிஸ்பன் ஒப்பந்தத்தின்படி, பொதுச் சேவைகளை ஐரோப்பிய ஒன்றிய போட்டி விதிகளின் எல்லைக்கு வெளியே உள்ளவரையறுக்கப்பட்டன. எனவே பொதுச் சேவைகளை தனியார்மயமாக்குவது ஐரோப்பிய ஒன்றியத்தால் செயல்படுத்தப்படவில்லை, ஆனால் அது தனிப்பட்ட உறுப்பு நாடுகளின் விருப்பத்திற்கேற்ப விடப்படுகிறது.[27] ஆயினும்கூட, 12 மார்ச் 2001-ன் ஐரோப்பிய ஒன்றிய உத்தரவு 2001/23 / EC உரிமையை மாற்றுவது அல்லது நிறுவனங்களை தனியாரிடமிருந்து பொது, பொது முதல் தனியார், அல்லது தனியார் தொழிலாளர்களுக்கு தனிப்பட்ட முறையில் மாற்றுவது போன்ற விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உரிமை உண்டு என்பதை உறுதி செய்கிறது. இடமாற்றத்திற்கு முன்னர் அவர்கள் 'கூட்டு ஒப்பந்தத்தின் முடிவு அல்லது காலாவதி தேதி வரை; அல்லது மற்றொரு கூட்டு ஒப்பந்தத்தின் நடைமுறைக்கு அல்லது பயன்பாட்டிற்கு வரும் வரை" பணியமர்த்தப்பட்டனர்.[28] இந்தச் சட்டம் தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் தொழிற்சங்கங்களால் தனியார்மயமாக்கப்பட்டதைத் தொடர்ந்து தரக்குறைவான நிலைமைகளிலிருந்து பாதுகாப்பாகப் பயன்படுத்தப்படுகிறது. இருப்பினும், இவ்வுத்தரவு ஒரு தற்காலிக பாதுகாப்பை மட்டுமே வழங்குகிறது மற்றும் புதிய முத லாளியின் ஆட்கணக்கை குறைப்பதைத் தடுக்காது; அல்லது விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை மாற்றுவதைத் தடுக்காது, குறிப்பாக புதிய ஆட்களின் எண்ணிக்கையை.[29]

பெரும்பா லான ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில், தொழிலாளர்கள் இடமாற்றம் தொடர்பான சட்டம் ஐரோப்பிய உத்தரவு 2001/23 / EC-க்கு இணங்கி உள்ளது. **இங்கிலாந்தில்**, ஒரு சேவையை மீள்அரசுமயமாக்கம் செய்யும் போது பொது வாக அதிகார மாற்றத்திலிருந்து வேலைவாய்ப்பு விதிமுறைகளைக் காக்கும் வாய்ப்பினை (TUPE) அமலுக்கு கொண்டுவரும், இது இடமாற்றம் செய்யப்பட்ட தொழிலாளர்களுக்கான வேலைவாய்ப்பு விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் ஒரு புதிய தலைமையின் கீழ் பாதுகாக்கப்பட வேண்டும் என்று கட்டளையிடுகிறது. உள்வழங்கல் TUPE.30 விதியின் கீழ் வருகிறது.[30]

ஐரோப்பிய உத்தரவு 2001/23 / EC - ஐரோப்பிய ஒன்றிய சட்டத்தை மாற்றுவதற்கான தேசிய சட்டத்துடன் முரண்படுகின்ற இடத்தில் முன்னுரிமை பெறுகிறது. அண்மையில் போர்ச்சுகலில் நடந்த ஒரு வழக்கில், தேசிய சட்டத்தின்படி தொழிலாளர் இடமாற்றம் ஏற்பட்டால் சம்பந்தப்பட்ட ஊழியர்கள் முதலில் ஒரு பொது **போட்டி தேர்வு** நடைமுறைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்று குறிப்பிடுகிறது. இருப்பினும், ஐரோப்பிய உத்தரவு 2001/23 / EC தேசிய சட்டத்தை வி லக்கியது என்று நீதிமன்றங்கள் தீர்ப்பளித்தன. [31] **இத்தாலியில்**, தொழிலாளர்களை ஒரு முழுமையான பொதுத் துறை சேவையினராக மாற்றுவதற்கு தடைகள் உள்ளன. இத்தாலிய அரசிய லமைப்பு பிரிவு 97-ன்படி 'பொது நிர்வாகத்தில் வேலைவாய்ப்புகள் போட்டித் தேர்வுகள் மூலம் அணுகப்படுகிறது" என்று கூறுகிறது.[32] இது ஒரு தனியார் நிறுவனத்திலிருந்து பொதுச் சேவைக்கு மாற்றப்படும் தொழிலாளர்கள் தாங்கள் மீள்அரசுமயமாக்கலின் போது அவர்கள் வகித்த அதே வேலையைத் தக்கவைக்க ஒரு பொது போட்டியில் அமர வேண்டிய சூழ்நிலையை உருவாக்குகிறது.

பெரும்பா லான ஐரோப்பிய நாடுகள் ஐரோப்பிய உத்தரவு 2001/23 / EC-யின் அம்சங்களை கூடுத லாகக் கொண்டுள்ளன, மேலும் சில நாடுகள் உள்வழங்கல் தொடர்பாக குறிப்பிட்ட சட்டத்தை உருவாக்கியுள்ளன. பிரான்சில், உள்ளூராட்சி நிர்வாகங்களின் **பிரெஞ்சு** ஜெனரல் கோடின் பிரிவு L5211-4-1, குறைந்தபட்சம் ஒரு வருடத்திற்கு இடமாற்றத்தின் போது ஊதிய அளவுகள் மற்றும் பணி நிலைமைகளைப் பராமரிப்பதற்கான உத்தரவாதத்தினை அளிக்கிறது, அதே நேரத்தில் கூட்டு பேரம் பேசுதல் நடைபெறுகிறது. இருப்பினும், முழு அளவி லான பொதுச் சேவை அந்தஸ்தைக் கொண்ட புதிய அமைப்புகளை உருவாக்க உள்ளூர் அரசமைப்புகளுக்கு உரிமையில்லை என்று பிரெஞ்சு சட்டம் கூறுவதால்- மாற்றப்பட்ட ஊழியர்கள் பொதுப் பணியில் முழுமையாக ஒருங்கிணைக்கப்படுவதில்லை, ஆனால் ஒரு சிறப்பு தனியார் துறை ஆளுமையான, தொழில்து றை மற்றும் வணிக பொது ஸ்தாபனத்தின் (EPIC) கீழ் இருக்கிறார்கள். அதாவது ஊழியர்கள் ஒரு பொதுத்துறை நிறுவனத்தில் (régie publique) ஒரு தனியார் சட்ட ஆளுமையின் கீழ் உள்ளனர், பின்னர் அவை தனியார் துறை கூட்டு ஒப்பந்தத்திற்குள் அல்லது சம்பந்தப்பட்ட உள்ளூர் அதிகாரத்தின் சட்டங்களுக்குள்ளோ அடங்காது. அவர்கள் ஒரே அளவி லான வேலை பாதுகாப்பை அனுபவிப்பதில்லை மற்றும் முழு அளவி லான அரசு ஊழியர்களாக நிரந்தர பதவிகளைக் கொண்டிருக்கவில்லை (fonctionnaires titularisés). தொழிலாளர்கள் சட்டத்தால் உத்தரவாதம் அளிக்கப்படுவது மிகக் குறைவான பாதுகாப்பைக் கொண்டிருப்பதால், உள்வழங்கல் நிகழும் போது தொழிற்சங்கங்கள் வலுவான கூட்டுப் பேரம் பேசும் உடன்படிக்கைகளுக்காக பேச்சுவார்த்தை நடத்துவது மிகவும் முக்கியமானது என்பதை இது நிரூபிக்கிறது. ஏனெனில், தொழிலாளர்களுக்கு சட்டத்தால் உத்தரவாதம் அளிக்கப்படுவது மிகக் குறைவு.[33]

## 5.7. தொழிலாளர்களுக்கு நியாயமான கோரிக்கைகளை பெற்றுத் தருதல்

தொழிலாளர்கள் தனியாரிடமிருந்து பொதுச் சேவைகளுக்கு மாறுவதற்கு தெளிவான சட்ட விதிகள் இருக்கும்போது கூட, தொழிற்சங்கங்கள் அனைத்து தொழிலாளர்களுக்கும் மீள்அரசுமயமாக்கலின் கீழ் நியாயமான ஒப்பந்தம் கிடைப்பதை உறுதிசெய்ய - பொறுப்புள்ள பொது அரசமைப்புகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்த வேண்டும். பொது அரசமைப்புகளுடனான பேச்சுவார்த்தைகளை ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்ளக்கூடாது, குறிப்பாக பொதுத்து றையில் தொழிலாளர்கள் மற்றும் தொழிலாளர் உரிமைகள் குறைக்கப்படும் நாடுகளில் இதனை கடைப்பிடித்தல் வேண்டும்.[34]

அனைத்து தொழிலாளர்கள், குடிமக்கள் மற்றும் பயனாளிகள் உள்வழங்கலின் போது ஒரு சிறந்த ஒப்பந்தத்தைப் தானாகவே பெறுவார்கள் என்று கருதாமல், தொழிற்சங்கங்கள் மீள்அரசுமயமாக்கலினால் ஏற்படும் எதிர்கால தாக்கங்களை முன்கூட்டியே கவனமாகக் கருத்தில் கொள்வது முக்கியம். இதனால்தான் தொழிற்சங்கங்கள் தங்கள் உறுப்பினர்களை ஆரம்பத்தில் இத்தகைய செயலில் ஈடுபடுத்த வேண்டும்; மேலும் ஒரு மீள் அரசுமயமாக்கல் பிரச்சாரத்தில் சேரும்போது அவர்களின் அக்கறைகளை ஆக்கபூர்வமாக அணுக வேண்டும்.

**நார்வேயின் பெர்கனில்** உள்ள பராமரிப்பு இல்லங்களில் உள்ள ஊழியர்கள், முன்மொழியப்பட்ட மீள்அரசுமயமாக்கல் தங்கள் ஊதியத்தை எதிர்மறையாக பாதிக்கும் என்று அஞ்சினர்; ஆனால் அதற்கு நேர்மாறாக நடந்தது: 2016-ம் ஆண்டில் அரசு அவற்றை எடுத்துக் கொண்டபோது, ஊழியர்களுக்கு அதிக ஊதியம் கிடைத்தது, புதிய ஓய்வூதிய திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது (**காண்க மெய்நிகழ்வு 17. சமூக பராமரிப்பு, நார்வே பெர்கன்**).[35]

இருப்பினும், தனியாரிடமிருந்து பொதுச் சேவைக்கு மாறுவது சிறந்த பணிச்சூழல், நிலை மற்றும் பணிப் பாதுகாப்பு ஆகியவை தானாகவே சமமாக இருக்காது என்பதை மனதில் கொள்ள வேண்டியது அவசியம். சில சந்தர்ப்பங்களில், பொது த்துறைக்கு மாற்றுவதன் மூலம் தொழிலாளர்களுக்கு கைக்கு கிடைக்கும் ஊதியம் குறைக்கப்பட லாம். **ஜெர்மனியின் பெர்காமெனில்**, மீள்அரசுமயமாக்கல் 18 சதவிகித ஊதிய உயர்வுக்கு வழிவகுத்த போதிலும், தனியார் நிறுவனமான ரெமொண்டிஸ் சேவையை வழங்கிய போது தொழிலாளர்கள் சராசரியாக அதிகமாக சம்பாதித்தார்கள். ஏனெனில், அவர்கள் வாரத்தில் ஆறு நாட்கள் வேலை செய்து கொண்டிருந்ததால், வார இறுதி நாட்களில் கூடுதல் நேரம் வேலை செய்தனர். பின்னர், மீள்அரசுமயமாக்கலினால் தொழிலாளர்கள் வாரத்தில் ஐந்து நாட்கள் பணிபுரிந்தனர். [36] இது தொழிலாளியின் வருமானத்தை குறைத்தாலும், அது அவர்களின் நல்வாழ்வில் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியது; மற்றும் நோய் காரணமாக பணிக்கு வராமல் இருப்பது ஒப்பீட்டளவில் குறைவாக இருந்தது. மீள்அரசுமயமாக்கல் ஒரு நேர்மறையான பணிச்சூழலை உருவாக்கியது என்று ஊழியர்கள்

தெரிவித்தனர். இது ஊழியர்களின் பணிவிலகலிலும் பிரதிபலிக்கிறது, 2006-ம் ஆண்டு முதல் இரண்டு பேர் மட்டுமே வெளியேறினர்[37] (**காண்க மெய்நிகழ்வு 24. கழிவு, ஜெர்மனி, பெர்காமென்**).

கடைசியாக, தொழிற்சங்கங்கள் விரைவாக நகராட்சித் தொழிலாளர்களை ஒழுங்கமைக்கத் தொடங்குவது மிகவும் முக்கியமானதாகும்; இதனால் நியாயமான மாற்றம் மற்றும் நல்ல வேபணிச்சூழல்களுக்கு உத்தரவாதம் அளிக்க உதவும் - வலுவான கூட்டு பேரம் பேசும் ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த வகையில், தொழிற்சங்கங்களும் உறுப்பினர் இழப்பைத் தவிர்க்க லாம் - மேலும் தொழிற்சங்க உறுப்பினர் எண்ணிக்கையை அதிகரிக்க லாம். **ஜெர்மனியின் ரோஸ்டாக்கில்**, மீள்அரசுமயமாக்கல் பணியின் ஒரு பகுதியாக நீர் தொழிலாளர்களின் தொழிற்சங்கமயமாக்கலில் சுமார் 30 சதவீதம் அதிகரித்துள்ளது (**காண்க மெய்நிகழ்வு 38, நீர், ஜெர்மனி, ரோஸ்டாக்**). இதேபோல், **நார்வேயின் ஆஸ்லோவில்**, கழிவு சேவைகளை மீள்அரசுமயமாக்கம் செய்ததால்தொழிற்சங்க உறுப்பினர் எண்ணிக்கை அதிகரித்தது மற்றும் புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் அமைப்பினை அமைக்கவும் வழிவகுத்தது (**காண்க மெய்நிகழ்வு 29, கழிவு, நார்வே, ஆஸ்லோவைப் பார்க்கவும்**).

## 5.8. திறனளவு, திறன்களை மாற்றுவது மற்றும் உள்வழங்கல் செய்யப்பட்ட சேவையை திறம்பட இயக்குவது எப்படி?

தனியார்மயமாக்கலின் ஒரு பொதுவான பக்க விளைவு என்னவென்றால், திறன்களையும், அறிவையும், பொதுச் சேவைகளை இயக்க தேவையான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களையும் அரசமைப்புகள் இழக்கின்றன. தனியார் வழங்குனர்கள் இதை அறிந்திருக்கிறார்கள்; மற்றும் பெரும்பான்மையான அரசமைப்புகள் தங்களை சார்ந்திருப்பதை அவர்களுக்கு சாதகமாக பயன்படுத்து கிறார்கள்.

**கனடாவின் வின்னிபெக்கில்**, தனியார்மயமாக்கல் என்பது அரசமைப்பு அனைத்து உபகரணங்களை, குறிப்பாக ்ரிகளையும், சேவையை இயக்குவதற்கான ஊழியர்களையும், திறன்களையும் இழந்துவிட்டது. இதனைப் பயன்படுத்தி தனியார் சேவை வழங்குனர்கள் சேவையை இயக்குவதற்கான விலையை அதிகரித்தனர். (**காண்க மெய்நிகழ்வு 25: வின்னிபெக், கனடா**). ஒரு சேவையை வழங்க தனியார் வழங்குனர்களை சார்ந்து இருப்பதன் அர்த்தம் என்னவென்றால், மீள் அரசுமயமாக்கல் திறம்பட உருவாக்கப்பட வேண்டும் என்பதாகும். அதனால் மாற்றம் முடிந்தவுடன் சேவை சீராக இயங்க முடியும்.

**கொலம்பியாவின் பகோட்டா** நகரில், நகரத்திடம் உபகரணங்கள் இல்லாததை தனியார் வழங்குனர் பயன்படுத்திக் கொண்டு, குப்பை சேகரிப்பு சேவையை மீள்அரசுமயமாக்குவதை தடுக்க முயன்றனர். ஆறு மாத காலத்திற்குள் நகரத்தில் குப்பை சேகரிப்பு சேவையை வழங்குவதாக மேயர் குஸ்டாவோ பெட்ரோ அறிவித்த உடனேயே, தனியார் வழங்குனர்கள் சேவையை இயக்குவதை நிறுத்தினர்; மேலும், அந்நகரம் தனியார்மயமாக்கலைத் தொடரவும், அவர்களுக்கு மற்றொரு நீண்ட கால ஒப்பந்தத்தை வழங்கவும் கோரினர்.[38] இதன் விளைவாக, சேவையை வழங்குவதற்கு தேவையான ்ரிகள் நகராட்சியிடம் அதுவரை இல்லாததால் நான்கு நாட்களுக்கு குப்பை சேகரிக்கப்படவில்லை. இறுதியில், ஒரு சமரச முடிவு எட்டப்பட் டது: நகராட்சி திடக்கழிவுகளை சேகரித்தல் மற்றும் அகற்றுவதில் 47 சதவீதத்திற்கு தனியார் ஒப்பந்தக்காரர்கள் பொறுப்பாவார்கள் என்றும், அதே நேரத்தில் நகராட்சி நீர் விநியோக அமைப்பான அக்வா டி பகோட்டா, சேவையில் பாதிக்கப்படும் செயல்பாடுகளை கவனித்துக்கொண்டது (**காண்க மெய்நிகழ்வு 26. கழிவு, கொலம்பியா, பகோட்டா**).[39]

**பிரான்சின் பாரிஸில்**, 25 வருட தனியார்மயமாக்கலுக்குப் பிறகு நீர்வழங்கல் மீண்டும் அரசுமயமாக்கப்பட்ட பிறகு, உள்ளூர் அரசமைப்பிடம் சேவையை உடனடியாக செயல்படுத்துவதற்கு தேவையான அனைத்து உபகரணங்களும், மனித வளங்களும் இல்லை. தொலைபேசி, கணினிகள், வாகனங்கள் மற்றும் பிற உபகரணங்களை தனியார் நிறுவனம் வைத்திருந்தது. மேலும், தனியார் முத லாளிகளால் தக்கவைக்கப்பட்டு, ஓ டு பாரிஸுக்கு மாற்றப்படாத பல ஊழியர்கள் மற்றும் மேலாளர்கள் அம்மாற்றத்திற்குப் பிறகு சேவையை இயக்குவதற்குத் தேவையான பணிகளைச் செய்வதற்குத் அவசியமான சில அறிவார்ந்த திறன்களைக் கொண்டிருந்தனர். இதன் விளைவாக, மீள்அரசுமயமாக்கப்பட்ட பிறகு பயன்பாடு அதன் முழு செயல்பாட்டு திறனை மீண்டும் உருவாக்க பெரும் முயற்சிகள் எடுக்க வேண்டியிருந்தது. (**மெய்நிகழ்வு, நீர், பிரான்ஸ், பாரிஸ்**)

மாற்றம் செய்யப்பட்ட தொழிலாளர்கள் பொதுச் சேவையை பொதுத் துறை கட்டுப்பாட்டின் கீழ் திரும்ப சென்ற உடனேயே - அதை ஒழுங்காக வழங்குவதற்கு தேவையான திறனும் கருவியும் இருப்பதை உறுதி செய்ய வேண்டும். அதற்காக மீள்அரசுமயமாக்கலுக்கு முன்னதாகவே திட்டமிடுவதன் முக்கியத்துவத்தை இந்த அனுபவங்கள் நிரூபிக்கின்றன. சேவையை மீண்டும் பொதுவுடைமை மற்றும் பொதுக் கட்டுப்பாட்டுக்கு மாற்றுவதற்கு வசதியாக தொழிலாளர்கள் மதிப்புமிக்க செய லறிவைக் கொண்டுள்ளனர். சேவை ஒப்படைப்பு சிறப்பாக நடைபெறுவதை உறுதி செய்வதற்கும், தனியார் வழங்குனர்கள் மீதான சேவை சார்புநிலையை முடிவுக்குக் கொண்டுவருவதற்கும் - அதற்கு ஒத்துழைப்பதில் தொழிற்சங்கங்களும் உள்ளூர் அரசமைப்புகளும் ஒருமித்த ஆர்வத்தைக் கொண்டுள்ளன.[40]

**ஜெர்மனியின் ரோஸ்டாக்கில்**, தனியார் நிறுவனமான ரெமொண்டிஸ், நிறுவனத்தின் சந்தைப்படுத்தும் திட்டத்திற்கான ஒப்பந்தம் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்ததால், நீர் சேவைகளை மீள்அரசுமயமாக்குவதைத் தடுக்க அதன் அதிகாரத்தில் எல்லாவற்றையும் முயற்சித்தது. முத லாவதாக, மீள்அரசுமயமாக்குவது தொடர்பாக ரோஸ்டாக் நகரத்தின் ்து வழக்குத் தொடர ரெமோண்டிஸ் முயன்று அதில் தோல்வியடைந்தது. மிகவும் கடினமான பேச்சுவார்த்தையை நடத்தியது; இறுதியில் எதுவும் பலனளிக்காத நிலையில், சேவையை புதிய பொதுத்துறை நிறுவனமான, நார்ட்வாஸர்-இடம் ஒப்படைப்பதில் தடையை ஏற்படுத்தியது. புதிய பொது நிறுவனத்திற்கு தேவையான மனித வள தரவுகள், உள்ளிட்ட தகவல்களை அளிக்காமலும் தவிர்த்தது. இது ஊழியர்களிடையே நார்ட்வாஸரால் பொறுப்பான மனித வள நிர்வாகத்தை வழங்க முடியாது என்ற அச்சத்தை பரப்பியது. இருப்பினும், அவர்களின் தொழிற்சங்கமான வெர். டி., இடமாற்றம் செய்யப்பட்ட தொழிலாளர்களை தானாக முன்வந்து நார்ட்வாஸரில் பதிவு செய்ய ஊக்குவித்தது. இதன் மூலம் ஒரு சுமுகமான மாற்றத்தை உறுதிசெய்தது. அதனா ல் முதல் நாளிலிருந்து சேவை சரியாக செயல்படுவதை உறுதிப்படுத்த தேவையான அனைத்து மனித வள தரவுகளையும் பொது பயன்பாட்டுக்கு கொண்டு வந்தது. (காண்க மெய்நிகழ்வு 38. நீர், ஜெர்மனி, ரோஸ்டாக்).

**நார்வேயின் ஒஸ்லோவில்**, தொழிற்சங்கமான ஃபாக்ஃபோர்பன்டெட், உள்ளூர் அரசமைப்புகளுடன் இணைந்து பொதுவுடைமையான குப்பை சேகரிப்பு சேவைகளின் முறையான மாற்றத்திற்கு உறுதிசெய்தது. சேவையை இயக்குவதற்கு தேவையான உபகரணங்கள் இல்லாததால் - ஊர்திகளையும் சில உபகரணங்களையும் தனியார் நிறுவனத்திடமிருந்து அந்நகரம் திரும்ப வாங்கியது. இதனால் முன்னர் தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்த தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தியதுடன், அவர்களுக்கு சிறந்த பணிச்சூழல் மற்றும் ஊதியத்தை வழங்கியது. இருப்பினும், மேலும் திறன் மற்றும் மனிதவளத்தில் இடைவெளி இருந்ததால் - ஆஸ்லோவில் குப்பை சேகரிப்பு சேவையை தனியார்மயமாக்குவதற்கு முன்னர் சேவை வழங்கிய முன்னாள் கழிவுத் தொழிலாளர்களை அணுகி, தொழிற்சங்கம் நகராட்சியை ஆதரித்தது. மேலும் நகராட்சி கழிவு சேவைகளை உள்வழங்கல் செய்வதில் அவை எவ்வாறு இயங்குவது என்பது குறித்த முக்கியமான செய லறிவைக் கொண்டிருந்தன. (காண்க மெய்நிகழ்வு 29, கழிவு, நார்வே, ஆஸ்லோ)

## 5.9. மீள்அரசுமயமாக்கலை உறுதி செய்தல்

ஒரு சேவை பொதுத்துறையின் கைகளில் இருக்கும் என்று மீள்அரசுமயமாக்கல் செய்வது மட்டும் ஒரு உத்தரவாதத்தை அளிக்காது. **கொலம்பியாவின் பகோட்டா** நகரில், கழிவு சேவைகளை மீண்டும் அரசுமயமாக்கியது ஆறு ஆண்டுகள் மட்டுமே நீடித்தது. மீண்டும் மேற்கொள்ளப்பட்ட தனியார்மயமாக்க லால் பாதிக்கப்பட்ட 3200 நகராட்சி குப்பை சேகரிப்பாளர்களின் வேலைநிறுத்தம் இருந்தபோதிலும், பிப்ரவரி 2018-ல் ஒரு புதிய மேயரால் இந்த சேவை மீண்டும் தனியார்மயமாக்கப்பட்டது. குப்பைகள் தெருக்களில் குவிந்தன, இறுதியில் ஒரு சுகாதார மற்றும் சுற்றுச்சூழல் அவசரகால நிலை அறிவிக்கப்பட்டது. [41] புதிய மேயர் க லவரத்தடுப்பு பிரிவு காவ லர்களை அனுப்பி வேலைநிறுத்தத்தை முறியடிக்க முயன்றார். மேலும், காவ லர்களுடன் மோதில் ஈடுபட்ட பல தொழிலாளர்கள் காயமடைந்தனர். [42] தொழிற்சங்கங்கள் எதிர்கால தனியார்மயமாக்கல் முயற்சிகளுக்கு தயாராக இருக்க வேண்டுமென்றும், குறிப்பாக ஆட்சி மாற்றங்கள் நிகழும்போது கவனம் தேவை என்றும் இது உணர்த்துகிறது. (காண்க மெய்நிகழ்வு 26, கழிவு, கொலம்பியா, பகோட்டா).

எதிர்கால தனியார்மயமாக்கல்களுக்கு எதிராக தங்களைக் காப்பாற்றிக் கொள்ள சில நாடுகளும், நகரங்களும் அவற்றின் தேசிய அல்லது உள்ளூர் அரசிய லமைப்புகளில் அத்தியாவசிய பொதுச் சேவைகளை தனியார்மயமாக்குவதைத் தடைசெய்து ள்ளன. எடுத்துக்காட்டாக, **உருகுவே** மற்றும் **நெதர்லாந்தில்** தேசிய சட்டம் தண்ணீர் சேவை அமைப்புகளை விற்பனை செய்வதை மட்டுமல்லாமல், தனியார் நிறுவனங்களுக்கு நீர் சேவைகளை வழங்குவதையும் தடை செய்துள்ளது.[43] நகர மட்டத்தில், **மெக்ஸிகோ** நகரத்தின் அரசிய லமைப்பு, நீர் மற்றும் கழிவு போன்ற அத்தியாவசிய சேவைகளை ஒரு மனித உரிமையாக அங்கீகரிக்கிறது, மேலும், அவற்றின் தனியார்மயமாக்கலை சட்டவிரோதமாக்குகிறது. [44] மேலும், உ லகெங்கிலும் சுமார் 40 நகரங்கள் 'நீ ல சமூகங்கள்" ஆகிவிட்டன, அதாவது அவை பின்வரும் மூன்று கொள்கை களை கொண்டுள்ளன: தண்ணீரை மனித உரிமையாக அங்கீகரித்தல்; பொது நிதியை பெறும், பொதுத்துறைக்கு சொந்தமான மற்றும் பொதுத்துறையால் இயக்கப்படும் நீர் மற்றும் கழிவு நீர் சேவைகளை ஊக்குவித்தல்;

மற்றும் பொதுவிடங்கள் மற்றும் அரசு நிகழ்வுகளில் பாட்டில் தண்ணீரை விற்பனை செய்வதை தடைசெய்தது. [45]
இதனால் நீ ல சமூகங்கள் நீர் மற்றும் கழிவுநீர் சேவைகளை பொதுத்துறையின் கட்டுப்பாட்டில் வைத்திருக்கவும்; மற்ற நகரங்களை இதேபோல் செய்யவும் உதவுகின்றன;[46]

வலுவான கூட்டு பேரம் பேசும் ஒப்பந்தங்கள் மற்றும் பொது நிறுவனங்கள் எதிர்காலத்தில் மீண்டும் தனியார்மயமாக்கல் செய்யும் அபாயத்தையும் இதன் மூலம் குறைக்க லாம். **ஜெர்மனியின் ரோஸ்டாக்கில்**, வெர்.டி தொழிற்சங்கம், நகரமயமாக்கப்பட்ட நீர் சேவையுடனான கூட்டு ஒப்பந்தத்தில், தொழிற்சங்கத்தின் முன் ஆலோசனையின்றி எதிர்கால தனியார்மயமாக்கல் அல்லது சேவையை மூன்றாம் தரப்பினருக்கு வெளிவழங்கல் செய்வதற்கு எதிராக ஆறு ஆண்டு பாதுகாப்பு பிரிவை உள்ளடக்கியது (காண்க மெய்நிகழ்வு 38, நீர், ஜெர்மனி, ரோஸ்டாக்).

பொது கொள்முதல் ஒழுங்குமுறை எதிர்கால தனியார்மயமாக்கலின் ஆபத்தினை குறைக்க உதவுகிறது. **கனடாவின் வின்னிபெக்கில்**, நகரத்தின் பொது கொள்முதல் ஒழுங்குமுறையில் மாற்றத்தினைக் கோரி இக்கஉ தொழிற்சங்கம் வற்புறுத்தியது; அதனால் ஒப்பந்தங்கள் இனி மிகக் குறைந்த விலையின் அடிப்படையில் வழங்கப்படாது. செலவின் அடிப்படையில் மட்டுமே ஏ லம் வழங்கப்படுவதால் - தொழிலாளர்கள், சேவை பயனாளிகள் மற்றும் சுற்றுச்சூழலுக்கு ஆபத்து ஏற்படுத்தும் நம்பத்தகாத சலுகைகளை வழங்க தனியார் சேவைவழங்குனர்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள்; லாபத்தை பிரதான நோக்கமாக கொண்ட தொழிலாளர்களாக அவர்கள் மாறும்போது, நுகர்வோர் மற்றும் / அல்லது சுற்றுச்சூழல் பாதிக்கப்படும் வாய்ப்புள்ளது. ஒரு சேவையை தனியார்மயமாக்குவதா இல்லையா என்பது குறித்த முடிவுகளை - சமூக மற்றும் சுற்றுச்சூழல் அளவுகோல்களை அடிப்படையாகக் கொண்டு எடுத்தால், சேவையை உள்-வழங்குவதில் தனியார் ஏ லங்களை விட அதிக விருப்பம் இருக்கும். பொது கொள்முதல் கட்டமைப்புகள் மற்றும் செயல்முறைகளில் சமூக அளவுகோல்களை உள்ளடக்குவது எதிர்கால தனியார்மயமாக்கலைத் தடுப்பதற்கும், உள்வழங்கலை ஊக்குவிப்பதற்கும் ஒரு வெற்றிகரமான உத்தி ஆகும் (காண்க மெய்நிகழ்வு 25, வின்னிபெக், கனடா).

1. ஜாகோப், சி மற்றும் சான்செஸ், பி. (2015). மீள்ஆரசுமயமாக்கல் மற்றும் தொழிலாளர்கள்: புதிய கூட்டணிகளை உருவாக்குதல். ஆதாரம்: கிஷோமோட்டோ, எஸ். (ஞுஜீண்) அவர் பப்ளிக் வாட்டர் ஃப்யூச்சர். டிரான்ஸ்நேஷனல் இன்ஸ்டிடியூட் (கூமீஐ) மேலும் விவரங்களுக்கு: https://www.tni.org/-files/download/ourpublicwaterfuture-1.pdf

2. ஆலிவர், பி. (2014) தொழிற்சங்க உறுப்பினர் மற்றும் எண்ணிக்கையில் தனியார்மயமாக்கலின் தாக்கம்: ஒரு மேற்கு ஆஸ்திரேலிய வழக்காய்வு. பொருளாதார மற்றும் தொழிலாளர் உறவுகள் ஆய்வு. திணிடு. 25. எண் 1, பக். 28-46.

3. ஸ்மித் இன்ஸ்டிடியூட் (2014) குறிப்புகளை அவுட்சோர்சிங் செய்தல்: ஒப்பந்தத்தினை வெளிவழங்கல் செய்வதினால் ஏற்படும் ஊதியம் மற்றும் வேலைவாய்ப்பு பாதிப்புகள். மேலும் விவரங்களுக்கு: http://www.smith-institute.org.uk/wp-content/up-loads/2015/09/Outsourcing-thecuts.pdf

4. சிப்ராரியோ, டி. (2019) மீள்அரசுமயமாக்கலின் தொழிலாளர் பரிமாணம்: பொதுச் சேவை ஊழியர்கள் மற்றும் மாற்றத்தில் தொழிற்சங்கங்கள். டிரான்ஸ்நேஷனல் இன்ஸ்டிட்யூட் (டி.என்.ஐ). மேலும் விவரங்களுக்கு: https://futureispublic.org/wp-con-tent/uploads/2019/12/•TNI_working-paper_10_online.pdf

5. ஜான்ஸ்டன், டி., சாட்-ஃபில்ஹோ, ஏ. (2005) அறிமுகம்.: ஜான்ஸ்டன், டி., சாட்-ஃபில்ஹோ, ஏ. (**eds**). புதிய தாராளமயம். ஒரு விமர்சன வாசகர். லண்டன். புளூட்டோ பிரஸ்.

6. வான் நீகெர்க், எஸ். மற்றும் வீஹ்மான், வி. (2019) ஆப்பிரிக்கா மற்றும் அரபு நாடுகளில் நகராட்சி திடக்கழிவு மேலாண்மை சேவைகள். பப்ளிக் சர்வீஸஸ் இண்டர்நேஷனல். மேலும் விவரங்களுக்கு: http://ww-w.world-psi.org/en/municipal-solid-waste-manage-ment-services-africa-and-arab-countries

7. க்மீஉக (2018) ஆப்பிரிக்கா கழிவு மேலாண்மை அவுட்லுக். நைரோபி, கென்யா: ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்டம். மேலும் விவரங்களுக்கு: https://we-docs.unep.org/bitstream/handle/20.500.11822/25514/A-frica_WMO.pdf?sequence=1&isAllowed=y

8. அச்சன்கெங், ஈ. (2003) வீகோ, ஆப்பிரிக்காவில் உலகமயமாக்கல், நகரமயமாக்கல் மற்றும் அரசு திடக்கழிவு மேலாண்மை. மேலும் விவரங்களுக்கு: http://www.wiego.org/sites/default/files/publications/-files/Achankeng_Globalization_Urbanization_MSWMgmt_Africa.pdf

9. அச்சன்கெங், ஈ. (2003) வீகோ, ஆப்பிரிக்காவில் உலகமயமாக்கல், நகரமயமாக்கல் மற்றும் அரசு திடக்கழிவு மேலாண்மை. மேலும் விவரங்களுக்கு: http://www.wiego.org/sites/default/files/publications/-files/Achankeng_Globalization_Urbanization_MSWMgmt_Africa.pdf

10. பிசினஸ் இன் கேமரூன் (2018) கழிவுகளை அகற்றும் புதிய நிறுவனங்களில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான அரசாங்கத்தின் பரிந்துரை குறித்து ஏயுகுஅஇஅஓ கருத்து தெரிவிக்கிறது. காண்க: https://www.businessin-cameroon.com/environment/0805-8015-hysa-cam-comments-on-government-s-prescription-to-recruit-new-waste-removal-companies

11. ஹெர்மன், சி. மற்றும் ஃப்ளெக்ஜர், ஜே. (2012) பொதுச் சேவைகளை தனியார்மயமாக்கல். ஐரோப்பாவில் வேலைவாய்ப்பு, பணிச்சூழல் மற்றும் சேவை தரத்தின் மீதான தாக்கம். ரூட்லெட்ஜ்: நியூயார்க்.

12. https://contrattoacqua.it/chi-siamo/il-comitato-italiano/

13. பீ லர், ஏ. (2015) சிக் வோஸ் நான் வோபிஸ் (உங்களுக்கானது, ஆனால் உங்களுடையது அல்ல): இத்தாலியில் பொது நீருக்கான போராட்டம். மன்த்லி ரிவ்யூ திணிடு. 67, எண். 5, பக். 35-50.

14. கரோஸ்ஸா, சி. மற்றும் ஃபாண்டினி, ஈ. 2016. இத்தாலிய நீர் இயக்கம் மற்றும் பொதுமக்களின் அரசியல். வாட்டர் ஆல்டர்நேடிவ்ஸ். திணிடு. 9, இல்லை. 1, பக். 99-119.

15. பீ லர், ஏ. (13 நவம்பர் 2014) இத்தாலியில் பொது நீருக்கான போராட்டம். தொழிற்சங்கங்கள் மற்றும் உலகளாவிய மறுசீரமைப்பு. மேலும் விவரங்களுக்கு: http://andreasbieler.blogspot.com/2014/11/the-strug-gle-for-public-water-in-italy.html

16. லோபினா, இ. (2018) ஐரோப்பிய ஆணையத்தின் 'தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பு நாடுகளில் நீர் சேவைகள் குறித்த ஆய்வு. பிப்ரவரி 2018, ஐரோப்பிய பொதுச் சேவை சங்கங்களின் கூட்டமைப்பால் நியமிக்கப்பட்ட ஒரு ககுஜகீக் அறிக்கை (http://ga-la.gre.ac.uk/19211/7/19211%20LOBINA%20European_-Commission%E2%80%99s_Study_on_Water_Services_2018.pdf).

17. லோபினா, இ. (2018) ஐரோப்பா பற்றிய வர்ணனை கமிஷனின் ' தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பு நாடுகளில் நீர் சேவைகள் பற்றிய ஆய்வு" ஐரோப்பிய பொதுச் சேவை சங்கங்களின் கூட்டமைப்பால் நியமிக்கப்பட்ட ஒரு ககுஜகீக் அறிக்கை, பிப்ரவரி 2018 (http://ga-la.gre.ac.uk/19211/7/19211%20LOBINA%20Europe-an_Comission%E2%80%99s_Study_on_Water_Services_2018.pdf).

18. ஹாஃப் லர், எஃப். மற்றும் பலர். (2013) கீனுடுணிmmunal-isierung: Renaissance öffentlicher Unternehmen?.Wirtschafts-dienst.. vol 93, பக். 71-86 காண்க: https://link.spring-er.com/article/10.1007/s10273-013-1489-1

19. Fagforbundet உடன் மின்னஞ்சல் பரிமாற்றம்.

20. கியர்ட், கே. (22 செப்டம்பர் 2016) Trives som kommunean-satt. Fagbladet. மேலும் விவரங்களுக்கு:

21. EPSU மற்றும் PSI க்கான Fagforbundet-லிருந்து ரெனோநார்டன் திவால் பற்றிய சுருக்கமான அறிக்கை. https://fagbladet.no/nyheter/trives-som-kommune-an-satt-6.91.409748.9e3d1babb3

22. CUPE (2016) பேக் இன் ஹவுஸ்: உள்ளூர் அரசாங்கங்கள் ஏன் சேவைகளை அரசுமயமாக்குகின்றன. CUPE. மேலும் விவரங்களுக்கு: https://716.cupe.ca/-files/2016/07/Back-In-House.pdf

23. கல்லினி, எஸ். (2016) பகோட்டாவில் ஜீரோ குப்பை விவகாரம். பக்கம். 72-ல்: 'கழிவு இல்லாத ஒரு எதிர்காலம்? கோட்பாடு மற்றும் நடைமுறையில் கழிவு இல்லாமை," மவுச். சி (ஞுஜீண்). ஆர்.சி.சி பார்வைகள்: சுற்றுச்சூழல் மற்றும் சமூகத்தில் மாற்றங்கள். எண் 3, பக். 69- 77.

24. லோபினா,இ. (2012) லத்தீன் அமெரிக்காவில் நீர் தனியார்மயமாக்கலுக்கு குடிமை சமூக பிரச்சாரங்கள் மற்றும் சமூக எதிர்ப்பு: கொள்கை நெட்வொர்க்குகள் பற்றிய ஆய்வு. ஜேக்கபியில், பி. மற்றும் பலர். (ஞுஜீண்.) லத்தீன் அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவில் நீர் ஆளுமை: சமூக அமைப்புகள், மோதல்கள் மற்றும் பிராந்தியத்தன்மை. சாவோ பாலோ: அன்னப்ளூம் எடிடோரா, பக். 163-173.

25. சிப்ராரியோ, டி. (2019) மீள்அரசுமயமாக்கலின் தொழிலாளர் பரிமாணம்: பொதுச் சேவை ஊழியர்கள் மற்றும் மாற்றத்தில் தொழிற்சங்கங்கள். டிரான்ஸ்நேஷனல் இன்ஸ்டிடியூட் (கூமீஐ). மேலும் விவரங்களுக்கு: https://futureispublic.org/wp-content/uploads/2019/12/•TNI_working-paper_10_online.pdf

26. CFDT இண்டர்கோ யூனியன் கூட்டமைப்பு, 06.09.2018 உடனான பேட்டி, டாரியா சிப்ராரியோ, PSI

27. APSE (2019) திறனை மீண்டும் உருவாக்குதல். பொது ஒப்பந்தங்களை உள்வழங்கல் செய்வதற்கான வழக்கு. மேலும் விவரங்களுக்கு: https://www.apse.org.uk/apse/assets/File/Insourcing%20(web).pdf

28. நிர்வாக மாற்றம் செய்யப்பட்ட நிறுவனங்கள், வணிகங்கள் அல்லது நிறுவனங்கள் அல்லது பகுதி வணிகங்கள் ஆகியவற்றில் நிர்வாக மாற்றம் ஏற்பட்டால் ஊழியர்களின் உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பான உறுப்பு நாடுகளின் சட்டங்களின் தோராய பதிவு 12 மார்ச் 2001-ன் கவுன்சில் டைரக்டிவ் 2001/23 / உஇ. 3.3

29. ஹால், டி. (2006) தொழிற்சங்கங்கள் மற்றும் பொது பயன்பாடுகளின் சீர்திருத்தம்: சர்வதேச பார்வை. பொதுச் சேவைகள் சர்வதேச ஆராய்ச்சி பிரிவு (PSIRU). மேலும் விவரங்களுக்கு: https://gala.gre.ac.uk/id/eprint/3579/1/PSIRU_3579_-_2006-11-Russia-Intoverview-DH.pdf

30. உள்ளூர் அரசு வழக்கறிஞர் (2 பிப்ரவரி 2017) உள்வழங்கல்: நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன? உள்ளூர் அரசு வழக்கறிஞர். மேலும் விவரங்களுக்கு: https://www.localgovernmentlawyer.co.uk/employment/312-employment-features/33281-insourcing-what-do-youneed-to-know

31. குரியா (13 ஜூன் 2019) ஒரு முதல்கட்ட தீர்ப்பிற்கான குறிப்பு - உத்தரவு 2001/23 / EC - நிறுவனங்களின் உரிமை மாற்றங்கள் - ஊழியர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல் - தொழிலாளி என்ற கருத்து - பணியாளரின் தீங்குக்கு காரணமாக அமையும் பணிச்சூழல் மாற்றம். மேலும் விவரங்களுக்கு: http://curia.europa.eu/juris/document/document.jsf;jsessio id=C8DDEFB6E76C7BE9FDD434CEC90EB505?text=&docid=214945&pageIndex=0&doclang=EN&mode=lst&dir=&occ=first&part=1&cid=380435

32. இத்தாலிய குடியரசின் அரசிய லமைப்பு, கட்டுரை. 97, https://www.senato.it/documenti/repository/istituzione/costituzione_inglese.pdf

33. பி. ஃபசோ லா, CFDT இண்டர்கோ கூட்டமைப்பு பி.எஸ்.ஐ உடன் நேர்காணல்,

34. சிப்ராரியோ, டி. (2019) மீள்அரசுமயமாக்கலின் தொழிலாளர் பரிமாணம்: பொதுச் சேவை ஊழியர்கள் மற்றும் மாற்றத்தில் தொழிற்சங்கங்கள். டிரான்ஸ்நேஷனல் இன்ஸ்டிடியூட் (TNI). மேலும் விவரங்களுக்கு: https://futureispublic.org/wp-content/uploads/2019/12/•TNI_working-paper_10_online.pdf

35. பெட்டர்சன், பி மற்றும் மான்சன், என். (2017) சமூக சேவைகளை மீண்டும் மக்கள் கைகளில் கொண்டுவரும் நார்வே நகராட்சிகள். காண்க: பொதுச் சேவைகளை மீட்டெடுப்பது. காண்க: கிஷிமோட்டோ, எஸ். மற்றும் பெட்டிட்ஜீன், ஓ. (eds) பொதுச் சேவைகளை மீட்டெடுப்பது. டிரான்ஸ்நேஷனல் இன்ஸ்டிடியூட் (TNI). மேலும் விவரங்களுக்கு: https://www.tni.org/files/publication-downloads/reclaiming_public_services.pdf

36. கிராமர், ஜி. மற்றும் வீங்கார்டன், ஜே. மற்றும் பலர். (2017) பிராஞ்சன் பகுப்பாய்வு அஞூஞூச்டூடு தீடிணூணுணண்ஞிடச்ஞூணு. ஹான்ஸ் பொக் லர்ஸ்டிஃப்டுங். எண் 354. பக். 165-72. மேலும் விவரங்களுக்கு: https://www.boeckler.de/pdf/p_-study_hbs_354.pdf

37. கிராமர், ஜி. மற்றும் வீங்கார்டன், ஜே. மற்றும் பலர். (2017) பிராஞ்சன் பகுப்பாய்வு அஞூஞூச்டூடு தீடிணூணுணண்ஞிடச்ஞூணு. ஹான்ஸ் போக் லர் ஸ்டிஃப்டுங். எண் 354. பக். 165-72. மேலும் விவரங்களுக்கு: https://www.boeckler.de/pdf/p_-study_hbs_354.pdf

38. சாம்சன், எம். மற்றும் பர்ரா, எஃப். (10 மார்ச் 2014) பகோட்டாவின் மேயர், கழிவு சேவைகளை மீண்டும் அரசுமயமாக்குவதை கைவிட்டார். மேலும் விவரங்களுக்கு: http://municipalservicesproject.org/blog/bogotas-mayor-trashed-remunicipalizing-waste

39. சாம்சன், எம். (2016) பழைய குப்பை, புதிய யோசனைகள்: பொது கழிவு மேலாண்மை மற்றும் முறைசாரா குப்பை மீட்புத் தொழிலாளர்கள். காண்க: மெக்டொனால்ட், டி. (எட்.) ஒரு தனியார்மயமாக்கப்பட்ட உ லகில் ஒரு பொது வுடைமையை உருவாக்குதல். அத்தியாவசிய சேவைகளுக்கான போராட்டம்.

40. சிப்ராரியோ, டி. (2019) மீள்அரசுமயமாக்கலின் தொழிலாளர் பரிமாணம்: பொதுச் சேவை ஊழியர்கள் மற்றும் மாற்றத்தில் வர்த்தகர்கள். டிரான்ஸ்நேஷனல் இன்ஸ்டிடியூட் (TNI). மேலும் விவரங்களுக்கு: https://futureispublic.org/wp-content/uploads/2019/12/•TNI_working-paper_10_online.pdf

41. நோட்டிகியாஸ் ஃபைனான்சியராஸ் ஆங்கி லம் (3 பிப்ரவரி 2018) பகோட்டாவில் குப்பை சேகரிப்பு.

42. கில், எஸ். (7 பிப்ரவரி 2018) பொதுத்துறை சேவையின் சரிவு : பகோட்டாவில் 3,000 மெட்ரிக் டன் குப்பைகளின் பரிதாப நிலை. கொலம்பியா அறிக்கைகள். மேலும் விவரங்களுக்கு: https://colombiareports.com/public-service-meltdown-bogota-despair-3000-metric-tons-garbage/

43. ஹால், டி. மற்றும் லோபினா, இ. (2004) நீரை தனியார்மயமாக்குவது சட்டவிரோதமானது: நெதர்லாந்து மற்றும் உருகுவேயில் புதிய சட்டங்கள். பொதுச் சேவைகள் சர்வதேச ஆராய்ச்சி பிரிவு (PSIRU) மேலும் விவரங்களுக்கு: https://gala.gre.ac.uk/id/eprint/3769/1/PSIRU_9343_-_2004-11-W-crim.pdf

44. சியுடாட் டி மெக்ஸிகோ (2017) கான்சிட்யூஷன் பொலிடிகா டி லா சியுடாட் டி மெக்சிகோ. மேலும் விவரங்களுக்கு: http://www.infodf.org.mx/documentospdf/constitucion_cdmx/Constitucion_%20Politica_CDMX.pdf

45. ப்ளூ பிளானட் திட்டம் (தேதி இல்லை) ப்ளூ கம்யூனிட்டி திட்டம். மேலும் விவரங்களுக்கு: http://www.blueplanetproject.net/index.php/home/water-movements/the-blue-communities-project/

46. அட்டாக் பெர்லின் (தேதி இல்லை) ப்ளூ கம்யூனிட்டி வார்டன். மேலும் விவரங்களுக்கு: https://attacberlin.de/ags/argumente-globalisierungskritiker/blue-community-werden

# 6.

# தனியார் நிறுவனத்தின் எதிர்ப்பை எதிர்கொள்தல்

## 6.1. தனியார் நிறுவன யுக்திகள்

தனியார் நிறுவனங்களைப் பொறுத்தவரை, பொது அரசமைப்பு மற்றும் அரசாங்கங்களுடனான ஒப்பந்தங்கள் என்றாலே பல ஆண்டுகளுக்கு கணிசமான லாபத்தை பெறுவதாகும். அதனால் அவற்றை அவை எளிதில் கைவிடமாட்டார்கள். அவர்கள் மீள்அரசுமயமாக்கலை கடுமையாக எதிர்க்க வாய்ப்புள்ளது, மேலும் சிலர் ஊழல் மற்றும் 'ஞ்சத்தைப் பயன்படுத்துவது வரை செல்ல லாம் **(காண்க மெய்நிகழ்வு 39. நீர், இந்தோனீசியா, ஜகார்த்தா)** அல்லது உள்ளூர் அரசியல்வாதிகளை கொடுமைப்படுத்தி ஆட்டுவிக்க லாம் (**காண்க மெய்நிகழ்வு 26. கழிவு, கொலம்பியா, பகோட்டா**). அவர்களின் பிற பொதுவான உத்திகள் பின்வருமாறு:

- ⌘ பெரும்பாலும் சர்வதேச முதலீட்டாளர்கள் இழப்பீடு கோரி அச்சுறுத்துதல் -நாட்டு தகராறு பைசல் செய்தல் (ISDS) வழிமுறைகளால் செயல்படுத்தப்படுகிறது
- ⌘ தேசிய மற்றும் உள்ளூர் சட்ட சவால்கள்
- ⌘ ஊடகங்கள் மற்றும் பொது அறிக்கையை தங்களுக்கு ஏற்ப பயன்படுத்துதல்
- ⌘ தொழிலாளர்கள் மற்றும் தொழிற்சங்கங்கள் மீது பெருநிறுவனங்களின் செல்வாக்கு

அடுத்த பிரிவுகள் இந்த உத்திகளை விரிவாகக் கூறும்.

## 6.2. நஷ்டஈடு அச்சுறுத்தல்கள்

தனியார் ஒப்பந்தங்கள் திருப்தியற்றவை என நிரூபிக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் கூட, பலதரப்பு மற்றும் இருதரப்பு வர்த்தகம் மற்றும் முதலீட்டு ஒப்பந்தங்களில் உள்ள முதலீட்டாளர் பாதுகாப்பு உட்பிரிவுகள் மீள்அரசுமயமாக்கலுக்கு கடுமையான தடைகளை கொண்டிருக்கின்றன. முதலீட்டாளர்-நாடுகளுக்கு இடையிலான தகராறு தீர்வு (ISDS) வழிமுறைகளான முதலீட்டு தகராறுகளை தீர்ப்பதற்கான சர்வதேச மையம் (ICSID) போன்றவை; பன்னாட்டு நிறுவனங்களை ஒரு சர்வதேச நடுவர் தீர்ப்பாயத்தின் முன் நாட்டு அரசுகளுக்கு எதிராக வழக்குத் தொடர முடியும். மேலும், அந்நிறுவனங்களின் லாபங்களை எதிர்மறையாக பாதிக்கும் அரசாங்க முடிவுகளை எதிர்த்து இழப்பீட்டுத் தொகையை பெறவும் அவ்வமைப்புகள் அனுமதிக்கின்றன.[1] முதலீட்டாளர்கள் மட்டுமே நாட்டு அரசுகளுக்கு எதிரான வழக்குகளை முன்வைக்க முடியுமே தவிர, அரசுகள் முறையீடு செய்ய இயலாது. அதாவது, ஒரு நாட்டின் சட்டத்துக்கு இணையான சட்ட அமைப்பு உருவாக்கப்பட்டு, அதன் மூலம் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் - உள்நாட்டு நீதிமன்றங்கள் மற்றும் நிர்வாக நடைமுறைகளிலிருந்து தப்பி - தனியார், சர்வதேச நடுவர் தீர்ப்பாயங்களில் முதலீடு செய்த நாட்டின் அரசாங்கங்களுக்கு எதிராக வழக்குத் தொடர முடியும்.[2]

கடந்த இருபது ஆண்டுகளாக ISDS வழக்குகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. 1950 களின் பிற்பகுதியிலிருந்து, இந்த அமைப்பு முதன்முதலில் நிறுவப்பட்டபோது, 2000-மாவது ஆண்டு வரை, 50 வழக்குகள் மட்டுமே தாக்கல் செய்யப்பட்டன, ஆனால் 2000 மற்றும் 2014-க்கு இடையில்[3]



'தான்சானியாவில் பெண்கள் தண்ணீர் எடுக்கின்றனர்” ©CC வாட்டர் ஃபார் பீப்புள் / கேட் ஹராவா

500 வழக்குகள் பதிவு செய்யப்பட்ட நிலையில், இந்த எண்ணிக்கை வியத்தகு அளவில் அதிகரித்துள்ளது. ஜூலை 2019 நி'வரப்படி, பொதுவில் அறியப்பட்ட ஐகுஈகு உரிமைகோரல்களின் மொத்த எண்ணிக்கை 983-ஐ எட்டியுள்ளது[4]. ஐகுஈகு நீதிமன்றங்களின் பயன்பாடு என்பது ஒரு பொதுத்துறை சேவையை உள்வழங்கலை தடுக்கும் முயற்சியில் தனியார் நிறுவனங்கள் பயன்படுத்தும் பொதுவான கருவியாகும். (**காண்க மெய்நிகழ்வு 5. ஆற்றல், லிதுவேனியா, வில்னியஸ்; மெய்நிகழ்வு 7. ஆற்றல், தான்சானியா, டார் எஸ் ச லாம்; மெய்நிகழ்வு 33. நீர், பொலிவியா, கோச்சாபம்பா; மெய்நிகழ்வு 42. நீர், தான்சானியா, டார் எஸ் ச லாம்; மெய்நிகழ்வு 43. நீர், துருக்கி, அன்டல்யா**) ஐகுஈகு வழிமுறைகளை உள்ளடக்கிய இருதரப்பு முதலீட்டு ஒப்பந்தங்கள் முதன்முதலில் நிறுவப்பட்டதற்கான காரணம், முதலீட்டாளர்களை கையகப்படுத்துவதற்கு எதிராக பாதுகாப்பதாகும்.[5]

ISDS வழக்குகள் பெரும்பாலும் குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் ஈட்டும் நாடுகளில் மேற்கத்திய நிறுவனங்களால் கொண்டு வரப்படுகின்றன. ISDS ஒரு புதிய காலனித்துவ வழிமுறையை உருவாக்கியது என்று பல அறிஞர்களை வாதிட்டனர், இது அதிகாரத்தின் சமச்சீரற்ற உறவுகளை உலகளவில் நிலைநிறுத்தியது.[6] இருப்பினும், சி” உயர் வருமான நாடுகளுக்கும், மேற்கு ஐரோப்பாவில் உள்ள உள்ளூர் அரசாங்கங்களுக்கும் எதிராக அவை முதலீட்டாளர்கள் மற்றும் பன்னாட்டு நிறுவனங்களால் அதிகமாக பயன்படுத்தப்படுகின்றன.[7]

ISDS வழக்குகள் பெரும்பாலும் குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் ஈட்டும் நாடுகளில் மேற்கத்திய நிறுவனங்களால் கொண்டு வரப்படுகின்றன. ISDS ஒரு புதிய காலனித்துவ வழிமுறையை உருவாக்கியது என்று பல அறிஞர்களை வாதிட்டனர், இது அதிகாரத்தின் சமச்சீரற்ற உறவுகளை உலகளவில் நிலைநிறுத்தியது.[6] இருப்பினும், சி” உயர் வருமான நாடுகளுக்கும், மேற்கு ஐரோப்பாவில் உள்ள உள்ளூர் அரசாங்கங்களுக்கும் எதிராக அவை முதலீட்டாளர்கள் மற்றும் கொள்கைகளைத் தடுப்பது. (**காண்க மெய்நிகழ்வு 31, கழிவு, இங்கிலாந்து, ஷிஃீல்டு**). எந்தவொரு மீள்அரசுமயமாக்கல் பிரச்சாரத்தின் ஒரு முக்கிய பகுதி என்னவென்றால், அதன் விதிமுறைகளில் ISDS-ன் உட்பிரிவுகளோ அல்லது அதற்கு இணையான வசதிகளை உடைய சர்வதேச அல்லது உள்ளூர் சட்டங்கள் உள்ளனவா - எந்த அளவிற்கு அவை செயல்பாட்டளவில் உள் விவகாரங்களில் முடிவெடுக்கும் செயல்முறையை பாதிக்கக்கூடும் என்பதை மதிப்பீடு செய்வது அவசியமாகிறது.

இருப்பினும், தனியார் நிறுவனங்கள் பெரும்பாலும் தேசிய மற்றும் உள்ளூர் அரசாங்கங்களை மீள்அரசுமயமாக்கல் சேவைகளிலிருந்து தடுப்பதற்காக இழப்பீட்டு அபாயத்தை உயர்த்துகின்றன. பொதுப் பணி சேவைகள் தேசியமயமாக்கப்படும்போது, இழக்கப்படும் லாபங்களுக்கு இழப்பீடு கோருவதற்கு ISDS வழிமுறைகள் உண்மையில் ஒரு சக்திவாய்ந்த கருவியாக உள்ளது; அதே வேளையில், நடைமுறையில் இழப்பீட்டின் நோக்கம், மற்றும் இழப்பீடு தேவைப்பட்டாலும் கூட, இறுதியில் பேச்சுவார்த்தைக்கு கீழே இறங்கி, தனி நாடுகள் மற்றும் / அல்லது பிராந்தியங்களின் அதிகாரத்தில் கைவைக்கிறது. அத்தகைய பேச்சுவார்த்தைகள் நேர்மையாக நடப்பதில்லை, ஆனால் உலகமயமாக்கலின் கீழ் உள்ள இறையாண்மையை 'றிய காலனித்துவத்திற்கு பிந்தைய முரண்பாடுகளால் பாதிக்கப்படுகின்றன; மேலும் பொதுமக்களின் எழுச்சி, பங்களிப்பினை 'றிய தொடர் அரசியல் போட்டிகளால் பாதிக்கப்படுகின்றன. அதுபோல, அனைத்து ISDS வழக்குகளும் வெற்றிகரமாக இருப்பதில்லை, அவற்றை வெற்றிகரமாக தடுக்கவும் செய்யலாம். உதாரணமாக, **தான்சானியாவின் டர் எஸ் ச லாமில்** நீர் சேவை மீண்டும் அரசுமயமாக்கப்பட்டபோது, தனியார் நிறுவனம் தான்சானிய அரசாங்கத்திடமிருந்து $20 மில்லியன் - $25 மில்லியன் இழப்பீடு கோரியது. இருப்பினும், இறுதியில், நிறுவனம் இழப்பீடு செலுத்த வேண்டியிருந்தது. இது திவால் காரணமாக நிகழவில்லை; (காண்க மெய்நிகழ்வு 42, நீர், தான்சானியா, டர் எஸ் ச லாம்)

மேலும், **பொலிவியாவின் கோச்சபம்பா**, அதன் நீர் சேவைகளை 2000-ம் ஆண்டில் மீண்டும் அரசுமயமாக்கியபோது, தனியார் நிறுவனமான பெக்டெல் மற்றும் அதன் ஸ்பானிஷ் இணை முதலீட்டாளரான அபெண்டோவா ஆகியோர் ICSID தீர்ப்பாயத் தின் முன் 50 மில்லியன் டா லர் இழப்பீட்டு கோரிக்கையை தாக்கல் செய்தனர். சட்ட தகராறு நான்கு ஆண்டுகள் நீடித்தது. இந்த கோரிக்கையை கைவிட வேண்டும் என்று கோரி சர்வதேச எதிர்ப்புகளையும், பத்திரிகை பிரச்சாரங்களையும் ஏற்படுத் தியது; ஜனவரி 2006-ல், நிறுவனங்கள் இறங்கி வந்து, 2 பொலிவியானோக்களை முன்பணமாக செலுத்தி வழக்கைத் தீர்த்துக் கொண்டன. ஒரு பெரிய பன்னாட்டு நிறுவனத்தை ICSID முன் ஒரு வழக்கை கைவிட வைக்க உலகளாவிய பொது அழுத்தம் முதல் தடவையாக உதவியாக இருந்ததால், இது ஒரு முன்னுதாரணமாக கூறப்படுகிறது.[8] ஆன்லைன் பிரச்சாரங்கள் மற்றும் மனுக்கள் உட்பட - பரவ லான பொது அழுத்தத்திற்கு உட்பட்டு பன்னாட்டு நிறுவனங்கள் - தங்கள் நற்பெயருக்கு இழப்பு ஏற்படும் என்ற அச்சத்தில் இழப்பீட்டு கோரிக்கைகளை திரும்பப்பெற்றன. (காண்க மெய்நிகழ்வு 33, நீர், பொலிவியா, கோச்சாபம்பா)

## 6.3. சட்ட அச்சுறுத்தல்கள்

மீள்அரசுமயமாக்கல் பிரச்சாரங்களுக்கு எதிரான சட்ட சவால்கள் அதிக செலவீனம் உடையவையாக இருக்க லாம். சேவையை உள்வழங்குவதைத் தடுக்கும் முயற்சியில் உள்ளூர் அரசாங்கங்களை தனியார் நிறுவனங்கள் சர்வதேச அளவில் ஐசுஈகு வழியாக மட்டுமல்லாமல் தேசிய மற்றும் பிராந்திய மட்டத்திலும் நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்ல லாம். (காண்க மெய்நிகழ்வு 38, ஜெர்மனி, ரோஸ்டாக்). இருப்பினும், தனியார்மயமாக்கல் சிக்க லானது மற்றும் விலை உயர்ந்தது என்பதை மறந்துவிடக்கூடாது. தனியார் சேவை வழங்குனர்களுடனான ஒப்பந்தங்கள் பேச்சுவார்த்தை, மறு பேச்சுவார்த்தை மற்றும் தொடர்ச்சியான அடிப்படையில் கண்காணிக்கப்பட வேண்டும். அவை பெரும்பாலும் பொதுத்து றை மற்றும் தனியார் நிறுவனங்களுக்கான சட்ட ஆலோசனை செலவுகள், வழக்கு மற்றும் விசாரணைகள் ஆகியவற்றை உள்ளடக்குகின்றன. **இங்கிலாந்தில்**, 2004 மற்றும் 2006-ம் ஆண்டுக்கு இடையில் கையெழுத்திடப்பட்ட அனைத்து PPP திட்டங்களில் 33 சதவீதம் பேச்சுவார்த்தைகள் நடந்தன.[9] 2011-ம் ஆண்டில் பொதுக் கணக்குக் குழுவின் ஆதாரங்களின்படி, ஆலோசகர்கள் மற்றும் வழக்கறிஞர்கள் இங்கிலாந்துடன் தொடர்புடைய ஒப்பந்தங்கள் அனைத்து பொது நிதி முன்னெடுப்புகளிலும் (PFI)✱ £2.8 முதல் £4 பில்லியன் வரை ஈன்றனர்.[10]

எடுத்துக்காட்டாக, 2007 மற்றும் 2008-ம் ஆண்டுகளில் சில சுரங்கப்பாதை மற்றும் இலகுவான ரயில்வே போக்குவரத்தை அமைப்புகளை **லண்டன் மீண்டும்** அரசுமயமாக்கியது. 2003-ம் ஆண்டில், உள்கட்டமைப்பை நவீனமயமாக்கவும் பராமரிக்கவும் மூன்று பெரிய பிபிபிக்கள் அமைக்கப்பட்டன. மெட்ரோநெட் பி.சி.வி, மெட்ரோநெட் எஸ்.எஸ்.எல் மற்றும் டியூப்லைன்ஸுக்கு டிரான்ஸ்போர்ட் ஃபார் லண்டன் (டி.எஃப்.எல்) ஆகியவற்றுடன் £1.7 பில்லியனுக்கும் அதிக மதிப்புள்ள 30 ஆண்டுகால ஒப்பந்தம் வழங்கப்பட்டது. 2007-ல் மெட்ரோநெட் நிர்வாகத் திற்கு வந்தது; 2010-ல், இரண்டு முக்கிய சுரங்கப்பாதைகளில் பெரிய பழுதுபார்க்கும் பணிகளில் டியூப்லைன்ஸ் £1.35 பில்லியன் நிதி இடைவெளியைக் கோரிய பின்னர் அது நிர்வாகத் திற்கு வந்தது. டி.எஃப்.எல் செலவு மதிப்பீடுகளை சவால் செய்து நடுவர் தீர்ப்பாயத்தில் வழக்கினை வென்றது. இதன் விளைவாக, டியூப்லைன்ஸ் சேவையைத் தொடர முடியவில்லை; டி.எஃப்.எல் அந்நிறுவனத்தை £310 மில்லியனுக்கு விலைக்கு வாங்கியது.[11] அப்போதைய லண்டன் மேயர் போரிஸ் ஜான்சன், ஒப்பந்தத்தின் போது வழக்கறிஞர்களின் கட்டணமாக £400 மில்லியன் வந்ததை வெளிப்படுத்தினார். (**மெய்நிகழ்வு, போக்குவரத்து, இங்கிலாந்து, லண்டன்**).[12]

பெரும்பாலும் லாப உத்தரவாதங்களாக மறைக்கப்பட்ட பிற செலவுகள் தனியார்மயமாக்கல் ஒப்பந்தங்களில் சேர்க்கப்படுகின்றன; இது சேவையை வழக்கத்தை விட மிகவும் விலை உயர்ந்ததாக ஆக்குகிறது. **ஜெர்மனியின் பெர்லினில்**, RWE மற்றும் வியோலியாவுடனான ஒப்பந்தத்தில் நீர் விநியோக ஒப்பந்தத்தில் அத்தகைய லாப உத்தரவாதம் இருந்தது. அந்த ஒப்பந்தம் ரகசியமாக வைக்கப்பட்டிருந்தது மற்றும் பொது வெளியில் வெளிப்படையாக கிடைக்கப்படுவதாக இல்லை. பெர்லின் முன்னறிவித்த அளவுக்கு தண்ணீரை பயன்படுத்தவில்லை என்பது பின்பே தெரியவந்தது. பின்னர், கீஙிஉ மற்றும் வியோலியா பெர்லினிடம் முன்கூட்டியே இழந்த லாபங்களுக்கு இழப்பீடு கோரியது. ஆனால் அதனை ரகசியமாக பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துக்கொண்டன. அதனால் இந்த ஒப்பந்தத்தில் உள்ள ஆபத்துகளிலிருந்து தனியார் நிறுவனங்கள் பாதுகாக்கப்பட்டன. வேறு விதமாக கூறினால், ஒப்பந்தத்தில் இருந்த ஆபத்துக்கள் பொதுமக்களால் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்பட்டது. இது குறித்த தகவல் பொதுவெளியில் கிடைக்காத காரணத்தால், தனியார் நிறுவனங்களுடனான ஒப்பந்தங்களில் வெளிப்படைத்தன்மைக்கு பிரச்சாரம் செய்வது, மீள் அரசுமயமாக்கல் பிரச்சாரத்திற்கான ஒரு படிப்படியான உதவியினை வழங்க முடியும், ஏனெனில் பிரச்சார கூட்டணியான, பெர்லினர் வாஸெர்டிச் பெர்லினில் நடைபெற்றது. (**மெய்நிகழ்வு, நீர், ஜெர்மனி, பெர்லின்**)[13]

## 6.4. தொழிலாளர்கள் மற்றும் தொழிற்சங்கங்களின் மீதான நிறுவனத் தாக்கம்

கார்ப்பரேட் நிறுவனங்களின் ஆதிக்கம் நேரடியாக பல வடிவங்களை எடுக்க லாம். எடுத்துக்காட்டாக, தனியார்மயமாக்க லால் பாதிக்கப்பட்ட சில தொழிலாளர்கள் ஆரம்பகால ஓய்வூதியத் திட்டங்கள் அல்லது பிற தூண்டுதல்கள் மூலம் அவர்கள் 'வாங்கப்பட லாம்" என்ற ஆபத்து உள்ளது.[14]

✱ PFI என்பது இங்கிலாந்தில், தனியார் மூலதனம் மூலம் PPP-க்கு நிதியளிப்பதற்கான ஒரு வழியாகும். 2018 PSIRU அறிக்கையில் ஹெ லன் மெர்சர் மற்றும் டெக்ஸ்டர் விட்ஃபீல்ட் ஆகியோர் PFI முறைகளின் பயன்பாட்டில் குறைபாடுள்ள அனுமானங்களின் அடிப்படையில் அமைந்திருப்பதை நிரூபிக்கின்றன; இது பொது சொத்துக்கள் மற்றும் பொருளாதாரத்தின் 'து பெரிய அளவில் செலவுகளை விதிக்கும்போது - பொது சொத்துக்களில் இருந்து பல வகையில் செல்வத்தை பிரித்தெடுக்க அனுமதிக்கிறது.

2001-ம் ஆண்டு வெளிவந்த ஒரு ஆய்வின்படி [15], **அர்ஜென்டினாவின் ப்யூனோஸ் ஏரிஸில்** 1993-ம் ஆண்டு நீர் தனியார்மயமாக்கலில் அத்தகைய நிகழ்வு நடந்தது. அர்ஜென்டினாவில், தனியார் சலுகை நிறுவனமான அகுவாஸ் - பத்து சதவீத பங்குகளை வழங்கியதால், முக்கிய தொழிற்சங்கங்கள் தங்கள் எதிர்ப்பை நிறுத்திக்கொண்டு தனியார்மயமாக்கலின் ஆதரவாளர்களாக மாறி - அதன் தவிர்க்க முடியாத தன்மையை நம்பியது. இருப்பினும், பல ஆண்டுகளுக்குப் பிறகு, தொழிற்சங்கம் தனியார்மயமாக்கலை எதிர்த்தது; மேலும், அவர்கள் பங்குதாரர்களாக இருந்ததால், பின்னர் தொழிற்சங்கங்கள் 2006-ல் மீள் அரசுமயமாக்கல் பணியில் ஈடுபட அது உதவியது. பின்னர், ஒரு புதிதாக பொறுப்பேற்ற தேசிய அரசு நீர் சேவைகளை மீண்டும் தனியார்மயமாக்க முன்மொழியும்போது, அதே தொழிற்சங்கங்கள் புதிய பொது நிறுவனமான அதுகுஅ-வை தீவிரமாக பாதுகாத்தன (காண்க மெய்நிகழ்வு 32. நீர் அர்ஜென்டினா, ப்யூனோஸ் ஏரிஸ்).[16]

தேசிய தொழிற்சங்கங்கள் மற்றும் கிளை பிரதிநிதிகள் மீள்அரசுமயமாக்கல் செயல்முறை தொடர்பாகவும், கார்ப்பரேட் நிறுவனங்கள் கட்டுப்பாட்டினை எடுத்துக்கொள்ளும் ஆபத்து குறித்தும் தொழிலாளர்களுடன் தெளிவாகவும், தொடர்ந்தும் தொடர்புகொள்வது மிகவும் அவசியமாகிறது. மீள்அரசுமயமாக்கலில் ஒரு ஒருங்கிணைந்த தேசிய தொழிற்சங்க உத்தியினை மேம்படுத்துவதும்; ஒரே தொழிற்சங்கத்தின் வெவ்வேறு பிரிவுகளிடையேயும், வெவ்வேறு போராட்டங்களுக்கிடையில் ஒருமைப்பாடும், நிலைத்தன்மையையும் பேணுவது நன்மை தரும். மேலும், தொழிற்சங்கத் தலைமையிலான கல்வி நிகழ்வுகள் மற்றும் விழிப்புணர்வை அதிகரிக்கும் முயற்சிகள், பொதுச் சேவை ஊழியர்களிடையே உள்வழங்கல் பற்றி பகிர்ந்து கொள்வது - எதிர்கால மோதலைத் தடுக்கவும், மீள்அரசுமயமாக்கல் செய்வது குறித்து தொழிலாளர்கள் மத்தியில் பல்வேறு நலன்களை நிவர்த்தி செய்யவும் உதவும். எடுத்துக்காட்டாக, **நார்வேயில்**, ஃபேக்ஃபார்பன்டெட் தொழிற்சங்கம் அதன் செயற்பாட்டாளர்களுக்கு - ஆஸ்லோ கழிவு சேவையை மீள்அரசுமயமாக்குவதற்கு தயாராக அதற்கான பிரத்தியேக பயிற்சிப்பட்டறைகளில் பயிற்சி அளித்தது (**காண்க மெய்நிகழ்வு 29, கழிவு, நார்வே, ஆஸ்லோ**).

## 6.5. ஊடகங்களின் பங்கு

பத்திரிகைகளும் ஊடகங்களும் மீள்அரசுமயமாக்கல் பற்றி நடுநிலையாக இருப்பது அரிது. பொதுச் சேவைகளின் தனியார்மயமாக்கல் / வணிகமயமாக்கலை ஊக்குவிப்பதில் ஆர்வமுள்ள தனியார் நிறுவனங்கள் அல்லது ஊடக நிறுவனங்களால் தாக்கத்திற்கு உள்ளாக லாம் மற்றும் புதிய சுதந்திர சிந்தனையில் தாக்கத்தினை ஏற்படுத்த லாம். அதேபோல், ஆளும் சார்பு கட்சி அல்லது அரசாங்க சார்பு ஊடகங்கள் மீள்அரசுமயமாக்கல் பற்றிய விவாதத்திலும், அதனுடன் தொடர்புடைய சமூக இயக்கங்கள் குறித்தும் ஒருதலைப்பட்சமான நிலைப்பாட்டை எடுக்க லாம். எனவே, மீள்அரசுமயமாக்கலுக்கு ஆதரவான குழுக்கள்- ஊடகங்களுடன் எவ்வாறு ஈடுபட முடியும் என்பதை அடையாளம் காண்பதும்; அவர்களுக்கென ஒரு சொந்த சுயாதீன தகவ லமைப்பு மற்றும் சமூக ஊடக உத்தியை உருவாக்குவதும் முக்கியமாகிறது. **நார்வேயின் ஆஸ்லோவில்** குப்பை சேகரிப்பு சேவையை மீள்அரசுமயமாக்கல் செய்வதன் மூலம், தொழிற்சங்கத்தின் பத்திரிகையான ஃபாக்ப்ளேடெட் முதன் முதலில் தனியார் நிறுவனமான வீயரெனோவில் நி்விய மோசமான பணிச்சூழலை வெளிப்படுத்தியது. பின்னர் அந்நிறுவனம் திவா லானது - இதன் விளைவாக கழிவு மேலாண்மை சேவை உள்வழங்கல் செய்யப்பட்டது. பத்திரிகையின் அறிக்கை தேசிய ஊடகங்களில் செய்தியாக வெளிவர உதவியது. கழிவு சேவை மீண்டும் அரசுமயமாக்கியதற்கு பொதுமக்கள் மத்தியில் ஆதரவை ஏற்படுத்தியது. (**காண்க மெய்நிகழ்வு 29, கழிவு, நார்வே, ஆஸ்லோ**).

**இத்தாலியில்**, வாக்கெடுப்பு பற்றிய தகவல்கள் தொடர்பாக பிரதான ஊடகங்களின் வெளிப்படையான மௌனத்தை தண்ணீர் மன்றம் எதிர்கொண்டது. இருப்பினும், 27.6 மில்லியன் இத்தாலிய குடிமக்கள் நீர்வழங்கல் நெட்வொர்க்குகளை இயக்கும் தனியார் முதலீட்டாளர்களுக்கு ஏழு சதவீத லாபத்தை உறுதி செய்யும் சட்டத்திற்கு எதிராக வாக்களித்தனர்.[17] அதற்கு ஆதரவாக 95 சதவீத வாக்குகளுடன், 54 சதவீத வாக்குப்பதிவு நடைபெற்றது. அதுவரை 24 முறை முந்தைய வாக்கெடுப்புகள் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக தோல்வியடைந்தது, ஏனெனில் தேவையான 51 சதவீத வாக்குப்பதிவு எட்டப்படவில்லை.[18] ஊடகங்களின் மௌனம் காத்த போதிலும், நேருக்கு நேர் அணிதிரட்டல் மூலம் வாக்கெடுப்பில் அதிக சதவிகித வாக்குப்பதிவு அடையப்பட்டது.[19]

மின்சார உற்பத்தி அமைப்பை மீள்அரசுமயமாக்குவதற்காக **ஹேம்பர்க்கின்** மக்கள் 2013 செப்டம்பரில் வாக்கெடுப்புக்குத் தயாரானபோது, உற்பத்தி அமைப்பின் உரிமையாளரான பன்னாட்டு நிறுவனங்களில் ஒன்றான வாட்டன்ஃபால், மூன்று முக்கிய செய்தித்தாள்களில் விளம்பர பிரச்சாரத்தைத் தொடங்கியது - டை பில்ட், ஹாம்பர்கர் அபெண்ட்ப்ளாட் மற்றும் டை வெல்ட்[20] - மற்றும் உள்ளூர் போக்குவரத்திலும் விளம்பரத்தை மேற்கொண்டது.[21]மீள்அரசுமயமாக்கலுக்கு எதிரான வாதங்களுக்கு விடையளிக்கும் வகையில், குடிமக்களின் கூட்டணி அமைப்பான 'அன்சர் ஹேம்பர்க், அன்சர் நெட்ஸ்" (எங்கள் ஹேம்பர்க், எங்கள் கட்டம்) ஊடகங்களின் பரப்பிய அச்சத்தை - ஆக்கபூர்வமான மற்றும் உண்மை சார்ந்த பிரச்சாரத்தின் மூலம் எதிர்கொண்டது. எடுத்துக்காட்டாக, அனிமேஷன் செய்யப்பட்ட யூடியூப் வீடியோவின் மூலம் மின்சாரம், எரிவாயு மற்றும் நீண்ட தூர ஹீட்டிங் கிரிட் ஆகியவற்றை மீண்டும் அரசுமயமாக்குவது எப்படி புதுப்பிக்கத்தக்க ஆற்றலை நோக்கி மாறுவதற்கு உதவுகிறதென்றும், அடிப்படை சேவைகளுக்கு உத்தரவாதம் அளிக்க உள்ளூர் அரசமைப்பிற்கு எப்படி அதிகாரம் அளிக்கிறதென்றும் விவரித்தது. மின்சாரம் மற்றும் வெப்பமேற்றுவதை ஜனநாயக ரீதியாக கட்டுப்படுத்த வேண்டிய பொதுவான சேவையாக அந்தக் காணொளி முன்மொழிந்தது. நகராட்சி வரவுசெலவுத் திட்டத்தில் €2 பில்லியன் சுமையை கூட்டும் என்று பிரதான செய்தி ஊடகங்களில் அடிக்கடி வாதிடப்பட்டது; அதற்கு பதி லளிக்கும் வித்தத்தில் அந்த காணொளி விரிவான செலவு மற்றும் கிடைக்கும் பலன் குறித்த பகுப்பாய்வையும் ஆதார பூர்வமாக காண்பித்தது. அதனால் மீள்அரசுமயமாக்கல் பட்ஜெட்டில் எந்தவித தாக்கத்தினையும் ஏற்படுத்தாது என்றும்; மின்சார உற்பத்தி அமைப்பினை அரசின் கடன் வழங்கும் அமைப்பான ஏஎங-யிடமிருந்து கடன் மூலம் பெற லாம் என்றும் கூறியது. அக்கடனை குறிப்பிட்ட காலத்தில் மின்சாரக் கட்டணம் மூலம் பெறப்படும் வருவாயின் மூலம் மீண்டும் திரும்ப அடைத்துவிட லாம் என்றும் கூறியது.[22] (**காண்க மெய்நிகழ்வு 2, ஆற்றல், ஜெர்மனி, ஹேம்பர்க்**)

1. கிஷிமோட்டோ, எஸ். மற்றும் பெட்டிட்ஜீன், ஓ. (பதிப்புகள்) (2017) பொதுச் சேவைகளை மீட்டெடுப்பது. டிரான்ஸ்நேஷனல் இன்ஸ்டிடியூட் (டி.என்.ஐ). மேலும் விவரங்களுக்கு: https://www.tni.org/files/publication-downloads/reclaiming_public_services.pdf

2. சியோச்சினி, பி. மற்றும் கவுரி, எஸ். (2018) முதலீட்டாளர் நாட்டு இடையிலான தகராறுக்கான தீர்வு: நிறுவனமயமாக்கல் கார்ப்பரேட் விதிவி லக்கு. ஒனியாட்டி சொஷியோ-லீகல் சீரிஸ். மேலும் விவரங்களுக்கு: https://papers.ssrn.com/sol3/papers.cfm?abstract_id=3194643

3. சியோச்சினி, பி. மற்றும் கவுரி, எஸ். (2018) முதலீட்டாளர் நாட்டு இடையிலான தகராறுக்கான தீர்வு: நிறுவனமயமாக்கல் கார்ப்பரேட் விதிவி லக்கு. மேலும்விவரங்களுக்கு: https://papers.ssrn.com/sol3/papers.cfm?abstract_id=3194643

4. **UNCTAD** (2019) **ISDS** நேவிகேட்டர் அப்டேட்: 31 ஜூலை 2019 க்குள் 980 அறியப்பட்ட முதலீட்டு ஒப்பந்த வழக்குகள். https://investmentpolicy.unctad.org/news/hub/1625/20190930-isds-navigator-update-980-known-investment-treaty-cases-by-31-july&2019 மேலும் விவரங்களுக்கு: ஜூலை -2019

5. கிளெட், ஜே. (2016) தேசிய நலன் எதிரான அந்நிய முதலீடு - **ISDS** மூலம் தரப்பினரைப் பாதுகாத்தல். துலேன் ஜர்னல் ஆஃப் இன்டர்நேஷனல் அன்ட் கம்பேரெட்டிவ் 'ா. **vol**. 25, எண். 1, பக். 213-238.

6. சியோச்சினி, பி. மற்றும் கவுரி, எஸ். (2018) முதலீட்டாளர் நாட்டு இடையிலான தகராறுக்கான தீர்வு: நிறுவனமயமாக்கல் கார்ப்பரேட் விதிவி லக்கு. மேலும்விவரங்களுக்கு: https://papers.ssrn.com/sol3/papers.cfm?abstract_id=3194643

7. எபர்ஹார்ட், பி. (2018) அனைவரையும் ஆளும் ஒரே ஒப்பந்தம். கார்ப்பரேட் யூரோப் அப்சர்வேட்டரி (**CEO**). மேலும் விவரங்களுக்கு: https://www.tni.org/files/publication-downloads/one_treaty_to_ruled_them_all.pdf

8. தி டெமாக்ரடிக் சென்டர். பெக்டெல் ஙண் பொலிவியா: வழக்கு மற்றும் பிரச்சாரத்தின் விவரங்கள். மேலும் விவரங்களுக்கு: https://democracyctr.org/archive/the-water-revolt/bechtel-vs-bolivia-details-of-the-case-and-the-campaign/

9. ஹால், டி (2015) பொதுத்துறை-தனியார்-கூட்டமைப்புகள் ஏன் சரிவர இயங்குவதில்லை? பொதுத்துறையின் மாற்று வழிகளின் பலன்கள். பப்ளிக் சர்வீஸஸ் இண்டர்நேஷனல். மேலும் விவரங்களுக்கு: : http://www.world-psi.org/sites/default/files/rapport_eng_56pages_a4_lr.pdf

10. கில்ஸ், சி. மற்றும் டிம்மின்ஸ், என். (2011) தனியார் நிதியால் ப20 பில்லியன் வரி செலுத்துவோருக்கு செலவாகிறது. மேலும் விவரங்களுக்கு: https://www.ft.com/content/65068d1c-bdd2-11e0-babc-00144feabdc0

11. பிபிசி (27 ஜூன் 2010) டியூப் லைன்ஸ்-ஐ டிரான்ஸ்போர்ட் ஃபார் லண்டன் வாங்கியது. பிபிசி. மேலும் விவரங்களுக்கு: http://www.bbc.co.uk/news/10428409

12. தி 'ாயர் (5 செப்டம்பர் 2010) கூஹுஃ உடன்படிக்கை தோல்வியால் கககக போனான்சா நிறைவடைகிறதா? மேலும் விவரங்களுக்கு: https://www.thelawyer.com/issues/6-september-2010/does-failure-of-tfl-dealsspell-the-end-of-the-line-for-ppp-bonanza/

13. ஆர்டே (12 டிசம்பர் 2017) Bis zum letzten Tropfen.Arte மேலும் விவரங்களுக்கு: https://programm.ard.de/TV/arte/bis-zum-letzten-tropfen/eid_28724387300131

14. ஜாகோப், சி மற்றும் சான்செஸ், பி. (2015). மீள்அரசுமயமாக்கல் மற்றும் தொழிலாளர்கள்: புதிய கூட்டணிகளை உருவாக்குதல். காண்க: கிஷோமோட்டோ, எஸ். (eds) அவர் பப்ளிக் வாட்டர் ஃப்யூச்சர். டிரான்ஸ்நேஷனல் இன்ஸ்டிடியூட் (TNI) மேலும் விவரங்களுக்கு: https://www.tni.org/files/download/ourpublicwaterfuture-1.pdf

15. லோஃப்டஸ், ஏ. (2001) ஆஃப் லிக்விட் டிரீம்ஸ்: ப்யூனேஸ் ஏரிஸ் நீர் தனியார்மயமாக்கலின் அரசியல் சூழலியல். சுற்றுச்சூழல் மற்றும் மீள் அரசுமயமாக்கல். திணிடூ. 13, எண், 2, பக்.179-199. மேலும் விவரங்களுக்கு: http://journals.sagepub.com/doi/pdf/10.1177/095624780101300215

16. லோஃப்டஸ், ஏ. (2001) ஆஃப் லிக்விட் டிரீம்ஸ்: ப்யூனேஸ் ஏரிஸ் நீர் தனியார்மயமாக்கலின் அரசியல் சூழலியல். சுற்றுச்சூழல் மற்றும் மீள் அரசுமயமாக்கல். திணிடூ. 13, எண், 2, பக்.179-199. மேலும் விவரங்களுக்கு: http://journals.sagepub.com/doi/pdf/10.1177/095624780101300215

17. லோபினா, இ. (22 டிசம்பர் 2017) டுரின் நகர சபை அதன் நீர் பயன்பாட்டை முழுமையாக மீள்அரசுமயமாக்க வாக்களிக்கிறது. பப்ளிக் சர்வீஸஸ் இண்டர்நேஷனல். மேலும் விவரங்களுக்கு: http://www. world-psi.org/en/-turin-city-council-votes-fully-remunicipalize-its-water-utility.

18. கரோஸ்ஸா, சி. மற்றும் ஃபாண்டினி, ஈ. (2016) இத்தாலிய நீர் இயக்கம் மற்றும் வெகு மக்களின் அரசியல். வாட்டர் ஆல்ட்டர்நேடிவ்ஸ். க. 103. திணிடூ. 9, எண். 1, பக். 99-119.

19. பீ லர், ஏ. (2014) இத்தாலிய நீர் இயக்கம் மற்றும் 2011 வாக்கெடுப்பு. நேர்காணல் குறிப்புகள். ஃபோரம் இத்தாலியனோ டீ மூவ்மென்டி பெர் எல்அக்வா. காண்க. ரோம் / இத்தாலி, 25 மார்ச் 2014.

20. டிக்மேன், எஃப். (16 ஆகஸ்ட் 2013) வாட்டன்ஃபால்-வெர்பங் provoziert Ärger mit Netzagentur. Der Spiegel: மேலும் விவரங்களுக்கு http://www.spiegel.de/wirtschaft/service/vattenfall-droht-wegen-stromnetz-werbung-in-hamburg-aerger-a-916951.html

21. ஹாம்பர்கர் அபெண்ட்ப்ளாட் (12 செப்டம்பர் 2013) : மேலும் விவரங்களுக்கு https://www.abendblatt.de/hamburg/article119972287/Hochbahn-stoppt-VattenfallWerbung-zum-Volksentscheid.html :

22. **Unser Hamburg & Unser Netz** (5 செப்டம்பர் 2013) ஃபிரெட் அனிமேஷன்: மேலும் விவரங்களுக்கு https://www.youtube.com/watch?v=8w65RlCr984

# 7.

# பொதுச் சேவைகளை வழங்குவது மற்றும் நிதி வழங்குவதில் உள்ள புதுமையான வழிகள்

## 7.1. மக்களுக்காக செயல்படும் பொதுப் பணிகள்

மீள்அரசுமயமாக்கலின் வெற்றிக்கான முக்கியமான காரணிகளில் ஒன்று, பொதுசேவைகளை நிதியுதவியுடன் நிலையாக வழங்கக்கூடிய வழிகளில் மேற்கொள்ள லாம் - பயனாளிகள், குடியிருப்பவர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு, குறிப்பாக மிகவும் பாதிக்கப்படக்கூடியவர்களுக்கு கட்டுப்படியாகாத செலவுகளை தவிர்க்க லாம். இதன் விளைவாக, வளங்களின் பற்றாக்குறை, பழமைவாத பட்ஜெட் மற்றும் சிக்கனம் ஆகியவை தனியார்மயமாக்கலுக்கு ஆதரவாகப் பயன்படுத்தப்படும் பொது வான வாதங்களில் ஒன்றாகும். ஏனெனில் ஒரு குறிப்பிட்ட சேவையை அமைப்பதற்கும், இயக்குவதற்கும், பராமரிப்பதற்கும் தேவையான வெளிப்படையான முதலீட்டை தனியார் நிறுவனங்கள் மட்டுமே செய்ய முடியும் என்று கூறப்படுகிறது.

முந்தைய கருஜகீக் ஆராய்ச்சியின்படி 1, தனியார் துறை நிதி பொதுவாக மிகவும் விலை உயர்ந்ததாகவும், மீள்அரசுமயமாக்கல் அப்படியில்லை என்றும் காட்டியுள்ளது

ச்) பொதுத்துறை பத்திரங்களை காட்டிலும், அதிக விலை கொண்ட தனியாரிடம் பணத்தை கடன் வாங்குவதை நம்பியுள்ளது;

(ஞ) தனியார் துறை லாபம் ஈட்ட வேண்டியுள்ளது, மேலும் பங்குதாரர்களுக்கு வழங்கப்படும் டிவிடென்ட்டால் செலவு அதிகரிக்கிறது;

(ஞி) தனியார் துறையில் ஊழலுக்கு அதிக வாய்ப்புள்ளது. இது தனியார் நிறுவனங்களுக்கு லாப உத்தரவாதமாக கருதப்படும் லாபகரமான நீண்ட கால ஒப்பந்தங்களை மேற்கொள்வதன் மூலம் தூண்டப்படுகிறது. ஊழலுக்கான செலவு பொது மக்கள் 'து சுமத்தப்படுகிறது.

எனவே பொதுத்துறை பொதுச் சேவைகளை வழங்குவதற்கு நிதியளிப்பதில் ஒப்பீட்டளவில் கூடுதல் நன்மையைக் கொண்டுள்ளது. அதே நேரத்தில் பொது செலவுத் திட்டங்களைக் கட்டுப்படுத்தப்படும்போது,பொதுச் சேவைகளை வழங்க மாற்று நிதி வழிமுறைகள் உள்ளன. அவை பின்வருமாறு:

- ⌘ உள்ளூர் வளங்களை சமூகத்தில் வைத்திருக்க தேவையான பொது பிரதான நிறுவனங்களுக்கான கொள்முதல் வழிகாட்டுதல்கள்
- ⌘ பொதுத்துறை-பொதுத்துறை-கூட்டமைப்புகளின் பயன்பாடு
- ⌘ பங்கேற்பு பட்ஜெட்
- ⌘ அனைவருக்கும் சேவை கிடைக்க வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் பொதுச் சேவைகளை வழங்கும் கூட்டுறவு முயற்சி

## 7.2. "பிரதான நிறுவனங்கள்" – கூடுதல் வசதி கொண்ட பொது நிறுவனங்கள்

**இங்கிலாந்தின் லேங்கஷயர்** மாகாணத்தில் உள்ள **பிரஸ்டன்** நகரில், பொதுச் சேவைகளை மறுபரிசீ லனை செய்வதால் ஒரு முழு நகரத்தையும் அது எவ்வாறு மாற்றும் என்பதைக் காட்டுகிறது. 2011-2017 ஆண்டு இடைவெளியில்

மத்திய அரசு மானியம் 40 சதவீதம் குறைக்கப்பட்டதால் பிரஸ்டன் சிக்கன நடவடிக்கைகளுடன் போராடியது. நகரத்தில் வேலையின்மை மற்றும் சமூக சமத்துவமின்மை விகிதங்கள் அதிகம்.[2]

ஓஹியோவின் கிளீவ்லேண்டில் ஒத்துழைப்புடன் இயங்கும் சமூகங்கள் மற்றும் ஸ்பெயினின் பாஸ்க் பிராந்தியத்தில் உ லகின் மிகப்பெரிய கூட்டுறவு குழுமமான மொன்ட்ராகன் ஆகியவற்றால் ஈர்க்கப்பட்ட பிரஸ்டன் நகர மேயர், பொது கொள்முதல் நடைமுறைகளை மாற்றுவதன் மூலம் அதன் உள்ளூர் பொருளாதாரத்தை மேம்படுத்த முடிவு செய்தார், இதனால் பொதுச் சேவைகள் தாமாகவே மேம்படும் என நம்பினார். பிரஸ்டன் அதன் ஆறு பெரிய பொது நிறுவனங்களான (பிரதான நிறுவனங்கள் என்று அழைக்கப்படுகிறது), பிரஸ்டன் சிட்டி கவுன்சில், லேங்கஷயர் கவுண்டி கவுன்சில், பிரஸ்டன் கல்லூரி, மத்திய லேங்கஷயர் பல்கலைக்கழகம், லேங்கஷயர் கான்ஸ்டாபு லரி மற்றும் கம்யூனிட்டி கேட்வே ஆகியவற்றுடன் தொடங்கியது. மேலும், அந்நிறுவனங்கள் அவற்றின் விநியோகத் தொடரை மீண்டும் ஒழுங்கமைக்கவும், உள்நாட்டிலேயே பொருட்கள் மற்றும் சேவைகளை எங்கு வாங்க முடியும் என்பதை அடையாளம் காணவும் அது உதவியது.[3] இதன் விளைவாக, உள்ளூர் பொதுச் செலவுகள் கணிசமாக அதிகரித்தன, பட்ஜெட் குறைப்பு இருந்தபோதிலும், கொள்முதல் குறுகிய, உள்ளூர் விநியோகத் தொடர்களுக்குள் மீண்டும் கொண்டு வரப்பட்டது. 2012/13-ம் ஆண்டில், ஆறு பிரதான நிறுவனங்களால் சரக்குகள் மற்றும் சேவைகளுக்காக ப750 மில்லியன் செலவிடப்பட்டது. ஆனால் அதில் ஒரு சிறிய பகுதியே உள்நாட்டில் செலவிடப்பட்டது: பிரஸ்டனில் ஐந்து சதவீதமும், லேங்கஷயர் முழுவதும் 39 சதவீதமும் மட்டுமே செலவிடப்பட்டன. 2016/17 –ம் ஆண்டின் வாக்கில் உள்ளூர் செலவினங்கள் கணிசமாக அதிகரித்தன; ப620 மில்லியன் தொகை, பொருட்கள் மற்றும் சேவைகளுக்காக அதே பிரதான நிறுவனங்களால் செலவிடப்பட்டது. பிரஸ்டனில் 19 சதவீதமும், 81 சதவீதம் லேங்கஷயரிலும் செலவிடப்பட்டது.[4] சட்டப்படி, பிரஸ்டனின் முன்னெடுப்பு பொதுச் சேவைகள் (சமூக மதிப்பு) சட்டம் 2013-ஐ அடிப்படையாகக் கொண்டதாகும்; அதன்படி இங்கிலாந்தில் உள்ள பொது அமைப்புகள், அவை நியமிக்கப்பட்டதனால் உண்டாகும் சமூக, சுற்றுச்சூழல் மற்றும் பொருளாதார தாக்கத்தை கணக்கில் எடுத்துக்கொள்ள அனுமதிக்கப்படும்.[5]

பொதுத்துறை ஒப்பந்தங்களுக்கு போட்டியிடக்கூடிய தொழிலார்களுக்கு சொந்தமான கூட்டுறவு அமைப்புகளை நிறுவுவதையும் பிரஸ்டன் நகர் ஊக்குவிக்கிறது.[6] உண்மையான வாழ்வாதார ஊதியத்தை[7] கவுன்சில் நடைமுறைப்படுத்தி ஊக்குவித்துள்ளது, இது உண்மையான வாழ்வாதார செலவை எட்ட சுயாதீனமாக கணக்கிடப்படுகிறது.[8] அந்த சுற்றுப்புறத்தில் அதிக பொதுத்துறை ஊழியர்கள் வசிப்பதால், உள்ளூர் பொதுத்துறைக்கு செலவு செய்வதில் ஒரு நேர்மறையான விளைவு ஏற்பட்டது. இதனால் ஒட்டுமொத்த சமூகமும் பயனடைந்தது. 2016-ம் ஆண்டில் பிரஸ்டன் வடமேற்கு இங்கிலாந்தில் வாழ்வதற்கும் வேலை செய்வதற்கும்[9] சிறந்த நகரமாக பெயரிடப்பட்டது. மேலும், 2018-ம் ஆண்டில் கணக்கியல் நிறுவனமான பிரைஸ்வாட்டர்ஹவுஸ் கூப்பர்ஸ், அதன் நல்வளர்ச்சி குறியீட்டில் பிரஸ்டனை மிகவும் மேம்பட்ட நகரமாக மதிப்பிட்டது.[10] முற்போக்கான பொது கொள்முதல் நடைமுறைகள் மூலம் - உள்ளூர் அரசமைப்புகள் தங்கள் சிக்கன நடவடிக்கைகள் மற்றும் பட்ஜெட் குறைப்பின் போதும் கூட, தங்கள் உள்ளூர் சமூகங்களில் சமூக உட்படுத்தலை வளர்க்க முடியும் என்பதை இந்த பிரஸ்டன் மெய்நிகழ்வு காட்டுகிறது. பொதுச் சேவைகளை நேரடியாக மீண்டும் அரசுமயமாக்குவது சாத்தியமில்லாதபோது, தொழிலாளர்களின் கூட்டுறவுகளை உருவாக்குவதை ஊக்குவிக்கும் உள்ளூர் சமூக பொறுப்பு அணுகுமுறையானது - பன்னாட்டு தனியார் நிறுவனங்களால் பொதுச் சேவைகளை பெறுவதற்கான சிறந்த மாற்றாக இருக்கும். குறிப்பிட்ட சேவையை வழங்கும் கூட்டுறவு அமைப்புகள், வழங்கப்படும் முக்கிய சேவைகள் - கூட்டுறவு உறுப்பினர்களுக்கு மட்டுமல்லாமல், அனைவருக்கும் கிடைக்கும் வகையில் இருப்பதை உறுதிசெய்வது அவசியமாகிறது. இருப்பினும், சந்தை அறிவுக்கு பிரஸ்டன் மாதிரி சவால் விடுவதாக இல்லை. ஏனெனில் இது (உள்ளூர்) பொதுச் சேவைகளின் லாபத்திற்காக வெளிவழங்கல் செய்து பராமரிக்கிறது. எனவே, பிரஸ்டன் மாதிரி மீள் அரசுமயமாக்கல் மற்றும் பொதுவுடைமைக்கு உகந்த மாற்றாக இல்லை.

## 7.3. பொதுத்துறை - பொதுத்துறை கூட்டமைப்பு

பொதுத்துறை-பொதுத்துறை-கூட்டமைப்பு (PuP) பொதுத்துறை-தனியார்-கூட்டமைப்பு (PPP) ஆகிய இரண்டும் வேறுபட்டவை. பொதுச் சேவைகளை வழங்குவதில் ஒன்று அல்லது அனைத்து கூட்டாளர்களின் திறனையும், செயல்திறனையும் மேம்படுத்த - இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பொது கூட்டாளர்களுக்கிடையேயான ஒத்துழைப்புதான் கதக ஒப்பந்தம் எனப்படும். PuP ஒப்பந்தங்கள் நாடுகளுக்கு இடையில், வெவ்வேறு அரசமைப்புகளுக்கு இடையில் இருக்க லாம்; அல்லது ஒரு நகராட்சியில் வெவ்வேறு பொதுச் சேவைகளை உள்ளடக்கும் வகையில் இருக்க லாம். ஒருமித்த பொது நோக்கம் இருக்க வேண்டும் மற்றும் தனியாருக்கு லாபங்களை ஈட்டக்கூடாது என்ற உறுதிப்பாட்டின் அடிப்படையில், PuP ஒப்பந்தங்கள் இயங்கும். அவை பொதுவான மதிப்புகள் மற்றும் ஒருமித்த குறிக்கோள்களைச் சுற்றியுள்ள சக அமைப்புகளின் உறவுகளுடன் செயல்படுகிறது.[11] வணிக ரீதியான பரிசீ லனைகள் இல்லாததால், உள்ளூர் திறன்களின் வளர்ச்சியில் கிடைக்கக்கூடிய அனைத்து வளங்களையும் மறு முதலீடு செய்ய PuP அமைப்புகள் தம் கூட்டாளர்களை அனுமதிக்கிறது. இது கூட்டாளர்களுக்கு பரஸ்பரம் நம்பிக்கை வைக்க உதவுகிறது, அதனால் நீண்டகால மேம்பாடு கிடைக்கிறது.

நடைமுறையில், கதக அமைப்புகளின் பணியை ஐந்து பெறும் வகைகளாகப் பிரிக்க லாம்:

- ⌘ மனித வளங்களை பயிற்றுவித்து வளர்ப்பது,
- ⌘ பெரிய அளவி லான சிக்கல்களில் தொழில்நுட்ப ஆதரவு அளித்தல்,
- ⌘ செயல்திறனை மேம்படுத்துதல் மற்றும் நிறுவன திறனை வளர்த்தல்,
- ⌘ நிதி சேவைகள்,
- ⌘ பொது பங்களிப்பை மேம்படுத்துதல்.

ஒரு நகரத்திற்கும் நகரத்திற்கும் இடையிலான உறவின் மூலமாக PuP அமைப்புகளைத் தொடங்குவது ஒரு பொதுவான வழியாகும். எடுத்துக்காட்டாக, **ஸ்பெயினின் செவில்லா** நகர், சர்வதேச ஒற்றுமை உணர்வின் உத்வேகத்தால் பல PuP அமைப்புகளை உருவாக்கியது. **நிக்கராகுவாவின் சியுடாட் சாண்டினோவிற்கும்**, செவில்லாவிற்கும் இடையில் ஒரு PuP ஒப்பந்த அடிப்படையில், பொது பங்களிப்புடன் ஒரு நகராட்சி நீர் நிறுவனத்தை நிறுவ வழிவகுத்தது. நாடுகளுக்கு இடையிலான



ஸ்பெயினின் சிவில்லியில், அல்கஸாரில் உள்ள ராயல் பாத்ரூம்

PuP ஒப்பந்தங்களும் உள்ளன; எடுத்துக்காட்டாக, பின் லாந்து மற்றும் **வியட்நாம்** இடையே, பின்னிஷ் இருதரப்பு மேம்பாட்டு ஏஜென்சி (FINNIDA) என்ற ஒரு கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. அதன் மூலம் வியட்நாமில் நல்ல முறையில் தண்ணீர் விநியோக முறை மற்றும் தொழிலாளர் பயிற்சி கிடைக்க அது வழிவகுத்தது. 1990 மற்றும் 1995 ஆண்டுகளுக்கு இடையில் வியட்நாமிய நீர் நிறுவனமான ஹை ஃபோங் நீர் வழங்கல் நிறுவனத்தின் (ஏகஙிகுஇ) முதலீட்டில் 50 சதவீதம், இந்த PuP ஒப்பந்தத்தின் மூலம் வந்தது.[12]

தனியார்மயமாக்க லால் அச்சுறுத்தப்படும் ஒரு பொது நிறுவனத்தைப் பாதுகாப்பதற்கான வழிமுறையாகவும் PuP ஒப்பந்தங்கள் இருக்க லாம். 2016-ம் ஆண்டில் **கொலம்பியாவின் காலி** நகரில், தண்ணீர், மின்சாரம் மற்றும் தொலைத்தொடர்பு வசதிகளை வழங்கும் ஒரு நகராட்சி பொதுச் சேவை வழங்குநரான எம்காலி - அதன் தொலைதொடர்பு பிரிவை தனியார்மயமாக்க நகராட்சி அரசாங்கத்தால் கோரப்பட் டது. ஏனெனில் அது போதுமான லாபம் ஈட்டவில்லை என்று கூறப்பட்டது. நீர் பயன்பாட்டு சங்கமான, சிண்ட்ரேம்காலி, தனியார்மயமாக்கலை எதிர்த்தது; அதற்கு பதி லாக ஒரு PUP அமைப்பை நிறுவுவதற்கு முன்மொழிந்தது. **உருகுவேயின்** அரசுக்கு சொந்தமான தொலைத்தொடர்பு நிறுவனமான ஆன்டெல் - உ லகிலேயே சேவைகளை மிகவும் உள்ளடக்கிய மற்றும் அமெரிக்காவின் மிக விரைவான தேசிய பிராட்பேண்ட் நெட்வொர்க்கை வழங்கும் நிறுவனமாகும். அந்நிறுவனம், எம்காலியுடன் ஒரு கதக ஒப்பந்தத்தை அமைத்தது.[13]

**பிரான்சின் பாரிஸில்**, ஏடு பாரிஸ் அமைப்பு பியர்-டு-பியர் என்னும் நேரடியாக கற்கும் வசதியை ஊக்குவிக்கிறது மற்றும் பிரான்சிலும் வெளியேயும் உள்ள பொது பயன்பாடுகளுக்குத் தேவையான திறனை வளர்ப்பதற்கும் உதவுகிறது.

நகராட்சி அல்லது பிராந்திய மட்டத்திலும் PUP கூட்டமைப்புகளை அமைக்க லாம். சமீபத்திய ஜெர்மன் ஆய்வின்[14] மூலம் கண்டறியப்பட்டது என்னவென்றால், பிராந்திய அளவி லான PuP-க்கள் கழிவுத் துறையில் குறிப்பாக பொதுவாக காணப்படுகின்றன. ஏனெனில் சிறிய வரவு செலவுத் திட்டங்களைக் கொண்ட நகராட்சிகளுக்கு உபகரணங்களைப் பகிர்ந்து கொள்வது; சொத்துக்கள் மற்றும் செலவுகளை பரஸ்பரம் பகிர்வது எளிதாகும். இந்த கதக ஒப்பந்தங்கள் சில நேரங்களில் "நகரங்களுக்கு இடையிலான (இன்டர்முனிசிபல்) கூட்டமைப்பு" என்றும் அழைக்கப்படுகின்றன. இத்தாலியில் உள்ள **சார்டினியா** பகுதியில், நகராட்சிகளுக்கு **இடையேயான** பொது கழிவு மேலாண்மை முறையை அமைத்தது. இது ஒரு பயனுள்ள கழிவு முறைப்படுத்தும் அமைப்பை நிறுவியது மட்டுமல்லாமல், 2006-2015 ஆண்டுகளின் இடைவெளியில், அதன் கழிவு உற்பத் தியை 16 சதவீதமாக (143,724 டன்) குறைத்தது.[15]

PuP-யின் மற்றொரு வடிவம் பொதுச் சேவைகளின் குறுக்கு மானிய வசதியாகும் - இதனால் அடிப்படை பொதுச் சேவைகள் தனித்தனியாக லாபம் ஈட்டாதவையாக இருக்கும் பட்சத்திலும், அவற்றின் நிதி நிலைத்தன்மையை உறுதிப்படுத்த உதவும். **ஜெர்மனியில்** இது பொதுச் சேவைகளுக்கு நிதியளிப்பதற்கான ஒரு பொதுவான வழியாக உள்ளது. இதற்கு பயன்பாட் டாளர்களின் கட்டணங்களால் மட்டும் நிதியளிக்க முடியாது; மாறாக வசதி படைத்த பயன்பாட்டாளர்களுக்கு மானியம் வழங்கப்படாவிட்டால் மட்டுமே அதனை சாத்தியப்படுத்தும்.
சிக்கன நடவடிக்கைகளுக்கு உட்பட்ட, ஜெர்மனியின் மியூனிச் பிற நகரங்களைப் போ லவே, பொதுப் போக்குவரத்திற்கான தேசிய நிதியில் குறைப்பினை சந்தித்தது. இது மியூனிக் போக்குவரத்து நிறுவனத்திற்கு (MVG) நிதிப் பற்றாக்குறையை ஏற்படுத்தியது. அதன் தாய் நிறுவனமான மியூனிச்சின் பொது

பயன்பாட்டு அமைப்பான ஸ்டாட்வெர்க் மியூன்சென் (SWM), அதன் கடனை மின்சாரத் துறையில் அடைந்த லாபத்திற்கு அதிகமான உபரியைத் தொகையைக் கொண்டு சமன் செய்தது.[16]

## 7.4. பங்கேற்புடன் கூடிய வரவு செலவு திட்டம் (பட்ஜெட்)

பங்கேற்பு பட்ஜெட் நடைமுறை முதன்முதலில் 30 ஆண்டு களுக்கு முன்பு புயுர்டோ அலெக்ரே (பிரேசில்)-வில் அறிமுகப்படுத்தப்பட்டது. பொதுச் செலவுகள் சமூகத்தின் நலன்களுக்கு ஏற்ப இருப்பதை உறுதிசெய்யும் அரசு வரவு-செலவுத் திட்டங்களை, உள்ளூர் மக்களின் ஜனநாயகக் கட்டுப்பாட்டில் கொண்டுவருவதே இதன் நோக்கமாகும். அப்போதிருந்து இது உ லகெங்கிலும் உள்ள பல உள்ளூர் அரசமைப்புகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. உலகளவில் தற்போது 20,000 க்கும் மேற்பட்ட பங்கேற்பு பட்ஜெட் திட்டங்கள் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது, இதில் 40-க்கும் மேற்பட்ட நாடுகளில் குறைந்தது 1,700 உள்ளூர் அரசாங்கங்கள் உள்ளன.[17]

பங்கேற்பு பட்ஜெட்டின் (PB) காரணமாக அடிப்படை பொதுச் சேவைகளை மேம்படுத்துவது முன்னேற்றம் அடைந்துள்ளது என்று ஆராய்ச்சி காட்டுகிறது. உ லகெங்கிலும் உள்ள 20 இடங்களில் அதன் அனுபவத்தை மதிப்பாய்வு செய்த ஒரு ஆய்வின் மூலம், பங்கேற்பு பட்ஜெட்டினால் முன்னுரிமை பெற்ற பொதுச் சேவைகள் உள்கட்டமைப்புகள், குறிப்பாக சாலைகள் மற்றும் பாதைகள், அதைத் தொடர்ந்து நீர் மற்றும் கழிவு நீர் மேலாண்மை மற்றும் சுத்திகரிப்பு, ஆற்றல் மற்றும் பொது விளக்குகள் ஆகிய சேவைகள் மேம்பட்டுள்ளன. ஸ்காட் லாந்தின், மேற்கு தீவுகளில் பேருந்து போக்குவரத்துக்கு பங்கேற்பு பட்ஜெட் வழியாக £500,000 பவுண்டுகள் ஒதுக்கப்பட் டுள்ளது.[18] **கேமரூனின், யாவுண்டேவில்,** பங்கேற்பு பட்ஜெட் மூலம் அங்கீகரிக்கப்பட்ட ஒரு திட்டம் 50,000 குடிமக்களுக்கு சேவை வழங்கும் ஒரு நீர் குழாய் அமைப்பிற்கு வழிவகுத்தது, பிரேசிலின் **போர்டோ அலெக்ரேவில்** நீர் சுத்திகரிப்பு நிலையத்தை உருவாக்க ஒப்புதல் அளித்தது.

பங்கேற்பு பட்ஜெட்கள் பொதுவாக உள்ளூர் அரசமைப்பின் வரவு செலவுத் திட்டத்தில் ஒரு சிறிய பங்கை உள்ளடக்கியதாகும். மிகப் பெரிய பங்கேற்பு பட்ஜெட் வளங்களைக் கொண்ட உள்ளூர் சமூகங்களில் சில பின்வருமாறு: பெருவில் ஐலோ; பிரேசிலில் போர்டோ அலெக்ரே மற்றும் பிரேசிலில் குவாருல்ஹோஸ். இங்கே வசிப்பவர்களுக்கு பங்கேற்பு பட்ஜெட் மூலம் ஆண்டுக்கு ஒரு குடியிருப்பாளருக்கு $120 அமெரிக்க டா லருக்கும் அதிகமான பட்ஜெட் ஒதுக்கப்படுவதாக கூறுகின்றனர். பெரும்பா லான பங்கேற்பு பட்ஜெட் திட்டங்கள் ஆண்டுக்கு ஒரு குடியிருப்பாளருக்கு ÷2-35 அமெரிக்க டா லர் அளவிற்குள் வருகின்றனர்.[19]

பெரும்பாலும், உள்ளூர் அரசாங்க வரவுசெலவுத் திட்டத்தின் ஒரு சிறிய பகுதிக்கு பங்கேற்பு பட்ஜெட் பயன்படுத்தப்பட்டாலும், இது அடிப்படை பொதுச் சேவைகள் அனைவருக்கும் கிடைப்பது மற்றும் குடியிருப்பாளர்களின் வாழ்க்கைத் தரத்தில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட வழிவகுத்தது. குறிப்பிட்ட உள்ளூர் சூழ்நிலைகள் மற்றும் தேவைகளைப் பூர்த்தி செய்ய – அச்சமூகத் திற்கு கூட்டாக வளங்களை ஒதுக்கவும் இது உதவுகிறது. பங்கேற்பு பட்ஜெட் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வை அதிகரிக்கிறது; சமூகங்கள், உள்ளூர் அரசாங்கங்கள் மற்றும் இருவருக்கிடையேயான தொடர்புகளில் ஜனநாயக ரீதியான நிர்வாகத்தை மேம்படுத்தவும் உதவுகிறது. இதில் சுவாரஸ்யம் என்னவென்றால், பங்கேற்பு பட்ஜெட் மூலம் அதிக வரி வருவாய் மற்றும் குறைந்த வரி ஏய்ப்பு ஆகியவற்றுடன் வருவதால், உள்ளூர் அரசமைப்புகளின் நிதிகளைக் கூட அதிகரிக்க முடியும் என்று கூற லாம். மறைமுகமாக, பங்கேற்பு பட்ஜெட் செயல்முறை உள்ளூர் அரசமைப்பு வளங்களின் நிலை, அவற்றின் ஆதாரம் மற்றும் தடைகள் குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்து கிறது.[20]

## 7.5. கூட்டுறவு அமைப்புகளின் பங்கேற்பு

பொது உரிமையையும், பொதுச் சேவைகளின் கட்டுப்பாட்டையும், கூட்டுறவு மற்றும் சமூக உரிமையுடன் இணைக்க லாம். நகர்ப்புற மற்றும் சமூக அளவில் மின்னாற்றல் அமைப்புகளில், உள்ளூர் பங்களிப்பை நோக்கிய போக்கு - ஐரோப்பாவின் எரிசக்தி துறையில் குறிப்பாகத் தெரிகிறது. இருப்பினும், சமூகம் மற்றும் / அல்லது தொழிலாளர்களினால் இயக்கப்படும் கூட்டுறவு அமைப்புகளுக்கு தேவையான ஆரம்ப இடத்தை - பரவ லாக்கம் மூலமாகவே உருவாக்க முடியும் என்றாலும்; கூட்டுறவு நிறுவனங்கள் குறிப்பிட்ட உறுப்பினர்களுக்கு மட்டுமே சேவை கிடைக்கும் நுழைவாயிலாக மாறும் அபாயமும் உள்ளது. ஏனைய பிற மக்கள் புறக்கணிக்கப்படும் வாய்ப்பும் உள்ளது. எனவே பொது வுடைமை எந்த வடிவத்தை எடுத்தாலும், அனைவருக்கும் கிடைக்கும் வகையில் இருத்தல் வேண்டும் என்ற விதி அவசியமாகிறது.

பொது மற்றும் கூட்டுறவு அமைப்புகளுக்கு சொந்தமான அமைப்புகளை இணைப்பதற்கான ஒரு **வெற்றிகரமான** வழிமுறைக்கு முன்மாதிரியாக, **ஜெர்மனியின்** மத்தியில் உள்ள ஒரு சிறிய நகரமான வுல்ஃப்ஹேகனில் சோதனைத் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. 20 ஆண்டுகால தனியார்மயமாக்கலுக்குப் பிறகு அதன் மின்சார உருவாக்க அமைப்பை மீண்டும் அரசுமயமாக்கியது. 2010-ம் ஆண்டில் – மின்சார அமைப்பை மறுசீரமைத்த நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு - அந்நகராட்சி குடிமக்களின் பங்களிப்பை விரிவுபடுத்து வதையும், நகராட்சி பயன்பாடுகளை ஒரு உள்ளூர் கூட்டுறவு நிறுவனத்தை நிறுவுவதன் மூலம் பகுதி உரிமையைப் பெற்று, புதுப்பிக்கத்தக்க ஆற்றலில் முதலீடு செய்ய தேவையான வளங்களை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது .2012-ம் ஆண்டில் கூட்டுறவு அமைப்பான, Buergerenergiegenos-senschaft வுல்ஃப்ஹேகன் (BEG), 264 உறுப்பினர்களுடன், €800,000-க்கும் அதிகமான மூலதனத் தொகையைக் கொண்டு நிறுவப்பட்டது. அந்நகராட்சி சேவை அமைப்பில் 25 சதவீத உரிமையை ஆஉஎ பெற்றிருந்தது.[21] மின்சாரத்தை பயன்படுத்து பவர்கள் மட்டுமே €500 மதிப்புள்ள பங்குகளை ஒரு நபருக்கு அதிகபட்சம் 40 பங்குகள் என்று வாங்கி, BEG கூட்டுறவு அமைப்பில் உறுப்பினராக முடியும். நகராட்சி சேவை அமைப்பிற்கு புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களுக்கு அதிக ஆதாரங்களைக் பெற இந்த முன்மாதிரி அமைப்பு உதவியது; அதே நேரத்தில் உறுப்பினர்களுக்கான நிலையான முதலீடாகவும் இது செயல்பட்டது. மேலும், முடிவெடுப்பதில் கூட்டுறவு உறுப்பினர்கள் நேரடியாக பங்கேற்க முடியும் என்பதால் இது அந்த சேவை அரசமைப்பின் ஜனநாயக ரீதியான நிர்வாகத்தை பலப்படுத்தியது. நகராட்சி அதிகாரசபையின் ஆளும் குழுவில் - ஆஉஎ அங்கம்வகிக்கிறது. இதில் ஒன்பது பேர் உள்ளனர், அவர்களில் இருவர் BEG-யின் பிரதிநிதிகள், பணிக்குழுவில் ஒருவர் மற்றும் நகராட்சியில் ஆறு பேர் உள்ளனர்.[22] மார்ச் 2018-ல், BEG-யில் 850 உறுப்பினர்கள் இருந்தனர். அதன் உறுப்பினர்களுக்காக அவ்வமைப்பு சுமார் நான்கு மில்லியன் யூரோக்களை நிர்வகித்தது (காண்க

மெய்நிகழ்வு 4 எனர்ஜி, ஜெர்மனி வுல்ஃப்ஹேகன்).[23] இதேபோன்ற மாதிரி அமைப்பு **ஜெர்மனியின் ஸ்டட்கார்ட்டில்** ஆராயப்பட்டது, அங்கு மின்சார உருவாக்க அமைப்பு வெற்றிகரமாக மீள்அரசுமயமாக்கப்பட்டது. பசுமை மின்னாற்றல் விநியோகத்தை அதிகரிக்க நகராட்சி மற்றும் ஒரு சமூக கூட்டுறவு அமைப்பிற்கு இடையே கூட்டணி ஏற்பட்டது (காண்க மெய்நிகழ்வு 3 ஆற்றல் ஸ்டட்கார்ட்)

இந்த எடுத்துக்காட்டுகள் பொதுவுடைமை மற்றும் கூட்டுறவு ஆகியவை தனித்தனியாக ஸ்தாபிக்க இயலாமல் போனாலும், ஒன்றோடு ஒன்று கூட்டாக செயல்பட முடியும் என்பதைக் காட்டுகின்றன. மின்னாற்றல் உற்பத்தி அமைப்பு போன்ற இயற்கையான ஏகபோக அமைப்புகளை பொருத்தவரை இது சரியானதாக இருக்கும் - இறுதி பயன்பாட்டாளர்களுக்கு மின்சாரத்தை கொண்டு வருவதற்கு ஒரே ஒரு பைலான்கள் மற்றும் கேபிள்களை இந்த மின்சார அமைப்பு மட்டுமே உள்ளன. கார்பன் அற்ற ஒரு மின்னாற்றல் அமைப்பு - நவீன மற்றும் விரிவான மின்சார கிரிட் அமைப்பைப் பொருத்தே உள்ளது. அதில் புதுப்பிக்கத்தக்க ஆற்றலை வழங்க முடியும். எனவே, உள்ளூர் மற்றும் சமூகத்தால் இயக்கப்படும் புதுப்பிக்கத்தக்க மின்னாற்றலின் உற்பத்தி செய்யும் நோக்கம், அதன் மின்சார கிரிட் அமைப்பின் பொருத்தமான தன்மையை அடிப்படையாகக் கொண்டுள்ளது. புதுப்பிக்கத்தக்க ஆற்றலைப் பொறுத்தவரை ஐரோப்பாவில் முன்னணி நாடுகளில் ஒன்றான **டென்மார்க்கில்**, காற்றாலை மின்சாரம் என்பது வலுவான சமூக ஈடுபாட்டால் மட்டுமே சாத்தியமானது; ஏனெனில் மின்சார கிரிட் அமைப்பு பொதுவுடைமையாகவும் மற்றும் பொதுக்கட்டுப்பாட்டிலும் உள்ளது. டென்மார்க்கில் காற்றாலை ஆற்றல், உற்பத்தியில் பெரும்பாலும் உள்ளூர் உரிமையை அடிப்படையாகக் கொண்டவை. 2013-க்குள், 70-80 சதவீதம் தற்போதுள்ள காற்று விசையாழிகள் சமூகங்களுக்கு சொந்தமானவையாக இருக்கும்.[24] ஒரு ஏற்பாட்டின் மூலம் இது எளிதாக்கப்பட்டுள்ளது. அதாவது, விசையாழி உரிமையாளர்கள் மின்சார கிரிட் அமைப்பில் தொழில்நுட்ப ரீதியாக மிக சாத்தியமான, அருகில் உள்ள புள்ளியிலிருந்து பெறப்படும் இணைப்பிற்கு மட்டுமே பணம் செலுத்த வேண்டும்; தம் தேவைப்படும் நெட்வொர்க் விரிவாக்கம் பயன்பாட்டு சேவைகள் மூலம் பெறப்படும். இந்த பொது மற்றும் சமூக உரிமையின் கூட்டணி அமைப்பானது மிகவும் வெற்றிகரமானது என்று நிரூபிக்கப்பட்டுள்ளது: டென்மார்க்கின் ஆற்றலில் கிட்டத்தட்ட பாதி காற்றாலை ஆற்றலால் தயாரிக்கப்படுகிறது.[25]

மின்சார உற்பத்தியில் சமூகங்கள் மற்றும் கூட்டுறவு அமைப்புகளின் பங்களிப்பு ஊக்குவிக்கப்பட வேண்டும் என்றாலும், கூட்டுறவு உறுப்பினர்களாக இல்லாத பிற சமூகவாசிகளை பாதிக்கும் வகையில் லாப நோக்கில் எரிசக்தி விற்பனையில் அவர்களை ஈடுபடுத்தாததை உறுதி செய்தல் வேண்டும். இல்லையெனில், பொது பயன்பாடு மற்றும் தனியார்மயமாக்கலில் தனியார் பெருநிறுவனங்களின் ஆபத்து அதிகமாக உள்ளது. எரிசக்தி உற்பத்தியினை தனியார்மயமாக்கியது, ஏற்கனவே அமேசான் மற்றும் கூகிள் போன்ற பல பன்னாட்டு தரவு நிறுவனங்களுக்கு ஒரு லாப வாய்ப்பாக மாறியுள்ளது, அவை வீட்டு மின்சார சேவையை தானியங்கி மயமாக்குவதாக கூறி மின்னாற்றல் துறைக்குள் நுழைந்துவிட்டனர்.[26]

1. ஹால், டி (2014) பொதுத்துறை-தனியார்-கூட்டமைப்புகள் ஏன் சரிவர இயங்குவதில்லை? பொதுத்துறையின் மாற்று வழிகளின் பலன்கள். பப்ளிக் சர்வீஸஸ் இண்டர்நேஷனல்(கசுஐ). மேலும் விவரங்களுக்கு: http://www.world-psi.org/sites/default/-files/rapport_eng_56pages_a4_lr.pdf

2. தி கார்டியன் (14 பிப்ரவரி 2017) வறுமை பிரஸ்டனில் நிலையானது. எனவே நாங்கள் தன்னிறைவு பெற்றோம். தி கார்டியன். மேலும் விவரங்களுக்கு: https://www.theguardian.com/society/2017/feb/14/pover-ty-was-entrenched-inpreston-so-we-became-more-self-suf ficient

3. உள்ளூர் பொருளாதார உத்திகள் மையம் (இஃஉகு) (2017) பிரதான நிறுவனங்கள் மூலம் சமூகமாக வளத்தை பெருக்குதல். மேலும் விவரங்களுக்கு: https://cles.org.uk/wp-content/uploads/2017/02/Community-Wealth-Building-through-AnchorInstitu-tions_01_02_17.pdf

4. மேன்லி, ஜே. (23 நவம்பர் 2017) நேர் பார்வையுடன் கூடிய உள்ளூர் ஜனநாயகம்: பிரஸ்டன் மாதிரி மற்றும் அது எவ்வாறு சமத்துவமின்மையைக் குறைக்கிறது. ஃகுஉ வலைப்பதிவுகள். மேலும் விவரங்களுக்கு: http://blogs.lse.ac.uk/politicsandpolicy/local-democra-cy-with-attitude-the-preston-model/

5. தி கார்டியன் (14 பிப்ரவரி 2017) வறுமை பிரஸ்டனில் நிலையானது. எனவே நாங்கள் தன்னிறைவு பெற்றோம். தி கார்டியன். மேலும் விவரங்களுக்கு: https://www.theguardian.com/society/2017/feb/14/pover-ty-was-entrenched-inpreston-so-we-became-more-self-suf ficient

6. பிரவுன், எம். (7 ஜூன் 2018) எங்கள் நகரமும் நகரங்களும் கெடுபிடியில் இயங்குகின்றன, ஆனால் சமூகமாக வளத்தை பெருக்குவது நம்பிக்கையை வழங்குகிறது. மேலும் விவரங்களுக்கு: https://par-ty.coop/2018/06/07/our-towns-and-cities-oper-ate-in-a-straight-jacket-but-community-wealthbuilding-offe rs-hope/

7. உண்மையான வாழ்வாதார ஊதியம் என்பது இங்கிலாந்தில் வாழ செய்ய வேண்டிய செலவுகளைப் பூர்த்தி செய்வதன் அடிப்படையில் சுயாதீனமாக கணக்கிடப்படுகிறது. இது குறைந்தபட்ச ஊதியத்திலிருந்து வேறுபட்டது, இது எந்தவொரு முதலாளியும் செலுத்த வேண்டிய குறைந்தபட்ச தொகையாகும். இதனை இங்கிலாந்து அரசாங்கம் தேசிய வாழ்வாதார ஊதியம் என்று அழைக்கிறது.

8. தி கார்டியன் (14 பிப்ரவரி 2017) வறுமை பிரஸ்டனில் நிலையானது. எனவே நாங்கள் தன்னிறைவு பெற்றோம். தி கார்டியன். மேலும் விவரங்களுக்கு: https://www.theguardian.com/society/2017/feb/14/pover-ty-was-entrenched-inpreston-so-we-became-more-self-sufficient

9. தி கார்டியன் (14 பிப்ரவரி 2017) வறுமை பிரஸ்டனில் நிலையானது. எனவே நாங்கள் தன்னிறைவு பெற்றோம். தி கார்டியன். மேலும் விவரங்களுக்கு: https://www.theguardian.com/society/2017/feb/14/poverty-was-entrenched-in-prestonso-we-became-more-self-sufficient

10. பார்ட்டிங்டன், ஆர். (1 நவம்பர் 2018) பிரஸ்டன் இங்கிலாந்தில் மிகவும் மேம்பட்ட நகரமாக பெயரிடப்பட்டது. தி கார்டியன். https://www.theguardian.com/politics/2018/nov/01/preston-named-as-most-most-improvedcity-in-uk?utm_term=Autofeed&CMP=twt_b-gdnnews&utm_medium=Social&utm_source=Twitter#Echobox=15410651

11. ஹால், டி. மற்றும் லோபினா, இ. (2009) தண்ணீர் சேவையில் பொதுத்துறை-பொதுத்துறை கூட்டமைப்பு (கதக). பப்ளிக் சர்வீஸஸ் இன்டர்நேஷனல் ரிசர்ச் யூனிட் (கருஐகீக்). மேலும் விவரங்களுக்கு: https://gala.gre.ac.uk/id/eprint/1708/1/2009-03-W-PUPS.pdf

12. ஹால், டி. மற்றும் லோபினா, இ. (2009) தண்ணீர் சேவையில் பொதுத்துறை-பொதுத்துறை கூட்டமைப்பு (PuP). பப்ளிக் சர்வீஸஸ் இன்டர்நேஷனல் ரிசர்ச் யூனிட் (PSIRU). மேலும் விவரங்களுக்கு: https://gala.gre.ac.uk/id/eprint/1708/1/2009-03-W-PUPS.pdf

13. சாவேஸ், டி. (12 ஜூன் 2018) ஒரு புதிய சர்வதேச பொதுத்துறை-பொதுத்துறை கூட்டமைப்பினை நோக்கி. டிரான்ஸ்நேஷனல் இன்ஸ்டிடியூட் (டி.என்.ஐ). மேலும் விவரங்களுக்கு: https://www.youtube.com/watch?time_continue=5&v=fJVjNCG5Dxs

14. குராகோன் (2018) **Studie Oeffentlich&Oeffentliche Partnerschaften 2018. Experiment oder Erfolgsgarant: gemeinsam auf den Weg in die Zukunft? Curacon,** மேலும் விவரங்களுக்கு: https://www.curacon.de/impulse/studien/studie/278-studie-oeffentliche-oeffentliche-partnerschaften-2018/

15. ஜீரோ வேஸ்ட் (13 ஜனவரி 2018) கேஸ் ஸ்டடி 10 - சார்டினியாவின் கதை - ஜீரோ வேஸ்ட் ஐரோப்பா. மேலும் விவரங்களுக்கு: https://zerowasteeurope.eu/downloads/case-study-10-the-story-of-sardinia/

16. பியூ லர், ஆர். (2015) பொது போக்குவரத்தில் பிராந்திய ஒருங்கிணைப்பு: ஜெர்மனி, ஆஸ்திரியா மற்றும் சுவிட்சர்லாந்திடமிருந்து கற்கவேண்டியபாடங்கள். MAUTC / USDOT

17. கபேன்ஸ், ஒய். (2015) அடிப்படை சேவைகளில் பங்கேற்பு பட்ஜெட்டின் தாக்கம்: நகராட்சி நடைமுறைகள் மற்றும் களத்திலிருந்து சான்றுகள். சுற்றுச்சூழல் - நகரமயமாக்கல். vol. 27, எண் 1, பக். 257-281

18. டயஸ், என். (2018) ஜனநாயகத்திற்கான நம்பிக்கை. உலகளவில் 30 ஆண்டு பங்கேற்பு பட்ஜெட். மேலும் விவரங்களுக்கு: http://repositorio.ul.pt/bitstream/10451/34460/1/ICS_RFalanga_The_National_Participatory_ART.pdf

19. கபேன்ஸ், ஒய். (2015) அடிப்படை சேவைகளில் பங்கேற்பு பட்ஜெட்டின் தாக்கம்: நகராட்சி நடைமுறைகள் மற்றும் களத்திலிருந்து சான்றுகள். சுற்றுச்சூழல் - நகரமயமாக்கல். vol. 27, எண் 1, பக். 257-281

20. கபேன்ஸ், ஒய். (2015) அடிப்படை சேவைகளில் பங்கேற்பு பட்ஜெட்டின் தாக்கம்: நகராட்சி நடைமுறைகள் மற்றும் களத்திலிருந்து சான்றுகள். சுற்றுச்சூழல் - நகரமயமாக்கல். vol. 27, எண் 1, பக். 257-281

21. ஸ்க்ரோடெர், ஜே (26 ஆகஸ்ட் 2014) **Direkte Bürgerbeteiligung am kommunalen Stadtwerk – Demokratisierung der Energiewende. Stadtwerke,** வுல்ஃப்ஹேகன் எட்ஞஏ. மேலும் விவரங்களுக்கு: http://www.die-linkethl.de/fileadmin/lv/dokumente/Themendokumente/das-oeffentliche/20140826-fachtagung/140826_Arnstadt_SW-Wolfhagen.pdf

22. ஸ்க்ரோடெர், ஜே (26 ஆகஸ்ட் 2014) **Direkte Bürgerbeteiligung am kommunalen Stadtwerk – Demokratisierung der Energiewende. Stadtwerke,** வுல்ஃப்ஹேகன் எட்ஞஏ. மேலும் விவரங்களுக்கு: http://www.die-linkethl.de/fileadmin/lv/dokumente/Themendokumente/das-oeffentliche/20140826-fachtagung/140826_Arnstadt_SW-Wolfhagen.pdf

23. BEG குழுவுடனான மின்னஞ்சல் பரிமாற்றம். வுல்ஃப்ஹேகன் மார்ச் 26, 2018.

24. ஐரோப்பிய பிராந்தியங்களின் குழு (2018) உள்ளூருக்கு சொந்தமான ஆற்றல் மாதிரிகள் மற்றும் ஐரோப்பாவில் ஆற்றல் மாற்றத்தில் உள்ளூர் மின்னாற்றல் சமூகங்களின் பங்கு. மேலும் விவரங்களுக்கு: https://cor.europa.eu/en/engage/-studies/Documents/local-energy-ownership.pdf (அணுகப்பட்ட தேதி 8 ஜூலை 2019).

25. டேனிஷ் ஆற்றல் நிறுவனம் (2016) டேனிஷ் ஆற்றல் மாதிரி. மேலும் விவரங்களுக்கு: https://ens.dk/sites/ens.dk/ files/Globalcooperation/the_danish_energy_model.pdf (அணுகப்பட்டத தேதி 8 ஜூலை 2019).

26. மார்க்மேன், ஜே. (2019). அமேசான் மற்றும் கூகிள் உங்கள் வீட்டிற்கு மின்சாரம் வழங்க ரகசிய திட்டத்தைத் தொடங்கின. ஃபோர்ப்ஸ். மேலும் விவரங்களுக்கு: https://www.forbes.com/sites/jonmarkman/2019/02/27/amazon-and-google-launch-secret-plot-to-power-your-home/#5e643c676aa8

# 8.

# முடிவுகள்: படிப்பினைகளின் சுருக்கம்

## பாடம் 1: முதல் நடவடிக்கையாக, தனியார்மயமாக்கவே வேண்டாம்

தொழிலாளர்கள், பயன்பாட்டாளர்கள் மற்றும் சமூகங்கள் மீதான தனியார்மயமாக்கலின் எதிர்மறையான தாக்கத்தைத் தவிர்ப்பதற்கான சிறந்த வழி - அத்துடன் மீள்அரசுமயமாக்களின் செலவுகள் - முதல் நடவடிக்கையாக, தனியார்மயமாக்கவே வேண்டாம். பொதுச் சேவைகளை தனியார்மயமாக்க அழுத்தம் கொடுக்கும் அரசியல்வாதிகள் மற்றும் கொள்கை வகுப்பாளர்களுக்கு தொழிற்சங்கங்கள் இந்த செய்தியை தெளிவாக தெரிவிக்க முடியும். தனியார்மயமாக்கலின் பல சிக்கல்கள் மற்றும் பொதுத்துறையின் மூலம் சேவை வழங்கினால் கிடைக்கும் நன்மைகள் குறித்து ஏராளமான ஆதாரங்களுடன் அவர்கள் தங்கள் நிலையை ஆதரிக்க வேண்டும்.

## பாடம் 2: மீள்அரசுமயமாக்கலுக்காக ஒரு திண்ணமான காரணத்தை உருவாக்குங்கள்

தனியார்மயமாக்கல், அதன் பல வடிவங்களில் சமூகங்கள், சுற்றுச்சூழல் மற்றும் தொழிலாளர்களை பாதித்துள்ளது என்பதற்கான சான்றுகள் மற்றும் தனியார்மயமாக்கலை ஆதரிக்கும் கதைகளை மாற்றுவது முக்கியம். ஆனால் தொழிற்சங்கங்கள் தனியார்மயமாக்கலின் தோல்விகளை எடுத்துக்காட்டுவதைத் தாண்டி, பொதுத்துறை சேவைகளை ஊக்குவிப்பதற்கான உறுதியான, ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்ட திட்டங்களை முன்வைக்க வேண்டும். உ லகெங்கிலும் உள்ள தொழிற்சங்கங்களும் அவற்றின் நட்பு நாடுகளும் விரிவான செலவு-கிடைக்கும் பலன் குறித்த பகுப்பாய்வுகளின் மூலம் நிரூபித்துள்ளது யாதெனில் - பொதுச் சேவைகளை பொதுத் துறையின் கீழ் வைத்திருக்கும் போதும், பொதுக் கட்டுப்பாட்டில் வைக்கும் போதும் அச்சேவையை மேம்படுத்த முடியும்.

## பாடம் 3: உலகளாவிய தனியார்மயமாக்கலிலிருந்து மீட்டெடுக்க மீள் அரசுமயமாக்கல் உதவுகிறது

உலகளாவிய தனியார்மயமாக்கலிலிருந்து மீட்டெடுக்க மீள் அரசுமயமாக்கல் உதவுகிறது. உ லகெங்கிலும் பல துறைகளிலும் அதிக அளவி லான உள்ளூர் சமூகங்கள் பொதுத்துறை சேவைகளை ஊக்குவித்து அவற்றை நேரடியாக நிர்வகித்து வருகிறது. மேலும், சேவையின் தரத்தை மேம்படுத்துவதற்காக புதிய வடிவி லான ஜனநாயக மற்றும் பங்கேற்பு அடிப்படையிலான நிர்வாகத்தை உருவாக்கி வருகின்றன - அதன்படி உ லகெங்கிலும் தொழிற்சங்கங்கள் மற்றும் அவர்களது கூட்டணி அமைப்புகள் காண்பித்துள்ளது என்னவென்றால், ஒரு விளக்கமான செலவு- பெறும் நலன்கள் குறித்த அறிக்கைகளின் மூலம், பொதுவுடைமையாக்கிய, பொது கட்டுப்பாட்டில் உள்ள பொதுத்துறை சேவைகளை மேம்படுத்த லாம் என்றும் நிரூபித்து ள்ளது.

## பாடம் 4: பருவநிலை மாற்றத்தை திறம்பட எதிர்கொள்ள சேவைகள் பொதுத்துறை உரிமையின் கீழ் வருவது அவசியமாகிறது.

சலுகை லாபம் மற்றும் பங்குதாரர் மதிப்பிற்கு முக்கியத்துவம் தரும் தனியார் நிறுவனங்கள் - உள்கட்டமைப்பை உருவாக்குவதற்கும், பருவநிலை மாற்றத்தை சமாளிக்க

முதலீட்டை அவசியமாக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கும் என்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை. புதுப்பிக்கத்தக்க ஆற்றலுக்கான மாற்றத்தை வியாபாரம் மூலம் எட்டமுடியாது. சுற்றுச்சூழல் ஆர்வ லர்கள் மீள்அரசுமயமாக்கலுக்கான பிரச்சாரங்களில் தாமாகவே கூட்டாளர்கள் ஆகிறார்கள்.

## பாடம் 5: பணியாளர்களுக்கும் தொழிற்சங்கங்களுக்கும் மீள்அரசுமயமாக்கல் தரும் பயன்கள்

அறிபூர்வமாக திட்டமிடப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்ட மீள்அரசுமயமாக்கல் மூலம் பொதுத்துறை சேவை ஊழியர்களின் ஊதியம், பணியாளர் பணிச்சூழல், திறன் மேம்பாடு, சுகாதாரம் மற்றும் பணியிட பாதுகாப்பு மற்றும் பணியில் கிடைக்கும் பிரதிநிதித்துவம் உள்ளிட்ட நிலைமைகளை மேம்படுத்து வதற்கான வாய்ப்பை வழங்க முடியும். தொழிற்சங்க உறுப்பினர் மற்றும் கூட்டு பேரம் பேசும் பாதுகாப்பு ஆகியவற்றை அதிகரிப்பதற்கான வாய்ப்புகளையும் சேவைகளை உள்வழங்கல் செய்வதன் மூலம் தர இயலும். இந்த அறிக்கையில் சிறப்பிக்கப்பட்டுள்ள பெரும்பா லான ஆய்வுகள், தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் தொழிற்சங்கங்கள் ஆகியன இறுதியில் மீள்அரசுமயமாக்கலை ஆதரிப்பதன் மூலம் பயனடைந்துள்ளன என்பதைக் காட்டுகின்றன.

## பாடம் 6: தொழிலாளர்கள், தொழிற்சங்கங்கள் மற்றும் குடிமை சமூக அமைப்புகளின் ஒற்றுமை

பொதுச் சேவை ஊழியர்கள், தொழிற்சங்கங்கள், பயன்பாட் டாளர்கள் மற்றும் உள்ளூர் சமூகங்கள் அனைத்தும் தனியார்மயமாக்கலின் மூலம் இழப்பிற்கு உள்ளாகின்றன. மாறாக, தலைவர்களாகவோ அல்லது பரந்த உள்ளூர் அரசமைப்புகளின் கூட்டணி உறுப்பினர்களாகவோ இருந்து; சிவில் சமூக அமைப்புகள் மற்றும் சமூக குழுக்களுடன் ஒற்றுயுடனும், ஒருமித்த, மற்றும் முற்போக்கான நோக்கங்களின் அடிப்படையில் பிரச்சாரம் செய்யும் போது அவர்களின் வெற்றிக்கான வாய்ப்புகள் அதிகரிக்கின்றன.

## பாடம் 7: உள்ளூர் அளவில் சிந்தித்து, சமூகத்தில் உள்ள பிரச்சினைகளை மீள்அரசுமயமாக்கல் பிரச்சாரம் மூலம் மேம்படுத்துதல்.

பொதுச் சேவைகளை மீள்அரசுமயமாக்க ஊக்குவிக்கும் தொழிற்சங்கங்கள் தங்கள் வாதத்தை கணிசமாக மேம்படுத்த வேண்டும். மேலும், உள்ளூர் சமூகங்களின் முக்கிய பிரச்சினைகள் மற்றும் கவனிக்கப்படாத தேவைகளுடன் தங்கள் கோரிக்கைகளை இணைப்பதன் மூலம், அவர்கள் அதிக ஆதரவைப் பெற லாம். உள்ளூர் சேவைகளுக்கு உறுதியான தீர்வாக – பொதுப் பணி சேவைகளை மீள் அரசுமயமாக்க அந்த மெய்நிகழ்வை இணைப்பது மற்றும் உருவாக்குவது ஒரு வெற்றிகரமான உத்தியை தொடர்ந்து நிரூபித்துள்ளன.

## பாடம் 8: மீள்அரசுமாயக்கலுக்கு அறிவார்ந்து திட்டமிட்டு, தயாராகுதல்.

நல்ல பொதுச் சேவைகளை ஒரே இரவில் அமைத்து செயல்படுத்த முடியாது. மனித மற்றும் நிதி வளங்கள், ஆளுகை, நிறுவனத்தை அமைத்தல், உள்கட்டமைப்புகள், உபகரணங்கள் மற்றும் தேவையான தொழிலாளர்கள் என அனைத்தையும் உரிய நேரத்தில் தயார் செய்து, சேவையை சீராக நடத்துவதற்கு முன்னரே திட்டமிட்டு, அச்செயல்முறை முடிந்த உடனே மீள்அரசுமயமாக்க தயார்நிலையில் இருத்தல் வேண்டும்.

## பாடம் 9: மீள்அரசுமயமாக்கலை உறுதி செய்தல்

மீண்டும் தனியார்மயமாக்கப்படும் ஆபத்து எப்போதும் இருப்பதால் மீள்அரசுமயமாக்கல் மற்றும் நன்கு இயங்கும் பொது த்துறை சேவை ஆகியவற்றை இறுதி வெற்றியாகக் கருதக்கூடாது. சேவை லாபகரமானதாக இருந்தால், தனியார் நிறுவனங்கள் நிச்சயமாக மீண்டும் அத்துறையில் அடியெடுத்து வைக்க முயற்சிப்பார்கள். மீள்அரசுமயமாக்கப்பட்ட சேவைகள் தனியார் நிறுவனங்களுக்கு ஆலோசனை ஒப்பந்தங்களை வழங்கும்போது அதிக கவனம் தேவை; ஏனெனில் இதனை எதிர்கால தனியார்மயமாக்கல்களுக்கான ஒரு துவக்கப் புள்ளியாக நிறுவனங்கள் பயன்படுத்த லாம். மீண்டும் தனியார்மயமாக்குவதன் அறிகுறிகளை எதிர்பார்ப்பதன் மூலமும், கண்காணிப்பதன் மூலமும், கூட்டுப் பேரம் பேசும் ஒப்பந்தங்கள், உள்ளூராட்சி அமைப்புகள் மற்றும் பொது கொள்முதல் விதிமுறைகள் வழியாக மீள்அரசுமயமாக்கலை உறுதிசெய்வதன் மூலமும் தொழிற்சங்கங்கள் மீண்டும் வரும் தனியார்மயமாக்கலைத் தடுக்க லாம்.

## பாடம் 10: உலகளாவிய சிந்தனையை வளருங்கள். மீள்அரசுமயமாக்கலுக்கு சர்வதேச ஆதரவை உருவாக்குங்கள்

உள்ளூர் மீள்அரசுமயமாக்கல் பிரச்சாரங்கள் பொதுவெளியில் காணும்படி நிகழும் போது அவை மிகவும் வெற்றிகரமானவையாக உள்ளன. மேலும், சர்வதேச தாக்கத் தினை கொண்டவையாகவும் உள்ளன. எடுத்துக்காட்டாக, பயனுள்ள சர்வதேச ஊடக உத்திகள், இணைய மனுக்கள் மற்றும் காணொளிகளை பயன்படுத்த லாம்.

## பாடம் 11: உங்கள் மீள்அரசுமயமாக்கல் குறித்த கதையை ஆவணப்படுத்தவும், பகிரவும்

மீள்அரசுமயமாக்கல் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ள - தொழிற்சங்கங்கள் - அவர்களின் குடிமை சமூக நட்பு அமைப்புகள் மற்றும் உள்ளூர் அரசாங்கங்கள் – அவர்களது பிரச்சாரம் மற்றும் / அல்லது செயல்முறை, உள் அறிவு, நிபுணத்து வம் மற்றும் கற்றுக்கொண்ட பாடங்களை பகிர்ந்து கொள்வது மிக முக்கியம். உலகளாவிய பொதுத்துறை சேவை இயக்கத்தை வலுப்படுத்த, இதன் மூலம் பெறப்படும் அடிப்படை அறிவின் மூலமே - தேசிய மற்றும் சர்வதேச தொழிற்சங்க கூட்டமைப்புகள் நிபுணத்துவத்தை சேகரிக்க முடியும்.

# 9.

# தொழிலார்கள் மற்றும் தொழிற்சங்கங்களுக்கான மீள்அரசுமயமாக்கல் தொடர்பான சுயசோதனைப் பட்டியல்.

இந்த வழிகாட்டியில் உள்ள மீள்அரசுமயமாக்கல் மெய்நிகழ்வுகளின் மதிப்பாய்வின் அடிப்படையில், ஒரு பொதுச் சேவையை உள்வழங்கல் செய்வதற்கான பிரச்சாரத்தைத் திட்டமிடும்போது தொழிற்சங்கங்கள் சிந்திக்க வேண்டிய சில முக்கிய காரணிகள்:

## தனியார்மயமாக்கப்பட்ட சேவையின் செயல்திறனை கண்காணிக்கவும்

- சேவைகளை வழங்குவதில் தனியார் நிறுவனத்தின் செயல்திறன் என்ன?
- சேவையில் தனியார் நிறுவனம் எவ்வளவு தொகையை, எந்த முடிவுகளின் அடிப்படையில் முதலீடு செய்தது?
- தனியார் நிறுவனம் சேவையை இயக்கும் முறையில் பருவநிலை மாற்ற சிக்கல்களை எதிர்கொள்கிறதா?
- தனியார் நிறுவனம் பயன்பாட்டாளர் அனைவருக்கும் சேவை சென்றடைவதை மேம்படுத்துகிறாரா?
- தனியார் துறை வழங்கும் சேவையால் உள்ளூர் சமூகத்தில் சமத்துவமின்மை மற்றும் சமூக உட்படுத்துதல் மற்றும் குறிப்பாக எரிபொருள் மற்றும் தண்ணீருக்கான வறுமையில் எத்தகைய தாக்கத்தினை ஏற்படுத்துகிறது?
- தனியார்மயமாக்கல் வேலைகள் மற்றும் பணி நிலைமைகளை எவ்வாறு பாதித்தது?
- சேவையை தனியார்மயமாக்கும் போது உள்ளூர் அரசமைப்புகளுக்கு என்ன செலவுகள் ஏற்பட்டன (எடுத்துக்காட்டாக, ஒப்பந்த பேச்சுவார்த்தை மற்றும் மறு பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுத்திய வழக்கறிஞர்களுக்கு எவ்வளவு கட்டணம் செலுத்தப்பட்டது மற்றும் உள்ளூர் அரசமைப்பு தனியார் சேவை வழங்குநருக்கு மானியம் வழங்க வேண்டியிருந்ததா?)
- தனியார்மயமாக்கப்பட்ட சேவை ஆண்டு ஒன்றுக்கு என்ன லாபம் ஈட்டுகிறது மற்றும் பங்குதாரர்களுக்கு எவ்வளவு தொகையை உருவாக்குகிறது?
- சேவையின் பராமரிப்பு மற்றும் மேம்பாட்டில் எவ்வளவு லாபம் மறு முதலீடு செய்யப்பட்டது?
- சேவையை இயக்கும் போது தனியார் நிறுவனம் நியாயமற்ற அளவில் கடனைக் குவித்ததா?
- சேவையை பயன்படுத்தும் பயன்பாட்டாளர்கள் மற்றும் குடும்பங்களை நிறுவனம் ஆதரிக்கிறதா?
- சேவையில் உள்ள ஆட்சி முறை என்ன? சேவை எவ்வாறு வழங்கப்படுகிறது என்பது குறித்து பயன்பாட்டாளர்கள், குடிமக்கள் மற்றும் தொழிலாளர்கள் என்ன கூறுகிறார்களா?

## ஒப்பந்த முடிவும், ஒப்பந்தத்தை புதுப்பிக்காமல் இருத்தலும்

- தற்போதைய தனியார் ஒப்பந்தம் எப்போது காலாவதியாகிறது? அது மறுபரிசீலனை செய்யப்படுமா அல்லது புதுப்பிக்கப்படுமா?
- ஒப்பந்த புதுப்பித்தல் அல்லது நிறுத்தப்படுவதற்கு பின்பற்ற வேண்டிய செயல்முறை என்ன? (சர்வதேச, தேசிய, உள்ளூர் சட்டம் மற்றும் அச்சிடப்பட்ட ஒப்பந்தம் உட்பட)

- டெண்டரிங் வரையறையானது சமூக மற்றும் சுற்றுச்சூழல் இலக்குகளை நிர்ணயிப்பதன் செலவைத் தாண்டுமா?
- தொழிற்சங்க இருப்பு மற்றும் உறுப்பினர் எண்ணிக்கையை ஒப்பிடுதல்
- எந்த தொழிற்சங்கம்(ங்கள்) தனியார் ஒப்பந்த நிறுவனத்தின் கீழ் உள்ள தொழிலாளர்களைக் ஆதரிக்கின்றன?
- அமைப்புசாரா தொழிலாளர்கள் யார், எங்கே உள்ளனர்?
- தொழிற்சங்க உறுப்பினர்களின் பதவி நிலைகள் என்ன?
- பொதுச் சேவை மீள்அரசுமயமாக்கல் தொடர்பான தேசிய தொழிற்சங்க மற்றும் கிளை தொழிற்சங்க கொள்கைகள் யாவை?
- ஒரே பணியிடத்தில் அதிகமான தொழிற்சங்கங்கள் இருந்தால், அவர்கள் ஒன்றாக வேலை செய்ய முடியுமா? மீள்அரசுமயமாக்கல் தொடர்பான அவர்களின் பொதுவான நோக்கங்கள் என்ன?
- தனியார் சேவைகளை முறையாக பொதுச் சேவையாக மீண்டும் திரும்புவதை ஒழுங்குபடுத்துவதற்கு என்ன சட்டங்கள் (சர்வதேச, தேசிய மற்றும் உள்ளூர்) உள்ளன?
- தேசிய மற்றும் சர்வதேச தொழிற்சங்க கூட்டமைப்புகள் மற்றும் பேரியக்கங்கள் எத்தகைய ஆதரவை வழங்க முடியும்?

## மீள்அரசுமயமாக்கலுக்கு அரசியல் மற்றும் சமூக குழு ஆதரவினை பெறுவது

- மீள்அரசுமயமாக்கலில் உள்ளூர் மற்றும் பிராந்திய அரசமைப்புகளின் நிலைப்பாடு என்ன?
- மீள்அரசுமயமாக்கலில் தேசிய அரசமைப்புகளின் நிலைப்பாடு (ஏதேனும் இருந்தால்) என்ன?
- எந்த குடிமை சமூகம் மற்றும் சுற்றுச்சூழல் குழுக்கள் மற்றும் சமூகத் தலைவர்கள் ஆகியோர் முன்னதாகவே மீள்அரசுமயமாக்கல் பிரச்சார கூட்டணியில் சேர முடியுமா?
- எந்த அரசியல்வாதிகள் மற்றும் / அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் சேவை மீள்அரசுமயமாக்க ஆதரவாக இருக்க முடியும்? தொழிற்சங்கங்கள் யாருடன் வேலை செய்ய முடியும்?
- சேவை மீள்அரசுமயமாக்கலுக்கு ஆதரவாக பொதுமக்களின் கருத்தை எவ்வாறு திரட்ட முடியும்?
- மீள்அரசுமயமாக்கல் மூலமாக பயனடையக்கூடிய சேவை தொடர்பான சமூக சிக்கல்கள் யாவை?
- மீள்அரசுமயமாக்கலில் ஒவ்வொரு குழுவின் பொதுவான மற்றும் தனிப்பட்ட நோக்கங்கள் என்ன?
- எந்த அணிதிரட்டல் உத்திகள் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் (எ.கா. ஆர்ப்பாட்டங்கள், பொது விசாரணைகள், ஃபிளாஷ் மாப்ஸ் போன்றவை)?
- எந்த ஊடக உத்தி மிகவும் பயனுள்ளதாக இருக்கும் (சர்வதேச, தேசிய, உள்ளூர் செய்தித்தாள்கள்; அறிக்கை வெளியீடு; துண்டுப்பிரசுரங்கள்; காணொளிகள்; சமூக ஊடகங்கள், சர்வதேச இணையதள மனுக்கள் போன்றவை)?

## பிரச்சாரங்களை நடத்துவது

- பிரச்சாரத்தை நடத்துவதற்கான செலவுகள் மற்றும் கிடைக்கக்கூடிய வளங்கள் என்ன?
- சட்ட மற்றும் ஒழுங்குமுறை தடைகள் என்ன, அதற்கு என்ன ஆலோசனை கிடைக்கிறது?
- பொதுச் சேவையை நடத்துவது
- சேவையின் கட்டுப்பாட்டை திரும்பப் பெற வேண்டுமானால் உள்ளூர் அரசமைப்புகளின் மீதான ஆரம்ப, இடைக்கால மற்றும் நீண்ட கால செலவு தாக்கங்கள் என்ன?
- (உள்ளூர் அல்லது தேசிய அரசமைப்புகளின் வரவுசெலவுத்திட்டங்கள், வரிவிதிப்பு, அரசாங்கங்களுக்கு இடையிலான மாற்றங்கள், பிற வளங்கள், பயன்பாட்டாளர் கட்டணம், சேவையிலிருந்து கிடைக்கும் சேமிப்பு மற்றும் இ லாபங்கள் போன்றவை) சேவையை மறுசீரமைக்க மற்றும் சுமூகமாக இயக்க போதுமான ஆதாரங்கள் உள்ளதா?
- கூடுதல் அல்லது மாற்று ஆதாரங்களை எங்கே கிடைக்கும்?
- சேவையை திறம்பட செயல்படுத்த உள்ளூர் அரசமைப்புகள் தங்களிடம் உள்ள திறன், ஊழியர்கள், உபகரணங்கள் மற்றும் திறமைகளைக் கொண்டிருக்கிறார்களா? இல்லையென்றால், அதை எவ்வாறு அடைய முடியும் மற்றும் அதற்கு தொழிற்சங்கங்கள் எவ்வாறு உதவ முடியும்?
- தனியார் நிறுவனங்கள் முக்கிய உத்திகளைக் கொண்ட தகவல்கள், ஊழியர்கள் மற்றும் உபகரணங்களை தடுத்து வைக்குமா? அப்படியானால், தொழிற்சங்கங்கள் இதைப் பற்றி என்ன செய்ய முடியும்?

## மீள்அரசுமயமாக்கப்பட்ட பொதுச் சேவைக்கு ஒரு பொதுவான கண்ணோட்டத்தை உருவாக்குதல்

⌘ ஜனநாயக நிர்வாகத்தின் எந்த வடிவம்(கள்), தொழிலாளர்கள் மற்றும் பயன்பாட்டாளர் பங்கேற்பு, வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வு ஆகியவை மீள்அரசுமயமாக்கப்பட்ட சேவையில் இணைக்கப்படும்?

⌘ பொதுச் சேவை எவ்வாறு சமூகப் பிரச்சினைகளை திறம்பட மற்றும் சிறப்பாக நிவர்த்தி செய்யும் (எ.கா. உள்ளூர் பொருளாதாரத்தை மேம்படுத்துதல், தரமான வேலைவாய்ப்பை உருவாக்குதல், பொறுப்பான பொது கொள்முதல், பாலின அடிப்படையிலான தீர்வுகள், தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள்)?

⌘ சுற்றுச்சூழல் பிரச்சினைகளை பொதுத் துறை சேவை எவ்வாறு திறம்பட மற்றும் சிறப்பாக நிவர்த்தி செய்யும்?

⌘ தொழிலாளர் பங்கேற்பு மற்றும் முற்போக்கான, புதுமையான மனித வள நடைமுறைகளை மாதிரி பொதுத் துறை சேவை எவ்வாறு திறம்பட உறுதி செய்யும்?

## தனியார் நிறுவனங்களின் எதிர்வினைகளை கையாள்வது

⌘ தனியார் நிறுவனங்களிடமிருந்து எதிர்பார்க்கக்கூடிய பதில்கள் யாவை?

⌘ அவர்கள் இழப்பீடு கோருவார்களா, எவ்வளவு (மதிப்பீடு)? அத்தகைய செலவுகளைத் தவிர்க்க அல்லது குறைக்க உள்ள வழிகள் யாவை?

⌘ சேவையை தனியார் வசம் வைத்திருப்பதற்கான ஒட்டுமொத்த செலவை விட இழப்பீட்டு செலவு குறைவாக இருக்குமா?

## தொழிலாளர்களை அரசுமயமாக்களில் நியாயமான மாற்றத்திற்கு தயாராக்குதல்

⌘ அரசுமயமாக்கல் மாற்றத்தில் தொழிலாளர்களையும் தொழிற்சங்க பிரதிநிதித்துவத்தையும் பாதுகாக்க என்ன சட்டம் (சர்வதேச, தேசிய, உள்ளூர்) உள்ளது?

⌘ தொழிலாளர்கள் ஒன்று (அல்லது பல) கூட்டு ஒப்பந்தங்களால் காக்கப்பட்டிருக்கிறார்களா?

⌘ சேவையின் பணியிடங்களில் (கள்) தொழிற்சங்க பிரதிநிதிகள் இருக்கிறார்களா?

⌘ பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற்சங்க கூட்டமைப்புகளும், உள்ளூர் பிரதிநிதிகளும் மீள்அரசுமயமாக்கல் ஒப்பந்தத்திற்கு உடன்படுகிறார்களா? இல்லையென்றால், அவர்களின் மாற்றுக் கருத்துக்களை சரிசெய்ய முடியுமா?

⌘ தொழிற்சங்கம் (கள்) மீள்அரசுமயமாக்கலினால் நடுத்தர மற்றும் நீண்ட கால அளவில் அதிக உறுப்பினர்களை இழக்குமா அல்லது வெல்லுமா? உறுப்பினர் இழப்பை எவ்வாறு தவிர்க்கலாம்,எப்படி குறைக்க முடியும்?

⌘ பாதிக்கப்பட்ட தொழிலாளர்களின் முக்கிய கவலைகள் என்ன (ஊதியம், பணிப் பதவியின் பெயர், மூப்புரிமை, ஓய்வூதியம், மீண்டும் பணியமர்த்தும் செயல்முறை போன்றவை) மற்றும் அவற்றை எவ்வாறு முறையாகக் கவனிக்க முடியும் (எ.கா. தொழிலாளர்களுடனான தகவல் பரிமாற்றம்)?

⌘ மீள்அரசுமயக்கப்பட்ட சேவைக்கு பொறுப்பான உள்ளூர் அரசமைப்புகளுடன் சமூக உரையாடல் மற்றும் கூட்டு பேரம் ஒப்பந்தம் உள்ளதா? கூட்டு பேரம் பேசும் கட்டமைப்புகள் சரியாக உள்ளதா? இல்லையென்றால் அரசுமயமாக்கலுக்குப் பின், தொழிலாளர்களுக்கு நியாயமான மாற்றம் குறித்த பேச்சுவார்த்தைகளை எவ்வாறு துவக்க முடியும்?

⌘ தொழிற்சங்க பேச்சுவார்த்தையில் ஈடுபடவுள்ளவர்களை அடையாளம் காணவும், எதிர்கால பொதுச் சேவையின் பொதுத்துறை உரிமையாளர்(களுடன்)-உடன் மாற்றம் குறித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்கான பொதுவான உத்தரவை அவர்களுக்கு வழங்கவும் தொழிற்சங்கம் எவ்வாறு திட்டமிடும்?

## மீள்அரசுமயமாக்கலை எப்படி உறுதிசெய்வது?

⌘ மீள்அரசுமயமாக்கலை எவ்வாறு உறுதி செய்ய முடியும்?

⌘ எதிர்காலத்தில் மீண்டும் தனியார்மயமாக்கும் முயற்சிகளைக் தடுக்கும் ஒரு கண்காணிப்பு செயல்முறையை தொழிற்சங்கமும்(ங்கள்) மற்றும் குடிமை சமூகக் குழுக்களும் எவ்வாறு நிறுவ முடியும்?

**பப்ளிக் சர்வீஸஸ்**
**இண்டர்நேஷனல்**

பொதுப் பணிகளில் உள்ள தொழிலாளர்களின் உலகளாவிய தொழிற்சங்க கூட்டமைப்பு

45 AVENUE VOLTAIRE, BP 9
01211 FERNEY&VOLTAIRE CEDEX
FRANCE

தொலைபேசி: +33 4 50 40 64 64

மின்னஞ்சல் முகவரி: PSI@WORLD-PSI.ORG WWW.PUBLICSERVICES.INTERNATIONAL

பப்ளிக் சர்வீஸஸ் இன்டர்நேஷனல் என்பது 154 நாடுகளில், 30 மில்லியன் தொழிலாளர்களை பிரதிநிதித்துவப்படுத்தும், 700-க்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்களின் உலகளாவிய ஒன்றிய கூட்டமைப்பாகும். அவர்களின் குரல்களை ஐ.நா சபை, சர்வதேச தொழிலாளர் அமைப்பு, உலக சுகாதார அமைப்பு மற்றும் இதர பிராந்திய மற்றும் உலகளாவிய அமைப்புகளுக்கு கொண்டு சேர்க்கிறோம். நாங்கள் தொழிற்சங்கம் மற்றும் தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்கிறோம்; மேலும், தரமான பொதுச் சேவைகள் அனைவருக்கும் கிடைக்க வேண்டுமென உலகளவில் போராடுகிறோம்.